உ

முருகர் துணை.

ரோமரிஷி அருளிச்செய்த

விநாடி பஞ்சபட்சி

மூலமும்

தஞ்சை

கருணாநிதி பிள்ளையவர்களால் செய்த

நூதன உரையும்

சென்னை,

T. சாரதா புத்தகசாலையார்

உத்தரவின்படி,

சென்னை சூளை,

ஸ்ரீ பாரதி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர்ட் காப்பிரைட்.

1934

வல்லூறு
ஆந்தை
மயில்
காகம்
கோழி

உ

கடவுள் துணை.

உரோம மகாரிஷியார்

அருளிச்செய்த

விநாடி பஞ்சபட்சி

மூலமும் உரையும்.

பாயிரம்.

1. சோதிமய மாய் நிறைந்த வாலைத் தாயைத்
தொண்டுசெய்து சித்தர்பதம் தொழுது வாழ்த்தி
நீதியுள்ள முனிவர்களைக் கண்டுதேறி
நிரஞ்சனமாய் நின்றகண பதியைப் போற்றி
சாதிமுதற் படைத்தசிவன் கிருபை யாலே
சராசரங்க ளானவுயிர் சகலத் திற்கும்
வாதியென்ற பெயர்பெற்றார் மகிமை யாலே
வசனிப்பேன் பஞ்சபட்சிக் காதி தானே.

இதுவுமது.

ஆதியென்ற மனோன்மணியைத் தொழுது போற்றி
ஐங்கரனை யிருதயத்தி லன்பாய் வைத்துச்
சோதியென்ற சித்தர்பதம் பணிந்துட் கொண்டு
சொல்லரிய முனிவரையுந் துதித்து நன்றாய்
நீதியென்ற பஞ்சபட்சித் தொழிலை யானு
நிகழ்த்துவேன் சர்வசித்து மாக வேண்டி
வாதியெனப் பேர்களிக்கும் வைத்தி யர்க்கும்
மற்றுமுள்ள பெரியோர்க்கு மாதி தானே.

இதுவுமது.

ஆதியென்ற பஞ்சபட்சி அறிந்தோ னையா
அவன்சித்தன் அவன்யோகி அவனே வாதி.
சோதியென்று மனோன்மணிக்குச் சிவனார் சொன்னார்
தொல்புவியிற் பெண்மதியாற் புலம்பி னுள்பார்

வாதியென்ற பேருபெற்றோ ரறிய வேண்டு
மகத்தான வித்தையெல்லாம் வசமே யாகும்
பாதியென்ற ரவிமதியு முன்பின் னுகப்
பாடிஞு ரதையறிந்து பார்த்துச் சொல்லே.

இதுவுமது.

4. சொல்லவே பஞ்சபட்சித் தொழிலைத் தானுஞ்
சுருக்கமாய் நானறிந்த போக்கை யெல்லாம்
வெல்லவே இதனுடைய நேரம் பார்த்து
மேன்மையுள்ள சித்தர்களுஞ் சொல்வார் சொல்வார்
கொல்லவே யஷ்டகர்ம மிதற்கொவ் வாது
குடிகெடுத்த பட்சிவித்தை கொடுமை மெத்த
தள்ளவே எந்தெந்தத் தொழிலுக் குந்தான்
சாஸ்திரங்க ளிதற்குமிக ரில்லை பாரே.

பாயிரம், முற்றிற்று.

நூல்.

பூர்வபட்சப் படலம்.

பட்சம்-உ-ற்கும் பட்சிகளின் வலிவு.

5. பாரப்பா பஞ்சபட்சி வலிவைச் சொல்வேன்
பண்பான ஊண்பட்சி வலிவோ முக்கால்
சேரப்பா நடைபட்சி ஊணிற்பாதி
செல்லுமோர் அரசின்வலி செப்பொணுது
நேரப்பா தூங்குகின்ற பட்சிதானு
நேர்மையுள்ள நடைவலிவிற் பாதியாகும்
ஆரப்பா வறிவார்கள் மரணபட்சி
யதற்குவலி தூக்கத்திற் பாதியாமே.

(இ-ள்.) யாவர்களும் பார்த்துணரும்பொருட்டாகப் பஞ்சபட்சிகளின் வலிவைச் சொல்கிறேன் கேட்பாயாகவும், பட்சம் இரண்டிற்கும் ஊண்பட்சியின் வலிவுமுக்காலாகவும், நடைப்பட்சியின்வலிவு ஊண்பட்சியில்பாதியாகும், அரசுபட்சியின் வலிவானது சொல்லத்தரமல்ல, தூங்கும்பட்சியின்வலிவு நடைப்பட்சியில் பாதியாகும், மரணபட்சியின்வலிவு தூங்கும்பட்சியில் பாதியாகும் (எ-று.) (1)

இதுவுமது.

6. பாதியென்று சொல்லுமது வலிவோ கொஞ்சம்
பண்பான வரசினிட வலிவுமிக்காஞ்
சோதியென்ற வரசுவலி யொன்றுமில்லை
சொல்லரிது ஊண்பட்சி சுயம்பாகியாகும்
மாதியென்ற நடைப்பட்சி யோட்டக்காரன்
மற்றமட்சி யென்னவலி வாகும்பாரு
சேதியென்ற வரசனுக்கு இணைவேறுண்டோ
சென்றிடமெல்லாஞ்செல்லுந் திண்ணந்தானே.

(இ-ள்.) பாதியென்று மேல்கூறியவண்ணம் வலிவானது கொஞ்சமாகும், அரசுபட்சியின் வலிவே மென்மேலுமாகும், அரசினுடைய வலிவானது யாதொன்றுமில்லை சொல்லுதற்கரிதாகிய ஊண்பட்சி சுயம்பாகியாகும், நடைப்பட்சி ஓட்டக்காரனாகும், மற்றபட்சிகளுக்கு என்ன வலிவானது இருக்கின்றது. அரசுபட்சிக்கு இணையானபட்சி வேறுமுளதோ போகும்படியான பற்பல விடங்களிலும் செயமாகும் (எ-று.) (2)

இதுவுமது.

7. திண்ணமடா வரசுக்குப் பகையோவில்லை
செயமான மித்துருவே யாகுமெல்லாம்
வண்ணமடா வுலகமெல்லா மரசனுக்குள்
வணங்குமடா மிஞ்சாது வார்த்தைகேட்டு
மெண்ணமடா வரசனையே பகைத்த பேர்க
ளீடேறி யுலகுதனில் வாழ்வதில்லை
சொன்னமடா வரசதுவே மிச்ச மிச்சந்
தொல்புவியி லரசனுக்கோ ரிணையுமின்றே.

(இ-ள்.) அரசுபட்சிக்குப் பகைப்பட்சிகளில்லை, சகல பட்சியும் நட்பாகவிருக்கும் உலகமுழுதும் அரசுபட்சிக்குள்ளாக வணங்கி நிற்கும்மிஞ்சாது, ஆதலால் இதைக்கேட்டும் அரசனைப்பகைத்தபேர்கள் நாளும் ஈடேறி உலகத்தின்கண் வாழ்வதில்லையாகும் சொல்லும்படியான அரசுபட்சியே மிச்சமாகும் இந்தப் பூமியின்மீது அரசுபட்சிக்கு இணை வேறில்லையாம் (எ-று.) (3)

இதுவுமது.

8. இணையில்லா ஊண்பட்சி ஆந்தை ஆகும்
என்மகனே நடைப்பட்சி வல்லூறுகும்
கணையுள்ள அரசதுவே காகம் ஆகும்
கனமான உறக்கமது கோழி ஆகும்

சுணையில்லா மரணமது மயிலதாகும்
சொன்னேமே பூருவமும் அமரம் தானும்
துணைஉள்ள இதனுடைய சூட்சங்கண்டால்
தொல்புவியில் அவனைவெல்வார் இல்லைத்தானே.

(இ-ள்.) வூண்பட்சி ஆந்தையாகும், நடைப்பட்சிவல்லூறாகும், அரசு பட்சி காகமாகும், தூக்கம் கோழியாகும், மரணப்பட்சி மயிலாகும் இவ் வாறாகசொன்னபடி பூர்வபட்சம் அமரபட்சம் இவையிரண்டிற்கும் துணை யாகவிருக்கு மிதனுடைய சூட்சத்தைக்கண்டும் பூமியின்மீது புலாபலன் சொல்வானாகில் அவனை வெல்லுதற்கு யாருமில்லையாமென்பர் (எ-று.)

இதுவுமது.

9. இல்லையடா நாள்பார்த்து வேளைபார்த்து
என்மக்காள் பேர்பார்த்து தொழிலைச்செய்தால்
தொல்லையிது ஒருவரால் திருப்பப்போமோ
சொன்னேனடா கருமிகட்குச் செய்துபாரு
சள்ளையெல்லா நட்சத்திரம் பார்க்கநன்று
தன்ராசி திதிஆனால் வருமே எல்லாம்
கொள்ளையடா அடங்காத வித்தை ஆகும்
கும்பமுனி கூறிவைத்த குறியிதாமே.

(இ-ள்.) மேற்கண்டபடியாக நாளும் வேலையும் பார்த்து பெயரையு ணர்ந்து தொழில்களைச் செய்வாயாகில் தொல்லையாகிய தொழில்கள் யாவும் ஒருவராலும் திருப்பப்போகாது இதிற் சொன்னபடி கருமிகட் குச்செய்து பார்க்கவும் சள்ளையில்லாமற்படிக்கு நட்சத்திரங்களைப்பார்க் கவும் நன்றாகும் தன்னுடைய இராசியுமாகில் யாவற்றும் வரும். கொள்ளை கொண்டதுபோல் அடங்காத வித்தையைக் கும்பமுனியென வழங்கும் அகத்தியமாமுனி கூறிவைத்த குறிப்பாகும் (எ-று.) (5)

அட்சரப்பட்சி.

10. ஆகுமே அகரமது வல்லூறாகும்
அப்பனே இகரமது ஆந்தை ஆகும்
போகுமே உகரமது காகமாகும்
பூரணமாம் எகரமது கோழியாகும்
ஏகுமே ஒகரம் அது மயிலதாகும்
என்னசொல்வேன் பூருவத்தின் நிலைதான் மைந்தா
வாகுடல்கள் அறிவுடையோர் அறியவேண்டும்
வல்லவர்க்கு நாம்சொன்ன வகையிதாமே.

(இ-ள்.) அகரமென்னும் எழுத்திற்குப்பட்சி வல்லூறாகும், இகரமென்னும் எழுத்திற்கு ஆந்தை பட்சியாகும், உகரமென்னும் எழுத்திற்குப்பட்சி காகமாகும், எகரமென்னும் எழுத்திற்குப்பட்சி கோழியாகும் ஒகரமென்னும் எழுத்திற்குப்பட்சி மயிலாகும், இது பூர்வபட்சத்தின் நிலையாகும். இதை அறிவுடையோர்கள் அறியவேண்டும் வல்லமையுடையோர்களுக்கு நாம் சொன்னவகையதாகும் (எ-று.) (6)

பகல் முதற்சாமத்தின் ஊண்பட்சி.

11. ஆவதுதான் ஞாயிறுடன் செவ்வாய் வல்லூ
றுந்தையது புதன்திங்க ளாகும்பாரு
ஏவலூறும் வியாழமது காகமாகும்
என்மக்காள் வெள்ளிக்குக் கோழியாகும்
போவறுவால் சனிவார மயில்தான் உண்ணும்
பூருவத்தின் பகலில் முதற்சாமந்தீது
தாவும் அந்த இரவுதனிற் சேய் அருக்கன்
தனிக்காகம் புதன் திங்கள் கோழியாமே.

(இ-ள்.) பூர்வபட்சம்பகல் முதற்சாமத்தில் ஊண்பட்சியாவது ஞாயிறு செவ்வாயிந்த இரண்டுவாரங்களுக்கும் வல்லூறு பட்சியாகும் ஆந்தை பட்சி புதன் திங்கள் இந்த வாரங்களிலாகும் வியாழக்கிழமையில் பட்சி காகமாகும் வெள்ளிக்கிழமையில் பட்சி கோழியாகும் சனிக்கிழமையில் பட்சி மயில்பட்சி ஊணுகும். இது பூர்வபட்சத்தின் முதற்சாமத்திற்காகும் அன்று இரவில் செவ்வாய் ஞாயிறு இந்தவாரங்களில் காகம் ஊணுகும் புதன் திங்களில் கோழி ஊணுகுமென்பர். (எ-று.) (7)

இரவு முதற்சாமத்தின் ஊண்பட்சி.

12. ஆமென்ற வியாழமது மயில்தான் உண்ணும்
அப்பனே வெள்ளியது வல்லூறுண்ணும்
ஓமென்ற மந்தனுக்கு ஆந்தைதானும்
உண்ணுமடா இரவுபகல் பட்சிவலிகாண்
நாம் என்ற மித்துரு சத்துருவும் பார்த்து
நலமான நேரவலிவறிந்து பாரு
தாமென்ற சத்துருநாள் ஆகாதப்பா
தள்ளிவிடு கொடுமையுள்ள நாளைத்தானே.

(இ-ள்.) வியாழக்கிழமையிரவில் மயில்ஊணுகும், வெள்ளிக்கிழமையில் வல்லூறுஉண்ணும், சனிக்கிழமையில் ஆந்தையானது உண்ணும், இவ்விதமாக உண்ணும் இரவுபகல் பட்சிகளைப்பார்த்து வலிவறிந்தும் மித்துரு சத்துரு பட்சியும் பார்த்து நேரத்தின் வலிவானது அறிந்து பார்த்தும் அதில் சத்துருநாளாகில் ஆகாதெனத்தள்ளுவாய் (எ-று.) (8)

ஞாயிறு செவ்வாய் பகல்சாமம் ரு-க்கும் தோழில்முறை.

13. ஆமென்ற பூர்வபட்ச பகலைக்கேளு
அடைவான் அருக்கனுடன் செவ்வாய்தன்னில்
தாமென்ற ஒன்றாங்கால் வல்லூறுண்ணும்
சாற்றுகின்ற ஆந்தைநடை அரசுகாகம்
ஏமென்ற கோழிதுயில் மயில்தான் சாகும்
இயம்பரிய இரண்டாங்கால் மஞ்ஞை உண்ணும்
வாமென்ற நடைவல்லூறு அரசன் ஆந்தை
மைந்தனே காகமது தூக்கமாமே.

(இ-ள்.) பூர்வபட்சத்தினுடைய பகல் பலனைக்கேட்பாயாகவும்ஞாயிறு செவ்வாய் இந்த வாரங்களில் முதற்கால் வல்லூறுபட்சியண்ணும்,ஆந்தைநடையாகும், அரசுகாகமாகும், கோழிதூக்கமாகும், மயில் மரணமாகும், இதில் இரண்டாங்காலில் மயிலானது உண்ணும் நடை வல்லூறுகும் அரசு ஆந்தையாகும் காகம் தூக்கமாகுமென்பர் (எ-று.) (9)

இதுவுமது.

14. ஆமேதான் கோழியது மரணமாகும்
அப்பனே மூன்றாங்கால் கோழியுண்ணும்
வாமேதான் மயில் என்ன நடை வல்லூறு
மகத்தான அரசாந்தை தூக்கமாகும்
நாமேதான்காகம் அது மரணஞ்சித்தி
கண்மணியே நாலாங்கால் காகம் உண்ணும்
கோமேதான் கோழிக்கு நடைதான் ஆகும்
கூறினேன் மயில் அரசு கூறினேமே.

(இ-ள்.) மேற்கண்ட பலனில் கோழியானது மரணமாகும், இதில் மூன்றாங்காலில் கோழியானது உண்ணும், மயிலானது நடக்கும், வல்லூறு அரசனாகும் ஆந்தை தூக்கமாகும், காகம் மரணமாகும், இதில்நான்காங்கால் காகமானது உண்ணும், கோழிநடையாகும், மயில்பட்சி அரசாகுமெனக் கூறினர். (எ-று.) (10)

இதுவுமது.

15. கூறான வல்லூறி தூக்கமாகும்
கூற்றான ஆந்தையது மரணமாகும்
ஆறான ஐந்தாங்கால் ஆந்தையுண்ணும்
அருளான காக்கைநடை அரசுகோழி
மாறான மயில்தூக்கம் வலியன்சாவு
வசனித்தோம் அருக்கனுடன் செவ்வாயாச்சு
வீறான மூலகணபதியின்வாறு
விபரித்தோ மிதன்மேலும் விளம்பக்கேளே.

(இ-ள்.) அதில் வல்லூறு தூக்கமாகும், ஆந்தை மரணமாகும், இதில் ஐந்தாங்கால் ஆந்தையானது உண்ணும், அதில் காகம் நடையாகும், அரசு கோழியாகும், மயில்தூக்கமாகும், வல்லூறுமரணமாகும், இப்பலன் ஞாயிறு செவ்வாயிந்த வாரங்களுக்கு ஆச்சு (எ-று) (11)

திங்கள் புதன் பகல் ரு-ற்கும் தொழில் முறை

16. கேளப்பா திங்கள் புதன் தொழிலைக்கேளு
கிரியையுடன் ஒன்றுங்கால் ஆந்தையுண்ணும்
ஆளப்பா காகம்நடை யரசுகோழி
அடைவான தூக்கமயில் வலியன்சாவு
தாளப்பா இரண்டாங்கால் வல்லூறுண்ணும்
சாற்றக்கேள் ஆந்தைநடை அரசுகாகம்
கோளப்பா வாராது கோழி தூக்கம்
கூறினே மயில்மரணங் கால் மூன்றுமே.

(இ-ள்.) கேட்பாயாக, திங்கள் புதன் பகல் சாமம் ஐந்திற்கும் தொழிலைச்சொல்வேன். ஒன்றுங்காலில் ஆந்தையானது உண்ணும், இதில் காகம் நடையாகும், அரசுகோழியாகும், தூக்கம் மயிலாகும், வல்லூறு மரணமாகும், இதில் இரண்டாங்கால் வல்லூறு ஊணுகும், ஆந்தை நடையாகும், அரசு காகமாகும், கோழிதூக்கமாகும், மயில் மரணமாகும், மூன்றுங்கால் கேளும் (எ-று.) (12)

இதுவுமது.

17. ஆமப்பா மயில் உண்ணும் நடைவல்லூறு
அரசாந்தை காகமது தூக்கமாகும்
நாமப்பா கோழியது மரணமாகும்
நாலாங்கால் கோழியது நயந்தங்குண்ணும்
வாமப்பா மயில்நடையும் வலிவேந்தாகும்
மகத்தான ஆந்தையது தூக்கமாகும்
காமப்பா காகமது மரணமென்னக்
கணக்கிதுதான் ஐந்தாங்கால் காகம் ஊணே.

(இ-ள்.) மேல்கண்ட மூன்றுங்காலில் மயிலானது உண்ணும். நடை வல்லூறுகும், அரசு ஆந்தையாகும், காகம் தூக்கமாகும், கோழி மரணமாகும், இதில் நான்காங்கால் கோழியானது உண்ணும், மயிலானதுநடக்கும், வல்லூறுஅரசாகும், ஆந்தைதூக்கமாகும், காகம்மரணமாகும். இவ்வாறுகக் கணக்கிட்டுப்பார்க்கில் ஐந்தாங்கால் காகம் ஊணுகுமென்பர்.()

இதுவுமது.

18. ஊனென்றநடை கோழிமயில் அரசதாகும்
ஓகோகோ வல்லூறு தூக்கமாகும்

ஆணென்ற ஆந்தையது மரணமாகும்
அப்பனே திங்கள் புதன் அடைவிதாச்சு
மாணென்ற அறிவுடையோர் அறியவேண்டும்
மகத்தான பஞ்சபட்சி ரோமன்வாக்கு
ஊணென்ற யோகிகட்காய் நாமே சொன்னோம்
ஓகோகோ வியாழத்தின் உறுதிகேளே.

(இ-ள்.) மேற்கண்ட ஊணில் கோழி நடையாகும், மயில் அரசாகும் வல்லூறு தூக்கமாகும் ஆந்தை மரணமாகும் இந்தபடிக்கு பார்த்து திங்கள் புதனுக்குச் சொல்லுமடைவாகும் இதனை அறிவுடையோர்கள் அறியவேண்டும் மகத்தாகிய பஞ்சபட்சி இஃது ரோமரிஷியின் வாக்கிய இன்னூலை யோகிகளுக்காகச் சொன்னோமாக, வியாழக்கிழமையின் உறுதியைக்கேட்பாயாகவும் (எ-று.) (14)

வியாழம் பகல்சாமம் ரு-ற்கும் தொழில்முறை.

19. கேளப்பா விழாழத்தின் ஒன்றுங் காற்கும்
கிருபையென்ற ஊண்காகம் நடைதான் கோழி
வாளப்பா மயில் அரசு வலிதான் தூங்கும்
மைந்தனே ஆந்தையது மரணமென்க
மீளப்பா இரண்டாங்கால் ஆந்தையுண்ணும்
விரைவான காகம்நடை அரசுகோழி
ஆளப்பா மயில் தூக்கம் மரணம் வல்லு
றப்பனே மூன்றுங்கால் அருளுவோமே.

(இ-ள்.) மேற்கண்ட வியாழக்கிழமையில் ஒன்றுங்கால் காகம் ஊணும் நடை கோழியாகும் மயிலானது அரசாகும் வல்லூறு தூக்கமாகும் ஆந்தை மரணமாகும் இதில் இரண்டாங்காலில் ஆந்தை உண்ணும் காகம் நடையாகும் அரசு கோழியாகும் மயிலானது தூக்கமாகும் மரணம் வல்லூறும் இன்னமும் மூன்றுங்காலின் தொழிலைக்கேளும் (எ-று.) (15)

இதுவுமது.

20. அருளுவோம் வல்லூறுண் நடைதான் ஆந்தை
அப்பனே காகமது அரசதாகும்
அருளுவோம் கோழியது தூக்கமாகும்
அழிமரண மயில்நாலில் மயில்தான் உண்ணும்
அருளுவோம் நடைவல்லூறரசன் ஆந்தை
அப்பனே காகமது தூக்கமாகும்
அருளுவோங் கோழியது மரணமென்க
அறைந்தோமே ஐந்தாங்கால் கோழி ஊணே.

(இ-ள்.) மேற்சொன்னவாறு மூன்றுங்காலில் வல்லூறு ஊணாகும், நடை ஆந்தையாகும், காகம் அரசாகும், கோழி தூக்கமாகும், மயில்மரண

மாகும் நான்காங்காலில் மயில் உண்ணும் நடை வல்லூருகும் அரசு ஆந்தையாகும் காகம் தூக்கமாகும் கோழி மரணமாகும் ஐந்தாங்காலில் கோழி ஊணுகும் (எ-று.) (16)

இதுவுமது.

21. ஊணுன மயில்நடைதான் அரசுவல்லூ
ரூகோகோ தூக்கமது ஆந்தையாகும்
காணுன காகமது மரணமென்க
கணக்கிதுதான் வியாழத்தின் கருவதாகும்
மாணுன மாமறையோர் முன்புசொன்ன
மகத்தான பஞ்சபட்சிக் கிந்நூல் சூட்சம்
ஏணுனவிப்படிக்கு மாறினுல்தான்
எள்ளளவும் தப்பாது இனிதான்பாரே.

(இ-ள்) மேற்சொன்ன காலில் மயில் நடையாகும் அரசு வல்லூருகும் தூக்கம் ஆந்தையாகும் காகம் மரணமாகும் கண்டுணர்வாய் வியாழத்தின் அடைவு இதுவெனவும் மறையோர்களாகிய பெரியோர்கள் முன்பு சொன்ன பஞ்சபட்சியில் இந்நூல் சூட்சமாக விளங்கும் இவ்விதமாக மாறிடில் எள்ளுப்பிரமாணமுந் தப்பாது பாரும் (எ-று.) (17)

வெள்ளி பகல்சாமம் ரு-ற்கும் தொழில்முறை.

22. பாரப்பா வெள்ளிபகல் முப்பதுக்கும்
பரிவான ஊண்முதலாம் ஐந்தும்சொல்வேன்
வேரப்பா வெள்ளியென்ற வாரந்தன்னில்
விபரமாய் ஒன்ருங்கால் கோழியுண்ணும்
ஆரப்பா நடைமயிலாம் அரசுவல்லூ
ருந்தையது தூங்கிவிடும் மரணம் காகம்
ஏரப்பா இரண்டாங்கால் காகமுண்ணும்
என்மகனே கோழிநடை இவ்விதங்காணே.

(இ-ள்.) பார்ப்பாயாக வெள்ளிக்கிழமை பகல் (௩௰) நாழிகைக்கும் ஊண்முதலாக வைத்து ஐந்துசாமத்திற்குஞ் சொல்குவேன் கேட்பாயாக வெள்ளிக்கிழமையில் ஒன்ருங்கால் கோழியானது உண்ணும் நடை மயிலாகும் அரசு வல்லூராகும் ஆந்தை தூக்கமாகும் மரணம் காகமாகும் இதில் இரண்டாங்காலில் காகமானது உண்ணும் கோழியானது நடையாகும் இவ்விதமாகக் காண்பாயாக. (எ-று.) (18)

இதுவுமது.

23. காணப்பா மயிலரசு வலியன் தூங்கும்
கருதாந்தை மரணம் மூன்ருங்காலில்

ஆணப்பா ஆந்தை ஊண் நடைதான் காகம்
அரகரா அரசதுவே கோழியாகும்
மாணப்பா மயில் தூங்கும் வலியன் சாவும்
மைந்தனே நாலாங்கால் வல்லூறுண்ணும்
வாணப்பா ஆந்தைநட அரசுகாகம்
மகத்தான கோழியது தூக்கமாமே.

(இ-ள்.) மேற்கண்ட காலில் மயில் அரசாகும் வல்லூறு தூக்கமாகும் ஆந்தை மரணமாகும் மூன்றாங்காலில் ஆந்தை ஊணுகும் நடைகாகமாகும் அரசு கோழியாகும் மயிலானது தூக்கமாகும் வல்லூறு மரணமாகும் நாலாங்காலில் வல்லூறு ஊணுகும் ஆந்தை நடையாகும் அரசு காகமாகும் கோழி தூக்கமாகும் (எ-று.) (19)

இதுவுமது.

24. ஆமென்ற மயில் மரணம் ஐந்தாங்காலில்
அருளுகிறோம் மயிலது ஊண் நடை வல்லூறு
மானென்ற அரசாந்தை காகம் தூக்கம்
மரணமாம் கோழியது வகுத்தோம்பாரு
ஏனென்ற பட்சிபலன் கண்டாரானல்
ஈசனப்பா அவற்கொருவர் எதிர்தானுண்டோ
நானென்ற ஆணவத்தால் சொல்லிவிட்டோம்
நற்சனன மெடுத்தவன் கண்டெடுப்பான் பாரே.

(இ-ள்) மயில் மரணமாகும் ஐந்தாங்காலில் மயில் ஊணுகும் நடை வல்லூருகும் அரசு ஆந்தையாகும காகம் தூக்கமாகும் மரணம் கோழியாகுமென வகுத்தனர் பாரும் பட்சியினுடைய பலன்கண்டாராகில் அவர்க்கு ஒருவர்கள் எதிரியாவது உண்டோ இதனை நானென்னும் ஆணவத்தினுல் சொல்லிவிட்டோம் இதனைநற்சனனமெடுத்தவர்கள் கண்டெடுப்பார்கள்.

சனி பகல் சாமம் ௫-ற்கும் தொழில்முறை.

25. பாரப்பா வெள்ளிபகல் சொல்லிவிட்டோம்
பரிவான சனிபகல் முப்பதுக்கும் கேளு
ஆரப்பா ஒன்ருங்கால் மயில்தானுண்ணும்
அப்பனே நடைவல்லூ றரசன் ஆந்தை
காரப்பா காகமது தூக்கமாகும்
கடுங்கோழி மரணமப்பா இரண்டாங்கால்கேள்
கோரப்பா நலமான கோழியுண்ணும்
கூறினேம் மயில்நடைதான் கூறக்கேளே.

(இ-ள்) பார்ப்பாயாகவும் வெள்ளிக்கிழமையின் பகல்தொழில் சொல்விவிட்டோம் சனிக்கிழமையின் பகல் (௩௰) நாழிகைக்கும் பட்சி

களின் தொழிலைக்கேளும் இதில் ஒன்ருங்கால் மயில் உண்ணும் நடை வல்லூருகும் அரசு ஆந்தையாகும் காகம் தூக்கமாகும் கோழிமரணமாகும் இரண்டாங்காலில் கோழியானது உண்ணும் மயில் நடையாகுங்கேளும்.

26\. கூறுகின்ற வல்லூறு அரசனுகும்
கூற்றனென்ற ஆந்தையது தூக்கமாகும்
காறுகின்ற காகமது மரணமெய்தும்
கண்மணியே மூன்ருங்கால் காகம் உண்ணும்
ஆறுகின்ற கோழிநடை அரசன்தோகை
அறைகிருேம் வல்லூறு தூக்கமாகும்
மாறுகின்ற ஆந்தையது மரணமென்க
வசனித்தோம் நாலாங்கால் ஆந்தையூணே.

(இ-ள்.) கேளும் வல்லூறு அரசாகும் ஆந்தை தூக்கமாகும் காகம் மரணமாகும் மூன்ருங்கால் காகம் உண்ணும் கோழி நடையாகும் அரசு மயிலாகும் வல்லூறுதூக்கமாகும் ஆந்தை மரணமாகும் நாலாங்காலில் ஆந்தை ஊணுகும் (எ-று) (22)

27\. ஊணுனகாகம்நடை அரசுகோழி
ஓகோகோ மயில் தூக்கம் மரணம் வல்லூ
ருனை ஐந்தாங்கால் வல்லூறுண்ணும்
ஆந்தைநடை காகமது அரசனுகும்
மாணுன கோழியது தூக்கமாகும்
மால்மரணம் பூர்வபட்சப் பகல்தானப்பா
கோணுன இதற்குள்ளே யெல்லாஞ் சொன்னேம்
குருசொல்ல நாம்காணக் குறியிதாமே.

(இ-ள்) மேற்கண்டவாறு ஆந்தை ஊணுகும் காகம் நடையாகும் அரசு கோழியாகும் மயில் தூக்கமாகும் மரணம் வல்லூருகும் ஐந்தாங்கால் வல்லூறு ஊணுகும் ஆந்தை நடையாகும் காகம் அரசாகும் கோழி தூக்கமாகும் மயில் மரணமாகும் இவ்வாருக பார்க்கவும் பூர்வபட்சம் பகலிற்கும் இதற்குள்ளே யாவுஞ்சொன்னேம் குருவானவர் சொல்ல நாம் குறிப்போடு கண்டுதெளியவும் (எ-று.) (23)

ஞாயிறு செவ்வாய் இரவுசாமம் ரு-ற்கும் தொழில்முறை.

28\. குறியான பூர்வபட்ச இரவிற்கேளு
கூறுகிருேம் செவ்வாயோடருக்கன் தன்னில்
உறியான ஒன்ருங்கால் காகமுண்ணும்
ஓகோகோ ஆந்தைநடை அரசுவல்லூ
றறியான மயில் தூக்கம் மரணம் கோழி
அப்பனே இரண்டாங்கால் மயில்தானுண்ணும்

வரியான கோழிநடை அரசுகாகம்
மைந்தனே ஆந்தையது தூக்கமாமே.

(இ-ள்.) பூர்வபட்சம் இரவில்பட்சிகள் தொழிலைக்கேளும்செவ்வாய் ஞாயிறு இந்தவாரங்களில் முதற்கால் காகமானது உண்ணும் ஆந்தைநடையாகும் அரசு வல்லூறுகும் மயில் தூக்கமாகும் மரணங்கோழியாகும் இரண்டாங்காலில் மயில்உண்ணும் கோழிநடக்கும் அரசு காகமாகும்ஆந்தை தூக்கமாகும் (எ-று.) (24)

இதுவுமது.

29. தூக்கமாய் வல்லூறு மரணமாகும்
சொற்பெரிய மூன்றுங்கால் ஆந்தையுண்ணும்
மார்க்கமாய் வல்லூறரசு மயில்நடக்கும்
மைந்தனே கோழியது தூக்கமாகும்
ஆக்கமுறும் மரணந்தான் காகமாகும்
அப்பனே நாலாங்கால் கோழியுண்ணும்
காக்கையது நடையாகும் அரசனுந்தை
கண்மணியே வல்லூறு தூக்கமாமே.

(இ-ள்.)மேற்கண்டவாறு ஆந்தையானதும்தூக்கமாகும் வல்லூறு மரணமாகும் மூன்றுங்காலில் ஆந்தையானது உண்ணும் வல்லூறு அரசாகும் மயில் நடையாகும் கோழிதூக்கமாகும் காகம் மரணமாகும் நாலாங்காலில் கோழி ஊணுகும் காகம் நடக்கும் அரசு ஆந்தையாகும் வல்லூறு தூக்கமாகும் (எ-று.) (25)

இதுவுமது

30. ஆமப்பா மயில்மரணஞ் சொல்லக்கேளு
ஐந்தாங்கால் வல்லூறு ஊணதாகும்
வாமப்பா மயில்நடையாம் அரசுகோழி
மகத்தான தூக்கமது காகமாகும்
வாமப்பா ஆந்தையது மரணமெய்தும்
வசனித்தோம் திங்களுக்கும் புதனுக்குங்கேள்
நாமப்பா ஒன்றுங்கால் கோழியுண்ணும்
நடைக்காகம் அரசாந்தை நவில்வதாமே.

(இ-ள்.) மயிலானது மரணமாகுஞ் சொல்லக்கேட்பாயாகவும் ஐந்தாங்காலில் வல்லூறு ஊணுகும் மயில் நடையாகும் அரசு கோழியாகும்தூக்கங்காகமாகும் ஆந்தை மரணமாகும் இவ்விதமாகக் கண்டு திங்கட்கிழமைக்கும் புதன்கிழமைக்குங் கேட்பாயாகவும் முதற்கால் கோழியுண்ணும் நடை காகமாகும் அரசு ஆந்தையாகும் சொல்லக்கேளும் (எ-று.) (26)

திங்கள் புதன் இரவுசாமம் ரு-ற்கும் தொழில்முறை.

31. ஆமென்ற வல்லூரு தூக்கமாகும்
அப்பனே மயில்மரணம் அறிந்திடாய் நீ
ஏமென்ற இரண்டாங்கால் வல்லூறுண்ணும்
என்மகனே நடைமயிலாம் அரசுகோழி
காமென்ற காகமது தூக்கமாகும்
கண்மணியே ஆந்தையது மரணமென்க
மூமென்ற மூன்றாங்கால் காகமுண்ணும்
மூதண்ட ஆந்தைநடை முறையேகேளே.

(இ-ள்.) வல்லூறு தூக்கமாகும் மயில் மரணமாகும் இரண்டாங்காலில் வல்லூறு ஊணுகும் நடை மயிலாகும் அரசுகோழியாகும் காகம் தூக்கமாகும் ஆந்தை மரணமாகும் மூன்றாங்காலில் காகமானது உண்ணும் ஆந்தை நடையாகும் முறையைக்கேளும் (எ-று.) (27)

இதுவுமது.

32 கேளப்பா வல்லூறு அரசதாகும்
கொடியான மயில்தூக்கம் மரணம்கோழி
ஆளப்பா நாலாங்கால் மயில்தானுண்ணும்
அறுமையுறும் கோழிநடை அரசுகாகம்
ஆளப்பா ஆந்தையது தூக்கமாகும்
அருளனென்ற வல்லூறு மரணமென்க
கேளப்பா ஐந்தாங்கால் ஆந்தையுண்ணும்
கிரியையுள்ள வல்லூறு நடையாம் பாரே.

(இ-ள்.) கேட்பாயாக வல்லூறு அரசாகும்மயில் தூக்கமாகும்மரணங் கோழியாகும் நாலாங்காலில் மயில் உண்ணும் கோழி நடையாகும் அரசு காகமாகும் ஆந்தை தூக்கமாகும் வல்லூறு மரணமாகும் ஐந்தாங்காலில் ஆந்தை ஊணுகும் வல்லூறு நடையாகும் பார்ப்பாயாக (எ-று) (28)

இதுவுமது.

33 பாரப்பா என்மகனே இன்னங்கேளு
பாலகனே மயிலரசு தூக்கம்கோழி
காரப்பா காகமது மரணமென்க
கருதுமிவை திங்கள் புதன் கணக்கதாகும்
வேரப்பா வியாழத்தின் பலத்தைக்கேளு
விளங்கியதோர் ஒன்றாங்கால் மயில்தானுண்ணும்
கோரப்பா கோழிநடை அரசுகாகம்
கூறுகிறேனாந்தையது தூக்கமாமே.

(இ-ள்.) இன்னமுங்கேட்பாயாக மயில் அரசாகும் தூக்கம்கோழியாகும் காகம் மரணமாகும் இவைகள் திங்கள் புதன் தொழிலாகும் வியாழக்

கிழமையின் பலத்தைக்கேளும் முதற்காலில் மயில் ஊணும் கோழியான து நடையாகும் அரசு காகமாகும் ஆந்தை தூக்கமாகு மென்பர் (எ-று.)

வியாழம் இரவு சாமம் ரு-ற்கும் தோழில்முறை.

34. ஆமெனும் நற்றவமுனியே சொல்லக்கேளு
அரகரா வல்லூறு மரணமாகும்
நாமமுரு மிரண்டாங்கால் ஆந்தையுண்ணும்
நடைவலியன் அரசுமயில் தூக்கம்கோளி
காமமுறுங் காகமது மரணமென்க
கணக்கிதுதான் மூன்ருங்கால் கோழியுண்ணு
தாமமுறும் நடைக்காகம் அரசு ஆந்தை
தகைமையுள்ள வல்லூறு தூக்கம்கானே.

(இ-ள்.) நற்றவம் புரிந்த முனியே கேட்பாயாக வல்லூறு மரணமாகும் இரண்டாங்காலில் ஆந்தையானது உண்ணும் நடை வல்லூருகும் அரசுமயிலாகும் தூக்கங்கோழியாகும் காகம் மரணமாகும் மூன்ருங்காலில் கோழியானது ஊணும் நடைகாகமாகும் அரசு ஆந்தையாகும் வல்லூறு தூக்கமாகுங் காண்பாய் (எ-று.) (30)

35. காணப்பா மயில்மரணம் கனிந்துபாரு
கண்மணியே நாலாங்கால் வல்லூறுண்ணும்
நாணப்பா மயில்நடைதான் அரசுகோழி
நலமான காகமது தூக்கமாகும்
ஆணப்பா வாந்தையது மரணமென்க
ஐந்தாங்கால் காகமுண்ணும் அப்பால் கேளு
மாணப்பா ஆந்தைநடை வலியனரசாம்
மயில்தூக்கம் கோழியது மரணமாமே.

(இ-ள்.) காண்பதற்கு மயில் மரணமாகும் கனிந்து பார்ப்பாயாக நாலாங்காலில் வல்லூறு ஊணும் மயில் நடையாகும் அரசு கோழியாகும் காகந் தூக்கமாகும் ஆந்தை மரணமாகும் ஐந்தாங்காலில் காகமானது ஊணும் ஆந்தையானது நடையாகும் வல்லூருனது அரசாகும் மயில் தூக்கமாகும் கோழி மரணமாகுமென்பர் (எ-று.) (31)

வெள்ளி இரவு சாமம் ரு-ற்கும் தோழில்முறை.

36. மரணமென்று வியாழத்தின் பலத்தைச்சொன்னேம்
வசனிப்போம் வெள்ளியதின் வன்மைகேளு
அரணமென்ற வெள்ளியது ஒன்ருங்கால்தான்
அப்பனே வல்லூறு உண்ணுமுண்ணும்

சரணமென்ற நடைமயிலாம் அரசுகோழி
தனிக்காகந் தூக்கமடா மரணம் ஆந்தை
திரணமென்ற இரண்டாங்கால் காகமுண்ணும்
தெளிவான ஆந்தைநடை செப்பினேமே.

(இ-ள்.) வியாழத்தின்பலத்தைச்சொன்னோம் வெள்ளிக்கிழமையின் பலனைக்கேளும் வெள்ளிக்கிழமை முதற்காலில் வல்லூறு ஊணுகும் நடை மயிலாகும் அரசு கோழியாகும் காகந் தூக்கமாகும் மரணம் ஆந்தையாகும் இரண்டாங்காலில் காகம் ஊணுகும் ஆந்தை நடையாகுமெனச் சொன்னோம் கேட்பாயாகவும். (எ-று-) (32)

இதுவுமது.

37. செப்பினதோர் வல்லூறு அரசனாகும்
செயலான மயில்தூக்கம் மரணம்கோழி
அப்பினதோர் மூன்றாங்கால் மயில்தானுண்ணும்
அருளினேம் கோழிநடை அரசுகாகம்
மப்பினதோர் முனிதூக்கம் வலியன்சாகும்
கண்மணியே நாலாங்கால் ஆந்தையுண்ணும்
தப்பினதோர் வல்லூறு நடையதாகும்
தருவான மயிலரசு தன்மைபாரே.

(இ-ள்.) வல்லூறு அரசாகும் மயில் தூக்கமாகும் மரணம்கோழியாகும் மூன்றாங்கால் மயில் ஊணுகும் கோழிநடையாகும் அரசு காகமாகும் ஆந்தை தூக்கமாகும் வல்லூறு மரணமாகும் நாலாங்காலில் ஆந்தைஊணுகும் வல்லூறு நடையாகும் மயில் அரசாகும் தன்மையைப்பாரும் (எ-று.)

இதுவுமது.

38. பாரான தவமுனியே மகனேகேளு
பருவமுள்ள கோழியது தூக்கமாகும்
காரான காகமது மரணமென்க
கண்மணியே ஐந்தாங்கால் கோழியுண்ணும்
ஆரான காகநடை அரசுவாந்தை
அப்பனே வல்லூறு தூக்கமென்க
வாரான மயில் மரணம் வெள்ளிவாரம்
வசனித்தோம் சனிவார வளம்கேட்பாயே.

(இ-ள்.) தவமுனியே கேட்பாயாக கோழியானது தூக்கமாகும் காகம் மரணமாகும் ஐந்தாங்காலில் கோழியானது ஊணுகும் காகம் நடையாகும் அரசு ஆந்தையாகும் வல்லூறு தூக்கமாகும் மயில் மரணமாகும் வெள்ளிக்கிழமையில் சனிவாரத்தின் வளங் கேட்பாயாகவும் (எ-று)

சனி இரவு சாமம் ரு-ற்கும் தொழில்முறை.

39. வளமான சனிவாரப் பலத்தைக்கேளு
மைந்தனே ஒன்ருங்கால் ஆந்தையுண்ணும்
வளமான வல்லூறு நடைதானுகும்
மயிலரசு கோழியது தூக்கமாகும்
களமான காகமது மரணமென்க
கண்மணியே இரண்டாங்கால் கோழியுண்ணும்
அளமான நடைகாகம் அரசுவாந்தை
அப்பனே வல்லூறு தூக்கமாகும்.

(இ-ள்.) சனிக்கிழமையின் பலத்தைக் கேட்பாயாகவும் முதற்காலில் ஆந்தை ஊணுகும் வல்லூறு நடையாகும் மயில் அரசாகும் கோழி தூக்கமாகும் காகம் மரணமாகும் இரண்டாங்காலில் கோழி ஊணுகும் நடை காகமாகும் அரசு ஆந்தையாகும் வல்லூறு தூக்கமாகும் இன்னமுங் கேட்பாயாகவும். (எ-று.) (35)

இதுவுமது.

40. ஆமப்பா மயில்மரணம் அருளக்கேளு
அப்பனே மூன்ருங்கால் வல்லூறுண்ணும்
வாமப்பா நடைமயில்தான் அரசதாகும்
வகையான காகமது தூக்கமாகும்
நாமப்பா வாந்தையது மரணமென்க
நாம் சொன்னேம் நாலாங்கால் காகமுண்ணும்
தாமப்பா வாந்தைநடை வலியன் வேந்தாம்
தண்மையுள்ள மயில் தூக்கம் தானும் காணே.

(இ-ள்.) மயில் மரணமாகும் மூன்ருங்காலில் வல்லூறு ஊணுகும் நடைமயிலாகும் கோழி அரசாகும் காகம் தூக்கமாகும் ஆந்தை மரண மாகும் நாலாங்காலில் காகம் ஊணுகும் ஆந்தை நடையாகும் வல்லூறு அரசாகும் மயில் தூக்கமாகுங்காண்பாய் (எ-று) (36)

இதுவுமது.

41. காணப்பா கோழியது மரணமாகும்
கண்மணியே ஐந்தாங்கால் மயிலூணுகும்
ஆணப்பா கோழி நடை அரசுகாகம்
ஆந்தையது தூக்கமென அருளினேன்பார்
நாணப்பா வல்லூறு மரணமென்க
நாம்சொன்னேம் பூர்வபக்ஷத் தொழிலீதாகும்
ஆணப்பா இரவுபகல் அறுபதுக்கும்
அடைவேதான் படுபக்ஷி அருள்வோம்தானே.

(இ-ள்.) காண்பாயாக கோழிமரணமாகும் ஐந்தாங்கால் மயில் ஊணு கும் கோழி நடையாகும் அரசு காகமாகும் ஆந்தை தூக்கமாகும் வல்லூறு மரணமாகும் இவ்வாருகப்பார்ப்பது பூர்வபட்சத்தின் தொழிலாகும் இரவு பகல் அறுபது நாழிகைக்கும் அடைவாகப் பட்சிதனை அருள்வோம்

வாரங்கள் எ-ற்கும் படுபட்சி.

42. தானென்ற சதிருடனே குருவல்லூறு
தனியருக்கன் வெள்ளிதனில் ஆந்தையாகும்
தேனென்ற திங்கள் தனில் காகம் சாரும்
செய்வாய்க்குக் கோழியது தினமரணமாகும்
ஏனென்ற புதனுக்கு மயில்தான் சாரும்
இவைபொல்லா நாட்களென்று இகழ்ந்தார்மைந்தா
கானென்ற இந்தநாள் ஆகாதப்பா
கருதியே குறுமுனிவன் கணித்தார்பாரே.

(இ-ள்.) வியாழக்கிழமையில் வல்லூறு படுபட்சியாகும் ஞாயிறு வெள்ளி இந்த வாரங்களில் ஆந்தை படுபட்சியாகும் திங்கட்கிழமையில் காகம் படுபட்சியாகும் செவ்வாய்க்கிழமையில் கோழி படுபட்சியாகும் புதன்கிழமையில் மயில் படுபட்சியாகும் இந்த வாரங்கள் பொல்லாதென பெரியோர் இகழ்ந்தனர் இந்த நாட்களில் யாதொரு காரியமும் செய்ய லாகாது எனக் குறுமுனியானவர் கணித்தார் பாரும் (எ-று.) (38)

நட்சத்திரப் பட்சி.

43. பாரான அசுவனிமுதல் ஐந்தும் வல்லூறு
பண்பான ஆதிரைநேர் ஆறுமாந்தை
நேரான உத்திரம் நேர் ஐந்தும் காகம்
நேர்மையுள்ள அனுஷம்நேர் ஐந்தும்கோழி
வாரான ஓணம்நேர் ஆறும்தோகை
வந்ததடா பூருவத்தின் வழியீதாகும்
தேரான நாட்பக்ஷி நிலையீதப்பா
திகம்பரித்தால் விபரித்தால் திறந்தான் பாரே.

(இ-ள்.) பார்ப்பாயாக அசுவனிமுதல் ஐந்து நட்சத்திரமும் வல்லூறு க்காகும் திருவாதிரை முதல் ஆறுநட்சத்திரமும் ஆந்தைக்காகும் உத்திர முதல் ஐந்து நட்சத்திரமும் காகத்திற்காகும் அனுஷமுதல் ஐந்து நட்சத் திரமும் கோழிக்காகும் திருவோணம் முதல் ஆறுநட்சத்திரமும் மயிலுக் காகும் இவை பூர்வபட்சத்தின் வழியீதாகும் நாட்பட்சியின் நிலையாகும் இதைக்கண்டும் விபரித்தால் திரமாகும் பார்க்கவும் (எ-று.) (39)

திதிப்பட்சி.

44. திரமுள்ள பிரதமை சஷ்டியேகாதசி
செப்பரிய வல்லூறும் துதிகையோடு
திரமுள்ள சப்தமி துவாதசி ஆந்தை
திரிதிகையும் அஷ்டமியும் திரயோதசி
தரமுள்ள காகமெனச் சாற்றலாகும்
சதுர்த்தியோடு நவமி சதுர்த்தசிதான் கோழி
வரமுள்ள பஞ்சமியுந் தசமிபௌரணை
மாமயிலாம் பூருவத்தின் வகையீதாமே.

(இ-ள்.) கேட்பாயாக பிரதமை சஷ்டி யேகாதசி இந்த மூன்றுதிதியும் வல்லூறுக்காகும். துதிகை சப்தமி துவாதசி ஆந்தைக்காகும், திருதிகை அஷ்டமி திரயோதசி காகத்திற்காகும், சதுர்த்தி நவமி சதுர்த்தசி கோழிக்காகும், பஞ்சமி தசமி பௌர்ணமி மயிலுக்காகும்' இவ்விதமாகப் பூர்வபட்சத்திற்குப் பார்க்கவும் (எ-று.) (40)

இராசிபட்சி.

45. வகையான மேஷம் விருச்சிகமுஞ் சிங்கம்
வல்லூறு கடகம்யாழ் கன்னியாந்தை
தொகையான தனுசுடனே மீனங்காகந்
துலா ரிஷபங்கோழியென்று சொல்லலாகும்
நகையான மகரம் கும்பம் இவையிரண்டும்
நல்லமயிலாமென்றே நாட்டலாகும்
பகையான பட்சியென்ற நிலையைப்பார்த்து
பகுத்தறிவ தற்கல்லோ சொன்னன்பாரே.

(இ-ள்.) மேஷம் விருச்சிகம் சிங்கம் இந்த மூன்று இராசியும் வல்லூறுக்காகும் கடகம்மிதுனம் கன்னி ஆந்தைக்காகும் தனுசு மீனம் காகத்திற்காகும் துலாம் ரிஷபம் கோழிக்காகும் மகரம் கும்பம் இவையிரண்டும் மயிலுக்காகும் இவைகளில் பகையாகும் பட்சிகளின் நிலையைப் பார்த்து பகுத்தறிவதற்தாகச் சொன்னர் பாரும் (எ-று.) (41)

ஆரூடஞ்சோல்லின் பகுத்தறிவு.

46. நாள்பார்த்து நட்சத்திரம் ராசிபார்த்து
நல்வேளை யிடர்வேளை நன்றுய்ப்பார்த்து
கோள்பார்த்து பட்சிகளின் வலிவும் பார்த்து
குணக்குறிகள் வினவிநின்றேன் கொள்கைபார்த்து
ஆள்பார்த்து அவனுடைய நிலையும் பார்த்து
அப்பனே அவன்மொழிந்த எழுத்தைப்பார்த்து
தாள்பார்த்துத் தாள்திறக்கு மறிவுதங்கித்
தரணிதன்னில் சோதிடங்கள் தான் சொல்வாயே.

(இ-ள்.) நாட்கள் நட்சத்திரம் இராசி நல்வேளை யிடர்வேளை இவைகளை நன்றாய்ப்பார்த்தும் கோட்களையும் பட்சிகளின் வலிவும் பார்த்தும் குணம் குறிகளோடு ஆருடங்கேட்கவந்தோன் கொள்கையும் பார்த்து ஆளையும் அவன் நின்ற நிலைகளையும் பார்த்து அவன் மொழிந்த முதலெழுத்தையும் பார்த்து தாள்திறந்துபேசும்படியான அறிவானது விளங்கிப் பூமியின்மீது சோதிடங்கள் சொல்வாய் (எ-று.) (42)

இதுவுமது

47. சொல்லுவது சத்துருமித்துருவும் பார்த்து
துடியாகச் சொன்னவற்றுள் சூக்ஷங்கண்டு
வெல்லுவது இதில் ஒன்றுந் தப்பாமல்தான்
மேதினியில் ஆராய்ந்து நன்றாய்ப்பாரு
மல்லுவது சாஸ்திரத்தில் விநயம்வைத்து
மகத்தான கணபதிக்குப் பூசைசெய்து
அல்லுவது ஆராய்ந்து சொல்லாவிட்டால்
அப்பனே சொன்னதெல்லாம் பொய்யாம்பாரே

(இ-ள்.) சொல்லும்படியான சத்துருமித்துரு பட்சிகள் பார்த்து சூட்சமானதுகண்டு இதனில் யாதொன்றுந்தப்பாமல் பூமியின்மீது ஆராய்ந்து நன்றாகப்பார்த்து சாஸ்திரத்தின்மீது விநயம்வைத்தும் கணபதிக்குபூசை செய்தும் ஆராய்ந்து சொல்லாவிடில் சொன்னது யாவும் பொய்யாகும்.

இதுவுமது.

48. பொய்யான சத்துருநாள் கொடுமைரொம்ப
போசனங்கள் எவ்வளவேனும் பொசிக்கவொட்டான்
கொய்யாமற் கொய்யுமடா அரசு பகையானால்
கொடிய சத்துருவாயெழுந்து கொலையே செய்வான்
பொய்யாது ஒருபோதும் இடைஞ்சல்மெத்த
வீணாக மித்துரு சத்துருவுமாவான்
எய்யாமலிருந்து மனம் புண்ணாய் நொந்து
இடர் படுவதல்லால் வாராதுபாரே.

(இ-ள்.) சத்துருவின் நாளாகில் கொடுமையானது விளைவிக்கும் போசனங்கள் எவ்வளவேனும் பொசிக்கவொட்டான், அரசுபகையாகுமாயின் கொய்யாமற் கொய்யும் கொடிய சத்துருவாக எழுந்துங் கொலையானது செய்குவன் இம்மொழி பொய்யாது இடைஞ்சலானது மெத்தவாகும் மித்துருசத்துருவாகுவன் இவன் தனக்கு யாதும் சொல்ல வல்லமையானது அற்று மனம் புண்ணாக நொந்தும் இடர்ப்படுவன் யாதும் சித்தியாகாதென்பர் (எ-று.) (44)

வல்லூறின் சத்துருமித்துரு.

49. பாரான பூருவத்தின் பட்சிபகை சொல்வேன்
பதிவான வலியனுக்குக் காகங்கோழி

நேரான மித்துருமயில் ஆந்தையாகும்
நேர்மையுள்ள காரியத்தில் மித்துருவைக்கூட்டு
வாறுன சத்துருவைச் சேர்த்துக்கொண்டால்
மக்களே எதிரியுடல் மாண்டுபோகுங்
கூறுனமித்துரு சத்துருவைக்கண்டு
கூட்டுவாய் வகையறிந்து தொழிலைச்செய்யே.

(இ-ள்.) பூர்வபட்சத்தின் பட்சிகளின் பகையைச்சொல்குவேன் கேட்பாயாகவும் வல்லூறுக்குக் காகமுங்கோழியும் பகையாகும், உறவு மயிலும் ஆந்தையுமாகும் இவைகளில் நற்காரியங்களுக்கு உறவாகிய பட்சியைக் கூட்டவும் அப்படிக்கில்லாமல் பகையுள்ள பட்சியைச்சேர்த்துக்கொள்ளில் எதிரியினுடைய உடலானது மாண்டுபோகும் இதில் மித்துருசத்துரு பட்சியைக்கண்டும் கூட்டுதற்கு வகையறிந்தும் தொழில் செய்குவாய் (எ-று.) (45)

ஆந்தையின் சத்துருமித்துரு.

50. தொழிலான ஆந்தையின் சத்துருவைக்கேளு
தோகைமயில் கோழியதாய்ச் சொல்லலாகும்
வழியான மித்துரு வல்லூறுங்காகம்
வணங்கிடும்பார் மித்துருவைச் சேர்த்தாயானல்
அழியாது காரியங்கள் நன்மையாகும்
அப்பனே சத்துருவைச் சேர்த்தாயானல்
பழியான கொலைசெய்யுந் தொழிலுமாகும்
படரவே அஷ்டகர்மம் பலிக்கும்பாரே.

(இ-ள்.) ஆந்தையினுடைய சத்துருபட்சியைக் கேட்பாயாகவும் மயிலும் கோழியும் சத்துருவாகும், மித்துரு வல்லூறுங்காகமாகும், வணங்கிடும் மித்துருபட்சியைக் சேர்த்தாயாகில் காரியங்கள் யாவும் நன்மையாகும் சத்துருபட்சியைச் சேர்த்தாயாகில் பழியாகிய கொலைசெய்யுந் தொழிலாகும் அஷ்டகர்மமும் பலிக்குமென்றனர் (எ-று.) (46)

காகத்தின் சத்துருமித்துரு.

51. பாரடா காகத்தின் சத்துருவைக்கேளு
பழியான வல்லூறு மயிலுமாகும்
நேரடா மித்துருவைச் சொல்வேன் மக்காள்
நேர்மையுள்ள ஆந்தையுடன் கோழியாகும்
கோரடா சத்துருவைக் கூட்டும்போது
குலைந்துவிடுஞ் சிறுகுசண்டை கொடுமையாகும்
ஆரடா ஒருவரீதை திருப்பொண்ணுது
அப்பனே சத்துரு ஆகாதுபாரே.

(இ-ள்.) காகத்திற்குச்சத்துருவாகியபட்சியைக்கேட்பாயாகவும் வல்லூறும்மயிலும்சத்துருவாகும், மித்துருபட்சியைக்கேளும் ஆந்தையும்கோ

ழியுமாகும் சத்துருபட்சியைக்கூட்டும்போது நிலையானது குலையும் சிலுகு டன் சண்டையுண்டாகும் கொடுமையானது விளையும் இதை யொருவரா லும் திருப்பவொண்ணுது சத்துருபட்சியாகாது பாரும் (எ-று) (47)

கோழியின் சத்துருமித்துரு.

52. ஆகாத கோழியின் சத்துருவைக்கேளு
அப்பனே வல்லூறு ஆந்தையாகும்
நோகாத மித்துருவைச் சொல்வேன் மக்காள்
நுண்மையுள்ள காகமுடன் மயிலுமாகும்
போகாத மித்துருவைச் சேர்த்தாயானல்
புனிதமுடன் தானிருந்து வாழலாகும்
ஏகாத சத்துருவைச் சேர்த்துக்கொண்டு
இடுக்கமுள்ள காரியத்தின் தொழிலைச்செய்யே.

(இ-ள்.) கோழிக்குச் சத்துருவாகிய பட்கியைக்கேட்பாயாகவும் வல் லூறும் ஆந்தையுமாகும் மித்துருபட்சியைச் சொல்வேன்கேளும் காகமும் மயிலுமாகும் மித்துருபட்சிச் சேர்த்தாயாகில் புனிதமுடன் இருந்துவாழ் குவர் சத்துருபட்சியைச் சேர்த்துக்கொண்டு இடுக்கமுடைய காரியங்க ளைச் செய்குவாய் (எ-று.) (48)

மயிலின் சத்துரு மித்துரு.

53. செய்யப்பா மயிலுக்குச் சத்துருவைச்சொல்வேன்
திடமான ஆந்தையுடன் காகமாகும்
மெய்யப்பா மித்துருவைச் சொல்லக்கேளு
மேன்மையுள்ள வல்லூறுங் கோழியாகும்
பொய்யப்பா சொல்லவில்லை மித்துருநன்று
பொல்லாத பகையோ சத்துருவேயானல்
பொய்யப்பா பட்சிவகை யறிந்துகொண்டு
கொடுமையுள்ள தொழில் செய்யத்துணிவுகொள்ளே.

(இ-ள்.)மயிலுக்குச்சத்துருவாகிய பட்சியைச்சொல்குவேன் கேட்பா யாகவும் ஆந்தையும் காகமுமாகும், மித்துருபட்சியைச் சொல்லக்கேளும் வல்லூறுங் கோழியாகும், இதில் மித்துறுபட்சியாகில் பட்சியின் வகைக ளையறிந்துகொண்டும் கொடுமையாகிய தொழில்கள் செய்யத்துணிகுவாய்

மித்துருவின் பலாபலன்.

54. துணிவாக மித்துருவைச் சேர்த்துக்கொண்டு
தொடுத்திடுவாய் நலமான காரியங்களெல்லாந்
தணிவாக இதனாலே கூடிவரும் பாரு
தண்மையுள்ள புத்தியுமாய் சகலமுமே வசியம்

பணிவாகத் தொழில்களெல்லாம் நன்மையாகப்
பலிக்குமடா மனம்பலிதம் மெத்தமெத்த
துணிவாக ஒருவருக்கும் பொல்லாங்காலே
துரிதமடா தொழில்களெல்லாங் குணமாம்பாரே.

(இ-ள்.) மித்துருபட்சியைச் சேர்த்துக்கொண்டும் நன்மையாகிய காரியங்கள் யாவும் செய்குவாய் இதனால் கூடிவரும் புத்தியானது பெருகும் சகலமும் வசியமாகும் செய்யும்படியான தொழில்கள் யாவும் நன்மையாகும் பலிதமானது மெத்தவாகும் ஒருவர்களுடைய பொல்லாங்கெல்லாம் ஒழிந்து தொழில்கள் யாவுங் குணமாகும் (எ-று.) (50)

இதுவுமது.

55. குணமாகு மித்துருதான் உறவதாகுங்
கூச்சல் ஒன்றும் வருவதில்லை கோள்களில்லை
இணையில்லாப் பொருள்கூடும் மேன்மேலாக
எதிர்த்தபேர் வெல்வதில்லை பகையேதப்பா
கணையாகுஞ் செல்வதெல்லாம் வினையேயில்லை
கலந்து உறவாடியல்லோ இருந்துவாழ்வர்
மணமாகும் மங்களமாஞ் சுகத்தைச் சார்ந்து
வாழலாம் வெகுகாலம் வாழலாமே.

(இ-ள்.) மித்துருவெனும் பட்சி உறவாகும் கலகம் கோட்கள் இவைகளில்லை இணையில்லாத பொருள்கூடும், மென்மேலாகவும், எதிர்த்த பேர்கள் வெல்லமாட்டார்கள், பகையானது நேராது, ஒருவரிடத்தும் வினையானது இல்லை, பகைவர்கள் கலந்து உறவாடுவார்கள் மங்களமாகவும் சுகத்தை யனுபவித்து வாழலாம் வெகுகாலம். (எ-று.) (51)

இதுவுமது.

56. வாழலாம் மித்துருதான் அரசனானால்
மக்களே ஒருநாளும் மனத்தாழ்வில்லை
சூழலாம் வெகுஉதவி பிரபுஉறவாகுந்
தொடுத்துநின்ற காரியங்கள் செயமேயாகும்
ஆளலா மவ்வேளை என்னசெய்தபோதும்
அதனாலே அழிவுண்டோ அனுகூலமல்லாமல்
நாளெல்லா மவ்வேளை நலமேயாகும்
நடத்தலா மனம்போல நடத்தலாமே.

(இ-ள்.) மித்துருபட்சியானது அரசாகில் ஒருநாளும் மனமானது தாழ்வுவராது வெகுபேர்கள் உதவியும் பிரபுக்கள் உறவுமாகும் தொடுத்த காரியங்கள் செயமாகும், என்னகாரியம் செய்தபோதிலும் அதினால்

அழிவுண்டாகாது அனுகூலமாகும், அவ்வேளையில்செய்ய நலமாகும் யாதொருகாரியமும் மனம்போல் நடத்தலாகும் (எ-று.) (52)

இதுவுமது.

57. நடத்தலா மித்துருவைச் சேர்த்துக்கொண்டு
நலமான காரியங்கள் நடத்தலாகும்
கடத்தலாம் போனதொரு பொருள் கைகூடுங்
கலந்து உறவாடுவதுங் கனிவதாகுங்
கிடத்தாலும் நோயதுவுந் தீர்ந்துபோகுங்
கெடுதியொன்றும் வருவதில்லை நயமேயாகும்
படுத்தலா மெடுத்தமொழில் நன்றுநன்று
பகைஞர் உறவாகுவர் உட்பகைதான் போச்சே.

(இ-ள்.) யாதொருகாரியமும் நடத்துதற்கு மித்துருவாகிய பட்சியைச்சேர்த்துக்கொண்டு நன்மையாகிய காரியங்கள்யாவும் நடத்தலாகும்,தவறிப்போனபொருள் கைகூடும், பகைவர் கலந்து உறவாடுவார்கள் நோயானதுதீரும், யாதொருகெடுதியும் வாராது நயமாகும், எடுத்தகாரியமும் தொழிலும்செய்யமிகவும்நன்று,பகைவர்உறவாடுவார்கள்உட்பகைதீரும்

இதுவுமது.

58. பகைபோச்சு உறவாச்சு பலனுண்டாச்சு
பணிவிடைகள்செய்யும் அடிமையுண்டாச்சு
துகையாச்சு வித்துவரை எடுக்கலாச்சு
தொடுத்திடுவாய் எந்தெந்தத் தொழிலுக்குந்தான்
நகையாச்சு வழக்குவெல்ல நலமேயாச்சு
நடத்தலா மனதில்வந்த நன்மையெல்லா
மிகையாச்சு மித்துருவைச் சேர்ந்தகாலம்
மேதினியில் மனத்துயர மில்லைத்தானே.

(இ-ள்.) பகையானது போகும், உறவாகும், பலனுண்டாகும், பணிவிடைகள் செய்யும்படியான அடிமையாட்களுண்டாகும், தொகைசேர்க்கவும், வித்து விதை விரைக்கவும், நடவும் நன்மையாகும், மனதில் நினைத்த நன்மையான காரியங்களை நடத்தலாகும் மித்துருவைச்சேர்ந்த காலம் பூமியின் மீது யாதொரு மனத்துயருமில்லையென்பர் (எ-று.) 54

சத்துருவின் பலாபலன்

59. இல்லையே சத்துருவைச் சேர்ந்தாயானால்
இடுக்கம்வரும் மனதிற்குத் துயரமாகுந்
தொல்லையே நாள்தோறுந் துன்பஞ்செய்யுந்
தொடுத்துநின்ற காரியமும் பகையதாகுஞ்

சல்லியமாம் நினைத்ததெல்லாஞ் சத்துருவாகும்
சள்ளையா யெடுத்ததொழில் கூடாதப்பா
கல்லல்வருமுலகத்தில் இடைஞ்சல்மெத்த
கடைத்தேற பரதேசம் போதல் நன்றே.

(இ-ள்.) சத்துருபட்சியைச் சேர்த்தாயாகில் இடுக்கமானது வருகும் மனத்துயருண்டாகும், தொல்லையானது செய்யும், தொடுக்குங் காரியங்களில் பகையானது நேரும், நினைத்தகாரியங்கள் யாவும் சத்துருவாகநேரும், ஆரம்பித்ததொழில் ஆகாது, பூமியின்மீது இடஞ்சலானது மெத்த உண்டாகும், கடைத்தேற வழியில்லாமல் பரதேசம் போகுதல் நன்றாகும்

இதுவுமது.

60. போகலாம் ஊண் அரசு சத்துருவாய் நின்றால்
பொல்லாது கூடிவர மாட்டாதப்பா
வேகலாம் நோய் உறவும் பகையாம்பாரு
மேதினியிற் செய்ததெல்லாஞ் சத்துருவாய்போகும்
நோகலாமனதிற்கு எவ்வளவேனும்
நோவதல்லால் சந்தோஷ மில்லையில்லை
ஆகலாம் அஷ்டகர்மம் எடுத்ததெல்லாம்
ஆடுமடா சத்துருவைச் சேர்த்துக்கொள்ளே.

(இ-ள்.) ஊண்பட்சியும் அரசுபட்சியும் சத்துருவாகவிருக்கில் யாதொரு காரியமுங் கூடிவரமாட்டாது, கலகம் நேரும், உறவோர்களும் பகையாவர், பூமியின்மீது செய்யுங்காரியங்கள் யாவும் சத்துருவாகப் போகும் மனதிற்கு எவ்வளவேனும் சந்தோஷமில்லையாகும், அஷ்டகர்மங்கள் யாவும் ஆடும் சத்துருவைச் சேர்த்துக்கொள்ளவும் (எ-று.) (56)

இதுவரையில் கூறியதொழில் முறையை யாவரும் எளிதில் உணரும்படி இதன் பின்பக்கத்தில் ம-சக்கரங்களாக இயற்றி இருக்கின்றது காண்க.

ஞாயிறு செவ்வாய் பகல்சாமம் ரு-ற்கும்
தொழில்முறைச் சக்கரம்.

ஊண்	நடை	அரசு	நித்திரை	மரணம்
கூ	கவ	உ	ஞ	௭
அ வல்லூறு	இ ஆந்தை	உ காகம்	எ கோழி	ஒ மயில்
மயில்	வல்லூறு	ஆந்தை	காகம்	கோழி
கோழி	மயில்	வல்லூறு	ஆந்தை	காகம்
காகம்	கோழி	மயில்	வல்லூறு	ஆந்தை
ஆந்தை	காகம்	கோழி	மயில்	வல்லூறு

ஞாயிறு செவ்வாய் இரவு சாமம் ரு-ற்கும்
தொழில்முறைச் சக்கரம்.

ஊண்	அரசு	மரணம்	நடை	நித்திரை
கவ	க	க௨	கவ	க
உ காகம்	அ வல்லூறு	எ கோழி	இ ஆந்தை	ஒ மயில்
மயில்	காகம்	வல்லூறு	கோழி	ஆந்தை
ஆந்தை	மயில்	காகம்	வல்லூறு	கோழி
கோழி	ஆந்தை	மயில்	காகம்	வல்லூறு
வல்லூறு	கோழி	ஆந்தை	மயில்	காகம்

திங்கள் புதன் பகல்சாமம் ௫-ற்கும்
தொழில்முறைச் சக்கரம்.

ஊண்	நடை	அரசு	நித்திரை	மரணம்
க௪	க௰	௨	௩	௪
இ ஆந்தை	உ காகம்	எ கோழி	ஒ மயில்	அ வல்லூறு
வல்லூறு	ஆந்தை	காகம்	கோழி	மயில்
மயில்	வல்லூறு	ஆந்தை	காகம்	கோழி
கோழி	மயில்	வல்லூறு	ஆந்தை	காகம்
காகம்	கோழி	மயில்	வல்லூறு	ஆந்தை

திங்கள் புதன் இரவுசாமம் ௫-ற்கும் தொழில்முறைச் சக்கரம்.

ஊண்	அரசு	மரணம்	நடை	நித்திரை
கவ	க	கஉ	கவ	க
எ கோழி	இ ஆந்தை	ஒ மயில்	உ காகம்	அ வல்லூறு
வல்லூறு	கோழி	ஆந்தை	மயில்	காகம்
காகம்	வல்லூறு	கோழி	ஆந்தை	மயில்
மயில்	காகம்	வல்லூறு	கோழி	ஆந்தை
ஆந்தை	மயில்	காகம்	வல்லூறு	கோழி

வியாழம் பகல்சாமம் ரு-ற்கும் தொழில் முறைச் சக்கரம்.

ஊண்	நடை	அரசு	நித்திரை	மரணம்
௧௬	௧௪	௨	௯	௬
உ காகம்	எ கோழி	ஒ மயில்	அ வல்லூறு	இ ஆந்தை
ஆந்தை	காகம்	கோழி	மயில்	வல்லூறு
வல்லூறு	ஆந்தை	காகம்	கோழி	மயில்
மயில்	வல்லூறு	ஆந்தை	காகம்	கோழி
கோழி	மயில்	வல்லூறு	ஆந்தை	காகம்

வியாழம் இரவு சாமம் ரு-ற்கும்
தொழில் முறைச் சக்கரம்.

ஊண்	அரசு	மரணம்	நடை	நித்திரை
கவ	க	கஉ	கவ	க
ஒ மயில்	உ காகம்	அ வல்லூறு	எ கோழி	இ ஆந்தை
ஆந்தை	மயில்	காகம்	வல்லூறு	கோழி
கோழி	ஆந்தை	மயில்	காகம்	வல்லூறு
வல்லூறு	கோழி	ஆந்தை	மயில்	காகம்
காகம்	வல்லூறு	கோழி	ஆந்தை	மயில்

வெள்ளி பகல் சாமம் ரு-ற்கும்
தொழில்முறைச் சக்கரம்.

ஊண்	நடை	அரசு	நித்திரை	மரணம்
கஉ	கவ	உ	ஜ	கஉ
எ கோழி	ஒ மயில்	அ வல்லூறு	இ ஆந்தை	உ காகம்
காகம்	கோழி	மயில்	வல்லூறு	ஆந்தை
ஆந்தை	காகம்	கோழி	மயில்	வல்லூறு
வல்லூறு	ஆந்தை	காகம்	கோழி	மயில்
மயில்	வல்லூறு	ஆந்தை	காகம்	கோழி

வெள்ளி இரவு சாமம் ரு-க்கும் தொழில்முறைச் சக்கரம்.

ஊண்	அரசு	மரணம்	நடை	நித்திரை
கவ	க	கஉ	க	க
அ வல்லூறு	எ கோழி	இ ஆந்தை	ஒ மயில்	உ காகம்
காகம்	வல்லூறு	கோழி	ஆந்தை	மயில்
மயில்	காகம்	வல்லூறு	கோழி	ஆந்தை
ஆந்தை	மயில்	காகம்	வல்லூறு	கோழி
கோழி	ஆந்தை	மயில்	காகம்	வல்லூறு

சனி பகல் சாமம் ரு - ற்கும்
தொழில்முறைச் சக்கரம்.

ஊண்	நடை	அரசு	நித்திரை	மரணம்
கஉ	கவ	உ	ஞ	௭
ஒ மயில்	அ வல்லூறு	இ ஆந்தை	உ காகம்	எ கோழி
கோழி	மயில்	வல்லூறு	ஆந்தை	காகம்
காகம்	கோழி	மயில்	வல்லூறு	ஆந்தை
ஆந்தை	காகம்	கோழி	மயில்	வல்லூறு
வல்லூறு	ஆந்தை	காகம்	கோழி	மயில்

சனி இரவு சாமம் ரு-ற்கும்
தொழில்முறைச் சக்கரம்.

ஊண்	அரசு	மரணம்	நடை	நித்திரை
கவ	க	கஉ	கவ	க
இ ஆந்தை	ஒ மயில்	உ காகம்	அ வல்லூறு	எ கோழி
கோழி	ஆந்தை	மயில்	காகம்	வல்லூறு
வல்லூறு	கோழி	ஆந்தை	மயில்	காகம்
காகம்	வல்லூறு	கோழி	ஆந்தை	மயில்
மயில்	காகம்	வல்லூறு	கோழி	ஆந்தை

உ

கடவுள் துணை.

அமரபட்சப் படலம்.

அட்சரப்பட்சி.

61. வலிவான அகரமது கோழியாகும்
வண்மையுள்ள இகரமது வல்லூறுகும்
நலமான உகரமது ஆந்தையாகும்
நற்பெரிய எகரமது மயிலதாகும்
தலமான ஒகரமது காகமாகும்
சாற்றுகின்ற அமரபட்ச அட்சரங்கள்மாறி
கொலுவாக நின்றநிலை அறியாவிட்டால்
கூறுகெட்ட மானிடரே குறிப்பார்தானே.

(இ-ள்.) வலிவாகும்படியான அகரம் கோழியாகும், இகரமென்னும் எழுத்து வல்லூறுகும், உகரமென்னும் எழுத்து ஆந்தையாகும், எகரமென்னும் எழுத்து மயிலாகும், ஒகரமென்னும் எழுத்தானது காகமாகும், இவ்விதமாக அமரபட்சத்திற்கு எழுத்துகள் மாறி பட்சிகள் நின்ற நிலையானது அறியாவிடில் குறியானது கெட்டமானிடர்கள் குறிப்பார்கள்.

வாரங்கள் எ-ற்கும் ஊண்பட்சி.

62. தானென்ற சனியுடனே சோமவாரம்
தன்னிலே மயிலுண்ணும் புகல்வல்லூறு
கோனென்ற சனியுடனே சோமவாரம்
கொடுமையுள்ள புதனுக்குக் காகமுண்ணும்
மாமென்ற குருவாரம் ஆந்தையுண்ணும்
மக்களே பகல்போக இரவுகேளு
தேனென்ற மந்தனுடன் திங்கள்கோழி
ஜெயமான வெள்ளிமயில் உண்ணும்தானே.

(இ-ள்.) சனி திங்கள் இந்தக்கிழமைகளில் மயில் ஊணுகும், வெள்ளிக்கிழமையில் வல்லூறு ஊணுகும், ஞாயிறு செவ்வாய் இந்தவாரங்களில் கோழி ஊணுகும், புதன்கிழமையில் மயில் ஊணுகும், வியாழக்கிழமையில் ஆந்தை ஊணுகும் இவ்விதமாக அமரபட்சம்பகல் தனக்குப்பார்த்துக்கொண்டு அன்றிரவிற்கு சொல்வேன் கேட்பாயாகவும் சனியுடன் திங்கட்கிழமையில்கோழியானது உண்ணும், வெள்ளிக்கிழமையில் மயில் உண்ணும்.

இதுவுமது.

63. உண்ணவே புந்திதன்னில் ஆந்தையுண்ணும்
உரிமையுள்ள வியாழத்திற் காகமுண்ணும்
நண்ணவே ஞாயிறுசேய் வல்லூறுண்ணும்
நவிலுமிந்த வகையில் அகோரமாச்சு
கண்ணவே அதிகார நாளிலெந்தக்
காரியமும் செய்யநன்று பலனுண்டாகும்
எண்ணவே பட்சியுடனெழுத்துஞ் சொன்னேம்
இதன்மேலும்ஊண்முதலாய்த்தொழில்சொல்வோமே

(இ-ள்.) புதன்கிழமையில் ஆந்தையானது உண்ணும் வியாழக்கிழமையில் காகமானது உண்ணும், ஞாயிறு செவ்வாய் இந்தவாரங்களில் வல்லூறு உண்ணும் இவ்வகையாக இரவிற்குப்பார்த்துக்கொண்டு இந்தப்படி ஊணுகிய வாரங்களில் எந்தக்காரியமும் செய்ய நன்மையாகும், பலன் கிடைக்கும் சூட்சமாக அறிவதற்குப் பட்சிகளின் எழுத்தையுஞ் சொன்னேம் இதன்மேல் ஊண்முதலாகிய தொழில் சொல்வோம் (3)

திங்கள் சனி பகல்சாமம் ரு-ற்கும் தொழில்முறை

64. சொல்லவே அமரபட்சப் பகலைக்கேளு
சோமனுடன் சனிவாரம் ஒன்றுங்காலில்
மெல்லவே ஊண்மயிலாம் அரசுகோழி
மேதினியிற் காகமாம் செல்லுமாந்தை
இல்லையென வல்லூறு தூங்கிவீழும்
இரண்டாங்கால் ஆந்தை ஊண் வலிவேந்தாகும்
ஒல்லையே மயில் இறக்குங் கோழிசெல்லும்
ஓடாமற் காகமது உறங்கும் பாரே.

(இ-ள்.) அமரபட்சம் பகலின் பலனைக்கேட்பாயாகவும், திங்கள் சனி இந்தவாரங்களில் முதற்காலில் மயில் ஊணுகும், அரசு கோழியாகும், காகம் நடையாகும், ஆந்தை மரணமாகும், வல்லூறு தூக்கமாகும், இரண்டாங்காலில் ஆந்தை ஊணுகும், வல்லூறு அரசாகும், மயில் மரணமாகும், கோழியானது நடக்கும், காகம் தூங்கும் பார்ப்பாயாகவும் (4)

இதுவுமது.

65. பாரப்பா மூன்றுங்கால் கோழியுண்ணும்
பார்காகம் அரசாந்தை பரிந்துசாகும்
காரப்பா வல்லூறு நடக்கும் தோகை
கண்ணுறங்கும் நாலாங்கால் வலியனுண்ணும்
கோரப்பா மயிலரசு கோழிசாகும்
கொடிகாகம் நடையுறக்கம கொள்ளுமாந்தை

ஆரப்பா ஐந்தாங்கால் காகம் ஊணும்
அரசாந்தை வல்லூறு மரணமாமே.

(இ-ள்.) பார்ப்பதற்கு மூன்ருங்காலில் கோழி ஊணுகும், காகம் அரசாகும் ஆந்தை மரணமாகும், வல்லூறு நடையாகும், மயில் தூக்கமாகும், நான்காங்காலில் வல்லூறு ஊணுகும், மயில் அரசாகும், கோழி மரணமாகும், காகம் நடையாகும், தூக்கம் ஆந்தையாகும், ஐந்தாங்காலில் காகமானது ஊணுகும், அரசு ஆந்தையாகும், வல்லூறு மரணமாகுமென்பர்

இதுவுமது.

66. ஆமென்ற மயில்நடக்கக் கோழிதூங்கும்
அம்புலிக்கு மைந்தனுக்கும் ஆச்சுமைந்தா
தாமென்ற அருக்கன்சேய் ஒன்ருங்காலில்
தக்கதொரு கோழிஊண் அரசுகாகம்
நாமென்ற ஆந்தைசாம் நடைவல்லூறு
நல்லமயில் தூங்கிவிழும் இரண்டாங்கால்கேள்
வாமென்ற வல்லூறும் மயில்வேந்தாகும்
வாரணம்சாம் காகநடை வழுத்துவேனே.

(இ-ள்.) மயிலானது நடக்கும், கோழி தூக்கம், இவை திங்கள் சனி வாரங்களுக்காச்சு ஞாயிறு செவ்வாய் இந்த வாரங்களில் முதற்காலில் கோழி ஊணுகும், அரசு காகமாகும், ஆந்தை மரணம், நடை வல்லூறு, மயில் தூக்கமாகும், இரண்டாங்காலில் வல்லூறு ஊணுகும், மயில் அரசாகும், கோழி மரணமாகும், காகம் நடையாகும் சொல்லக்கேளும். ()

ஞாயிறு செவ்வாய் பகல் ரு-ற்கும் தொழில் முறை.

67. வழுத்துவேன் மணிதூங்கும் மூன்ருங்கால்கேள்
வாயம்ஊண் அரசாந்தை வலியன்சாகும்
செழித்தமயில் நடைநடக்கும் சேவல்தூங்கும்
செல் நாலாங்கால் மயில்ஊண் அரசுசேவல்
ஒழித்திடும் காகம்சாகும் ஆந்தையேகும்
உறங்குமப்பா வல்லூறு ஐந்தாங்கால்கேள்
விழித்திருந்து ஆந்தையுண்ணும் வலியன்வேந்தாம்
மிக்கமயில் செத்துவிடும் இன்னம்கேளே.

(இ-ள்.) ஆந்தையானது தூங்கும் மூன்ருங்காலில் காகமானது உண்ணும் அரசு ஆந்தையாகும் வல்லூறு மரணமாகும் மயில் நடையாகும் கோழி தூங்கும் நான்காங்காலில் மயில் ஊணுகும் அரசு கோழியாகும், காகம் மரணமாகும் ஆந்தை நடக்கும் தூக்கம் வல்லூறு ஆகும் ஐந்தாங்காலில் ஆந்தை ஊணுகும் வல்லூறு அரசாகும் மயில் மரணமாகும் இன்னமுங் கேட்பாயாகவும் (எ-று) (7)

புதன் பகல்சாமம் ரு-ற்கும் தொழில்முறை.

68- கேளப்பா நடைகோழி உறங்கும்காகம்
கிருபையுள்ள புதன்பகலில் ஒன்ருங்கால்கேள்
ஆளப்பா ஊண்காலமரசு ஆந்தை
அழிந்துவிடும வலியனது நடக்கும்தோகை
வேளப்பா கோழியது தூங்கிவீழும்
வேறிரண்டாங் காலில்மயில் இறைவிழுங்கும்
நாளப்பா கோழியது அரசுசெய்ய
நற்காக மடிந்தாந்தை நடக்கும்தானே.

(இ-ள்.) நடை கோழியாகும் தூக்கம் காகமாகும் புதன்கிழமை முதற்காலில் ஊண் காகமாகும், அரசு ஆந்தையாகும், மரணம் வல்லூறு கும், மயில் நடையாகும், கோழி தூக்கமாகும், இரண்டாங்காலில் மயில் ஊணுகும், கோழி அரசுசெய்யும், காகம் மரணமாகும், ஆந்தை நடக்கும்

இதுவுமது.

69. தானன வலியுறங்கும் மூன்ருங்கால்கேள்
தக்கமுனிதான் உண்ணவலியன் வேந்தன்
கானன மயில்மடியக் கோழிசெல்லக்
காகமது தூங்கிவிழும் நாலாங்கால்கேள்
மானன கோழிஊண் அரசுகாகம்
மரணமாம் ஆந்தைவழி நடைவல்லூறு
வானன மயிலுறங்கும் ஐந்தாங்கால்கேள்
வலியனுண்ண மயிலதுதான் மன்னனமே.

(இ-ள்.) வல்லூறு தூக்கமாகும், மூன்ருங்காலில் ஆந்தை ஊணுகும் வல்லூறு அரசு செய்யும், மயில் மரணமாகும், கோழி நடக்கும், காகம் தூக்கமாகும், நான்காங்காலில் கோழியானது உண்ணும், அரசு காகமாகும், ஆந்தை மரணமாகும், நடை வல்லூருகும், மயில் தூங்கும், ஐந்தாங் காலில் வல்லூறு ஊணுகும், மயில் அரசாகும் (எ-று.) (9)

வியாழம் பகல்சாமம் ரு-ற்கும் தொழில் முறை.

70. ஆமென்ற கோழியது மரணமாகும்
அப்பனே நடைகாகம் தூக்கமாந்தை
ஓமென்று வியாழத்தின் ஒன்ருங்காலில்
உண்ணுமடா ஆந்தைவலி உறக்கமாகும்
காமென்று மயில் மரிக்கும் நடக்கும்கோழி
காக்கையே உறங்குமப்பா இரண்டாங்கால்கேள்
வாமென்று கோழியுண்ணும் அரசாம்காகம்
மாளுமப்பா ஆந்தையது நடைவல்லூறே.

(இ-ள்.) கோழி மரணமாகும், நடை காகமாகும், தூக்கம் ஆந்தையாகும், வியாழக்கிழமையின் பலன்கேள் முதற்காலில் ஆந்தையானது உண்ணும் வல்லூறு தூக்கமாகும், மயில் மரணமாகும், கோழி நடையாகும், காகம் தூக்கமாகும், இரண்டாங்காலில் கோழி ஊணுகும், அரசு காகமாகும், மரணம் ஆந்தையாகும், நடை வல்லூறுகும் (எ-று.) (10)

இதுவுமது.

71. வல்லமையா மயிலுறங்கும் மூன்றுங்கால்கேள்
வல்லூறாண் மயிலரசு மரணம்கோழி
செல்லுமடா காக்கையது ஆந்தைதூங்கும்
செப்புகிறேன் நாலாங்கால் காகமுண்ணும்
நல்லாந்தை அரசுவலி மரணம்தோகை
நடைகோழி துஞ்சுமஞ்சாங்கால் தோகைக்கூண்
தொல்புவி யாளும்கோழி காகம்சாவும்
தொடர்ந்தேகும் ஆந்தைவலி தூங்கும்காணே.

(இ-ள்.) வல்லமையுள்ள மயில் தூக்கமாகும், மூன்றுங்காலில் வல்லூறு ஊணுகும், மயில் அரசாகும், மரணங்கோழியாகும், நடை காகமாகும், ஆந்தை தூக்கமாகும், நாலாங்காலில் காகம் ஊணுகும், ஆந்தை அரசு செய்யும், வல்லூறு மரணமாகும், மயில் நடையாகும், கோழியானது தூக்கமாகும், ஐந்தாங்காலில் மயில் ஊணுகும் கோழி அரசாகும், காகம் மரணமாகும், நடை ஆந்தையாகும், வல்லூறு தூக்கமாகும் (எ-று.) (11)

வெள்ளி பகல்சாமம் ரு-ற்கும் தொழில் முறை.

72. காணுமொரு வெள்ளிபகல் ஒன்றுங்காலில்
கடும்வல்லூறாண் அரசு மயிலதாகும்
ஏணுமொரு கோழிசாம் காகம் ஏகும்
எழிலாந்தை துயிலிரண்டாங்கால் கேள்மைந்தா
பூணுமொரு கோழிதான் அனந்தல்கொள்ளும்
புகலுவல்லூ றழிவுமயில் போக்கதாகும்
ஆணுமொரு கோழிதான் அனந்தல்கொள்ளும்
அப்பனே மூன்றுங்கா லதனைக்கேளே.

(இ-ள்) வெள்ளிக்கிழமையின் பகல் முதற்காலில் வல்லூறு ஊணுகும், அரசு மயிலாகும், கோழி மரணமாகும், காகம் நடையாகும், ஆந்தை தூக்கமாகும், இரண்டாங்காலில் காகம்ஊணுகும், ஆந்தை அரசாகும், வல்லூறு மரணமாகும், மயில் நடையாகும், கோழி தூக்கமாகும், மூன்றுங் காலின் பலனை கேட்பாயாகவும் (எ-று) (12)

இதுவுமது.

73. அதிகமாம் மூன்றுங்கால் மயிலே உண்ணும்
அரசுசெய் வாரணந்தான் காகம்சாவும்
நிதிபெருகு மாந்தைநெடும் தூரம்செல்லும்
நித்திரையாம் வல்லூறு நாலாங்கால்கேள்
பதிகமுறு மாந்தையுண்ண வலிவேந்தாகப்
பச்சைமயில்தான் இறக்க கோழிசெல்ல
விதனமாய்க் காகமது விழிஉறங்கும்
மேலான ஐந்தாங்கால் விவரம் கேளே.

(இ-ள்.) மூன்றுங்காலில் மயில் ஊணமாகும். அரசு கோழியாகும், காகம் மரணமாகும், ஆந்தை நடக்கும் நித்திரைகொள்ளும் வல்லூறு, நான்காங்காலில் ஆந்தையானது ஊணமாகும், வல்லூறு அரசுசெய்யும், மயில் மரணமாகும், கோழி நடையாகும், காகம் தூக்கமாகும் இதில் ஐந்தாங்காலில் பலனைக்கேட்பாயாகவும் (எ-று.) (13)

இதுவுமது.

74. விவரமதாய் ஐந்தாங்கால் கோழியுண்ணும்
மேதினியைக் கொடியாள வீயுமாந்தை
தீவிரமாய்ச்செல்லும் வல்லூறுறங்கும் தோகை
சீருள்ள அமரபட்ச தினத்திற்காண
அவலமில்லாபகற் றொழிலைக் குறைவில்லாமல்
அறிந்தமட்டுஞ் சொல்லிவிட்டோம் அபத்தமில்லை
நவநாத முனிவர்பதம் முடிமேற் கொண்டு
நல்லிரவின் தொழிலையினி நவிலுவேனே.

(இ-ள்.) மேற்கண்ட ஐந்தாங்காலில் கோழி ஊணாகும், அரசு காகமாகும், வல்லூறு நடையாகும், ஆந்தை மரணமாகும், மயில் நித்திரையாகும், இவ்விதமாகக் கண்டுணரும்படி அபலமானது இல்லாமல் பகல் தொழிலைச் சொல்லிவிட்டோம் நவநாதமுனிவர்களின் பாதம் முடியின் மீது கொண்டு இரவின் பலன்சொல்வேன் கேட்பாயாகவும் (எறு.) (14)

75. நவிலுவேன் அமரபட்சு இரவில்மைந்தா
நல்லமைந்தன் இந்துவெனும் வாரந்தன்னில்
குவலயமீ தொன்றுங்கால் கோழியுண்ணுங்
கோலமயில் அரசுசெய கொடியவல்லூ
றவலமதாய் உயிரிரக்க ஆந்தையேக
வப்பொழுதே காகம்சாம் இரண்டாங்கால்கேள்
நவமயிலூண் அரசுவல்லூ றாந்தைசாக
நன்றெனவே காகம்வழி நடக்கும்பாரே.

(இ-ள்.) சொல்வேன் கேட்பாயாக அமரபட்சம் இரவில் சனி திங்கள் இந்தவாரங்களில் முதற்காலில் கோழியானது உண்ணும், மயில் அரசுசெய்யும் வல்லூறு மரணமாகும், ஆந்தையானது தூக்கமாகும், காகம் நித்திரைகொள்ளும், இரண்டாங்காலில்கேளும் மயிலானது உண்ணும், அரசு வல்லூறாகும், ஆந்தை மரணமாகும், காகம் நடக்கும் (எ-று.)

இதுவுமது.

76. பாரப்பாகோழியது படுக்கும்பார்மேல்
பகருவோமூன்றாங்கால் வல்லூறுண்ணும்
ஆரப்பா அரசாந்தை காகம்சாவும்
அருங்கோழி நடக்கமயில் அனந்தல்கொள்ளும்
வேரப்பா நாலாங்கால் ஆந்தையுண்ணும்
வேந்தனல் காகமுடல் வீழும்கோழி
தாரப்பா மயில்நடக்கத்தான் வல்லூறு
தனித்துறங்கும் ஐந்தாங்கால் சாற்றுவேனே.

(இ-ள்.) பார்க்கக் கோழியானது நித்திரைகொள்ளும், மூன்றாங்காலின் பலன்கேளும் வல்லூறு ஊணாகும், அரசு ஆந்தையாகும், காகம் மரணமாகும், கோழி நடக்கும், மயில் நித்திரைசெய்யும், நான்காங்காவில் ஆந்தை ஊணாகும், அரசு காகமாகும், மரணங்கோழியாகும்; மயில் நடக்கும், வல்லூறு தூக்கமாகும் ஐந்தாங்கால் சொல்லக்கேளும் (எ-று.) (16)

ஞாயிறு செவ்வாய் இரவு சாமம் ரு-ற்கும் தோழில்முறை.

77. சாற்றுவேன் ஐந்தாங்கால் காகமுண்ணும்
தனிக்கோழி அரசுமயில் சாவதாகும்
தூற்றுஒரு வல்லூறு நடக்கஆந்தை
தூங்குமடா சேயருக்கன் ஒன்றாங்கால்கேள
மாற்றரியவல்லூறு அரசனாந்தை
வாயசம்சாம்கோழி நடமயில் உறங்கும்
ஆற்றரிய இரண்டாங்கால் ஆந்தைஉண்ணும்
அரும்காகம் மண்ணுலகை ஆளும்தானே.

(இ-ள்.) ஐந்தாங்காலில் காகமானது உண்ணும், கோழி அரசாகும், மயில் மரணமாகும் வல்லூறு நடையாகும், ஆந்தை தூக்கமாகும் செவ்வாய் ஞாயிறு இந்த வாரங்களில் முதற்காலில் வல்லூறு ஊணாகும் அரசு ஆந்தையாகும், காகம் மரணமாகும், கோழி நடக்கும், மயில் நித்திரையாகும், இரண்டாங்காலில் ஆந்தை ஊணாகும், காகம் அரசுசெய்யும் (எ-று.)

இதுவுமது.

78. தானென்ற கோழிசாம் மயில்நடக்கும்
தனித்துறங்கும் வல்லூறு மூன்றாங்கால்கேள்

ஆமென்ற காகம் ஊண் அரசுகோழி
அப்பனே மயில்மரணம் நடைவல்லூறு
ஏனென்ற முனியுறங்கும் நாலாங்கால்கேள்
இறையெடுக்கக் கோழிமயில் அரசேசெய்யும்
வானென்ற வல்லூறு மாளஆந்தை
வழிநடக்கக்காகமது உறங்கும்பாரே.

(இ-ள்.) கோழி மரணமாகும், மயில் நடக்கும், நித்திரை வல்லூறுகும் மூன்றுங்காலில் காகம் ஊணுகும்; அரசு கோழியாகும், மயில் மரணமாகும், நடை வல்லூறுகும், ஆந்தையானது தூங்கும், நான்காங்காலில் கோழி ஊணுகும், மயில் அரசுசெய்யும், வல்லூறுமரணமாகும், ஆந்தை நடையாகும், காகம் நித்திரையாகும் (எ-று.) (18)

புதன் இரவுசாமம் ரு-ற்கும் தொழில்முறை.

79. பாரதனில் ஐந்தாங்கால் மயில்தானுண்ணும்
பாராளவல்லூறு மடியவாந்தை
ஊரதனில் காகமது நடக்கக்கோழி
உறங்குமப்பா புதனிரவ தொன்றுங்கால்கேள்
ஆரதனில் ஆந்தையூண் அரசுகாகம்
அருங்கோழி மரணம்நடையாகும் தோகை
நேரதனில் நித்திரையாம் வலியன்மைந்தா
நிகழ்த்துவேன் இரண்டாங்கால் நிகழ்த்துவேனே.

(இ-ள்.) பார்க்க ஐந்தாங்காலில் மயில் ஊணுகும், அரசு வல்லூறுகும் மரணம் ஆந்தையாகும், காகம் நடக்கும், கோழிநித்திரையாகும், புதன்கிழமை முதற்காலில் கேளும், ஆந்தையானது உண்ணும், அரசு காகமாகும், கோழி மரணமாகும், நடை மயிலாகும், நித்திரை வல்லூறுகும், இரண்டாங்காலின் பலன்சொல்வேன் கேளும் (எ-று.) (19)

இதுவுமது.

80. நிகழ்த்துவேன் காகமுண்ணக் கோழிவேந்தாய்
நீலமயில் மடியவல்லூறேகஆந்தை
சகத்தினிலே தூங்கிவிழும் மூன்றுங்கால்கேள்
சல்லாபமுடன்கோழி தானேயுண்ணும்
மகத்துவமாம் மயிலரசாய் வலியன்மாண்டு
வழிநடக்குமாந்தை வாயசம் உறங்கும்
அகத்தியமாம் நாலாங்கால் மயில்தானுண்ண
ஆனதொரு வல்லூறு அரசன் ஆமே.

(இ-ள்.) காகமானது உண்ணும், கோழி அரசுசெய்யும், மயில்மரணமாகும், வல்லூறு நடக்கும், ஆந்தை நித்திரைகொள்ளும், மூன்றுங்கா

வில் கோழியானது உண்ணும் மயில் அரசுசெய்யும், வல்லூறு மரணமாகும், நடை ஆந்தையாகும், காகம் நித்திரையாகும், நான்காங்காலில் மயில் ஊணுகும், வல்லூறு அரசுசெய்யும் (எ-று.) (20)

இதுவுமது.

81. ஆமேதான் ஆந்தையது மரணம் கண்டாய்
அப்பனே காகமது நடையாம்கண்டாய்
வாமேதான் கோழியது தூக்கமாகும்
வழுத்துவோம் ஐந்தாங்கால் வல்லூறுண்ணும்
நாமேதான் ஆந்தையது அரசனுகும்
நவிலரிய காகமது மரணமாகும்
போமேதான் கோழியது போகக்கண்டு
பொன்மயில்தான் துயிலுமெனப் புகலுவாரே.

(இ-ள்.) ஆந்தை மரணமாகும், காகம் நடக்கும், கோழி தூக்கமாகும், ஐந்தாங்காலில் வல்லூறு உண்ணும், ஆந்தை அரசனுகும், காகம் மரணமாகும் கோழி நடையாகும், மயில் நித்திரையாகுமெனப் புகல்வர்.

வியாழத்தின் இரவுசாமம் ரு-ற்கும் தொழில்முறை.

82. புகலுவேன் வியாழத்தின் இரவில்முற்கால்
பொற்காகம் போசனமாம் அரசுகோழி
இகலவே மயில்மரணம் வலியன்போக்காய்
எழிலாந்தை உறங்கிவிடும் இரண்டாங்கால்கேள்
மகிழவே கோழியூண் மயிலோ வேந்தன்
வல்லூறு மரணமதாம் வழிபோமாந்தை
இகழவே காகமது தூங்கிவீழும்
என்மக்காள் மூன்ருங்கால் மயிலின்ஊணே.

(இ-ள்.) வியாழக்கிழமையின் இரவில் முதற்கால் காகமானது உண்ணும், கோழி அரசுசெய்யும், மயில் மரணமாகும், வல்லூறு நடையாகும், ஆந்தை நித்திரையாகும், இரண்டாங்காலில் கோழி ஊணுகும், மயில் அரசாகும், வல்லூறு மரணமாகும், நடை ஆந்தையாகும், காகமானது நித்திரையாகும், மூன்ருங்காலில் மயில் ஊணுகும் (எ-று.) (22)

இதுவுமது.

83. மயிலானதுண்ண வல்லூறரசுசெய்ய
மாண்டுவிடும் ஆந்தைகொடி வழியிற்செல்லும்
துயிலாகும் கோழியப்பா நாலாங்கால்கேள்
சோறுண்ணும் வல்லூறு துரையாமாந்தை

ஒயிலானகாகமது ஒழிந்துபோகும்
ஊர்க்கும்போம் கோழிமயில் உறங்கிப்போகும்
வெயிலான ஐந்தாங்கால் ஆந்தையுண்ணும்
மேதினியிற் காகமது வேந்தன் ஆமே.

(இ-ள்.) மயிலானது உண்ணும், வல்லூறு அரசுசெய்யும், மரணம் ஆந்தையாகும் காகம்நடையாகும் நடை கோழி நித்திரையாகும் நாலாங் காலில் ஊண் வல்லூறுகும், அரசு ஆந்தையாகும் காகம், மரணமாகும், நடை கோழியாகும், மயில் தூக்கமாகும், ஐந்தாங்காலில் ஆந்தை ஊணு கும், காகம் அரசாகுமாமென்பர் (எ-று.) (23)

வெள்ளி இரவுசாமம் ரு-ற்கும் தொழில்முறை.

84. வேந்தனெனும் கோழியது இறந்துபோக
மிக்கமயில் தானடக்க வலியன்தூங்கும்
மாந்தனெனும் வெள்ளி யிரவொன்றுங்கால்கேள்
மயிலுண்ண வல்லூறு மன்னனாக
ஆந்தையது தான்சாவ காகமேக
அப்பனே கோழிதுஞ்சும் இரண்டாங்கால்கேள்
காந்தனெனும் வல்லூறு அமுதுசெய்யக்
காவலனுமாந்தையது காகம்சாமே.

(இ-ள்.) கோழியானது மரணமாகும், மயில் நடக்கும், வல்லூறு நித் திரையாகும், வெள்ளிக்கிழமையினிரவு முதற்காலில் மயிலானது உண் ணும், வல்லூறு அரசுசெய்யும், ஆந்தைமரணமாகும், காகம் நடையாகும், கோழி நித்திரைகொள்ளும், இரண்டாங்காலில் வல்லூறு ஊணுகும், அரசு ஆந்தையாகும், காகம் மரணமாகும், (எ-று.) (24)

இதுவுமது.

85. சாகாமற்கோழியது நடக்கத்தோகை
சயனிக்கும் இரண்டாங்கால் வலிதானுண்ணம்
நோகாமலாந்தை அரசாகும் காகம்
நொந்திருக்கும் கோழியது நுழைந்துரேயாகும்
ஏகாமல் மயிலுறங்கும் மூன்றுங்கால்கேள்
எழிலாந்தையுண்ண அரசிருக்குங்காகம்
சாகாமலிருப்பதுண்டோ சாகும்கோழி
தனித்தேகும் மயில்வலியன் சயனமாமே.

(இ-ள்.) கோழியானது நடக்க மயில் நித்திரையாகும், இரண்டாங் காலில் வல்லூறு உண்ணும் ஆந்தை அரசாகும், காகம் மரணமாகும்,

கோழி நடையாகும், மயில் நித்திரையாகும், மூன்ருங்காலில் ஆந்தை ஊணுகும், அரசு காகமாகும், கோழி மரணமாகும், நடைமயிலாகும், வல்லூறு நித்திரையாகும் (எ-று.) (25)

இதுவுமது.

86. சயனமல்லால் நாலாங்கால் காகமுண்ணும்
தனித்தரசாம் கோழிமயில் தானேசாவும்
பயணதாம் வல்லூறு படுக்குமாந்தை
பகரும் ஐந்தாங்கால் கோழிபட்சணிக்கும்
மயிலானதரசுசெய்ய வலியன்சாவ
வழிநடக்க ஆந்தைகொடி மகிழ்ந்துதூங்கும்
தயவாக அமரபட்ச இரவுங்காண
தனித்தொழிலா முழுவதுக்கும் சாவுகேளே.

(இ-ள்-) நான்காங்காலில் காகம் ஊணுகும் அரசு கோழியாகும், மயில் மரணமாகும், நடை வல்லூருகும், ஆந்தை நித்திரையாகும், ஐந்தாங்காலில் கோழி ஊணுகும், மயில் அரசுசெய்யும், வல்லூறு மரணமாகும், நடை ஆந்தையாகும், காகம் நித்திரையாகும், அமரபட்சத்தின் இரவில்காண தனித்தொழிலாகும், முழுவதுக்கும் சாவுகேட்பாயாக (எ-று.)

இதுவரையில் கூறிய தொழில்முறையை யாவரும் எளிதில் உணரும்படி இதன் பின்பக்கத்தில் ம-சக்கரங்களாக இயற்றி இருக்கின்றது காண்க.

திங்கள் சனி பகல் சாமம் ரு-ற்கும்

தொழில் முறைச் சக்கரம்.

ஊண்	மரணம்	நித்திரை	அரசு	நடை
உ	கவ	உ	ஜ	கஉ
எ மயில்	ஒ காகம்	இ வல்லூறு	அ கோழி	உ ஆந்தை
ஆந்தை	மயில்	காகம்	வல்லூறு	கோழி
கோழி	ஆந்தை	மயில்	காகம்	வல்லூறு
வல்லூறு	கோழி	ஆந்தை	மயில்	காகம்
காகம்	வல்லூறு	கோழி	ஆந்தை	மயில்

திங்கள் சனி இரவு சாமம் ரு-ற்கும்
தொழில் முறைச் சக்கரம்.

ஊண்	நித்திரை	நடை	மரணம்	அரசு
கஉ	ஙு	கஉ	க	கஉ
அ கோழி	ஒ காகம்	உ ஆந்தை	இ வல்லூறு	எ மயில்
மயில்	கோழி	காகம்	ஆந்தை	வல்லூறு
வல்லூறு	மயில்	கோழி	காகம்	ஆந்தை
ஆந்தை	வல்லூறு	மயில்	கோழி	காகம்
காகம்	ஆந்தை	வல்லூறு	மயில்	கோழி

வெள்ளி பகல் சாமம் ரு-க்கும்
தொழில்முறைச் சக்கரம்.

ஊண்	மரணம்	நித்திரை	அரசு	நடை
உ	கவ	௭	௯	க௭
இ வல்லூறு	அ கோழி	உ ஆந்தை	எ மயில்	ஒ காகம்
காகம்	வல்லூறு	கோழி	ஆந்தை	மயில்
மயில்	காகம்	வல்லூறு	கோழி	ஆந்தை
ஆந்தை	மயில்	காகம்	வல்லூறு	கோழி
கோழி	ஆந்தை	மயில்	காகம்	வல்லூறு

வெள்ளி இரவு சாமம் ௫-ற்கும் தொழில்முறைச் சக்கரம்.

ஊண்	நித்திரை	நடை	மரணம்	அரசு
௧௩	௩	௧௩	௧	௩
உ ஆந்தை	எ மயில்	அ கோழி	ஒ காகம்	இ வல்லூறு
காகம்	வல்லூறு	மயில்	கோழி	ஆந்தை
கோழி	ஆந்தை	வல்லூறு	மயில்	காகம்
மயில்	காகம்	ஆந்தை	வல்லூறு	கோழி
வல்லூறு	கோழி	காகம்	ஆந்தை	மயில்

ஞாயிறு செவ்வாய் பகல் சாமம் ௫-ற்கும்
தொழில்முறைச் சக்கரம்.

ஊண்	மரணம்	நித்திரை	அரசு	நடை
உ	கவ	௬	ஞ	க௬
அ கோழி	உ ஆந்தை	எ மயில்	ஒ காகம்	இ வல்லூறு
வல்லூறு	கோழி	ஆந்தை	மயில்	காகம்
காகம்	வல்லூறு	கோழி	ஆந்தை	மயில்
மயில்	காகம்	வல்லூறு	கோழி	ஆந்தை
ஆந்தை	மயில்	காகம்	வல்லூறு	கோழி

ஞாயிறு செவ்வாய் இரவு சாமம் ரு-ற்கும்
தொழில்முறைச் சக்கரம்.

ஊண்	நித்திரை	நடை	மரணம்	அரசு
கஞ	ஞ	கஞ	க	கஞ
இ வல்லூறு	எ மயில்	அ கோழி	ஒ காகம்	உ ஆந்தை
ஆந்தை	வல்லூறு	மயில்	கோழி	காகம்
காகம்	ஆந்தை	வல்லூறு	மயில்	கோழி
கோழி	காகம்	ஆந்தை	வல்லூறு	மயில்
மயில்	கோழி	காகம்	ஆந்தை	வல்லூறு

புதன் பகல் சாமம் ரு - ற்கும்
தொழில்முறைச் சக்கரம்.

ஊண்	மரணம்	நித்திரை	அரசு	நடை
உ	கவ	௨	கோழி	கஉ
ஒ காகம்	இ வல்லூறு	அ கோழி	உ ஆந்தை	எ மயில்
மயில்	காகம்	வல்லூறு	கோழி	ஆந்தை
ஆந்தை	மயில்	காகம்	வல்லூறு	கோழி
கோழி	ஆந்தை	மயில்	காகம்	வல்லூறு
வல்லூறு	ஜ	ஆந்தை	மயில்	காகம்

புதன் இரவு சாமம் ரு - ற்கும்
தொழில்முறைச் சக்கரம்.

ஊண்	நித்திரை	நடை	மரணம்	அரசு
கஅ	ஆ	கஅ	க	ஆ
உ ஆந்தை	இ வல்லூறு	எ மயில்	அ கோழி	ஒ காகம்
காகம்	ஆந்தை	வல்லூறு	மயில்	கோழி
கோழி	காகம்	ஆந்தை	வல்லூறு	மயில்
மயில்	கோழி	காகம்	ஆந்தை	வல்லூறு
வல்லூறு	மயில்	கோழி	காகம்	ஆந்தை

வியாழம் பகல் சாமம் ரு-ற்கும்
தொழில் முறைச் சக்கரம்.

ஊண்	மரணம்	நித்திரை	அரசு	நடை
உ	கவ	௭	ஞ	க௭
உ ஆந்தை	எ மயில்	ஒ காகம்	இ வல்லூறு	அ கோழி
கோழி	ஆந்தை	மயில்	காகம்	வல்லூறு
வல்லூறு	கோழி	ஆந்தை	மயில்	காகம்
காகம்	வல்லூறு	கோழி	ஆந்தை	மயில்
மயில்	காகம்	வல்லூறு	கோழி	ஆந்தை

வியாழம் இரவு சாமம் ரு-ற்கும் தொழில் முறைச் சக்கரம்.

ஊண்	நித்திரை	நடை	மரணம்	அரசு
கவ	க	கஉ	க	ஜ
ஒ காகம்	உ ஆந்தை	இ வல்லூறு	எ மயில்	அ கோழி
கோழி	காகம்	ஆந்தை	வல்லூறு	மயில்
மயில்	கோழி	காகம்	ஆந்தை	வல்லூறு
வல்லூறு	மயில்	கோழி	காகம்	ஆந்தை
ஆந்தை	வல்லூறு	மயில்	கோழி	காகம்

தொழில் முறைச் சக்கரங்களின் ஏக சூட்சுமம்.

இந்தச்சக்கரத்தின் மத்தியிலுள்ள சுழல் வட்டத்தின் ஊண் பட்சியை பூருவபட்சம்பகற்கு சுழல்வட்டத்திற்கு அடுத்த முதல் வட்டத்தின் ஊண் தொழிற்கும் இரவுக்கு 2-ம் வட்டத்தின் ஊண் தொழிற்கும் அமரபட்சம்பகற்கு ங-ம் வட்டத்தின் ஊண் தொழிற்கும் இரவுக்கு ச-ம் வட்டத்தின் ஊண்தொழிற்கும் நேர் நிருத்தி பூருவபட்சப் பகற்கும் அமரபட்சம் இரவிற்கும் இடமுறையாகவும் பூருவபட்சம் இரவிற்கும் அமரபட்சம் பகற்கும் வல முறையாகவும் சுழற்றுவது பூருவபட்சப்பகலில் முதற்சாமத்தில் மரணமானபட்சியையும் இரவில் முதல்சாமத்தில் நித்திரையான பட்சியையும் அமரபட்சப்பகலில் முதல் மத்தியில் நடந்த பட்சியையும் இரவில் முதற்சாமத்தின் அரசான பட்சியையும் 2-ம் சாமத்தின் ஊண்பட்சியாகக்கொண்டு நடத்துவதுவே மற்ற ஜாமங்களுக்கும் இப்படியேயாம்.

வாரங்கள் எ-ற்கும் பட்சி.

87. சாகுமே சனிவாரம் வியாழம் கோழி
தான்சாகுமயில் வெள்ளி புதனுக்கப்பால்
ஏகுமே ஞாயிறுக்குக் காகம் சாகும்
என்னசொல்வேன் திங்களுக்கு ஆந்தைசாகும்
போகுமே செவ்வாய்க்கு வலியன்சாகும்
பொல்லாத நாளென்று முனிவர்சொன்னர்
ஆகுமே இந்தநாள் வேளைபார்த்தால்
அப்பனே வலிவதுதான் அற்றுப்போச்சே.

(இ-ள்.) சனி வியாழம் இந்தவாரங்களில் கோழி மரணமாகும், மயில் வெள்ளி புதன் இந்தவாரங்களில் மரணமாகும், ஞாயிற்றுக்கிழமையில் காகம் மரணமாகும், திங்கட்கிழமையில் ஆந்தையானது சாவும் செவ்வாய்க்கிழமையில் வல்லூறு சாவும் இந்தநாட்கள் பொல்லாதென முனிவர் சொல்லினர் இந்த நாளின் வேளைபார்த்து ஒரு காரியஞ்செய்யில் வலிவானது அற்றுப்போகும் (எ-று.) (27)

படுபட்சியின் பலாபலன்.

88. போசனமா யிருந்தாலும் புனிதமில்லை
புகழ்பெரிய மித்துருக்கள் உறவுமில்லை
நேசமுடன் சத்துருவாய் நின்றுகொல்லும்
நியமித்த காரியங்கள் நின்றுகொல்லும்

தேசமுடன் கொள்வதுதான் நஷ்டமாகும்
ஜெகந்தனிலே ஒரிடமும் சொல்லொண்ணுது
நாசமாய் நின்றுகொல்லும் உடலைத்தானும்
நாடுமிந்த வகைசொன்னே னன்றாய்நானே.

(இ-ள்.) படுபட்சியின்பலன் கேட்பாயாகவும் ஊண்பட்சியாகவிருக்கில் புனிதமானது இல்லை பெரியோர்களும் மித்துருக்களும் உறவு கூடுவதில்லை சத்துருக்கள் நேர்ந்து கொல்லுவார்கள், நேமித்த காரியங்கள் நின்றுபோகும், கொள்வது நஷ்டமாகும், பூமியின்மீது ஒரிடத்திலும் போகவொண்ணுது அப்படிக்குப்போகில் நாசமாக நின்று உடலைக்கொல்லும் என இந்தவகைகள் சொன்னேன் நன்றாகவும் நானே (எ-று.) (28)

இதுவுமது.

89. நானென்ற நடையென்றால் வலிவோ யில்லை
நகர்விடுத்து பரதேசம் செல்ல வேண்டாம்
தானென்ற தடையொன்று எண்ணுவார்கள்
சண்டாள வேளையென்று தவிர்த்து நிற்பார்
பானென்ற படையெடுக்கச் சாவு முண்டு
பண்டங்கள் பணிகொள்ளப் பாழதாகும்
நானென்ற மடையனு யிருந்தா லுந்தான்
நஷ்டம்வரு மென்றுசொல்லி நாடார் பாரே.

(இ-ள்.) நடைப்பட்சியாகில் வலிவில்லையாம் அந்தநாளில் தாமிருக்குமிடம்விட்டுப் பரதேசம் போகப்படாது தடையொன்றும் எண்ணங்கொள்வார்கள் தெரிந்தோர்கள் அதுசண்டாள வேளையாகுமென்றும் பயணத்தைத்தவிர்ப்பார்கள் படையெடுத்துப்போகில் மரணம் சம்பவிக்கும், வர்த்தகம் செய்யவும், பணிகள்கொள்ளவும் பாழாகப்போகும், எவ்வளவும் புத்தியில்லாத இனனுகவிருந்தபோதினும் இந்தவேளையில் நஷ்டமானதுவருமென்று யாதொரு காரியங்களும்செய்யார் (எ-று.) (29)

இதுவுமது.

90. நாடாரே அரசெனினும் வலிவேயில்லை
நடத்தை தப்பு மற்றதெல்லாம் வலிவாமோசொல்
கேடான கிரணத்தின் விஷம்போல் தீண்டும்
கெடுதிமெத்த வச்சடலம் நொந்து சாவும்
வாடாதே ரணமதனில் துயரப் பட்டு
வந்ததா மிதுபொல்லா தப்பா சொன்னேன்
காடான கரணமது தப்பிற் றென்றால்
காட்டினர் மரணமென்று காட்டினரே.

(இ-ள்.) அரசுபட்சியாகினும் வலிவானது இல்லையாகும் நாட்டின்கண் யாதும் வலிவாகாது எனச்சொல்லும் கிரணத்தின்விஷத்தைப்

போல் நீண்டும் கெடுதியானது மெத்த உண்டாகும், அலைச்சல்படச்செய்யும், மனமானது நொந்துசாகும், இரணத்தினால் துயரப்பட்டும் வந்ததாகும், இந்நாள் பொல்லாதெனச்சொன்னேன் கரணமானது தப்பிவிடில் மரணமானது நேருமெனக் காட்டினர் (எ-று.) (30)

இதுவுமது.

91. காட்டினார் தூக்கம்வெகு துயரமாகும்
கடிதாக மித்துருவுந் துன்பஞ் செய்வான்
தாட்டிகமாய் சத்துருவைப் படுத்திக் கொல்வான்
தனிக்காட்டிற் புலிபிடித்துச் சண்ணுமாபோல்
நீட்டுவான் சனிபோலப் பழியே செய்யும்
நேரறிந்து நெறியறிந்து நுணுக்கம் பார்த்து
ஈட்டுவார் பெரியோர்கள் எத்தாமல்தான்
என்செயினு மிடைஞ்சல்வரு மரணந் தானே.

(இ-ள்.) தூக்கமாகிய பட்சியாகில் அன்னாளில் யாதொருகாரியங்கள் செய்யினும் துயரமாகும், மித்துருவாகவிருந்தவர்களும் துன்பம் விளைவிப்பார்கள், சத்துருவைக் கைவசப்படுத்திக்கொள்வான் இருள் சூழ்ந்திருக்குந் தனிக்காட்டினிடமாக வாழும் புலியானது சீறுவதுபோலவும் சீறுவன் சனியைப்போல் பழிகள்செய்குவன் இவைகளை நேர்நிரைகளையறிந்தும் நுணுக்கமாகபார்த்தும் பெரியோர்களானவர் எத்தொழிலுஞ்செய்வார்கள் அப்படிக்கு ஏதாகிலுஞ்செய்யினும் இடஞ்சலும் மரணமும் சம்பவிக்குமென்பர் (எ-று.) (31)

இதுவுமது.

92. மரணத்தி லென்செய்யு மரணஞ் செய்யும்
மகத்தான கொடுமையுந்தான் மெத்தவாகும்
அரணமற்று நிலையற்றுப் பாதமற்று
அழியாத வுடலுமற் றமர்வீடற்று
திரணமற்று திரணமென்ற செயலு மற்று
திரஞ்சொல்வ தற்கொருவர் செகத்திலில்லை
கரல்பிடித்துக் கூற்றுவன்தான் பிடரினின்று
கூத்தாடு வானிந்தக் குறியை யறிவாயே.

(இ-ள்.) மரணப்பட்சியின் பலன்யாதெனில் மரணம் சம்பவிக்கச் செய்யும் கொடுமையானது மெத்தவும்விளைவிக்கும், அறன் அற்றும், நிலை அற்றும் பாதமானது அற்றும், அழிவில்லாத உடலானதும் அற்றும்,நிலை வீடற்றும், திரணமானது அற்றும், திரணமென்னும் செயலானது அற்றும், தீரமானது சொல்ல ஒருவரும் செகத்தினில் இல்லாமலும் திகைக்குங்காலமாகிக் கால்பிடிக்கினும் விடாமல் கூற்றுவனாகி எமன் பிடரியினிடமாக நின்று கூத்தானது ஆடுவான் இக்குறியை அறிகுவாய் (எ-று.)

கடைநிலைப் பட்சி.

93. அறிவான பூர்வத்தில் மரணமுண்ணும்
அப்பனே இவ்விரவில் தூக்கமுண்ணும்
கரியான வமரத்தில் நடைதா னுண்ணும்
கண்டுசொன்னோம் பின்னிரவி லரச னுண்ணும்
வரியான வட்சரங்கள் பிரித்துப் பார்த்தோர்
வகையறிவார் மற்றோர்க ளறிய மாட்டார்
நெறியாகச் சொன்னோர்கள் பெரியோ ரையா
நிச்சயமாய்க் கும்பமுனி நிகழ்த்தினாரே.

(இ-ள்.) பூர்வபட்சத்தில் மரணமானபட்சி ஊணுகும், அன்று இரவில் தூங்குகின்ற பட்சியானது உண்ணும், அமரபட்சத்தில் நடைப்பட்சி உண்ணும், அன்று இரவில் அரசுபட்சியானது உண்ணும், இவ்வகையாக அட்சரங்களைப்பிரித்துப் பார்த்தோர்கள் இதின் வகையறிவார்கள் மற்றோர்கள் அறியமாட்டார்கள் கண்டு நெறியாகச்செய்வோர்கள் பெரியோராகும் எனக் கும்பமுனி நிகழ்த்தினார் (எ-று.) (33)

பட்சம் 2-க்கும் பகல் இரவு பட்சிகளின் தொழில்முறைக் கால அளவு.

94. நாரான பூருவத்தின் தொழிலின் நாழி
நற்பகலூ ணொன்றரையாம் நடையொன் றேகால்
பாரான வாசிரண்டு படுத்தல் முக்கால்
படுமரண வரை யிரவிற் பாரு மூண்தான்
ஆரான ஒன்றேகா லரச னொன்று
அவலமா மரணமொன் றரையே யாகும்
ஊரான வழிநடைக்கு மொன்றே காலாம்
உறங்குதற்கு நாழிகைதா னொன்றுகும் பாரே.

(இ-ள்.) பூர்வபட்சத்தின் பட்சிகளின் தொழில் நாழிபகலில் ஊண் [ஒன்றரை] நடை [ஒன்றேகால்] அரசு [இரண்டு] நித்திரை [முக்கால்] மரணம் [அரை] அன்றிரவு பட்சிகளின்தொழில் நாழிகை ஊண் [ஒன்றேகால்] அரசு [ஒன்று] மரணம் [ஒன்றரை] நடை [ஒண்ணேகால்] நித்திரை [ஒன்று] இவ்விதமாகப் பார்த்துணரவேண்டும் (எ-று.) (34)

அமரபட்சப் பகல் இரவுகளின் தொழில்முறைக் கால அளவு.

95. ஒன்றான வமரபட்சப் பகலில் நாழி
ஊணிரண்டு வடிவதுதா னொன்றே காலாம்

அன்றான உறக்கமரை அரசு முக்கால்
ஆனநடை யொன்றரையா மிரவில் மைந்தா
நன்றான ஊணொன்றே முக்கால் தூக்கம்
நவிலுமுக்கால் நடையொன்றே முக்காலாகும்
மன்றான கடிகையொன்றில் மடிந்து தானே
மன்னனு முக்காலில் மகிழ்ந்து பாரே.

(இ-ள்.) அமரபட்சத்தின் பகல் பட்சிகளின் தொழில் நாழிகை ஊண் [ஒன்றேகால்] மரணம் [ஒன்றேகால்] நித்திரை [அரை] அரசு [முக்கால்] நடை [ஒன்றரை] அன்று இரவில் ஊண் [ஒன்றேகால்] தூக்கம் [முக்கால்] நடை [முக்கால்] மரணம் [ஒன்று] அரசு [முக்கால்] ஆகும் இவ்விதமாகப் பார்த்துணரவேண்டும் (எ-று.) (35)

நட்சத்திரப்பட்சி.

96. பாரடா அமரத்தின் பதியைக் கேளு
பண்பான அசுவினிநே ரைந்துந் தோகை
சேரடா வாதிரைநே ராகுங் கோழி
திரமான வுத்திரநே ரைந்துங் காகம்
ஏரடா அனுஷரே ராறும் வல்லூருகும்
எழில் ஓணம் நேரைந்தும் ஆந்தை
சாரடா பட்சிநிலே யறியச் சொன்னல்
சண்டாள நட்சத்திர மறிய நன்றே.

(இ-ள்.) அமரபட்சத்தின் பதியைக்கேட்பாயாகவும் அசுவனி நட்சத்திரமுதல் ஐந்து நட்சத்திரம்வரைக்கு மயிலுக்காகும், திருவாதிரை முதல் ஆறு நட்சத்திரம் வரையில் கோழிக்காகும், உத்திரமுதல் ஆறுநட்சத்திரமும் வல்லூருக்காகும், திருவோணமுதல் ஐந்து நட்சத்திரமும் ஆந்தைக்காகும், பட்சிகள் நிலையையறிந்து சொல்லினும் நட்சத்திரங்களை அறிவது மிகவும் நன்றாகும் (எ-று.) (36)

திதிப்பட்சி.

97. நன்றான பிரதமை சஷ்டி யேகாதசி
நல்லமயில் துதியைசப் தமிதுவா தசிகோழி
சென்றான திரிதிகை யஷ்டமி திரயோதசி
செயமான காகமென்று செப்பலாகும்
மன்றான சதுர்த்தி நவமி சதுர்த்த சித்தான்
வகையான வாந்தையென்று மதிக்க லாகும்
அன்றான பஞ்சதசமி அமாவாசை
அடைவான வலியனென்று அறிந்திடாயே.

(இ-ள்.) பிரதமை சஷ்டி ஏகாதசி மயிலுக்காகும், துதியை சப்தமி துவாதசி கோழிக்காகும், திருதிகை அஷ்டமி திரயோதசி இவைகள்

காகத்திற்காகும், சதுர்த்தசி நவமி சதுர்த்தி ஆந்தைக்காகும், பஞ்சமி தசமி அமாவாசியை வல்லூருக்காகுமென்றறிகுவாய் (எ-று.) (37)

இராசிப்பட்சி.

98. அறிந்துபார் கர்க்கடக மயிலதாகும்
அப்பனே மேஷவிருச் சிகமுங் கோழி
தறிந்துபார் கன்னிசிங்க மகரங் காகம்
தனதான தனுசுகும்ப மிதுன மாந்தை
பரிந்துபார் துலாமீனஞ் சேவல்லூறு
பாலகனே அமரத்தின் பதிவைச் சொன்னேம்
தெரிந்துபா ரறிவுள்ளோ ரறியவேண்டும்
சிற்றறிவுள் ளவர்க்கிது வாராது பாரே.

(இ-ள்.) கடகவிராசி மயிலுக்காகும் மேஷம் விருச்சிகம் கோழிக்காகும், கன்னி சிங்கம் மகரம் காகத்திற்காகும், தனுசு கும்பம் மிதுனம் ஆந்தைக்காகும் துலா மீனம் வல்லூறுக்காகும் அமரபட்சத்தின் பதியைச் சொன்னேம் இதனை அறிவுள்ளோர்களறியவேணுமேயன்றி அறிவில்லாதவர்க்கு வாராது பாரும் (எ-று) (38)

மயிலின் சத்துருமித்துரு.

99. வருமென்ற அமரத்தின் பகையைச்சொல்வேன்
மக்களே மயிலுக்கு ஆந்தை காகம்
பொருமென்ற மித்துருவைச் சொல்லக்கேளு
புகழான வல்லூறும் கோழியாகும்
பருமென்ற மித்துருவில் பகையோவில்லை
பதைத்தபோரானாலும் உறவு கூடும்
தருமென்ற சத்துருதான் ஆகாதையா
தள்ளிவிடு சத்துருவைச் சாரொண்ணதே.

(இ-ள்.) அமரபட்சத்தின் பகையைச்சொல்வேன் கேட்பாயாகவும் மயிலுககுப்பகை ஆந்தையுங் காகமாகும், மித்துருவெனும் உறவுள்ளபக்ஷியைச்சொல்லக்கேளும் வல்லூறுங் கோழியுமாகும், மித்துருபட்சிகளுக்கு பகையானது இல்லை, பகைவராயிருந்தபோதிலும் உறவாவார்கள், சத்துருவாகில் ஆகாதெனத்தள்ளிவிடவேண்டும் அதிலொருகாரியஞ் செய்யொண்ணது (எ-று.) (39)

கோழியின் சத்துருமித்துரு.

100. ஒண்ணத கோழிக்குச் சத்துருவைக்கேளு
உத்தமனே காகமுடன் வல்லூறுகும்
எண்ணத மித்துருவைச் சொல்வேன் மக்காள்
இனிதான மயிலுடனே யாந்தையாகும்

கண்ணாத மித்துருவின் உறவு நன்று
காசினியிற் சத்துருவி னுறவாகாது
உண்ணாத வெகு கொடுமை வந்துசூழும்
ஒருவரால் முடியாத பகையு மாச்சே.

(இ-ள்.) கோழிக்குச் சத்துருவாகிய பட்சியெதுவெனில் காகமும் வல்லூறுமாகும், மித்துருபட்சியைச் சொல்லக்கேளும் மயிலும் ஆந்தையு மாகும், இதில் மித்துருபட்சியாகில் நன்மையாகும், சத்துருபட்சியின் உறவானது ஆகாது அதினால் வெகு கொடுமையானதுவந்து சூழும் ஒரு வராலும் தீர்க்கப்படாத பகையானது வரும் (எ-று.) (40)

ஆந்தையின் சத்துருமித்துரு.

101. பகையான வாந்தையின் சத்துருவைக்கேளு
பாலகனே வல்லூறு மயிலுமாகும்
தொகையான மித்துருவைச் சொல்லக்கேளு
துடியான கோழியுடன் காகமாகும்
வகையான மித்துருச் சேர்ந்தகாலம்
வாழலாம் வெகுகாலம் பகையேயில்லை
நகையான சத்துருவைச் சேர்க்கொண்ணாது
நஷ்டமுடன் பகைபாவம் பழியுமாமே.

(இ-ள்.) பகையாகும் ஆந்தையினுடைய சத்துரு பட்சியைக்கேளும் மயிலும் வல்லூறும் சத்துருவாகும், மித்துருபட்சியாதெனில் கோழியுங் காகமுமித்துருவாகும், மித்துருபட்சியைச் சேர்ந்தகாலம் வாழ்வானது வெகுகாலம்பெருகும், பகையில்லாமல் வாழலாம் சத்துருவைச்சேர்க் கில் நஷ்டமும் பகையும் பாவமும் பழியுமாகும் (எ-று.) (41)

காகத்தின் சத்துருமித்துரு.

102. பழியான காகத்தின் சத்துருவைக்கேளு
பாலகனே பசுமயிலும் கோழியாகும்
வழியான மித்துருவைச் சொல்லக்கேளு
வளராந்தை வல்லூறு முறவாய் நிற்கும்
தெழியான வெவ்வகைக்கு மித்துருவே வேண்டும்
சீவனென்றுங் கூடிரெண்டாய்த் திரமாய்வாழும்
அழியாமலிருக்க சத்துருவாகாது
அப்பனே சத்துருவின் பயன்சொல்மாதே.

(இ-ள்.) பழியானது விளைவிக்கும் சத்துருபட்சியைக்கேளும் மயி லும் கோழியும் சத்துருவாகும், மித்துருபட்சியாதெனில் ஆந்தையும்வல் லூறும் மித்துருவென்று முறலாகும் எந்தகாரியங்கள் செய்வதற்கும் மித்

துருபட்சியாகில் மிகவும் நன்ருகும், சீவன் ஒன்ருகவும் உடல் இரண்டாகவும் கூடி வாழ்கும் அழிவில்லாதிருக்கச் சத்துருபட்சியானது சத்துருவின்பயன் சொல்லாதே (எ-று.) (42)

வல்லூறின் சத்துருமித்துரு.

103. பலனுனவல்லூறின் சத்துருவைக்கேளு
பார்தனிலே வாழுகின்ற கோழியாந்தை
நலமான மித்துருவைச் சொல்வேன் மக்காள்
நல்லமயில் காகமென நவிலலாகும்
துலையான் மித்துருவால் வாழ்வார்கோடி
துர்ச்சனனும் சத்துருவாற் கெட்டார்கோடி
வலனுன மித்துருவே உறவதாச்சு
வாருன சத்துருவாற் பகையுண்டாச்சு.

(இ-ள்.) வல்லூறின் சத்துருபட்சியைக்கேளும் கோழியும் ஆந்தையாகும், மித்துரு பட்சி யாதெனில் சொல்லக்கேளும், மயிலுங் காகமுமாகும், மித்துரு பட்சியினுல் வாழ்வார்கள் கோடிபேர்கள், சத்துருப் பட்சியினுல் கெட்டவர்கள் கோடியுண்டென்பர், மித்துருவெனில் உறவாகும், சத்துருவால் பகையுண்டாகும் (எ-று.) (43)

மித்துருவின் பலாபலன்.

104. ஆச்சப்பா மித்துருவால் உலகம்வாழும்
அப்பனே ஒருவனைத்தான் அடுத்துக்கொண்டு
பாச்சப்பா கிளைகோடி மகிழ்ச்சிபெற்று
பதிவாக விருந்துறவாடிக்கொண்டு
போச்சப்பா வினச்சேர்க்கை யாகவாழ்வார்
பொல்லாங்கு ஒன்றுமில்லை மித்துருவைத் தொட்டு
வாச்சப்பா மித்துருவாழ் சேர்ந்தநேரம்
மனமகிழச்சியாயிருந்து வாழ்வார்பாரே.

(இ-ள்.) மித்துருவின்பலன் யாதெனில் தன்னுடைய பட்சி மித்துருவாகில் உலகின்மேல் வாழலாம், ஒருவரை அடுத்துக்கொண்டும் கிளைகொடிப்போல் தழைத்தும் மகிழ்ச்சியானது பெற்றும், பதியாகவிருந்தும், உறவாடிக்கொண்டு இனம்சேர்க்கையாக வாழ்குவன், பொல்லாங்கானது ஒன்றுமில்லையாம், மித்துருபட்சியினுல் மித்துருவாகச் சேர்ந்திருக்கில் அன்னேரம் மனமகிழ்ச்சியாகவிருந்து வாழ்வார்கள் பாரும். ()

இதுவுமது.

105. பாரப்பா மித்துருவாயிருந்தநேரம்
பார்தனிலே வரவுசெய்தார் பலனுண்டாகும்

நேரப்பாவெங்தெந்த தொழில்செய்தாலும்
நேர்மையுள்ள மித்துருவிற் செய்தாயானல்
காரப்பா எவ்வகையும் கைகூடும்பார்
கவந்துவுறவாடியல்லோ பொருள்கள் சேரும்
ஆரப்பா வறிவார்கள் மித்துருவின் நேர்மை
அப்பனே யறிந்தவர்க்குப் பகைதான்போச்சே.

(இ-ள்.) மித்துரு பட்சியாகவிருந்தநேரமாகின் அப்போது வரவு செய்யில் பலன் உண்டாகும், அந்தகாலத்தில் எங்தெந்தத் தொழில்செய்யினும் மித்துருவாகயிருக்கும்போது செய்தால் சகலகாரியமும் கைகூடும் கலந்து உறவாடிப் பொருள்கள் அதினல் வந்துசேரும், ஆர்அறிவார்கள், மித்துருபட்சியினுடைய நேர்மையை அறிந்தவர்களுக்குப் பகையானது போகும் (எ-று.) (45)

இதுவுமது.

106. போச்சுதடா பகைபோச்சு பொருளுண்டாச்சு
பூமிதனி லெவ்வகையும் பலிதமாச்சு
வாச்சுதடா தனச்சேர்க்கை மகிழ்ந்தசெல்வம்
மங்களமாய் சோபனங்கள் வாழ்வுநன்று
எச்சுதடா கூடியங்கே செய்யும் நேரம்
என்மகனே மித்துருவா யிருக்கவேண்டும்
தாட்சியொன்று மில்லாமல் எல்லாமாகும்
சண்டாள சத்துருவை யகற்றிச்செய்யே.

(இ-ள்.) பகையானது போகும், பொருளானது உண்டாகும், பூமியின்மீது எவ்வகையானதும் பலிதமாகும், தனமானது சேர்க்கையுடன் மகிழும் செல்வமும் பெருகும், மங்களமாகிய சோபனங்கள்செய்கவும் வாழ்கவும் நன்மையாகும், இக்காரியங்கள்கூடிச் செய்யுங்காலம் மித்துரு பட்சியாக விருக்கவேண்டும், அப்படி யிருக்குமாகின் தாட்சியானது ஒன்றுமில்லாமல் யாது காரியமுமாகும், சத்துருவை நீக்குவாய். (எ-று.)

சத்துருவின் பலாபலன்.

107. அகத்திலே சத்துருவு மித்துருவுமுண்டு
அப்பனேயதனல் சந்தோஷம் துக்கம்
செகத்திலே யதுபோலே எண்ணவேண்டும்
தீவினையும் நல்வினையும் செனனக்கூறு
சுகத்திலே யிருந்தவர்க்கு இரண்டுபோச்சோ
துன்பவினை யணுகாமலற்றுப் போச்சோ
சுகத்திலே ஈய்புகுந்த வாறுபோல
சஞ்சலமும் சுகமிரண்டும் சரிதான் பாரே.

(இ-ள்.) அகமென்னும் மனத்துக்குள் சத்துருவு மித்துருவு முண்டு, அதினால்தான் சந்தோஷமும் துக்கமும் உண்டென்பர், செகத்தின்கண் அதுபோல் யெண்ணவேண்டும் தீவினையும் நல்வினையும் செனனத்தின் கூறுகும், சுகத்தோடிருக்கினும் இவ்விரண்டும் அனுபவிக்கவேண்டும், துன்பமானது அற்றுப்போகாது, சுகத்தினிடமாக ஈயானது புகுந்த வாறுபோல் சஞ்சலமும் சுகமும் இவை இரண்டும் சரிசமமாமென்பர்.

இதுவுமது.

108. சரியான மித்துருவு சத்துருவுமொன்று
சடலத்தில் சந்தோஷம் கோபமொன்று
விரிவான யிடமொன்று நலம்பொ லனுமொன்று
மேதினியில் நன்மை தீமை இரண்டுமொன்று
குறியான பஞ்சகர்த்த மிருந்தயிடமொன்று
கூறியே குவித்தெழுந்த வாசினிலையொன்று
நெறியான சீவசெந்தைப் படைத்தபொருளொன்று
நிலையிருந்த விடத்திலல்லவோ இடருண்டாச்சே.

(இ-ள்.) சரியாக விளங்கும் சத்துருவும் யித்துருவும் ஒன்றுகும், சடலத்தில் சந்தோஷமும் கோபமும் ஒன்று, விரிவாகிய இடம் ஒன்று, நலம் பொலனும் ஒன்று, மேதினியில் நன்மையுந் துன்மையும் ஒன்று பஞ்சகர்த்தாக்கள் யிருக்குமிடம் ஒன்று குறியானது யேகும்படியான வாசினிலை ஒன்றுகும், சீவசெந்துக்கள் யாவையும் படைத்த பொருளானது ஒன்று நிலையானது யிருந்தயிடத்திலிருந்து இடரானது உண்டாச்சுதென்பர்.

இதுவுமது.

109. இடரான சத்துருவின் பகைபொல்லாது
எண்ணியதோர் காரியங்கள் கூடுவது மில்லை
படரான பொருள்சேதம் உறவுபகை யாகும்
பார்தனிலே சத்துருவின் பலன்தா னப்பா
கடவான சோபனமும் முடியாதையா
கனிவாக முடிந்திடினும் வாழ்வதில்லை
வடமான பொருள்சோர மாகும் பாரு
வழக்கிலே போனாலும் வெல்லார் தானே.

(இ-ள்.) சத்துருப்பட்சியின் பகையானது பொல்லாதாகும், நினைத்த காரியங்கள் கைகூடாது, பொருளானது சேதமாகும், உறவாக யிருப்போரைப் பகையாக்கும், பூமியின்மீது சத்துருபட்சியின் பலன்யிதுவாகும், சுபசோபனங்கள் செய்ய உத்தேசிக்கில் முடியாது, அப்படிக்கு முடிந்து விடினும் வாழ்வானது குன்றும், பொருளானது சோரம்போகும், வழக்கானது யெடுத்துப்போகினும் வெல்லவும் மாட்டார் (எ-று) (49)

இதுவுமது.

110. தானென்ற சத்துருவால் முடியா தொன்று
தரணிதனில் நன்மையா யிருப்ப தில்லை
கோனென்ற சிவன்செயலென் றுலகம் பேசும்
கொடுமையுள்ள நேரமென் றறிய மாட்டார்
வானென்ற நேறமது அறிந்த பெரியோர்கள்
வழியான நேரமென்று மகிழ்ந்து கொள்வார்
ஆனென்ற மனமிடஞ்சல் வாராமல்தான்
அப்பனே நேரமதை யறிந்து கொள்ளே.

(இ-ள்.) சத்துரு பட்சியினுல் யாதொரு காரியமும் முடிவு பெருது, பூமியின்மீது நன்மையாக யிருப்பதுவுமில்லை, இதனைச் சிவனுடையசெய லென்று உலகத்தோர்கள் பேசுவார்கள், கொடுமையாகிய நேரமொன்று யிதனை யறியமாட்டார்கள், அப்படிக்கு அறிந்தபெரியோர்கள் இது வழி யான நேரமென்று அறிந்துகொள்வார்கள், மனமிடஞ்சலானது வாரு மற் படிக்கு சத்துருப் பட்சியின் நேரமறிந்துக்கொள்வாய் (எ-று) (50)

இதுவுமது.

111. அறிந்துகொண்டு சத்துருவைச் சேர்த்தா யானுல்
அப்பனே யறுபதுநா ளாகுமாகும்
தெரிந்துகொண் டெதிரியுட பட்சிக் கப்பா
சினமான சத்துருவைச் சேர்த்துக் கொண்டு
தரிந்துகொண்டு செய்கிறவன் பட்சிக் கப்பா
தன்மையுள்ள மித்துருவைச் சேர்த்தா யானுல்
பரித்துகொண்டு செய்ததொழில் பலிக்கு மப்பா
பார்தனிலே யிதைவிட்டால் பலியாது பாரே.

(இ-ள்.) அறிந்துக்கொண்ட சத்துருவைச்சேர்ந்தாயாகில், அறுபது நாளாகும், அதனைத் தெரிந்துக்கொண்டு யெதிரியுடையப் பட்சிக்கும், சத்துருப் பட்சியைச் சேர்த்துக்கொண்டும் தெரிந்து செய்கின்றவன், பட்சிக்கப்பாக் கேளும் மித்துரு பட்சியைச் சேர்ப்பாயாகில் பரிந்து செய்யும் காரியங்கள் யாவும் பலிக்கும், இவ்விதமாகச் செய்யாவிடில் யாதொன்றும் பலியாது பாரும் (எ-று.) (51)

இதுவுமது.

112. பலியாதே சத்துருவைச் சேர்க்கா விட்டால்
பங்கமறு மங்கத்தால் பழுதே யில்லை
வலியாத மித்துருவைச் சேர்த்துக் கொண்டால்
மனம்நினைத்த படியங்கே முடியா தையா
சலியாத சாஸ்திரத்தைப் பழுதென் றெண்ணி
தானினைத்த படிசெய்தால் பலிக்கு மோசொல்

கலியாதே கைபாகம் செய்பாகந் தப்பிக்
கண்டபடி செய்ததினுல் கனிவா காதே.

(இ-ள்.) சத்துருப் பட்சியைச் சேர்க்காவிடில் பங்கமானது ஒன்று மில்லை, தேகத்திற்கும் பழுதில்லை, மித்துருப் பட்சியைச்சேர்த்துக்கொள்ளில் மனதில் நினைத்தபடி யாதும் முடிவதே யில்லையாம், சாஸ்திரத்தைப் பழுதென்று சொல்லிப் பழிக்கவேண்டாம், அப்படிச்சொல்லிச் செய்யுங் காரியங்கள் பலிதமாகாதென்பர், கைபாகமும் செய்பாகமும் தப்பிக் கண்டபடியாகச் செய்வதினுல் யாது காரியமும் கனிவாகாதென்றனர்.

இதுவுமது.

113\. கனியாது மனத்திற்கு ருசிகொள்ளாது
கற்போலே யிருந்துவிடுங் கடக்கத் தள்ளு
பனியாது கருக்குருவுங் காணுவிட்டால்
பாவைபோ லிரந்துவிடு பலிதமில்லை
குனியாது நிமிராது குணஞ்செய் யாது
குணமாக மாட்டாது சத்துருவை விட்டால்
தனியாது அஷ்டகர்ம வித்தை யையா
தாணுட மாட்டாது தனிந்து போமே.

(இ-ள்.) கனிவானதிராது, மனதிற்கும் ருசியானது கொள்ளாது கல்லைப்போலிருக்கும் அதை கடக்கத்தள்ளுவது உத்தமம், கருவையுங் குருவையுங் காணுவிடில் பாவையர் போலிருந்துவிடவேண்டும், பலிதம் ஒன்று மில்லை, குனியாது நிமிரவும் நிமிராது குணங்களுஞ் செய்யாது சத்துருவை விடுவாயாகில் தனியாது அஷ்டகர்மவித்தையிது, தாணுடவு மாட்டாது தணிந்து போகுமென்பர் (எ-று) (53)

இதுவுமது.

114\. தனிந்துபோம் பட்சிவித்தை பலித மில்லை
தனதான மித்துரு சத்துருவை விட்டால்
குணிந்துபோ மெத்தொழிலுங் குணஞ்செய்யாது
கூடிவரப் போறதில்லை யறியா விட்டால்
கணிந்துபோம் நன்மையிலே நன்மை செய்யும்
கடிலான தீமையிலே தீமைசெய்யும்
அணிந்துபோம் நேரமங்கே முன்பின்னுக
அசதியாய்ப் போகாம லறிவாய் தானே.

(இ-ள்.) தணிந்துபோகிவிடும், பட்சிவித்தையானதும் பலிதமில்லையாகும், மித்துருபட்சியையும் சத்துருபட்சியையும் விட்டுவிடில் எந்தத் தொழிலும் குணமாகமாட்டாது இந்த இரண்டு பட்சியையும் அரியாவிட்டால் ஒன்றுங் கூடிவரமாட்டாது, நன்மையில் நன்மையானது செய்யும், தீமையிலே தீமையானது செய்யும், நேரங்களை முன்பின்னுக போகவிடாமலறிவாய் (எ-று.) (54)

உ

கடவுள் துணை.

ஆரூடகாண்டம்.

சிந்தனைப்படலம்.

அசுவனியின் பலாபலன்.

115. சொல்லுவேன் அசுவனிதான் உதயமானல்
சோர்வான ஜனவரத்தும் பொருள்வரத்தாம்
வெல்லவே நினைத்தபொருள் கைவசமே சேரும்
வெல்லவரும் பகைஞருமோ உறவுவரும்பாரு
நில்லவே சோபனங்கள் கூடுவது திண்ணம்
நினைத்ததொரு சிந்தனைதான் மஞ்சள்நிறமாகும்
பல்லவே பட்சிவகை யில்லாவிட்டால்
பலிக்குமடா நாள் எட்டுக்குள்ளே பாரே.

(இ-ள்.) யாதாகமொருவர் வந்து ஆருடங்கேட்குங்காலம் அசுவனி நட்சத்திரம் உதையமாகில் அதின்பலன் யாதெனில் அதற்குறியபட்சி ஊணுகவிருக்கில் சோர்வடைந்துபோனவர்கள் வருவார்கள், பொருள் வருத்தாகும், மனதில் நினைத்தபொருள் கைவசமாகும், பகைவருக இருந் தவர்கள் உறவாவார்கள், சோபனங்கள் கூடுவது திண்ணமாகும், நினைத்து வந்து கேட்டபொருள் மஞ்சள் நிறமுடையதாகும் பட்சியின் பகையில்லா திருக்கில் நினைத்த காரியம் பலிதமாகும், நாள் எட்டிற்குள்ளாம் (எ-று.)

இதுவுமது.

116. உள்ளான ஊண்பகையே ஆடுங்காலம்
உத்தமனே விலைதணிந்த பொருளுமாகும்
வெள்ளான கிழக்குவகை என்றுசொல்லு
மேதினியிற் பிறர்வருவார் செலவுகாணும்
தள்ளான பின்னுதவி சத்துமில்லை
சஞ்சலங்கள் மனதிற்குத் தானேதோன்றும்
கொள்ளான விப்பலநாள் பதினைந்துக்குள்
குணமான நன்மைதுன்மை கூடுகாணே.

(இ-ள்.) பட்சிகள் ஊண் பகையாக விருந்திடில் நினைத்தவை விலை யணிந்த பொருளாகும், அதாவது கிழங்கின் வகையாகும், பிரர்கள் வரு வார்கள் அதினற் செலவானது காணும் தனக்கு பின்னுதவியானவர் ஒரு வருமில்லை யாகும், சஞ்சலமானது மனதிற்தோன்றும் இந்த பலன் பதினைந்து நாளைக்குள் நன்மையுந் துன்மையும் கைகூடும் காண்பாய்.

இதுவுமது.

117. காணுமே வரசுபகையானல் மைந்தா
கைப்பொருளே செலவாகும் வரத்தொன்றில்லை
தோணுமே கிளைஞர்களிற் சேதமுண்டு
சொற்பெரிய பிரபுபகை யாகும்பாரு
வேணுமே பெண்டுபிள்ளை பகையுமாகும்
விலையில்லாப் பொருளென்று சொல்லலாகும்
ஆணுமேயிரண்டு பத்து நாளைக்குள்ளே
அணுகுமடா யிப்பலனை யறிந்துபாரு.

(இ-ள்.) அரசில் பகையாகில் அதின்பலன் யாதெனில் கைப்பொருள் சிலவாகும், வருத்தானது ஒன்றுமீராது கிளஞ்சர்கள் சேதமுண்டாகும், பிரபுக்களின் பகையானது நேரும், தன்னுடைய பெண்டுபிள்ளையும் பகையாகுவர் நினைத்தபொருள் விலையில்லாதாகும் அது இன்னும் இருபது நாளைக்குள் கைவசமாகச்சேரும் இப்பலனையறியாய் (எ-று.) (3)

இதுவுமது.

118. அறிந்துபார் ஊணரசு பகையே யானல்
அப்பனே நினைத்தபொரு ளொன்றுமில்லை
தெரிந்துபார் அப்பொருள் கைவசப்படாது
சிக்குவதொன்றில்லை சேதமாகும்
சரிந்துபோம் நோய்வரும்பின் பகையுமுண்டு
தள்ளிவிடு பலிதமில்லையென்று சொல்லு
நெரிந்துபோம் மூன்றுபத்து நாளைக்குள்ளே
நிலைதவிரும் நன்மையெல்லாம் துன்மையாமே.

(இ-ள்.) ஊண்பட்சியும் அரசுபட்சியும் பகையாகவிருக்கில் அதின பலன் யாதெனில் நினைத்த பொருளானது ஒன்றுமில்லை அப்பொருள் ஒருபோதும் கைவசப்படமாட்டாது பலன் தருவது யாதொன்றுமில்லை நஷ்டமாகும், பிணியானது அணுகும், பகையானது நேரும், இப்பலனைத் தள்ளிவிடவேண்டும், அன்றியும் முப்பது நாளைக்குள் நிலையானது தவரி நன்மைகள் யாவுந் துன்மையாகும் (எ-று.) (4)

இதுவுமது.

119. துன்மையொன்று மில்லையப்பா பகையில்லாவிட்டால்
தினம் ஐந்துக்குள் வரத்து மெத்தவுண்டு
நன்மையென்ற காரியங்கள் மிகவுங்கூடும்
நடக்குமடா நினைத்ததெல்லாம் நன்ருய்த்தானே
வன்மையென்ற தங்கமென்று சொல்லலாகும்
மனமகிழ்ச்சி சோபனங்கள் திண்ணமாகும்

வெண்மையென்ற தரவு உரவாகும் பாரு
மேன்மை என்னால்சொல்லப்போமோஉறவுநன்றே.

(இ-ள்.) துன்பமானது ஒன்றும் அணுகாது, பகையானது யில்லா விட்டால் கேளும் நாள் ஐந்துக்குள் வருத்தானது மெத்தவுண்டாகும் நன்மையான காரியங்கள் யாவும் கைகூடும் நினைத்தவண்ணந் தவராமல் நன்மையாகும், வண்மையாக நினைத்தவை தங்கமெனச் சொல்லலாகும், மனமகிழ்ச்சியான சோபனங்கள் திண்ணமாகும், மேன்மையான உற வானது கூடும், இதினுடையமேன்மையை என்னால் சொல்லப்போமோ.

பரணியின் பலன்.

120. இரவான பரணிதரன் உதயமானால்
உத்தமனே கருமை சிவப்பு நிறமுமாகும்
திறமான நிலங்கள்வரும் உறவுசேர்க்கை
செம்மையுடன் மருதேசம் போனார்மீள்வர்
கறமான வரசர் உறவாகும் பாரு
கனத்ததொரு கெர்ப்பமது ஆணேயாகும்
சிரமானி சோபனங்கள் கூடும்நல்ல
செய்திடு கேட்கலாகும் தினந்தான் பத்தே.

(இ-ள்.) பரணி நட்சத்திரம் உதையமாகத்தோன்றில் அதின் பலன் யாதெனில் நினைத்தபொருள் கருப்பும் சிவப்புமாயுள்ள நிறமாகும், தானி யங்கள் வருத்தாகும் உறவானது சேரும், நன்மையாக மருதேசம்போன வர்கள் மீண்டுவருவார்கள், அரசர்களுடைய உதவியுண்டாகும், கெர்ப்ப மானது ஆணாகும், சோபனங்கள் கூடும் இப்பலன் நாள்பத்துக்குள்ளா கக் கூடும் (எ-று.) (6)

இதுவுமது.

121. தினமாக ஊண்பகையே ஆகாதுபாரு
சிவந்த கருப்பாமதுவும் விலையதிகமப்பா
கனமான சோபனத்திற் குலைவுவரும் திண்ணம்
கனத்ததொரு பூமியிலே வருமானம் கொஞ்சம்
இனமாக விருந்தாலும் பகையதாகும்
இடம்நாடிப் போனவர்கள் இடஞ்சலிலே நிற்பார்
மனமாரப்பசிவேளை பசிப்படைத்தலில்லை
வந்திடும்பார் நாள்மூன்று அஞ்சுமாமே.

(இ-ள்.) பட்சிகள் ஊண் பகையாகவிருக்கலாகாது அப்படியிருக்கில் அதின்பலன் யாதெனில் நினைத்துக்கேட்டப்பொருள் சிவந்தகருப்பாகும் விலையுயர்ந்த பொருளாகும், சோபனங்கள் செய்வதினால் குறவானது வருகுந் திண்ணமாகும், பூமியின்மீது வருமானங்கொஞ்சமாகும், இனத்

தில் பகையானது நேரும், இடம்விட்டு நீங்கிப்போனவர்கள் இமிசையானது பட்டுழல்வர் பசிவேளைக்கு அன்னம் பொசிப்பதில்லையாம் இப்பலன் நாள் [௩][௰]ல் காண்பாய் (எ-று.) (7)

இதுவுமது

122. அஞ்சாத வரசுபகையானால் கேளு
அப்பனே நினைத்தபொருள் விலையோயில்லை
மிஞ்சாத உறவும்யிலை பொருள்வரத்தில்லை
வேந்தன்உற ஒருநாளும் விரும்புவதில்லை
நஞ்சாகி ஊர்வழியிற் போனபேர்கள்
நன்மையாய் ஒருபோதும் வருவதில்லை
பஞ்சாகி பொருட்சேதம் ஆகும்பாரு
பலன்வருவதிரண்டு பத்துநாள் இதாமே.

(இ-ள்.) அரசு பகையாகவிருக்க அதின்பலன் யாதெனில் நினைத்துக் கேட்டப்பொருள் விலையில்லாதாகும் உறவானது கூடும், பொருளானது வருத்தில்லை, அரசர்களுடைய உறவானது ஒருநாளுங்கிட்டாது, நஞ்சைப் போல் கசந்துபோனவர்கள் நன்மையாக ஒரு போதும் வந்துச்சேரமாட்டார்கள் பொருட்சேதமாகும் இப்பலன் இருபது நாளிற்காட்டும் (எ-று.)

இதுவுமது.

123. நாளான ஊணரசு பகையில்லாவிட்டால்
நலம்பெறலாம் விலைய்திக மெல்லாம்சேரும்
தாளான சோபனங்கள் கூடும்பின்பு
தரணிதனிற் பிறந்தபிள்ளை தரணியாள்வன்
வாளான வினைவருவதில்லை பாரு
மனமகிழ்ச்சி மெத்தவுண்டு உறவுசேர்க்கை
கோளான நாள்ஏழிற் குணமதாகும்
கூடிவரும் செல்வமெனக் குறித்துசொல்லே.

(இ-ள்.) ஊரினும் அரசினும் பகையில்லாதிருக்கில் அதின் புலன் யாதெனில் நன்மையானது பெறலாகும், விலையதிகமான பொருள் யாவுஞ் சேரும், சோபனங்கள் கூடும், பின்பு பிறந்தபிள்ளையானது உலகத்தை யாள்குவன் வினையானது அணுகாது, மனமகிழ்ச்சியானது மெத்த உண்டாகும், உறவானது கூடும் இப்பலன் ஏழுநாளில் கைகூடும் செல்வமானது பெருகுமெனச் சொல்லவும் (எ-று.) (9)

இதுவுமது.

124. குறித்துநின்ற ஊணரசு பகையேயானால்
கூடிவரப்போகிறதில்லை பகையுமுண்டு
கருத்துநின்ற மனம்போல வருவதில்லை
கனவுகண்ட காட்சியைப்போ லாகும்பாரு

தரித்துநின்று போனவர்கள் மீள்வதில்லை
தான் நினைத்த காரியமும் மணம்கூடாது
மரிந்திரந்து போய்விடும்பார் பிறந்தபிள்ளை
மாளுமே நாலைந்துக்குள்ளே பாரே.

(இ-ள்.) ஊணினும் அரசியனும் பகையாக விருக்கில் அதின் பலன் யாதெனில் நினைத்துக்கேட்ட பொருள்கள் யாவுங் கூடிவரமாட்டாது, பகையானதுநேரும் கருத்தில் நினைத்தவண்ணம் மனம்போல்வருவதில்லை கனவுகண்ட காட்சியாகவிருக்கும், இருப்பிடம் விட்டுப்போனவர்கள் மீண்டும் வருவதில்லையாகும் தான் நினைத்தகாரியமும் மணமுங் கூடாது மரணமாகப்போகும் பிரந்தபிள்ளையும் இப்பலன் நாலுஐந்துநாளில்பாறும்

கார்த்திகையின் பலாபலன்.

125. பாரடா கார்த்திகைதான் உதயமானால்
பண்புடனே நினைத்தபொருள் கருப்பாம்பாரு
தேரடா பெண்பெருவள் செலவுநேரும்
தேடியதோர் பொருள்வரத்து இல்லையில்லை
காரடா உடலில்வந்த பிணிதீராது
கனியாறு பிரபு உறவாகாதையா
சேரடா நட்பாம்பர் போலே மக்காள்
சிதறுமே நாள்பத்தில் சிதறும்பாரே.

(இ-ள்.) கார்த்திகை நட்சத்திரம் உதையமாகில் அதின்பலன் யாதெனில் நினைத்துக்கேட்டப்பொருள் கருப்பு நிறமாகும், மனையாள் பெண்பெருகுவள் அதினால் செலவானது நேரும், தேடிப்போகும் பொருளானது வருத்தில்லை, தேகத்தில் வந்த பிணியானது தீராது, பிரபுக்களின் உறவானது கிடைக்கமாட்டாது யாவரும் பாம்பைப்போல் சீரிவிழுவார்கள் இப்பலன் நாள் பத்தில் சிதரிப்போகுமென்பர் (எ-று.)

126. சிதறுமே ஊண்பகைதயே யாகும்காலம்
சிந்தைதனில் நினைத்தபொருள் கல்மண்ணாகும்
பதறுமே உடலுயிரும் கிளையும்சேதம்
பகைவரும்பார் உண்பதுவுமில்லை யில்லை
அதிரவே பிறந்தபிள்ளை இறந்துபோகும்
அகலவே போனவர்கள் மீள்வதில்லை
கதறுமே மூவைந்து நாளைக்குள்ளே
கலங்காத மனங்கூடக் கலங்கும்பாரே.

(இ-ள்.) ஊணில் பகையாகவிருக்குங்காலம் அதின்பலன்யாதெனில் மனதில் நினைத்தபொருள் கல்லும் மண்ணாகும், பதரும் உடலும் உயிரும் கிளையுஞ்சேதமாகும், பகையானதுவந்தணுகும், போசனங்கிடைப்பதரிதா

கும், பிறந்தபிள்ளையும் இறந்துபோகும், இடம்விட்டு அகன்றுபோனவர்கள் மீண்டுவாரார்கள் இப்பலன் முப்பதுநாளைக்குள்ளாகக்காட்டும் அப்போது கலங்காதமனமுங் கலங்குமென்பர் (எ-று.) (12)

இதுவுமது.

127. கலங்குமே யரசுபகை யானால் மக்காள்
கருத்திலே நினைத்தபொருள் கரியெருவுமாகும்
இலங்குமே ஊர்வழிதான் போனபேர்கள்
இனிவருவ தில்லையென்றே யியம்பலாகும்
மலங்குமே நினைத்தபொருள் கைகூடாது
மனதிலே துயரமல்லால் மகிழ்ச்சியில்லை
துலங்குமே நாளெட்டிற் பலிதமாகும்
துடியான வரசுபகை பொல்லா தென்னே.

(இ-ள்.) அரசு பகையாகவிருக்கில் அதின்பலன் யாதெனில் மனதில் நினைத்தபொருள் கரியும் எருவுமாகும், ஊர்ப்பயணம் போனவர்கள் திரும்பியும் வருவதில்லையெனச் சொல்லவேண்டும், நினைத்தபொருள் கைகூடாது மனத்துயரமேயன்றி மகிழ்ச்சியிராது, இப்பலன் நாள் எட்டில் பலிதமாகும் அரசுபகை பொல்லாதென்றுச் சொல்கவும் (எ-று.) ()

இதுவுமது.

128. பொல்லாத ஊணரசு பகையே யானால்
புத்திதனில் நினைத்த பொருள் பொற்கரும்பாம்
நில்லாது சோபனங்கள் நேர்வதில்லை
நினைத்ததொரு காரியமும் வசப்படாது
கொல்லாது கொல்லுமடா வுயிரைத் தானும்
கூடிவரல் ஒன்றுமில்லை செலவு மெத்த
எல்லாரும் பகையாவார் நாளஞ் சுக்குள்
இனிதான சொல்லுமில்லை யிவன்பிழைப்ப தரிதே.

(இ-ள்.) ஊண் அரசு பகையாகவிருக்கில் அதின்பலன் யாதெனில் புந்தியில் நினைத்தபொருள் பொன்போலும், கருத்தநிறம்போலும் உள்ளதாகும் அப்பொருள் நிற்காது, சோபனங்கள்செய்ய நேர்வதில்லை, நினைத்தகாரியம் கைவசப்படாது கொல்லும் உயிரையும், கூடிவருவதொன்றுமில்லை, சிலவு அதிகமாகும் யாவர்களும் பகையாகுவர், நாளானது ஐந்திற்குள் நன்மையாகிய சொல்லானதுமில்லை இவன் பிழைப்பதரிதாகும்.

இதுவுமது.

129. அரிதான ஊணரசு பகையில்லா விட்டால்
அப்பனே நினைத்ததுதான் விலையுள்ள கருப்பு
நெறியாகப் போனவர்கள் வருவார் பின்பு
நேசமில்லை மனதிற்குத் துயர மில்லை

குறியான மனங்கூடுங் குலேவனவு மாகும்
கூடியிருப் பார்பின்பு பிரிந்து போவார்
சரியான நாளேழிற் பலித மாகும்
தாம் நினைத்த படியவற்கு முடியாதுபாரே.

(இ-ள்.) ஊண் அரசு பகையில்லாதிருக்கையில் அதின்பலன் யாதெனில் நினைத்துக்கேட்டபொருள் விலையுயர்ந்த கருப்புநிற முள்ளதாகும் வெளியூர்போனவர்கள் வந்துசேருவார்கள் நேசமானதும் இல்லை மனதிற்கு துயரமானதில்லை மனமானதுக்கூடும், குலமானது தழைக்கும் கூடிவாழ்வார் பின்பு பிரிந்துப்போகுவர் இந்தப்பலன் நாள் ஐந்தில்பலிதமாகும் நினைத்தவண்ணம் முடியாதுபாரும் (எ-று.) (15)

உரோகணியின் பலன்.

130. முடியுமோ வுரோகணிதா னுதையமானல்
முழுமனதாய் நினைத்தபொருள் வெள்ளைப் பூவாம்
கடியான மணஞ்செய்ய நன்மை யாகும்
கடைத்தேறப் போனவர்கள் வருவா ரிப்போ
மடிவாகப் போனதுவுங் கைவசமே யாகும்
மனத்துயர மெள்ளளவும் வருவ தில்லை
படிவாக நாளேழில் நினைத்ததெல்லாம்
பலன்கூடுஞ் சொல்கேட்க ஓலைவரும் பாரே.

(இ-ள்.) உரோகனிநட்சத்திரம் உதையமாகில் அதின்பலன் யாதெனில் மனதில் நினைத்தபொருள் வெள்ளைப்பூவாகும் மணமானதுசெய்ய நன்மையாகும் பிழைக்கும்படியாக வெளியூர்போனவர்கள் இப்போது வந்துசேருவர் போனபொருள் கைவசமாகும் மனதுக்குத்துயரமானது எள்ளளவுமிராது இப்பலன் நாள் ஏழுக்குள் நினைத்தவைகளெல்லாம் பலிதமாகும் கேள்வியானது கேட்கும்படியாக ஓலையானதும் வருகும்.()

இதுவுமது.

131. ஓலைவரு மூண்பகையா யிருந்தா லையா
உளநினைத்த பொருளதுதா னழுக்குள் வேலை
சாலைவரு மணங்கூடு முறவு சேரும்
தனிவழக்கு உண்டாகுஞ் சலன மில்லை
காலைவரு தேகத்திற் பீடையுண்டு
கசிந்தபல னில்லையென்று கருதலாகும்
மாலைவரும் பெண்பெறுவள் பயமுங் கொஞ்சம்
மனதிற்குச் சந்தோஷ மில்லைதானே.

(இ-ள்.) ஊண் பகையாகவிருக்கில் அதின்பலன் யாதெனில் உள்ளத்தில் நினைத்தபொருள் அழுக்குள்ள வெள்ளையாகும், மணமானது கூடும், உறவானதுசேரும், தனிவழக்குண்டாகும், கலகமிராது, தேகத்தி

ஊிடமாக பீடைகாட்டும், துர்ப்பலமானது நேராது எனச்சொல்லலாகும், மாலையானது வருகும் பெண்ணனது பிறக்கும் அதில் பயங்கொஞ்சம்நேரும் மனதிற்குச் சந்தோஷமானதுயில்லையாமென்பர் (எ-று.) (17)

இதுவுமது.

132. இல்லையடா வரசுபகை யிருந்தா லைய்யா
இருதயத்தி னினைத்தபொருள் கறுத்துவெள்ளை
தொல்லையடா கூடிவரப் போறதில்லை
துன்பவினை சூழ்ந்துகொண்டு துயரஞ்செய்யும்
கல்லையடா பொருட்சேத மாகும் பாரு
கனிவான வுறவில்லை பகையுண்டாச்சு
சள்ளையடா வரசபகை பொல்லா தப்பா
தனிலொன்றும் வருவதில்லை சடநோ வாமே.

(இ-ள்.) அரசு பகையாகவிருக்கில் அதின்பலன் யாதெனில் மனதில் நினைத்தப்பொருளானது கறுத்தவெள்ளையாகும், அது கூடிவரமாட்டாது துன்பவினையானது சூழ்ந்துக்கொண்டு துயரமானதுசெய்யும், பொருளானது சேதமாகும், உறவானது நீங்கும், பகையுண்டாகும், அரசு பகையானது பொல்லாதாகும் யாதொருகாரியமும் ஆகாது தேகத்தில் நோயானது அணுகும் (எ-று.) (18)

இதுவுமது.

133. நோவாகும் ஊணரசு பகையே யானல்
நொய்யமனம் நினைத்தபொருள் சரியே யாகும்
மாவாகும் பலனென்று மில்லையப்பா
வந்தவினை தீராது பழியே செய்யும்
தேவாகு மனுவுதவி சற்றுமில்லை
செடமலைந்து போவதல்லால் பலனுண் டாமோ
காவாகும் பகைத்தபேர் வெல்லா ரிப்போ
கண்டபடி நானுரைத்தேன் கருதிக் கேளே.

(இ-ள்.) ஊணரசு பகையாகில் அதின்பலன் யாதெனில் மனதில் நினைத்தபொருள் சரியாகும் பலனனது ஒன்றுமில்லை வந்திருக்கும் வினையானதுதீராது, பழியானதுசெய்யும், மனுஷர்கள் உதவியுமிராது, தேகமானது அலைந்துப்போகும், பலனுண்டாகாது, பகையாகயிருந்தவர்கள் வெல்லுவார்கள், கண்டபடியாக உரைத்தேன் கருதிப்பாரும் (எ-று.) ()

இதுவுமது.

134. கருதிக்கேள் ஊணரசு பகையில் லாட்டம்
கனிவாக நினைத்தபொருள் விலைபெற்றவெள்ளை
சுருதிக்கேள் மணஞ்செய்ய நன்மையாகும்
தொலைதூரம் போனவரும் வந்துபோவார்

பருதிக்கேள் போனபொருள் வந்துசேரும்
பகையில்லை யுறவாகு முட்பகையும் போச்சு
சருவிக்கேள் நாளேழிற் பலித மாகும்
தானினைத்த படிமுடியுந் தப்பாதென்னே.

(இ-ள்.) கேட்பாயாக ஊண் அரசு பகையில்லாதிருக்கில் அதின் பலன் யாதெனில் நினைத்தபொருள் விலையுயர்ந்த வெள்ளையாகும் மணமானது செய்ய நன்மையாகும், தொலைதூரமாகப்போனவர்கள் வந்து சேருவார்கள், மறுபடியும்போவார்கள் போனப்பொருள் வந்துசேரும் பகையானது நீங்கும், உறவாகும் உட்பகையும்போச்சு இப்பலன் நாள் ஏழில் பலிதமாகும் தான் நினைத்தபடிமுடியும் தப்பாதென்று மேலோர் கூறுகின்றனர் (எ-று.) (20)

மிருகசீரிடத்தின் பலாபலன்.

135. தப்பாத மிருகசிர முதித்த தானல்
தானினைத்த பொருளிலையின் பச்சையாகும்
ஒப்பாது நினைத்தபடி முடியாதப்பா
ஊர்வழிப் போனவர்கள் சஞ்சலத்தால் மாய்வர்
அப்பாலு மணமில்லை யூண்பகையே யானல்
அதனலும் வருமென்ற பயனென்றில்லை
செப்பாத நாள்பத்தில் தீமைவருந் திண்ணம்
செயமாக மாட்டாது எல்லாந் தீதே.

(இ-ள்.) மிருகசீரிட நட்சத்திரம் உதையமாகில் அதின்பலன் யாதெனில் தான் நினைத்தபொருள் இலையாகும், அது பச்சைநிறமுள்ளது, நினைத்தகாரியம் முடிவுபெறது, ஊர்ப்பிரயாணமாகப் போனவர்கள் சஞ்சலத்தினல் மாய்குவர், அப்பால் மரணமானது கூடுவதில்லை, ஊண் பகையாகவிருக்கில் அதின்பலன் யாதெனில் யாதுமுயற்சிசெய்யினும் பயன்படமாட்டாது நாள்பத்துக்குள் தீமையானது வருகுந்திண்ணம். ()

இதுவுமது.

136. தீதென்ற வரசபகை யிருந்த தானல்
செயமாகப் போறதில்லை வரத்துமில்லை
தூதென்ற வோலைவரும் பொருட்சேத மாகும்
துயரமுமே கூடிவிளை யாடும் பாரு
வாதென்ற விருவர்பகை யில்லாவிட்டால்
மனத்துயரம் வெகுகொடுமை யில்லையில்லை
தானென்ற நாள்பத்தில் பலனைக் காட்டும்
தப்பாது நன்மையில்லை திண்மை யாமே.

(இ-ள்.) அரசுபகையாகவிருக்கில் அதின்பலன் யாதெனில் நினைத்த காரியம் செயமாகாது வரத்துமிராது, தூதாக ஓலையானதுவருகும் அதி

ளுல் பொருள் சேதமாகும், துயரமானது பெருகும், மேற்கண்டபட்சிக ளிரண்டுக்கும் பகையில்லாவிடில் மனத்துயரமும் கொடுமையுமிராது நாள்பத்திற்குள் பலனைக்காட்டும் இப்பலன் தப்பாது நன்மையானது யில்லை துன்மையாகும் (எ-று.) (22)

திருவாதிரையின் பலாபலன்.

137. திண்மையென்ற சொல்லில்லை யாதிரைக்கு
சிந்தைதனி னினைத்தபொருள் நீலவர்னம்
வன்மையென்ற பொருள்தொகை வசமேயாகும்
மக்களே யூண்பகைதா னிருக்கொண்ணாது
தன்மையென்ற வூர்பயணம் போனபேர்கள்
சடுதியிலே வருவதில்லை யரசுபகை யானுல்
உண்மையென்ற பொருட்சேத முறைவுபகையாகும்
உத்தமனே யிருவர்பகை யிருக்கொண்ணாதே.

(இ-ள்.) துன்மையென்னும் சொல்லானதுயில்லை திருவாதிரை நட்சத்திரம் உதயமாகிடில் கேளும் சிந்தையில் நினைத்தபொருளானது நீல வர்ணமுள்ளதாகும் அந்தப்பொருள் தன்னுடைய கைவசமாகும், ஊண் பகையானதுயிருக்கக்கூடாது அப்படியிருக்கில் ஊர்பயணம்போனவர் கள் சடுதியாகவருவதில்லையாகும், அரசுபகையாகவிருக்கில் பொருள் சேதமாகும், உறவும்பகையாகும் எப்போதும் இருவர்கள் பகையானது யிருக்கொணாது (எ-று.) (23)

இதுவுமது.

138. ஒண்ணாத வூணரசு மித்துருவாய் நின்றால்
உத்தமனே வருமரண மென்ன சொல்வேன்
தன்னாலே கூடிவரு முறவு சேவும்
தன்மையுடன் பிரவுப கார மாகும்
சொன்னாரே பிறதேசம் போக நன்று
தொடுத்துமணஞ் செய்யநன்று சோபனங்கள்கூடும்
எண்ணாரே யீனையில்லை நன்மையுண்டு
எடுத்ததொரு காரியங்கள் பலிதமாமே.

(இ-ள்.) ஊண் அரசு இவையிரண்டும்மித்துருவாகவிருக்கில் வருமா னம் அதிகமாகவரும் தன்னால் சகலகாரியமுங்கூடிவருகும் உறவானது சேரும் பிரபுக்களுடைய உபகாரம் உண்டாகும் பிரதேசங்கள்போக நன் மைத்தருகும் மணஞ்செய்ய நன்றாகும், சோபனங்கள் கூடும், பழியானது யில்லை, நன்மையுண்டாகும் எடுத்தகாரியங்கள்யாவும் பலிதமாகும்(எ-று.)

புனர்பூசத்தின் பலாபலன்

139. பலிதமடா புனர்பூசஞ் சேர்க்க வுண்டு
பண்புடனே நினைத்தபொருள் சிவப்பதாகும்

வலிதமடா வூர்வழிதான் போன பேர்கள்
வருவார்கள் பொருளுடனே மணமுங் கூடி
கலிதமடா வூண்பகையா யிருக்கொண்ணுது
கனிவான வருமானம் கால்வரிசை குறையும்
வலிதமடா வரசுபகை யாகும்போது
நாடிவரும் பொருளுடைமை நஷ்ட மாமே.

(இ-ள்.) புனர்பூச நட்சத்திரம் உதையமாகில் அதின்பலன் யாதெனில் சேர்க்கையானது உண்டாகும், மனதில் நினைத்தபொருள் சிகப்பு நிறமுள்ளதாகும், ஊர்பயணமாகப்போனவர்கள் வருவார்கள், பொருளுடன் மணமானதுக்கூடும், ஊண் பகையாகவிருக்கில் அதின்பலன் வருமானங்களில் கால்வரிசையானது குறையும், அரசுபகையாகவிருக்கில் நாடி வருகும்படியானப்பொருளும் உடமையும் நஷ்டமாகும் (எ-று) ()

இதுவுமது.

140. நஷ்டமில்லை யாணரசு பகையில்லா விட்டால்
நலமான காரியங்கள் முடியும் பாரு
தொட்டதெல்லாங் கூடிவரு மங்களங்கள் கூடும்
தூரத்தி னோலைவருஞ் சுகமதாக
வட்டமுலை மாதுதுணை யுண்டு பாரு
மக்களே சிவகளையால் வந்து கூடும்
இட்டமுட னுளதுதா னிருபதுக் குள்
இசைந்துவரும் நிலங்கொள்க வினிதாம் பாரே.

(இ-ள்.) ஊண் அரசுபகையில்லாதிருக்கில் நினைத்தகாரியம் முடியும், செய்தொழில்கள்யாவும் கூடிவரும் மங்களங்கள்கூடும் தூரதேசத்திலிருந்து ஓலையானது வருகும், அதினல் சுகமுண்டாகும், மனையாளின் துணையானது உண்டாகும் மைந்தர்களும் சுவலையாகவந்துகூடும் இப்பலன் நாள் இருபதுக்குள் பலிதமாகும் நிலமானதுக்கொள்க நன்மையாகும் (எ-று.) (26)

பூசத்தின் பலாபலன்

141. இனிதான பூசமது உதயமானல்
இருதயத்தில் நினைத்தபொருள் கறுத்தவெள்ளை
கனிவான சல்லியமுஞ் சிலுகுமுண்டு
களவாகப் போனபொருள் கைவசப்படாது
தனியான ஊண்பகைதான் மிகுந்தசல்லியந்
தன்மையுள்ள வரசுபகை யாகாதையா
துணிவான விருவர்பகை மோசம்மோசம்
தொட்டதொன்றும் வாழ்வதில்லை துயரம்தானே.

(இ-ள்.) பூசநட்சத்திரம் உதயமாகில் அதின்பலன் யாதெனில் மனதில் நினைத்தபொருளானது கருத்தவெள்ளை நிறமுள்ளதாகும், சல்லிய

மும் சிலுகுமுண்டாகும், களவாகப்போனப்பொருள் கைவசப்படமாட்டாது, ஊண்பகையாகவிருக்கில் அதின்பலன் மிகுந்தசல்லியமாகும் அரசுபகையாகவிருக்கில் ஆகாவாம் மேற்கூறிய இருவர்களின்பகையாகில் மோசமானது நேரும் எடுத்தகாரியம் கைவசப்படமாட்டாது வாழ்வில்லை துயரமானது பெருகும் (எ-று.) (27)

இதுவுமது

142. துயரமது ஊணரசு பகையில்லாவிட்டால்
சோரமாய் போனபொருள் பாதிகாணும்
பயிரதுவும் மணங்கூடும் அலைச்சலாகும்
பகையுறவு நெடுநாளா யிருக்காதையா
வயிரமுடன் பிரமதுஷர் வருவாரிப்போ
வந்ததினல் பொருட்சேதம் உறவுபகையாகுங்
கயிலதுதான் நாள் ஐந்திற் பலனைக்காட்டுங்
கலங்குமடா துயரத்தால் கலகமாமே.

(இ-ள்.) ஊணும் அரசும் பகையில்லாதிருக்கில் கைவிட்டுச் சோரமாக போனபொருள் பாதியானதுக்கிடைக்கும், மணமானது கூடும் அதினல் அலைச்சலுண்டாகும், பகையும் உறவும் நெடுநாளாகவிருக்காது பிரமனுஷன்வருகுவான் அவனல் பொருள் சேதமும் உறவினர் பகையுமாவர் இப்பலன் நாள் ஐந்தில் முடியும் கலக்கமுண்டாகும், துயரமானதுபெருகி அதினல் கலகம் நேரும் (எ-று.) (28)

ஆயிலியத்தின் பலாபலன்.

143. கலகமடா ஆயிலியங் கண்டபோதே
கருத்திலே நினைத்தபொருள் கரிசல்வெள்ளை
விலகுமடா போனவுயிர் திரும்புவதேயில்லை
மேதினியில் நோவுகொண்டார் எழுந்திருப்பதில்லை
இலகும் ஒரு சோபனங்கள் கூடுவதுபோல
இருக்குமடா ஒருபோதும் நடப்பதில்லை
சிலகுளதாம் ஊண்பகைதான் இருந்தால் மோசம்
சிந்தித்த படிநடப்ப தில்லைதானே.

(இ-ள்.) ஆயிலிய நட்சத்திரம் உதயமாகில் அதின்பலன் யாதெனில் மனதில்நினைத்தபொருள் வெள்ளைநிறமுள்ளதாகும் போனவுயிர் திரும்பாது நோய்கொண்டவர்கள் பிணியானது தீர்ந்து எழுந்திரார்கள் சோபனங்கள் கூடுவதுபோலிருக்கும் அது ஒருபோதும் நடக்கமாட்டாது ஊண் பகையாகவிருக்கில் பொல்லாது மோசமாகும் நினைத்தபடியாக ஒருகாரியமும் முடியாது (எ-று.) (29)

இதுவுமது.

144. இல்லையென்றோர் ஊணரசு பகையில்லாவிட்டால்
இருதயத்தில் நினைத்தபொருள் பலிக்குங்கொஞ்சம்
கொல்லையென்று பயிர்செய்தால் பலனுண்டாகும்
கோதையரை மணஞ்செய்தால் வாழ்வதில்லை
தொல்லையென்ற ஒருபொழுதுஞ் செய்யொண்ணாது
தொட்டதெல்லாம் கூடிவர மாட்டாதையா
எல்லையென்ற நாள் இருபத்தைந்துக்குள்ளே
இப்பலனைக் கண்டவர்தான் ஏங்குவாரே.

(இ-ள்.) ஊண் அரசு இவைகள் இரண்டும் பகையில்லாவிடில் மனதில் நினைத்தது பலிதமாகும், பயிர்செய்ய விருத்தியாகும், கோதையரென்னும் மாதினை மணஞ்செய்யினும் வாழ்வதில்லையாகும், தொல்லையானதுப் பெருகும் நினைத்தகாரியங்கள் கூடிவரமாட்டாது இப்பலன் இருபத்தைந்து நாளைக்குள்ளாக கண்டவர்கள் யேங்கித்தவிப்பார்கள். ()

மகத்தின் பலாபலன்

145. ஏங்காதே மகமதுதான் உதயமானால்
என்மகனே நினைத்தபொருள் குங்குமத்தின் வர்னந்
தாங்காதே போனபொருள் கைவசமேயாகும்
தப்பாமல் போனபேர் வருவாரிப்போ
பாங்கியைத்தான் கொள்வதற்குப் பலனுண்டாகும்
பாகமுடன் மணஞ்செய்ய நன்மையாகுந்
தூங்காதே ஊண்பகைதான் ஆகாதையா
சொல்ல ஒண்ணுதரசுபகை கூடாதுபாரே.

(இ-ள்.) மகநட்சத்திரம் உதையமாகில் அதின்பலன் யாதெனில் மனதில் நினைத்தபொருளானது குங்கத்தின் நிறமுள்ளதாகும், பொருளானது கைவசமாகும், வேலிதாண்டிப்போனவர்கள் வந்து சேருவார்கள், மனையாளைக்கொள்க பலனுண்டாகும், மணமானதுசெய்ய நன்மைதருகும், ஊண் பகையாகவிருக்கில் ஆகாவாம், அரசு பகையாகவிருக்கினும் பொல்லாதென்பர் (எ-று.) (31)

இதுவுமது

146. கூடாத ஊணரசு பகையில்லாவிட்டால்
கொண்டுசொல்ல உறவுபகை யாவதில்லை
தேடாது நினைத்தபொருள் கைவசமேயாகும்
தேசத்திற்போனவர் ஜெயமாகவாழ்வார்
நாடாது மணம் செய்ய நன்மையாகும்
நடந்துமொரு பிறருதவி அதிகமாகும்

வாடாது நாள்பத்தில் பலன்கை கூடும்
வன்மையுள்ள மாதருற வாகும் பாரே.

பூரத்தின் பலாபலன்.

(இ-ள்) ஊண் அரசு இவையிரண்டும் பகையில்லாதிருக்கில் உறவில் பகையானது நேராது நினைத்தபொருளானது கைவசமாகும், தேசாந்திரம் போனவர்கள் ஜெயம் பெற்றுவாழ்வார்கள், மணமானதுசெய்ய நன்மையாகும் பிறருடைய உதவியுமுண்டாகும் இப்பலன் நாள் பத்தினில் கைகூடிவரும் மாதர்கள் உறவாகும் (எ-று.) (32)

147. பாரடா பூரமது உதயமானால்
பண்புடனே நினைத்த்பொருள் பசிய பச்சை
நேரடா ஊர்பயனம் போன பேர்கள்
நேசமாய் வருவதில்லை மணமு மில்லை
தேரடா பொருளுடைமை சேர்வதில்லை
திடமான சொல்லில்லை யுறவு மில்லை
ஆரடா ஊண்பகையே யாகுங் காலம்
அப்பனே கூடுவது அரிதுதானே.

(இ-ள்.) பூர நட்சத்திரம் உதையமாகில் அதின்பலன் யாதெனில் மனதில் நினைத்தபொருள் பச்சை நிறமுள்ளதாகும், ஊர்ப்பயணம் போனவர்கள் திரும்பியும் வருவதில்லை பொருளும் உடமையும் வந்து சேர்வதில்லையாகும், திடமான சொல்களில்லை உறவானது கூடுவது மில்லை, ஊண்பகையாயிருக்கில் யாதொருகாரியமும் அரிதாகும் (எ-று.)

இதுவுமது.

148. அரிபாத வரசுபகை யாகுங் காலம்
அன்புடனே நினைத்தபொருள் கைகூடாது
தெரியான் ஊணரசு பகையில்லா விட்டால்
நினைவிலே நினைத்தபொருள் சிறிது கூடும்
வரிதான வுயிர்ச்சேதம் வருமே யப்பா
மணமில்லை யுறவில்லை மகிழ்ச்சி யில்லை
எரியான நாளிதற்கு முப்ப துக்குள்
எண்ணியதோர் பீடையது விலகும் பாரே.

(இ-ள்.)அரசுபகையாகவிருக்கில் மனத்தில் நினைத்தபொருள் கையானதுகூடாது, ஊண் அரசுபகையில்லாதிருக்கில் நினைத்தபொருள் சிலது கைகூடும் உயிர்க்குசேதமானதுவருகும்,மணமாகாது, உறவுகூடாதுமனதிற்கு மகிட்சியானது சற்றுமிராது இப்பலன் நாள் முப்பதுக்குள் வந்தப் பீடையானது விலகிப்போகும் (எ-று) (34)

உத்திரத்தின் பலாபலன்

149. விலகுமே வுத்திரந்தா னுதய மானால்
வினவுபொருள் கருஞ்சிவப்பு விரைவித் தாகும்
பலருமே போனபொரு ளசதியிற் காணும்
பழகினபேர் வருவார்கள் பகையுற வாகும்
இலகுமே சம்பந்தங் கூடும் பாரு
என்ன சொல்வேன் ஊண்பகைதா னிருக்கொணாது
அலகில்லா லரசுபகை யிருந்தா லையா
அப்பனே சஞ்சலத்தி லழுத்து வானே

(இ-ள்.) உத்திர நட்சத்திரம் உதையமாகில் அதின்பலன் யாதெனில் வினவிக் கேட்டபொருளானது கருஞ்சிகப்பு நிறமுள்ள விரையென்னும் வித்தாகும், கைவிட்டுக்கவர்ந்துபோன பொருள் அதிசயபடும்படியாக வந்து கிடைக்கும், பழகியபேர்கள் வந்துச்சேர்வார்கள் பகையானது போகியும் உறவானது ஆகும் அத்துடன் சம்பந்தங்கூடும், ஊண் பகையாக யிருக்கொண்ணாது அரசு பகையாகவிருக்கில் சஞ்சலத்தில் அழுந்தச் செய்யும் (எ-று-) (35)

இதுவுமது.

150. அழுந்துவானே வூணரசு பகையில்லா விட்டால்
அசதியால் போனபொருள் அடுத்தவரால் வருகும்
எழுந்துதா னூர்ப்பயணம் போன பேர்கள்
எண்ணியதோர் கருமமுடன் பொருட்சேதமாகும்
கொழுந்தா நீ நினைத்தபடி முடியாதையா
கோதையாற் சல்லியமாய்க் கோபமுடன் வருவார்
நுழைந்தாகு மூவைந்து நாளையிலே பலிதம்
நொந்துமனம் புண்ணாகி யிடைஞ்சல்வரும் பாரே.

(இ-ள்) அரசுபகை இவையில்லாதிருக்கில் அரிதியாகப்போனப் பொருளானது அடுத்தவர்களால் வந்துசேரும், ஊர்பயணம் போன பேர்கள் நினைத்தது முடியாமலும் பொருள் சேதமுமாகும் மனதில் கொண்ட எண்ணம் முடியாது, மாதர்களினால் சல்லியமாகவும் கோபம் கொண்டு வருவார்கள் இதுப்பதினைந்து நாளையில் பலிதமாகும் மனமானது நொந்து புண்ணாகியும் இடஞ்சலானது வருகும் (எ-று.) (36)

அத்தத்தின் பலாபலன்

151 வருமான காயங்க ளஸ்தமாகில்
மனதிலே நினைத்தபொருள் பலநிறமு மாகும்
உருவான பிறதேசம் போன பேர்கள்
உண்மையுடன் மணங்கூடி வருவார்பாரு

தருவான பொருட்சேதங் களவுபோகும்
தப்பாம லூண்பகைய தாகுமாகில்
கருவான போனபொருள் வருவதில்லை
சண்டாள ராசுபகை யாகாதுபாரே.

(இ-ள்.) அஸ்த நட்சத்திரம் உதையமாகில் அதின்பலன் யாதெனில் மனதில் நினைத்த பொருள் பலவிதமான நிறமுள்ளதாகும், பிரதேசம் போன பேர்கள் மணமானது கூடி வருவார்கள் பொருளானது சேதமாகும், மகவானது மாரணமாகும், ஊண் பகையாகில் போனபொருள் வந்து சேர்வதில்லை அரசுபகையாக விருக்கில் ஆகாவாம் (எ-று.) (37)

இதுவுமது

152. ஆகாத வூணரசு பகையில்லா விட்டால்
அப்பனே பொருள்கூடுந் திண்ணமாக
ஏகாத மனம்வாழ்வ தில்லை யப்பா
எடுத்ததொரு காரியமு நேர்வருவ தில்லை
போகாதே சஞ்சலமா யிருந்த பேர்கள்
புனிதமுட னெழுந்திருந்து வாழ்வ தில்லை
நோகாதே யேழஞ்சு நாளைக் குள்ளே
நுவலுமிந்தப் பலன்களெல்லா நேரும் பாரே.

(இ-ள்.) ஊண் அரசு பகையில்லாதிருக்கில் பொருளானது கைகூடும் வலிமையாகும், மனமானது வாழ்வதில்லை எடுத்த காரியம் முடியாது சஞ்சலமாகவிருந்த பேர்கள் அது தீர்ந்து வாழ்வதில்லை, முப்பத்தைந்து நாளைக்குள்ளாக மேற்கண்ட பலன்கள் யாவும் நேரும் (எ-று)

சித்திரையின் பலாபலன்

153. நேர்ந்துபார் சித்திரைதா னுதய மானால்
நினைத்தபொருள் சிவப்புவெள்ளை மஞ்ச ளாகும்
கூர்ந்துபார் நினைத்தபொருள் வருவ தில்லை
கெடுத்திடுமே சிலுகுசண்டை மணங்கூடாது
சார்ந்துபா ரூணரசு பகையே யானால்
தப்பாது பொருட்சேத முயுருஞ் சேதம்
கூர்ந்துபா ரிவருடைய பகையில்லா விட்டால்
கூடுவதுங் குறைவதுவுமில்லை தானே.

(இ-ள்.) சித்திரை நட்சத்திரம் உதயமாகில் அதின்பலன் யாதெனில் மனதில் நினைத்தபொருள் சிவப்பு வெள்ளை மஞ்சள் இவ்வித நிறமுள்ளதாகும் நினைத்த பொருளானது வருவதில்லை, கெடுதியுடன் சிலுகுச்சண்டையு நேர்ந்து அதினால் மணமானது கூடாது, ஊண் அரசு பகையாக

விருக்கில் பொருள் சேதமும் உயிர்ச்சேதமும் சம்பவிக்கும் அரசு பகையும் ஊண்பகையுமில்லாதிருக்கில் யாரும்மனம்போல் கூடும் குறைவிராது

இதுவுமது

154. இல்லையே பொருளுடைமை வருவதில்லை
எதிர்த்ததனால் செயமாகப் போற தில்லை
தொல்லையே யநுசரித்துச் சஞ்சலங்களாகிய
தொல்புவியில் சொல்குறைச்சல் பேருண்டாகி
சள்ளையே மனுவுதவி யில்லா மல்தான்
சஞ்சலத்தால் வெகுதூரம் வந்துசேரும்
கொள்ளையே நாலுபத்து நாளைக் குள்டுள
கூடிவரப் போறதில்லை குணத்தைப் பாரே.

(இ-ள்.) பொருளும் உடைமையும் வந்து சேர்வதில்லையாகும் எதிர்த்துப்பேசுங் காரியம் செயமாகாது தொல்லையானதும் பெருகி அதினால் சஞ்சலமானது உண்டாகிபூமியின்மீது சொல்குறைவான பெய ருண்டாகும் மனிசருடைய உதவியானது இல்லாமல் சஞ்சலத்தினால் வெகு துயரமானது வந்தணுகும் நாற்பது நாளைக்குள்ளாக கூடிவராது கண்டு கொள்ளவும், (எ-று.) (40)

சுவாதியின் பலாபலன்.

155. குணத்தைப்பார் சுவாதிதா னுதயமானால்
கூடுதன்னி னினைத்தபொருள் தங்கந் தங்கம்
மணத்தைப்பா ரூர்வழியிற் போன பேர்கள்
மனமகிழ்ச்சி மெத்தவுண்டு மங்களங்கை கூடும்
இனத்தைப்பா ராண்குழந்தை பிறக்கு மென்று
எண்ணியதோர் கருமமெல்லாம் கைவசமே யாகும்
சணத்தைப்பா ரூணரசு பகையா காது
தானினைத்த படியங்கே முடியாது பாரே.

(இ-ள்.) சுவாதி நட்சத்திரம் உதையமாகில் அதின்பலன் யாதெனில் மனதில் நினைத்த பொருள் தங்கமாகும், ஊர்பயணமாகப்போனபேர்கள் மனமகிழ்ச்சியோடு மங்களங்கள் கூடிவாழ்குவர், ஆண் குழந்தையானது பிறக்கும், நினைத்தவைகள் யாவும் கைகூடும், ஊண் அரசு பகையாக விருக்கில் ஆகாவாம் தான் நினைத்தகாரியம் முடியாதாகும் (எ-று.) (41)

இதுவுமது

156. முடியாதோ வூணரசு பகையில்லா விட்டால்
மொய்குழலாள் பூமடந்தை கிருபை யாலே
படியாதே நினைத்ததெல்லாங் கைவசமே யாகும்
பசுமையுள்ள பொருள்கூடு முறவு மாகும்

கடியான சோபனங்கள் கூடும் கவலையில்லை
கடல்கவிழ்ந்த பொருள்கூடுங் கவலை யில்லை
வடிவான வீரைந்து நாளைக்குள்ளே
மக்களே கூடிவரு மகிழ்ந்து பாரே.

(இ-ள்.) ஊண் அரசு பகையில்லாதிருக்கில் பூமடந்தையரின் கிருபையால் நினைத்தவைகள் யாவுங் கைவசமாகும் பசுமை நிறமாகவுள்ளப் பொருளானது கூடும், உறவாகும் சோபனங்கள் நடக்கும், பொருளானது கூடும், கவலையான துயிராது பத்துநாளைக்குள்ளே இப்பலன் கூடி வருகும் மகிழ்ச்சியாகும் (எ-று.) (42)

விசாகத்தின் பலாபலன்.

157. மகிழ்ந்துபார் விசாகமங்கே யுதய மானால்
மனதிலே நினைத்தபொருள் கசப்புள்ள வர்க்கம்
நிகழ்ந்துபார் போனபொருள் தாமசமே யாகும்
நேரான சோபனங்கள் கூடுவதுமில்லை
நகர்ந்துபா ரூண்பகையா யில்லா விட்டால்
நன்மைதீமை யிரண்டுண்டு நயந்து பாரு
தகர்ந்துபா ரரசுபகை யாக நின்றால்
தப்பாது தீமையென்று தான் சொல்வாயே.

(இ-ள்.) விசாக நட்சத்திரம் உதையமாகில் அதின் பலன யாதெனில் மனதில் நினைத்த பொருளானது கசப்புள்ளவர்க்கமாகும், கைவிட்டுப் போன பொருள் தாமிசமாகக்கூடும், சோபனங்கள் கூடுவதுயில்லையாகும், ஊண்பகையாயில்லாதிருக்கில் நன்மையுந் தீமையும் பாரும் அரசு பகையாக விருக்கில் தப்பாமல் தீமையானது நேரும் (எ-று.) (43)

இதுவுமது.

158. சொல்லாத ஊணரசு பகையில்லா விட்டால்
சொன்னபடி தப்பாது நோயில் மாய்வன்
நில்லாமல் வெகுதுயரம் பட்டுதேறு
நேர்மையுள்ள காலன்வரும் என்றுசொல்லி
பொல்லாத நேரமென்று சொல்லுவார்கள்
புதுமையுள்ள கருத்தறிந்த காலம்பாரார்
எல்லாரும் பகையாகும் நாலைந்துக்குள்
இதுபலனைக் கண்டறிந்து இயம்புவாயே.

(இ-ள்.) ஊண் அரசு பகையில்லாதிருக்கில் தப்பாமல்படிக்கு பிணியினால் மரணமடைகுவன் வெகுத்துயரமானது பெருகி பட்டுத்தேறி மரணமடைகுவன் இவை பொல்லாத நேரமாகுமென்பர் காலத்தின் நிலைமையைப் பாரார்கள் யாவரும் பகையாகுவார்கள், முப்பது நாளைக்குள்ளாகவும் இப்பலனை கண்டறிந்து உரைப்பாய் (எ-று.) (44)

அநுடத்தின் பலாபலன்.

159. இயம்புவாய் அநுமடங்கே உதயமானல்
எண்ணியதோர் பொருள்வெள்ளி என்றுசொல்லு
நயம்பியே ஊணதுவும் பகையேயானல்
நலமில்லை யருக்கன்வெள்ளி என்றுசொல்லு
பயம்பியே ஊணரசு பகையேயானல்
படிகமென்ற பீங்கானும் பதிவாய்ச்சொல்லு
துயம்பியே ஊணரசு பகையில்லாவிட்டால்
துய்யவெள்ளி என்றுசொல்லி துணிந்துபாரே

(இ-ள்.) அனுஷ நட்சத்திர உதையமாகில் அதின்பலன் யாதெனில் மனதில் நினைத்த பொருள் வெள்ளியாகும், ஊண் பகையாகவிருக்கில் வெள்ளியாகும், ஊண் அரசு பகையாக விருக்கில் படிகமென்னும் பீங்கானுகும், ஊண் அரசு பகையில்லாதிருக்கில் வெள்ளியாமெனப்பேசவும்.

இதுவுமது.

160. துணிந்துபார் பொருளுடைமை கூடிவரும்போது
துணையான போசனங்கள் நடக்கும்பாரு
அணிந்துபார் பிரதேயம் போனபேர்கள்
ஆள்மோசம் வாராமல் வருவாயிப்போ
தணிந்துபார் சடலத்தில் நோயோ வில்லை
தான்நினைந்த படிமுடியும் தப்பாதப்பா
நணிம்பியே மூணுபத்து நாளுக்குள்ளே
நலமாகக் கூடிவரும் நயந்துபாரே.

(இ-ள்.) பொருளும் உடமையும் கூடிவருகும் துணையானது உண்டாகும், போசன சவுக்கியமுண்டாகும், பிரதேசம் போனவர்கள் நன்மையாக வந்து சேர்வார்கள், தேகத்தில் நோயானது சற்றுமில்லையாகும் தான் நினைத்தபடியாக காரியங்கள் முடியும் முப்பது நாளைக்குள் இப்பலன் கூடிவருகும் பார்ப்பாயாகவும் (எ-று) (46)

கேட்டையின் பலாபலன்.

161. அறிவதுதான் கேட்டையங்கே உதயமானல்
அப்பனே நினைத்தது பித்தளையும் நாறல்
எறிவதுதான் ஊண்பகையே ஆகுமாதல்
என்சொல்வே னப்பிரகார மென்றுசொல்லு
சரியதுதான் அரசுபகையாக நின்றால்
தப்மாது மஞ்சள் நிரமானவோடு
முறிவதுதான் ஊணரசு பகையில்லாவிட்டால்
மொழிந்தபொருள் சொன்னதுபோற் சொல்லுவாயே.

(இ-ள்.) கேட்டை நட்சத்திரமுதையமாகில் அதின் பலன் யாதெனில் மனதில் நினைத்தபொருள் பித்தளையாகும், ஊண் பகையாகவிருக்கில் அப்பிரகாரமாகும் அரசு பகையாகவிருக்கில் மஞ்சள் நிறமான ஓடாகும், ஊண் அரசு பகையில்லாதிருக்கில் சொன்னபொருள் சொன்னது போல் சொல்லி முடிப்பாய் (எ-று.) (47)

இதுவுமது.

162. சொல்லுவாய் நினைத்தபொருள் கூடுவது மில்லை
சுகமான வனமில்லை யுறவு மில்லை
மல்லதுவாய் போனபொருள் வாரா தப்பா
மறுதேசம் போனவர்கள் வந்துறவு மில்லை
கொல்லுகிறது திண்ணமென்று நின்றநிலை பார்த்து
குறிகுணங்க ளாராய்ந்து சொல்வாய் மைந்தா
அல்லதுகேள் நாளெட்டு நாளைக்குள்ளே
அப்பனே யிதுகளினு லறிந்து பாரே.

(இ-ள்.) நினைத்த பொருள் கைகூடாது சுகமானது சற்றுமில்லை உறவானது கூடாது, கைவிட்டு அகன்றுப்போன பொருள் மறுபடியும் வந்து சேராது, மறுதேசம் போனபேர்கள் வந்து உறவாடார்கள் பட்சியினுடைய வலிவும் ஆரூடங்கேட்கவந்தோன் நின்ற நிலையும் பார்த்து குறியும் குணமும் பார்த்து ஆராய்ந்து சொல்கவேண்டும் அல்லது நாள் எட்டுக்குள்ளாக இப்பலனை யறிந்து பார்க்கவும் (எ-று.) (48)

மூலத்தின் பலாபலன்.

163. அறிந்துபார் மூலமங்கே யுதயமானல்
அப்பனே நினைத்தபொருள் நிலங்கரைகளாகும்
நெறிந்துபா ரூண்பகையே யாகு மாகில்
நேரான மாடுமா டென்று சொல்லி
தெரிந்துபா ராசுபகை யாகநின்றால்
திடமாகச் சொல்லுவது சொற்ப லாபம்
எறிந்துபா ரூணரசு பகையில்லா விட்டால்
என்சொல்வேன் பொருளுடமையென்று சொல்லே.

(இ-ள்.) மூல நட்சத்திரம் உதையமாகில் அதின் பலன் யாதெனில் நிலம் கரையுள்ளதாகும், ஊண் பகையாக விருக்கில் மாடாகும், அரசு பகையாகில் சொல்லவேண்டியது சொற்பலாபமாகும், ஊண் அரசு பகையில்லாதிருக்கில் பொருளும் உடமையுமாகு மெனச்சொல்கவும் (எ-று.)

இதுவுமது.

164. என்றுசொல்லு நினைத்தபொருள் கைவசமே சேரும்
இனிதான மணங்கூடும் பிரபுவுற வாகும்

அன்றுசொல்லு மாள்வரத்தால் பொருள்கை சிக்கும்
அன்பனே சொல்கேட்டு சந்தோஷ மாகும்
நன்றுசொல்லு தன்கிளையி ணுண்குழந்தை யாகும்
நலம்பெறலா மதனுலே மகிழ்ச்சியுண்டு
கண்டுசொல்லு மையைந்து நாளைக்குள்ளே
கனிவான சொல்கேட்கக் கருதலாமே.

(இ-ள்.) நினைத்த பொருள் கைவசமாகச்சேரும், மணமானது கூடும் பிரபுக்களின் உறவு கூடும், ஆள்வரத்தினுல் பொருளானது கைகூடும் சொல்லானது கேட்டுச் சந்தோஷமடைகுவாய், தனக்குப் பிறக்குங் குழந்தையானது ஆணுகும் நலமானது பெருகும் அதினுல் மகிழ்ச்சியானது உண்டாகும் இருபது நாளைக்குள் கனிவாகிய சொல் கேட்பாய் ()

பூராடத்தின் பலாபலன்.

165. கருதலாம் பூராடமுதய மானுல்
கருத்திலே நினைத்தபொருள் கல்மண்ணுகும்
நிருகமா முன்பகையே யாகு மாகில்
நேரான வெருவாகஞ் சாம்பலாகும்
இருநிலமா மரசுபகை யாக நின்றுல்
எழும்பியதோர் பறவையுட விறக தாகும்
அருமையா யூணரசு பகையில்லா விட்டால்
அப்பனே கல்விலையு மறியச் சொல்லே.

(இ-ள்.) பூராட நட்சத்திரம் உதையமாகில் அதின்பலன் யாதெனில் மனதில் நினைத்த பொருளானது கல்லும் மண்ணுமாகும் ஊண்பகையாக விருக்கில் எருவும் சாம்பலுமாகும், அரசு பகையாக விருக்கில் பறவையினுடைய இறகாகும் ஊணரசு பகையில்லாதிருக்கில் கல்லும் இலையுமாகு மென்பர், (எ-று.) (51)

இதுவுமது.

166. சொல்லுது நினைத்தபொருள் கூடுவதொன்றில்லை
சோபனங்கள் செய்தாலும் வாழ்வதில்லை
மல்லுவது போனவர்கள் வருவ தில்லை
மனதிலே நினைத்தபடி நடப்பதில்லை
கொல்லுவது விஷதிஷ்டியாலே மக்காள்
கூடிவரப் போறதில்லை நினைத்த தெல்லாம்
அல்லுவது மாறெட்டு நாளைக் குள்ளே
அப்பனே யிப்பலனை யறிவாய் தானே.

(இ-ள்.) சொல்லும்படியாகிய பொருள் யாதொன்றும் கூடிவரமாட்டாது சோபனஞ் செய்யினும் வாள்விராது ஊர்ப்பயணம்போனவர்கள் திரும்பிவருவதில்லைமனதில்நினைத்தபொருள் கைகூடாது மரணம்விஷத்

தினால் சம்பவிக்கும் யாதுங்கூடிவரமாட்டாது நினைத்தவைபோலும் இப்பலன் ஆறு எட்டு நாளைக்குள்ளாக இப்பலனை யறிகுவாய் (எ-று.) (52)

உத்திராடத்தின் பலாபலன்.

167. அறிவாயே உத்திராட முதயமானால்
அன்பாக நெஞ்சிலொன்று நினைத்த தில்லை
சரியான வூண்பகைதா னிருந்தா லென்ன
தரணிதனி லரசுபகை யானாலென்ன
கிருதாக நெஞ்சதனைச் சோதியெண்ணி
கேட்டதல்லாற் கேட்டதிலோர்பொருளுங்காணேன்
இருநிலத்தி லிப்பலனை யெண்ணிப் பாரு
எளிதாகத் தோணுமிதை யிசைத்திடாயே.

(இ-ள்.) உத்திராடநட்சத்திரம் உதையமாகில் அதின்பலன் யாதெனில் மனதில் ஒன்றும் நினைத்ததில்லையாகும், ஊண் பகையாகவிருக்கிலென்ன அரசுபகையாகினுமென்ன கிருதாக மனதைச்சோதிக்கும்படியாக எண்ணிக்கேட்டதல்லாமல் நீகேட்டதில் ஒருபொருளையுங் காணோம் இதை யோசித்துப்பார்க்கத்தோணு மறிகுவாய் (எ-று.) (53)

இதுவுமது.

168. இசைத்த காரியமொன்று மில்லையில்லை
இனிதாகச் சோதிப்பா நாமென் றெண்ணி
விசைத்துதான் வினவிநின்ற தல்லால் மைந்தா
வேறேது மில்லையடா வெளியிட்டோம்பார்
வசைத்துதா னிப்படியாகச் சோதித்து
மறுபடியுங் கேட்போமென்று வந்தா யென்றும்
உசத்தியில்லை யதற்கொருநா ளாகு மென்றும்
உரைத்தவனை யோட்டிவிடு உறுதி தானே.

(இ-ள்.) இசைந்த காரியங்கள் யாதொன்றுமில்லையாகும் சோதிப்பாகவும் நாமென்றுமெண்ணி வினவிநின்றது யாவும் வேறெதுவுமில்லை வெளியாகச்சொன்னோம் பார்ப்பாயாகவும் இப்படியாகச்சோதித்து மறுபடியுங் கேட்போமென்றுவந்தாய் ஆகினும் அவனை இன்னொருநாளாகட்டும் என்று சொல்லி அனுப்பிவிடவேண்டும் (எ-று.) (54)

திருவோணத்தின் பலாபலன்.

169. உறுதியென்ற திருவோண முதயமானால்
உன்மனதில் நினைத்தபொருள் நெல்லும் புல்லும்
கருதுகின்ற வூண்பகையே யாகு மாகில்
கலந்துசொல்லு கண்டுமனந் தேறிநீதான்

பருதியென்ற வரசுபகை யாக நின்றால்
பதராம லதிலணிந்த வகையைக் காட்டு
கருதியென வூணரசு பகையில்லாவிட்டால்
சொல்லுவா யுயர்ந்ததனைச் சொல்லுவாயே.

(இ-ள்.) திருவோணநட்சத்திரம் உதையமாகில் அதின்பலன் யாதெனில் ஆரூடங்கேட்போன் மனதில் நினைத்தபொருளானது நெல்லுபுல்லுமாகும் ஊண்பகையாகவிருக்கில் கலந்துசொல்கவேண்டும், மனமானது தேரினீயும் அரசுபகையாகவிருக்கில் அதற்குறியவகையைக்காட்டுவாய் ஊண் அரசுபகையில்லாதிருக்கில் அப்பலனை உயர்த்தியாகச் சொல்குவாய் (எ-று) (55)

இதுவுமது.

170. சொல்லுவாய் நினைத்தபொருள் மங்களங்கள்கூடும்
சோரனால் பயமுண்டு பொருளுடைமைபோகும்
அல்லுவாய் பொன்பொருள் கைவசமேயாகும்
அப்பனே தொலைதூரம் போனால் மீள்வார்
வெல்லுவாய் பகையுறவாய் வந்துகூடும்
மேலான ஜாதியிலே உறவுசேரும்
நல்லுவாய் எழுமூன்று நாளைக்குள்ளே
நடந்துவரு மிப்பலனை நாடிப்பாரே.

(இ-ள்.) மனதில் நினைத்தபொருள் மங்களமாகக்கூடும், சோரர்களால் பயம் நேரும், பொருளும் உடமையும் போகும் அன்றியும் பொன்பொருள் கைவசமாகும் தூரதேசம்போனவர்கள் மீண்டுவருவார்கள்பகைவர்கள் உறவாவார்கள், மேன்மையாகிய சாதியில் உறவானதுசேரும் இருபத்தொரு நாளைக்குள்ளாக வருகும்படியான இப்பலனைப்பாரும். ()

அவிட்டத்தின் பலாபலன்.

171. நாடிப்பார் அவிட்டமங்கே யுதயமானால்
நலமாக நினைத்ததெல்லாம் விளங்குஞ்சோதி
தேடிப்பார் ஊண்பகையே யாகுமாகில்
சென்றதொரு நாணயத்தில் தணிவுசொல்லு
ஓடிப்பார் அரசு பகையாக நின்றால்
உத்தமனே அதில்தணிந்த நாணயமேயாகும்
துடிப்பார் ஊண் அரசு பகை யில்லாவிட்டால்
துகையுயர்ந்த நாணயமாய்ச் சொல்லு சொல்லே.

(இ-ள்.) அவிட்டநட்சத்திரம் உதயமாகில் அதின்பலன் யாதெனில் மனதில் நினைத்தபொருள் யாவும் பலிதமாகும், ஊண் பகையாகவிருக்கில் நாணயத்தில் தனிவானது சொல்கவேண்டும் அரசு பகையாகவிருக்

கில் நாணயம் மென்மேலாகப்பெருகும், ஊண் அரசு பகையில்லாதிருக்கில் துகையானது உயர்ந்த நாணயமாகுமெனச்சொல்கவும் (எ-று) (57)

இதுவுமது.

172. சொல்லுவாய் பொருளுடமை கைவசமே சேரும்
சோபனங்கள் உரன்முறையாக தொந்த மாகும்
வெல்லுவாய் பிரதேசம் போனபேர்கள்
வேணபடி செல்வர்களாய் வந்துசேர்வார்
மல்லுவாய் பிறமனிதர் உதவியாலே
வந்திடுமே பால்பழ வர்க்கங்கள் மைந்தா
வெல்லுவாய் ஆறைந்து நாளைக்குள்ளே
வேணபடி பொருள்வரத்து விளையும்பாரே.

(இ-ள்.) பொருளும் உடமையும் கைவசமாக வந்துசேரும், சோபனங்கள்கூடும், உறவின்முறையார்கள் தொந்தமாக வந்துகூடுவர், பிரதேசம்போனவர்கள் செல்வமுடையவராய் வந்துசேர்வார்கள், பிரமனிதர்கள் உதவியினால் பாலும் பழவர்க்கங்களும் வருகும் இது நாலைந்து நாளைக்குள்ளாக வேண்டியபடி பொருளானது வருத்தாகுமென்பர். ()

சதயத்தின் பலாபலன்.

173. பொருள்வருமே சதயமங்கே யுதயமானல்
புத்திதனி னினைத்தபொருள் பயிருபச்சை
இருள்வருமே யூண்பகையே யாகுமாகில்
எண்ணியதோர் வர்க்கத்தில் தணிவுமாகும்
அருளலெனு மரசுபகை யாக நின்றல்
அதிற்குறைந்த வர்க்கவகை யறிந்து கொள்ளு
சருள்பொருவூ ணரசுபகை யில்லாவிட்டால்
தணிந்தவிலை யில்லையடா சார்ந்து பாரே.

(இ-ள்.) சதையநட்சத்திரம் உதையமாகில் அதின்பலன் யாதெனில் மனதில் நினைத்தபொருள் பயிர் பச்சையாகும் ஊண் பகையாகவிருக்கில் மனதில் எண்ணியவர்க்கம் தணிவாகும், அரசுபகையாகவிருக்கில் மேற்கூறியவர்க்கவகையில் குரைந்ததாகும், ஊண் அரசு பகையில்லாவிடில் தணிந்தவிலையும் இலாபமுமாகும் (எ-று.) (59)

இதுவுமது.

174. சார்ந்துபார் பொருள்வரத்தே யதிகமில்லை
சஞ்சலங்க ளென்றுமில்லை தணியுமில்லை
நேர்ந்துபார் போனவர்கள் துயரத்தாலே
நிருவகிக்க மாட்டாமற் பிணியா னுந்து

கூர்ந்துபார் கைப்பொருளுஞ் சேரமாக்க
  கூடியவுறவா யிருந்தோர் பகைய தாக்கி
தேர்ந்துபா ரேழைஞ்சு நாளைக் குள்ளே
  திரும்பிடுவா ரிப்பலனைத் தெளிந்து பாரே.

(இ-ள்.) பொருள்வரத்தானது அதிகமிராது சஞ்சலங்களுமில்லை தணிவானதுமில்லை வெளியூர்ப்போனவர்கள் துயரத்தினால் நிர்வாகிக்க மாட்டாமல் பிணியினால் நொந்தும் கைப்பொருளானது சேதமாகவும் கூடி உறவாகயிருந்தோர்கள் பகையாகியும் எழஞ்சு நாளைக்குள்ளாக திரும்பும் இப்பலனைத் தெரிந்துக்கொள்ளும் (எ-று.) (60)

பூரட்டாதியின் பலாபலன்

175. தெளிவான பூரட்டாதி யுதயமானால்
  சிந்தைதனி னினைத்தபொருள் ளூரும்பூச்சி
வழியான வூண்பகையே யாகு மாகில்
  மன்னவனே சிறுபூச்சியென்று சொல்லு
கொழுவான வரசுபகை யாக நின்றால்
  கொடுமையென்ற பூச்சென்றே கூறலாகும்
தழுவாதி யூணரசு பகையில்லாவிட்டால்
  தன்மையுள்ள பூச்சாகச் சொல்லுவாயே.

(இ-ள்.) பூரட்டாதி நட்சத்திரத்தில் உதயமானால் மனதில் நினைத்த பொருளானது நகரும் பூச்சியாகும், ஊண்பகையாகவிருந்தால் சிறுபூச்சியாகும், அரசு பகையாயிருந்தால் கொடியபூச்சியாகும், ஊணும் அரசும் பகையில்லாவிட்டால் சாந்தமான பூச்சென்று கொல்லுவார்கள் (எ-று.)

இதுவுமது.

176. சொல்லுவாய் செலவதிகம் வரவு கொஞ்சம்
  தொடுத்ததொரு வியாச்சியமுந் தோல்வியாகும்
வல்லுவா யூர்வழிதான் போன பேர்கள்
  வழக்கிலே தோல்வியா யிடஞ்ச லுண்டாம்
வெல்லவே பொருளுடைமை களவு போகும்
  வேந்தனால் தண்டனைகள் வருமே பாரு
அல்லவே மூணுபத்து நாளைக் குள்ளே
  அப்பனே யிப்பலனுமறிந்து கொள்ளே.

(இ-ள்.) செலவானது அதிகமாகியும் வரவுகொஞ்சமாகும், தொடுத்தவியாச்சியத்தில் தோல்வியடையச்செய்யும், ஊர்பயணம்போனபேர்கள் வழக்கினால் தோல்வியடைந்து அதினால் இடைஞ்சலானது உண்டாகும், பொருளும் உடமையும் களவானதுபோகும், அரசர்களால் தண்டனையானதுவரும் முப்பதுநாளைக்குள்ளே இப்பலன் நடக்குமென அரிகுவாய்.

உத்திரட்டாதியின் பலாபலன்.

177. கொள்ளுவதுத் திரட்டாதி யுதயமானல்
கூடுதனி னினைத்தபொருள் குளிர்ந்த பச்சை
எள்ளுவது மரசுபகை யாகுமூ ணாகில்
எண்ணியதோ ரழுக்குள்ளே பச்சை யாகும்
துள்ளுவது வரசு பகை யாக நின்றால்
துடியான நளிப்புள்ள பச்சை யாகும்
தள்ளுவது மூணரசு பகையில்லா விட்டால்
சாற்றியதோர் குளிர்ந்த பச்சை யாகுங் காணே.

(இ-ள்.) உத்திரட்டாதி நட்சத்திரம் உதயமாகில் அதின்பலன் யாதெனில் மனதில் நினைத்தபொருள் குளிர்ந்தபகையாகும், அரசுபகையும் ஊண் பகையுமாகில் மனதில் எண்ணியது அழுக்குள்ள பச்சையாகும், அரசுபகையாகவிருக்கில் துடியாகும்படியான நளிப்புள்ள பச்சையாகும் ஊண் அரசுபகையாதிருக்கில் குளிர்ந்த பசசையாகும் (எ-று.) ()

இதுவுமது.

178. காணுமே சிறுகுசண்டை களவு போகும்
கள்ளரால் பயமுண்டு கனிந்தவுற வில்லை
வேணுமொரு சம்பந்தம் பகையதாகும்
மேலான பிரபுவினல் சல்லியங்க ளுண்டு
ஆணுமே போனவுயிர் திரும்பாதையா
அப்பனே யதனலே பொருளுடைமை தோல்வி
தோணுமே யெண்ணஞ்சு நாளைக் குள்ளே
தொடுத்திடுங்கா லப்பலனைச் சொல்லுவாயே.

(இ-ள்.) சிறுகும்சண்டையும்நேரும், களவானதுபோகும், கள்ளர்களால் பயமானது விளைவிக்கும் நன்மையாகிய உறவுகூடுவதுமில்லை சம்பந்தத்தில் பகையானதுநேரும் மேன்மையாகிய பெரியோர்களால் சல்லியமுண்டாகும் போன உயிரானது திரும்பாது அதனல் பொருளும் உடமையும் தோல்வியாகும் இவை நாற்பது நாளைக்குள்ளாக தொடுத்திடும் இப்பலனைச் சொல்குவாய் (எ-று.) (64)

இரேவதியின் பலாபலன்.

179. சொல்லுவா யிரேவதிதா னுதய மானல்
தொடுத்தபொருள் முத்துவகை யென்று சொல்லு
வெல்லுவா யூண்பகையே வாகுமாகில்
விலைதணிந்த ரத்நவகை யாக வேண்டும்
மல்லுவா யரசுபகை யாக நின்றால்
வசமில்லை சொட்டையென்று வருத்துச் சொல்லு

சொல்லுவா யூணரசு பகையாக நின்றால்
தொகையுயர்ந்து வர்க்கமென்று தொகுத்திட்டாயே

(இ-ள்.) இரேவதிநட்சத்திர உதையமாகில் அதின்பலன் யாதெனில் மனதில் நினைத்தபொருள் முத்துகளின்வகையாகும், ஊண்பகையாகவிருக்கில் விலைதணிந்த ரத்தினவகையாகும், அரசு பகையாகவிருக்கில் வசப்படாத சொட்டையுள்ளதாகும், ஊண் அரசு பகையில்லாதிருக்கில் தொகையுயர்ந்தவர்க்கமாகுமென்று சொல்குவாய் (எ-று.) (65)

இதுவுமது.

180. தொகுத்திடுவாய் பொருள்வரத்தோமெத்த வுண்டு
சோபனங்கள் கூடுமப்பா சொல்லப் போகா
வகுத்திடுவாய் போனவர்கள் மணமாய் வந்து
வாழ்ந்திருப்பா ரினத்துடனே மகிழ்ச்சி யாக
அகத்திடுவா யிரண்டு பிள்ளை மிகுந்த செல்வம்
அவன் கிளையும் பெருகி வளர்ந்தோங்கும் பாரு
நிகழ்ந்திடுவாய் நினைத்ததெல்லாம் கைவசமே சேரும்
நேரான வறுமூன்று நாள்தான் பாரே.

(இ-ள்.) மேற்கூறியப்படி பொருள்வரத்தானது மெத்தவுண்டாகும், சோபனமானதுகூடும் சொல்லக்கூடாதாகும், வெளியூர்போனவர்கள் மணமாகவும் வந்துவாழ்ந்திருப்பார்கள், இனத்தினுடன் கூடிவாழ்ந்திருப்பார்கள் இரண்டு பிள்ளை அதிகசெலவமாகவிருந்து அவனுடைய கிளைகளானது தழைத்து ஓங்கும் நினைத்தவைகள் கைவசமாகும் இது அறுமூன்றுநாளில் பலிதமாகு மென்பர் (எ-று.) (66)

சிந்தனைக் கூறுதலின் புத்தி.

181. பாரடா நின்றநிலை பரிந்து பாரு
பதிவாக முகநோக்குந் திசையும் பாரு
நேரடா முன்சொன்ன வெழுத்தோடெல்லாம்
நினைவுதடு மாறாமல் நிறுத்துக் கொண்டு
சேரடா நட்சத்திரஞ் சொல்லக் கண்டு
திகையாமற் சொன்னபடி தெரிந் துணர்ந்து
மாரடா மௌனமென்ற வெழுத்தை யோது
மகத்தான சோதிடத்துட் பிறப்புஞ் சொல்லே.

(இ-ள்.) ஆரூடங்கேட்கவந்து நின்றோன் நிலையைப்பார்த்தும் முகமானது நோக்கும் திசைபார்த்தும் நேராகமுன்சொன்ன எழுத்துடன் யாவும் நினைவானது தடுமாறாமல் நிலையாக நிருத்திக்கொண்டு நட்சத்திரங்களை சொல்கக்கண்டும் அதனைத் திகையாமற்படிக்கு சொன்னவாறுக தெரிந்து உணர்ந்தும் மௌனமென்ற எழுத்தை ஓதி மகத்தாகிய சோசியத்தினிற் விளங்கும் பிரப்பைச்சொல்குவாய் (எ-று.) (67)

உ

கடவுள் துணை.

ஜாதகப்படலம்.

ஊண்முதல் விநாடியின் பலன்.

182. சொல்லுகிறே னூணதிலே முதல் விநாடி
துலங்குகின்ற குழந்தையது பிறந்த தானால்
அல்லலென்ற தொன்றுமில்லை சுகமாய் வாழும்
அப்பனே வயதிவனுக் கறுபத் தைந்தாம்
கல்லென்ற பிணியில்லை துன்ப மில்லை
சுவடில்லை வஞ்சகமெக் காலு மில்லை
நல்லபுக ழுடையவனு யாயுள் மட்டும்
நானிலத்தில் வாழ்ந்திருப்பா னன்மை யாமே.

(இ-ள்.) ஊண்பட்சியில் முதல்விநாடியிலும் குழந்தையானது பிறக்கில் அவன்தனக்கு அல்லலானது இல்லை சுகமாகவாழ்குவன் இவன் தனக்கு வயது [நாற்பத்தைந்து] ஆகும் பிணியானதுமில்லை துன்பமானது அணுகாது கபடானதும் வஞ்சகமும் எக்காலத்தினுமில்லையென நன்மையாகிய புகழுடையவனுகி ஆயுள்மட்டும் நானிலத்தின்மீது வாழ்ந்துகொண்டிருப்பான் (எ-று.) (1)

ஊண் உ-ம் விநாடியின் பலன்.

183. நன்மையென்ற விரண்டாம் விநாடி தன்னில்
நன்றுமெத்த உற்பனத்தில் நலமே யாகும்
வன்மையென்ற பூமியுங்கை வசமாய்ச் சேரும்
வாழ்ந்திருப்பா ரறுப்துவாம் வயது மட்டும்
சென்மையென்ற வசிகரமுந் திரமு மெத்த
தேகமுள்ளமட்டும் ஒருபிணியே யில்லை
தன்மையென்ற தாய்தந்தை பிறப்புச்சேதம்
சற்றுமில்லை சுகமாக வாழ்வார் பாரே.

(இ-ள்.) ஊண் இரண்டாம் விநாடியில் சாதகமானவனுக்கு நன்மையானது பெருகும், பூமியானது தன்கைவசமாகவந்துச்சேரும், இவன் தனக்கு வயது அறுபதாகும், ஆயுள்மட்டும் சுகமாகவாழ்ந்திருப்பான், வசிகரமும் திரமையும் மெத்தவுண்டாகும், தேகமானது உள்ளவரைக்கும் யாதொரு பிணியும் அணுகாது தாய்தந்தை பிரப்பு இவர்கள் சேதமாகாமற்படிக்கு சுகமாக வாழ்குவன் (எ-று.) (2)

ஊண் ௩-ம் விநாடியின் பலன்.

184. வாழுமே மூன்றும் விநாடிதன்னில்
மக்களே மதலையது உதித்ததானல்
கேளுமே வயதுதான் அன்பதானல்
கெர்ப்பமுதல் வயதுபதி னைந்துமட்டும்
கோளுமே பிணிகளுண்டாம் சுகமோகொஞ்சம்
குவலையத்தின் அதிகசுகம் இல்லைபாரு
தாளுமே கூடிவரமாட்டாதப்பா
சஞ்சலமு சுகமதுவும் சரிதான்பாரே.

(இ-ள்.) ஊண் மூன்றும் நாடியில் சாதகமாகில் அவன் தனக்கு வயது ஐம்பதாகும் அதில் கெர்ப்பமுதலாக பதினைந்து வயதுமட்டும் பிணியானது பாதிக்கும், சுகமானது அற்பமாகும் பூமியின்மீது அதிகச் சுகமானதுமில்லையாம் யாதுகாரியமும் கூடிவரமாட்டாது சஞ்சலமும் சுகமும் சரிசமானமாகும் (எ-று.) (3)

ஊண் ௪-ம் விநாடியின் பலன்.

185. சரியான விநாடியங்கே நாலதாகித்
தான் பிறந்தால் வயதுதான் நாற்பத்தொன்று
குறியான அடலமது உள்ளமட்டும்
கொண்டிடுமோர் மணமில்லை வாழ்வுகொஞ்சம்
விரிவான பொருளில்லை போகமில்லை
வேந்தன் உறவொருநாளும் விரும்புவதே
நாரையான பசிவேளைப் பொசிப்போ வில்லை
நன்மையில்லை தீமையில்லை நாடிப்பாரே.

(இ-ள்.) ஊண் நான்காம் விநாடியில் சாதகமாகின் அவன் தனக்கு வயது நாற்பத்தொன்ருகும் இவனுடைய சடலம் உள்ளவரைக்கும் விவாகமானது இல்லையாகும், வாழ்வானது அற்பவாழாகும், பொருளானதுடன் போகமும் இல்லையாம், அரசர்களுடைய உறவானது விரும்புவதில்லை, பசிவேளைக்கும் பொசிப்பானதுமில்லை நன்மையுந் தீமையுமில்லையாமென்பர் (எ-று.) (4)

ஊண் ரு-ம் விநாடியின் பலன்.

186. நாடிப்பார் ஐந்தாம் விநாடி தன்னில்
நலமாக பிள்ளையது பிறக்குமாகில்
தேடிப்பார் வயசதற்கு முப்பத்தேழு
செம்மையுடன் வசிகரமாம் இழிக்கும்பாரு
கூடிப்பார் சினேகிதமோ உயிரொன்ருகும்
குணமதுதான் சற்குணமா யிருக்கும்பாரு
வாடிப்போம் பொருளுடைமை யில்லாமல்தான்
மனத்துயரம் விதிவரைக்கும் வருத்தும்பாரே.

(இ-ள்.) ஊண் ஐந்தாம்விநாடியிற் சாதகமாகில் அவன் தனக்கு வயது முப்பத்தேழு ஆகும் வஜிகரமாகவிருப்பான் சிநேகிதஞ்செய்யில் உயிரானது ஒன்ருகவும் உடலானது இரண்டாகவுமிருப்பன் சற்குண முடையவன் பொருளும் உடமையும் இல்லாமற்படிக்குப்போகும் தன் னுடைய ஆயுள்வரைக்கும் மனத்துயரப்படுவன் (எ-று.) (5)

ஆதானபலன்.

187. பாரடா விந்ததுதான் பாயும்போது
பண்பான சூரியகலை நடக்குமாகில்
ஆரடா ஆணுகும் சந்திரகலை யாகில்
அப்பனே பெண்ணுகும் அறிந்துபாரு
சாரடா சுழிமுனையில் தரிப்பதில்லை
தரித்தாலும் பிழைக்கமாட்டாதப்பா
கூரடா சாஸ்திரங்கள் யாவும் பார்த்து
குணங்குறிகள் தவருமல் குறிசொன்னேனே.

(இ-ள்.) விந்தானது பாயும்போது சூரியகலையானது நடக்குமாகின் ஆண்குழந்தை சனிக்கும், சந்திரக்கலையானது நடக்குமாகில் பெண்குழந் தையானது சனிக்கும், சுழிமுனையாகவிருக்கில் கருவானது தரிப்பதில் லையாகும், அப்படிக்குத் தரிக்கினும் குழவியானது பிழைத்திருக்கமாட் டாது இவ்விதமாக சாஸ்திரங்கள் யாவும் பார்த்து குணம் குறிகள் தவ ருமல் குறியானதுசொன்னேன் (எ-று.) (6)

நடைமுதல் விநாடியின் பலன்.

188. சொன்னேனே நடையிலே முதல்விநாடி
தொல்புவியில் பிள்ளைகள்தான் தோன்றுமாகில்
அன்னவனுக் காயகனுய் அன்பதாகும்
அதுதரித்த நாள்முதலால் சுகமோவில்லை
பின்னதுகேள் வயசுமுப்பதுக்கு மேலே
பிரபலனு மதிகமில்லை வாழ்வுகொஞ்சம்
தன்னுலே வருவதல்லால் உதவியில்லை
சடமுள்ள வரையினும்பொய் கோள் சொல்வானே.

(இ-ள்.) நடைப்பட்சியின் முதல்விநாடியில் செனனமாகில் தாய்க்கு அன்புள்ள புத்திரனுகும், அக்கருவானதுதரித்த நாள்முதலாக சுகமான தில்லை இவன் தனக்கு வயது முப்பதிற்குமேல் பிரபலநாகினும் அதிக மான வாழ்வான்து இல்லையாம், தன்னுல்தான் பிழைப்பதன்றியாகும் உதவியானுமில்லையாம், தன்னுடைய சடலமுள்ளமட்டும் பொய்யும் கோளுஞ்சொல்லி திரிகுவர்னென்பர் (எ-று.) (7)

நடை உ-ம் விநாடியின் பலன்.

189. சொல்லவே நடையிரண்டாம் விநாடிதன்னில்
தோன்றினே னவன்வயது எண்பத்தைந்து
கொல்லுவேன் சீவசெந்தை யதிகமாக
கொடுமையுள்ள பொய்களவு வஞ்சம் மெத்த
தள்ளுவான் இசைசேர்க்கை சற்றுமில்லை
சண்டாள னென்கிறபேர் லபிக்குமையா
துள்ளுவான் எனக்கெதிர்தான் இல்லையென்று
சொல்லுவான் யிராவன்சொல் தள்ளுவாரே.

(இ-ள்.) நடையில் இரண்டாம் நாடியில் செனனமாகில் அவன்தன் வயது எண்பத்தைந்து ஆகும் சீவசெந்துக்களை அதிகமாக கொல்லு வான் கொடுமையாகிய தொழிலுடன் பொய் களவு வஞ்சகம் செய்கு வன் இவன் தனக்கு இசையாகிய சேர்க்கையானது சற்றுமில்லையாகும், சண்டாளன் என்கிற பெயரானது எடுத்துத்திரிகுவான், தனக்கொருவர் எதிரியில்லையென்று தள்ளுவான் இவனுடைய சொல்லையாரும் எடுக்கா மற்றள்ளுவார் (எ-று.) (8)

நடை ௩-ம் விநாடியின் பலன்.

190. தள்ளவே நடைதனிலே மூன்றும் விநாடி
தான் பிறந்தால் வயதுதான் முப்பத்தேழு
கொள்ளவே வயததுதான் உள்ளமட்டும்
கொலைகளவு பொய்சூது கொடுமை மெத்த
மல்லவே பிரமலபி வுள்ளமட்டும்
வருத்தும் வெகுநோயாலே வருந்துவான் பார்
பல்லவே நல்லருசி யுள்ளதெல்லாம்
பண்புடனே யவன்வாயில் படாதுபாரே.

(இ-ள்.) நடை மூன்றும் விநாடியில் செனனமாகில் அவன் தனக்கு வயது முப்பது ஆகும், இவன் தனக்குவயதானது உள்ளமட்டும் கொலை களவு பொய் சூது கொடுமை மெத்தவுஞ்செய்குவான், பிரமலபியானது உள்ளமட்டும் நோயினுல் வருந்துவான் நல்ல ருசியுள்ள வர்க்கங்கள் யாவும் இவன் வாயிற்படாதாம் (எ-று.) (9)

நடை ௪-ம் விநாடியின் பலன்.

191. படாது நடைநான்காம் விநாடிதன்னில்
பதிவாக யுற்பத்தி யாகுமாகில்
கடவாது வயதுதான் இறுபத்தொன்று
கல்வியுமோ மெத்தவுண்டு களவுமுண்டு

சடியாது பெரியோரை தூஷிணிப்பான்
சண்டாளப் பிறவியிவன் ஒருவர்க்கஞ்சான்
தொடர்வான அன்னவஸ்திர மதுவுமில்லை
துர்ச்சனங்காண் இவன்நல்ல அழிவில்லானே.

(இ-ள்.) நடை நான்காம் விநாடியில் செனனமாகில் அவன் தனக்கு வயது இருபத்தொன்றாகும் கல்வியானது உண்டாகும், களவுசெய்கு வன் பெரியோர்களை தூஷிப்பன், சண்டாளனென பெயர்படைத்தும் யார்க்கும் அஞ்சாதவனாகவிருப்பான், அன்ன வஸ்திரமில்லாமல் அலைகு வான் துர்ச்சனனாகும் (எ-று.) (10)

நடை ரு-ம் விநாடியின் பலன்.

192. வழியதினில் ஐந்தாம் விநாடிதன்னில்
மைந்தனாய் உற்பவித்து வந்தானாகில்
நெளிவுள்ள வயசதுதான் பதினெட்டாகும்
நினைவுதப்பிப் பித்தவெறி கொண்டுபேசும்
பழியுடையவன் பிறர்க்குதவி சற்றுமில்லை
பண்பில்லான் சனத்துடனே வாசம்செய்யான்
கனியுள்ள இனந்தனிலே இருந்துவாழான்
கசடனப்பா நற்குணங்க ளில்லைதானே.

(இ-ள்.) நடையில் ஐந்தாம் விநாடியில் செனனமாகில் அவன்தனக்கு வயதுபதினெட்டு ஆகும் நினைவானதுதப்பி பித்தவெறியானதுகொண்டு பேசுவான் பிறர்க்குதவியானது சற்றுமிராது, பண்பில்லாதவன் சனத் துடன் வாசமானதுசெய்குவன் தன்னுடைய இனத்திலிருந்து வாழமாட் டான் கசடனாகும் நற்குணமில்லாதவனாகு மென்பர் (எ-று.) (11)

அரசு முதல் விநாடியின் பலன்.

193. தானென்ற வரசிலே முதல்விநாடி
தான் பிறந்தான் தன்வயது நூற்றுஏழி
பானென்ற பவுஷஉண்டு பாக்கியமுண்டு
பாலுண்டு கிளையுமுண்டு பணியுமுண்டு
தேனென்ற சொல்லுண்டு ஜெகமெல்லாம்தான்
சென்றுவர நடயில்லை ஜெகத்திலுள்ள
மானென்ற விழிமடவார் மயங்குவார்பார்
மக்களே அவன்வாழ்வை மதிக்கொண்ணாதே.

(இ-ள்.) அரசுபட்சியில் முதல்விநாடியில் செனனமாகில் அவன் தனக்கு வயது நூற்றேழாகும் நன்மையானது உண்டு, பாக்கியமானது பெருகும், பால் பாக்கியமும் மைந்தர்களும் பணியும் உண்டாகும் தன் னுடைய சொல்லானது ஜெகத்தின்மீது தேனைப்போல் ருசியுள்ளதாகும்

சென்று வரும்படியான நடையானதுமில்லை, மானைப்போல் கண்களையு டைய மடவார்கள் கண்டு மயங்குவார்கள் அவனுடைய வாழ்வைமதிக்க ஒண்ணுதாகுமென்பர் (எ-று.) (12)

அரசு உ-ம் விநாடியின் பலன்.

194. ஒண்ணுத வரசிரண்டாம் விநாடிதன்னில்
உற்பவித்தால் வயதுதான் தொண்ணூற்றைந்து
எண்ணுத சுகபோகம் சொல்லொணுது
இன்பமுள்ள வாழ்க்கையென்ற மதிக்கொண்ணுது
தன்னுலே ஞானநிலை நிலைக்குமப்பா
தன்மையுள்ள புருஷரென்பர் தரணியோர்கள்
சொன்னதொரு அவனுடைய கீர்த்தியென்றால்
சொல்லிதற்கு நாவில்லை சொன்னேம் பாரே.

(இ-ள்.) அரசு இரண்டாம் விநாடியில் செனனமாகில் அவன் தனக்கு வயது தொண்ணூற்றைந்தாகும், சுகபோகங்கள் பெருகும், இன்பமாகிய வாழ்க்கையை மதிக்கப்படாதாகும், தன்னுல் ஞானநிலையானது நிலைக் கும் தன்மையுடைய புருஷனெனப்பேசுவார்கள் இன்னேனுடைய கீர்த் தியானது சொல்ல நாவானது போதாதாம் (எ-று.) (13)

அரசு ௩-ம் விநாடியின்பலன்.

195. சொல்லுமொடு வரசுமூன்றும் விநாடிதன்னில்
தோன்றுவனே லவன்வயது எண்பத்தாறு
வெல்லுமவன் வாழ்வை என்னுல் மதிக்கொண்ணுது
வெகுபோகம் வெகுசுகங்கள் உண்டுபாரு
அல்லலே சரீரத்தில் பீடையில்லை
அவன்பவுஷோ அளவிடக்கூடாது மைந்தா
சொல்லவே அஷ்டசித்தி அவர்க்கேசித்தி
சொல்லவே கூடாது சுகத்தைத்தானே.

(இ-ள்.) அரசு மூன்றும் விநாடியில் செனனமாகில் அவன் தனக்கு வயது எண்பத்தாறு ஆகும் இவனுடைய வாழ்வை மதிக்க ஒண்ணுதாகும், போகபாக்கியமும் சுகங்களுமுண்டாகும், தேகத்தினிடமாக பீடையா னது அணுகாது நாணயமானதை அளவிடக்கூடாதாகும் அஷ்டசித்தி யும் இன்னேனுக்குண்டாகும் சுகத்தைச் சொல்லிமுடியாது (எ-று.)(14)

அரசு ச-ம் விநாடியின் பலன்.

196. தானென்ற அரசுநான்காம் விநாடிதன்னில்
தானுதித்தால் வயதுதான் எழுபத்தெட்டு

தேனென்ற மொழியுடையோன் சேகரங்கள் உள்ளோன்
 தீமையென்ன சொல்வொருக்காலும் சொல்லான்
தானென்ற குணமுள்ளான் அல்லாதுள்ளான்
 சுகம்தான் பெரியோரரை வணங்கி நிற்பான்
கோனென்ற சிவகளையும் உள்ளோனையா
 கொடுமையுள்ள வஞ்சகரை சேரொண்ணுதே.

(இ-ள்.) அரசு நான்காம் விநாடியில் சென்னமாகில் அவன் தனக்கு வயது எழுபத்தெட்டு ஆகும் தேனைப்போல் ருசியுள்ள வார்த்தையுடையவன் சேகாமுடையோன் தீமையாகியச்சொல் ஒருக்காலும் சொல்லமாட்டான் நற்குணமுடையவன், சுகமாகப்பெரியோர்களை வணங்கி நிற்பான் றவமுடையவன், கொடுமையுள்ள வஞ்சகர்களைச் சேரமாட்டானென்பர்

அரசு ரு-ம் விநாடியின் பலன்.

197. ஒண்ணுத வரசைந்தாம் விநாடிதன்னில்
 உதித்தவனுக்கே பிரமன் விதித்ததந்நாள்
எண்ணுத அறுபத்தேழாகும் மைந்தா
 என்னசொல்வே னிவன்பெருமை இயம்பொண்ணுது
துன்னுத அன்னைசுற்றம் கிளையுண்டாகும்
 தொடுத்திடுமே பூமிதனிற் செல்வமுண்டாம்
வண்மையுடன் வாழுமிவன் குடித்தானப்பா
 மனமகிழ்ச்சி மெத்தவுண்டு மதிக்கொண்ணுதே.

(இ-ள்.) அரசு ஐந்தாம் விநாடியில் சென்னமாகில் அவன் தனக்கு பிரமதேவன் லபித்த வயதானது அறுபத்தேழாகும் இவனுடைய பெருமையை சொல்லமுடியாது அன்னையினுடைய சுற்றமும் கிளையும் பெருகும், இவன் வாழும்படியான வாழும் குடியும் விருத்தியாகி மனமகிட்சியுடனிருப்பன் (எ-று) (16)

நித்திரை முதல் விநாடியின் பலன்.

198. ஒண்ணுக உறக்கமதில் முதல் விநாடி
 உத்தமனே உதித்ததெனில் வயசஞ்சேழாம்
விண்ணுன பாக்கியமோ இல்லையில்லை
 வீணுன துயரமது மெத்தவுண்டு
கண்ணுன நோயதுவு முண்டுபாரு
 கலங்குமடா அவன்மனது சுகமேகொஞ்சம்
தன்னுலே விதியடைப்பு உள்ளமட்டும்
 உத்தமனே ஆயுள்சுக மில்லான்திண்ணம்.

(இ-ள்.) நித்திரைப்பட்சியில் முதல் விநாடியில் சென்னமாகில் அவன் தனக்கு வயது முப்பத்தைந்து ஆகும், பாக்கியமானது கொஞ்சமும் இல்லையாம், துயரமானது பெருகும், பிணியானது அணுகும் மனமானது கலங்கும் சுகமானது சற்றுமில்லை ஆயுள்மட்டும் சுகமிலான்,

நித்திரை உ-ம் விநாடியின் பலன்.

199. திண்ணமாம் துயிலிரண்டாம் விநாடிதன்னில்
தெரிந்திட்டோ மவன்வயது இருபத்தேழு
கன்னமிடும் களவுகளும் கொலையும் செய்வான்
கண்டவராய் துஷ்டனெனத் திரிவன் கண்டாய்
வண்ணமுறு மனைவியமே சேர்வதில்லை
மகத்தான பாவியென்று உலகமஞ்சும்
எண்ணமுறும் துயரமுயி ருள்ளமட்டும்
இருக்குமிது சிவன்செயலாம் என்றுபாரே.

(இ-ள்.) நித்திரை இரண்டாம் விநாடியில் செனனமாகில் அவன் தனக்கு வயது இருபத்தேழு ஆகும் கன்னங் களவு கொலைகள் செய்குவன். யாவரும் துஷ்டனென்றுச்சொல்ல பெயரெடுத்துத்திருவன், மனையாள் இவனுடன் சேர்ந்திருந்து வாழமாட்டாள் இவனை பாபியென்று உலகமானது ஏசும் துயரமானது உயிருள்ளமட்டும் இருக்கும் இது சிவன் செயலாகும். (எ-று.) (18)

நித்திரை ௩-ம் விநாடியின் பலன்.

200. பாரே நீ உறக்கம் மூன்றும் விநாடி
பாபரில் உதித்தான் வயது எழுமூன்றாகும்
தேரே நீ தேரையைப்போல் திரைக்குபோகும்
செடமதுதான் உள்ளமட்டும் இன்பம்நீங்க
காரே நீ தாய்தந்தை வுறவுமில்லை
கண்டவர்க ளிவனுடனே கலந்துபேசார்
வாரே நீ தேசம் விட்டு தேசம் போக
மனம் துணிந்து அவிடமபோய் மாளுவானே.

(இ-ள்.) நித்திரையில் மூன்றும் விநாடியில் செனனமாகில் அவன் தனக்கு வயது இருபத்தொன்றாகும், தேரையைப்போல் நசித்துப்போகுவன் சேதமானது சென்மமுள்ளவரைக்கும், சுகமானது நீங்கும் தாய் தந்தையர்கள் உறவானது மில்லை யாவரும் இவனுடன் கலந்துப்பேசார்கள், தேசம் விட்டு தேசமானது போக மனமானது துணிந்து போய் மாளுவன் (எ-று.) (19)

நித்திரை ௪-ம் விநாடியின் பலன்.

201. மாளுவான் உறக்கம் நான்காம் விநாடி
வந்துதித்தோன் தன்வயது பதின்மூன்றாகும்
வாளுவான் அக்குடியிற் பிறந்தாவதென்ன
வருந்துவார் இவனுயிர்தான் மாளுமட்டும்
தேளான பிணியாளன் துயரம்மெத்த
தெளிமையுள்ள வாங்குருசி கொள்ளொட்டாது

நாளான நாளுக்கு நாள் தானப்பா
நலங்குவன் சுகமென்ப தில்லைபாரே.

(இ-ள்) நித்திரையில் நான்காம் விநாடியில் செனனமாகில் அவன் தனக்குவயது பதின்மூன்ருகும்இவன் அக்குடியில்பிறந்ததினுல்யாதொரு பிரயோசனமுமில்லை வருத்தப்படுகுவார் இவனுடைய வயதானது மாளு மட்டும் பிணியாளனுகியும் துயரம்பட்டுழல்குவான், ருசியாகிய பண்டங் கள் பொசிக்கமாட்டான், நாளுக்குநாள் நலிந்துபோகுவன் சுகமில்லான்.

இதுவுமது.

202. இல்லையென்ற இதற்கிளப்பம் உறக்கம்பன்னில்
இயம்பு ஐந்தாம் விநாடிதனில் வந்துதித்தோன்
தொல்லையென்ற வயதுகொஞ்சம் ஒன்பதேதான்
சுகமதுதானென்றுமில்லை யினியோமிச்சம்
கல்லென்ற சடலமது பறக்கும்பாரு
கண்டவர்கள் விதிப்பயனே வென்றுசொல்வார்
சுள்ளியிலே சுழல்விட்ட பாண்டம்போல
சுழலுவான் மாளுமட்டும் சுகமில்லானே.

(இ-ள்.) நித்திரை ஐந்தாம்விநாடியில் செனனமானவன் அவன் தனக்கு வயது ஆருகும் சுகமானது ஒன்றுமிராது, பிணியானதுபெருகும்சடலமானது பறந்துபோகும் பார்த்தவர்கள் விதியின் பயனென்று சொல்குவர் குயவனுடைய சக்கரம்போல் சுழண்டுத்திரிகுவான் மாளுமட்டும்.

இதுவுமது.

203. சுகமென்ப தொருபோது மில்லையில்லை
சுழித்ததொரு காற்றினிலே துரும்புபோலே
அகமதிலே ஒருபோதும் வாழ்வதில்லை
அவன் வாழ்வு நன்மையா யிருப்பதில்லை
செகமதிலே பிணியாளன் போலே மக்காள்
செடமழிவதல்லாமல் திடமேயில்லை
பகைவருவ தல்லாது உறவுமில்லை
பாழான உரக்கமைந்தில் பலன்தான்பாரே.

(இ-ள்.) சுகமானதுமில்லைகாற்றில் அகப்பட்டதுரும்புபோலும் அகத்தினிடமாக ஒருபோதும் வாழ்வானது இல்லையாகும், வாழ்வானதுநன்மையாகமாட்டாது செகத்தின்மீது பிணியானது கொண்டு திரிகுவன் செடலமானது இல்லாமல் அழிந்துபோகும் பகையானது வருமேயன்றி உறவு கூடாது இது உறக்கமாகிய ஐந்தாம் விநாடியில் பார்க்கவும். (22)

மரம் முதல் விநாடியின் பலன்.

204. பாரப்பா மரணத்தில் பகல்விநாடி
பண்பான நேரத்தில் பிறந்தானாகில்
வாரப்பா வயது கொஞ்சம் பனிரண்டாகும்
மக்களே தாய்தந்தை சேதமாகும்
காரப்பாவவன் உடல்தான் நோவுகொள்ளும்
கடைத்தேற லொருநாளு மில்லையில்லை
சாரப்பாவவன் சடலம் மடியும்போதில்
தனியனா யிவனிருந்து இறப்பான்தானே.

(இ-ள்.) மரணபட்சியின் முதல் விநாடியில் செனனமாகில் அவன் தனக்கு வயது பன்னிரண்டாகும் தாய்தந்தையர் சேதமாகுவர், தேகத்தில் பிணியானது அணுகிப் பாதையுண்டாகும் கடைத்தேறும்படியான மார்க்கமானது ஒருநாளுமிராது இவனுடைய சடலமானது மடியும்போது தனியனாகவிருந்து மடிகுவான் (எ-று.) (23)

மரணம உ-ம் விநாடியின் பலன்.

205. இறந்துபோம் மரணமிரண்டாம் விநாடிதன்னில்
இனிதான வுற்பத்தியாகுமாகில்
மறந்துபோ மவன்வயது ஒன்பதுக்கு
மரணமது போல்துடித்து மாய்வான் சோயில்
குறைந்திட நாளுக்கு நான்தானப்பா
குணமாகமாட்டாது கொடுமைமெத்த
திறைந்துபோம் செடலமது செத்தால்நன்று
செகந்தனிலே என்றுலகம் சொல்லும்பாரே

(இ-ள்.) மரணத்தில் இரண்டாம் விநாடியில் செனனமாகில் அவன் தனக்கு வயது ஒன்பதாகும் மரணம்போல் துடித்தும் மாய்குவான் நாளுக்கு நரள் யாதுங்குணமாகமாட்டாது, கொடுமையானது மெத்த விளையும் சடலமானது அழிந்துப்போய் விடில் நன்மையாகுமென உலகின் கண்ணுள்ளோர் புகலுவார்கள் (எ-று.) (24)

மரணம் ங-ம் விநாடியின் பலன்.

206. சொல்லுவது மரணம் மூன்றும்விநாடி
தோன்றிட்டால் அவன் வயது ஏழதாகும்
மல்லுவது நோயதுதான் மெத்தவுண்டு
மரணம்போல் வந்துபின்பு தெளிவுண்டாகும்
தொல்லுலகில் இன்னொருக்கால் இதுபோல் வந்து
சூடிமடா செப்பில் இந்தத்ததுமதேறி
அல்லுவது மேலுரைத்த வயதில்மைந்தா
அந்தகனாய் உயிர்சேத மாகும் பாரே.

(இ-ள்.) மரணம் மூன்றும் விநாடியில் செனனமாகில் அவன்தனக்கு வயது ஏழாகும் பிணியானது மெத்தக்கொண்டும் வாடுவன், மரணம் போல் வந்து மறுபடியும் தெளிவானதாகும், மறுபடியும் இதுபோல் நோயானது வந்து தேறிவிடில் மேற்கண்ட வயதில் அந்தகனுகி உயிர்ச் சேதமாகுவானென்பர் (எ-று.) (25)

மரணம் ச-ம் விநாடியின் பலன்.

207. ஆகுமே மரணம் நான்காம் விநாடி
அவனியில்வந் துதித்தவர்க்கு வருஷமொன்றும்
சாகுமந்த நாளளவு மிவன்தானப்பா
தணிவெயிலிற் புழுவதுதான் தவிப்பதேபோல்
வேகம்வெகு வியாதிகளால் மடிந்துநொந்து
வீணுக அழிவதல்லால் சுகமதுண்டோ
மாகும் மரணம்துதித்த தேதோவென்னில்
தான்முன்பு தரித்துதான் சுழிேனயாமே.

(இ-ள்.) மரணம் நான்காம் விநாடியில் செனனமாகில் அவன்தனக்குவயது ஒன்றேயாகும் இவன் சாகும்நாளளவும் வெய்யலில்புழுவானது தவிப்பதுபோல் பற்பலவியாதிகளால் மடிந்து நொந்தும் வீணுக அழிந்துபோவதன்றி சுகமானதுமில்லை, மரணகாலத்தில் உதித்தது ஏதோ வென்னில் தான்முன்பு தரித்தவாருமிதுவாகும் (எ-று.) (26)

மரணம் ரு-ம் விநாடியின் பலன்.

208. ஆகுமென்ற மரணமைந்தாம் விநாடிதன்னில்
அப்பனே குழந்தையற தரிக்குமாகில்
போமென்ற இக்குழந்தை தனக்குவேந்தன்
பொறிந்திட்ட லபிகொஞ்சம் புகலக்கேளு
தாமென்ற தாயலற தந்தைநோக
சகோதரர்கள் பொருமியழத் தலையேசாய்த்து
ஏமென்ற வாறுதிங்கள் தனிலேமாயும்
இவன்தரித்த தவ்வேளை சுழினையாமே.

(இ-ள்.) மரணம் ஐந்தாம் விநாடியில் செனனமாகில் அவன்தனக்கு வயது பிரமதேவர் லபித்தது கொஞ்சமாகும் சொல்லக்கேளும் தாயானவள் அலற தந்தையானவன் மனமானது நோக சகோதரர்கள் பொருமியழுக தலையானது சாய்ந்து ஆறுமாதத்தில் மரணமாகும் இவன் தரித்த வேளையானது சுழினையாமென்பர் (எ-று.) (27)

மரணப்பேற்றின் சத்துரு மித்துரு பலன்

209. சுழினை தனில் மித்துருவதாக நின்றால்
சொன்னபடி சரியாகும் சத்துருவாகில்

அழிவுள்ள மரணம்போல மாளுமட்டும்
அலைத்துவிடும் வெகுகொடுமை சடல்நோகும்
எழிலற்ற உயிரதுதான் தவிப்பானையா
என்னசொல்வேன் சத்துருதான் விதியழிப்பேன்
சுழலன்றலையு பாய்மரத்தில் பட்சிபோலே
தொல்பிணிகள் வந்துநடம் செய்யும்பாரே.

(இ-ள்.) மரணப்பச்சியானது மித்துருவாகயிருக்கில் சொன்னபடி சரியாக முடியும், சத்துருவாகயிருக்கில் மரணத்திற் கொப்பாகமாளு மட்டும் அலைச்சல் படுவதுமன்றி வெகு கொடுமையானது பெருகி சடல மானது நோகும், உயிரானது தவிப்பான் சத்துருபட்சியானது விதியை அழிக்கும் சுழன்றலைகின்ற பாய்மரத்தில் அகப்பட்ட பட்சிபோலும் பிணியானது வ ;தணுகும். (எ-று.) (28)

இதுவுமது.

210. செய்யவே பொருள்வந்தூ இல்லையில்லை
செயலான மணமில்லை சேர்க்கையில்லை
வையுமே உலகமெல்லாம் வம்பனென்று
மனைவிமக்கள் உறன்முறையார் மருவவில்லை
நொய்யதொரு நோயாலே வருத்தமெத்த
நுவனுமந்த நோயதனுல் மெலிவும்சீவன்
கொய்யுமொரு சத்துருவின் பகைபொல்லாது
கொடுமையுள்ள மரணத்திற் பிறக்கொண்ணுதே.

(இ-ள்.) பொருளானது வரத்திராது, மணங்கூடுவதில்லை, மனிதர்கள் சேர்க்கையுமில்லை இவன் தன்னை உலகமுழுவதும் வம்பனென்று சொல்லி யிகழ்வார்கள் மனையாளும் மக்களும், உறவின் முறையாகும் இவனிடத்தில் நெருங்கிப்பேசார்கள், நோயினுல் வருத்தப்படுகுவான் அதினுல் தேகமானது மெலிவுரும் சீவபாதையாகும், சத்துருவில் பகை பொல்லாதாரும் மரணகாலத்தில் பிறக்கொண்ணுது என்பர் (எ-று)

இதுவுமது.

211. பிறக்குமிதிற் சத்துருதா னரசனுகில்
பிண்டத்தில் மாண்டுவிடும் ஊணதாகில்
சிறக்கவே பதினைந்து நாளைக்குள்ளே
செத்துவிடும் தப்பில்லை ஜெகத்தில் மைந்தா
எற்கவே மாசமது மூன்றுக்குள்ளே
ஒழிந்துபோம் ஊணதுதான் மித்துருவாகில்
பறக்கவே மாசமொரு ஐந்துக்குள்ளே
பதிக்கரசன் உயிர்தேசம் செய்வான்பாரே.

(இ-ள்.) சத்துருபட்சியானது அரசபட்சியாகில் வயற்றில் தானே மரணமாகிவிடும் ஊண்பட்சியாகில் பதினைந்து நாளைக்குள்ளே மரண

மாகும், மாதமானது மூன்றுக்குள்ளும் மரணமாகும், ஊண்பட்சி மித்துருவாக விருக்கில் மாதம் ஐந்துக்குள்ளும் அரசனுகில் மரணஞ் செய்குவன்.

நித்திரைப்பேற்றின் சத்துருமித்துரு பலன்.

212. செய்திடுவா னுறக்கத்தில் மித்துருவரசாகில்
சென்னத்தில் பிர்மலபி உரைத்துமுன்சரியே
எய்திடுவான் சத்துருவரசாகி நின்ருல்
என்னசெய்வேன் வெகுநோயால் துன்பமாகவும்
வைதிடுவான் வருமான மொன்றுமில்லை
மணமில்லை பிரபுதயையும் மகிழ்ச்சியில்லை
கொய்திடுவான் பிறந்தாறு திங்களுக்குள்
குவலயத்ல் வாழ்வதில்லை திண்ணமாமே.

(இ-ள்.) நித்திரையில் மித்துரு அரசாகவிருக்கில் செனனத்தில் பிரமதேவர் வாய்த்தலபி உரைத்தது முன்சொன்னவாறு சரியாகும் சத்துருபட்சி அரசாக விருக்கில் பற்பல பிணியினுல் துன்பமடைகுவன், வருமானமோ ஒன்றுமிராது, மணமானது கூடாது பிரபுக்களின் தயவுமிராது, மனமகிழ்ச்சியுமில்லை பிறந்த ஆறுமாதம் குவலயத்தை விட்டு நீங்கி விடுகுவானென்பர் (எ-று.) (31)

அரசுப்பேற்றின் சத்துரு மித்துரு பலன்.

213. திண்ணமென்ற அரசனுக்கு சத்துருமில்லை
செயலாகும் ஜெயந்தனிலே கொடுத்ததெல்லாம்
வண்ணமென்ற மகிழ்ச்சி வரத்துமெத்த
மனைவிமக்கள் வுரன்முறையா ருதவிமெத்த
எண்ணமென்ற துயரம் எள்ளளவோயில்லை
ஏழையென்ற சொல்லில்லை ஜவதிவன் தொழிலாம்
அன்னமென்ற களஞ்சியமென்றி யாவரும்பூசிப்பார்
அப்பனே இவர்க்கிணைதான் சொல்லக்கூடாதே.

(இ-ள்.) அரசுபட்சிக்கோ சத்துருபட்சியானது மில்லை செயலாகும் படியாக செயமாக யாவுங்கிடைக்கும், மனமகிழ்ச்சியும் வருத்தமுண்டாகும், மனைவி மக்கள் உறவின்முறையார் இவர்களின் உறவானது மெத்தவுண்டாகும் மனதில் துயரமானது எள்ளுப்பிரமாணங்கூடயிராது, ஏழையென்று யாருஞ் சொல்லார்கள் இவன் தன்னை யாவரும் பூசிப்பார்கள், இவனுக்கிணையாவரையுஞ் சொல்லப்படாது (எ-று.) (32)

நடைப்பேற்றின் சத்துருமித்துரு பலன்.

214. கூடாதே நடையினில் மித்துரு ஊணுகில்
கூறியதோர் லபிதனக்குக் காலதிகமாகும்
நாடாது சத்துருவே அரசனுகில்
நாட்டியதோர் பிர்மலபிக்கரை யதிகமாகும்

தேடாதசத்துரு ஊணாக நின்றால்
செப்புமதில் கால்வரிசை செல்லாய்ப்போகும்
வாராத சத்துருதா னரசனாகில்
வழுத்தியதோர் லிபியிலரை குறையும்பாரே.

(இ-ள்.) நடையில் மித்துருபட்சி ஊணாகில் இவன் தனக்குச் சொல்லும் படியான லபியானது அதிகமாகும் சத்துருபட்சியானது அரசனாக விருக்கில் பிரமலபிக்கு அறை அதிகமாகும் சத்துருபட்சி ஊணாகவிருக்கில் மேற்கூறியதில் கால் வரிசை செல்லாகப்போகும் சத்துருப்பட்சி அரசாக விருக்கில் சொல்லும்படியான லபியில் அரை வரிசைக்குறையும்.

இதுவுமது.

215. குறையான வயதேழுக் குள்ளேமைந்தா
குறைத்திடுவான்கைகளிற் குற்றம்வரும்படியாய்
திறையான இவன்பிறந்து பதினைந்துக்குள்
சிரசுமுதல் கண்காது மூக்குதட்டில்
குறையாகும் மூன்றுபத்து வயதுக்குள்ளே
கூர்மையுள்ள வேகத்தில் குறைவுசெய்வான்
கரையாகும் பிரமலபி யுள்ளமட்டும்
கணக்கில்லா நோயிலழுந்தவன் கண்டாயே.

(இ-ள்.) குறையாகிய வயது ஏழுக்குள்ளாக கைகால்களில் குற்றமானதுநேரும், இவன் பிறந்த பதினைந்துக்குள்ளும் சிரசு முதல் கண் காது மூக்கு உதட்டில் குறைவாகும் முப்பது வயதிற்குள்ளாகவும் கூர்மையாகிய தொழில் குறைவானது செய்குவன் பிரமனுடைய லபியானது உள்ளமட்டும் பலவிதமான நோயினில் பாதைப்படுகுவன் (எ-று) (34)

இதுவுமது.

216. அழுந்துவது சத்துருவின் பகையாகாது
அப்பனே விந்துவது தரித்திரநேரம்
கொழுந்துவிட்டு யெழுந்தவனல் போலேமக்காள்
குடிகெடுத்த சத்துருவும் நின்றதாலே
தழைத்ததொரு சுழிமுனை அங்கிருந்ததாலே
சண்டாள சத்துருபகை யானதாலே
நெளிந்துவிடும் திரன் சூரியனைவிட்டு
நேராமற் போனதினாற் பகையாம்பாரே.

(இ-ள்.) சத்துருப்பட்சியின் பகையானது ஆகாது விந்தானது தரித்த நேரமதில் கொழுந்தானது விட்டு எழும்பிய அனல் போலவும், குடிகெடுக்கும் சத்துருப்பட்சியானது நிற்கில் சுழிமுனையானது அங்கிருப்பதினாலும் சத்துருவின் பகையானதாலும் சந்திரன் சூரியன் தனைவிட்டு நேராமல் போனதினால் பகையாகும் பார்ப்பாய் (எ-று.) (35)

ஊண்பேற்றின் சத்துருமித்துரு பலன்.

217. பகையான ஊணதிலே மித்துருவலிதாகில்
பாடினது பொய்யாது பலிக்கும்பாரே
தொகையான சத்துருவங்கே வரசாய் நின்முய்
துலங்கவுமே மிஞ்சவொட்டான் குறைய ஒட்டான்
தகையாக வருங்காரியம் தவிர்த்துவைப்பான்
சண்டாள சத்துருவான் தாழ்ந்துபோகான்
வகையான தேகத்தில் பீடைகொஞ்சம்
வருத்தம்வரும் வந்தாலும் வலுச்செய்யாது.

(இ-ள்.) ஊணில் மித்துருபட்சி வலிவாக விருக்கில் சொல்லுவது பொய்யாகாமல் பலிக்கும் சத்துருபட்சி அரசனுகவிருக்கில் மிஞ்சவும் ஒட்டான், குறையவும் ஒட்டான் காரியத்தைத் தவிர்த்துவைப்பான் சத்துருவாகினுந் தாழ்ந்து போகமாட்டான், தேகத்தில் பீடை கொஞ்சமணுகும், வருத்தமானது நேர்ந்தபோதினும் வலுவுசெய்யாது (எ-று.)

இதுவுமது.

218. வலுவான அரசு மித்துருவேயானல்
அப்பனே பிறமலபி அறையதிகமாகும்
நலிவான தேகத்தில் நலியேயில்லை
நன்மையென்ற மணம்போகம் வாழ்வுமிச்சம்
கொலுவாகப் பூமியினம் பலிக்கும்பாரு
கொண்டுவிற்கும் வியாபாரம் குணமதாகும்
வலுவான மன்னர் உரவாகும்மேலும்
மக்களே யதிகபலன் வருகும்பாரே

(இ-ள்.) அரசுபட்சி மித்துருவாக விருக்கில் பிரமலபியானது அரையதிகமாகும் தேகத்தில் பிணியானதுமில்லை, மணமானது கூடும் போகமும் வாழ்வும் மிச்சமாகும் பூமியினமும் பலிதமாகும், வியாபாரம் விர்த்தியாகும், அரசர்கள் உறவாகும், அதிக பலனுண்டாகும் (எ-று.) (37)

இதுவுமது.

219. பாரடா பட்சிவலு அறியவேண்டும்
பகையான எழுத்தைவிட்டு மாறவேண்டும்
கோறுவது எவ்வேளை அவ்வேளைக்குக்
குடிகெடுத்த சத்துருவை விலக்கிப்போடு
நேருமொரு பட்சிபகை யானபேறை
நினைவில்வைத்து அவருடனே பேசவேண்டுஞ்
சேறுவது பட்சி யுறவான பேறைச்
சேர்ந்ததினல் நன்மையுண்டு திண்ணம்தானே.

(இ-ள்.) பார்ப்பதற்கு பட்சியின் வலிவானது அறியவேண்டும் பகை யான எழுத்தைவிட்டு மாறவேண்டும், கோரியது எவ்வேளையோ அவ் வேளைக்கு சத்துருப்பட்சியை விலக்கிப்போடவேண்டும் பட்சிப்பகையாக யிருக்குமாகின் அப்பேர்வழியை நினைவில் வைத்துப்பேசவேண்டும் பட்சி உறவானபேரை சேர்வதில் நன்மையுண்டாகும் (எ-று.) (38)

ஆயுட்பிரமாணம்.

220. தானென்ற பிறபுக்கு வயதுசொல்வேன்
தண்மையுள்ள ஊணுக்கு எழுபதாகும்
மானென்ற நடைதனக்கு வயதோமைந்தா
மறையவன்தான் லபித்தபடி அன்பதாகும்
தேனென்ற வரசுக்கு வயதுமெத்த
செப்பவென்றால் நூற்றுபத்து யிருந்துவாழ்வான்
தோன் என்ற உறக்கத்தின் வயதுகொஞ்சம்
குறைவான யேழைந்து வயதான்பாரே

(இ-ள்.) பிறப்புக்கு வயதினளவு சொல்வேன் கேட்பாயாகவும் ஊணிற்கு வயது எழுபதாகும், நடைக்கு வயது பிரமதேவன்லபித்த வாறு ஐம்பதாகும், அரசாகில் வயது மெத்தவாகும் அதாவது நூறு வயது இருந்து வாழ்குவன் நித்திரைக்கு வயது ஏழைந்தாகும் (எ-று.)

இதுவுமது.

221. வயதுகொஞ்சம் மரணத்தின் வயசுகேளு
மக்களே பதினைந்து வருஷமாகும்
பயனுடைய வரசுபகை யாகாதப்பா
பண்பான இதற்கதிக மில்லையில்லை
அயனென்னும் தந்தையன்று சேர்ந்தநேரம்
அந்தியமாய்ச் சுழிமுனைதான் முடிந்தநேரம்
வயசதுவே அற்றுவிடும் சனி இவன்தான் மைந்தா
மருவிமணம் செயுநேரம் நோய்வரும் ஊண்கேளே.

(இ-ள்.) மரணத்தின் வயதானதுக்கேளும் பதினைந்து ஆகும் இதில் அரசுபகையாயிருக்கொண்ணாது இதற்கு அதிக மில்லையாகும், அயனென் னும் படியான தந்தைச்சேர்ந்த நேரமும் அனித்தியமாக சுழிமுனையும் விடிந்த நேரமும் வயதானது அற்றுப்போய் விடுகும் சனியிவனுக்கும் மணமானது செய்யுமநேரம் நோய்வரும் (எ-று.) (40)

ஜாதகப்படலம் முற்றிற்று.

உ

கடவுள் துணை.

பிணிப்படலம்.

பொதுவிதி.

பிணிகொண்ட ஊணின் காலபலன்.

222. ஊணென்ற பிருதியில் வியாதிகண்டால்
உத்தமனே மூவைந்து நாளையிலே தீரும்
தேனென்ற விநாயகர்க்கு அபிஷேகித்துத்
தீபதூபங்கொடுத்து தியானம்செய்து
வானென்ற மருந்தீதல் செல்விராசில்
மக்களே பிராமணர்க்கு வன்னதானம்
கோனென்ற எருமனதாய்ச் செய்யும்போது
கொடுமையுள்ள பீடையுந்தான் விலங்கும்பாரே.

(இ-ள்.) ஊண் என்னும் பிரிதிவில் வியாதியானது காணில் பதினைந்து நாளையில் தீரும் அதற்கு விநாயகக்கடவுளுக்கு அபிஷேகஞ் செய்வித்து தீபதூபங்கொடுத்து தியானமானதுசெய்வித்து நோயாளிக்கு மருந்தானது ஈவாருகில் நோய் தீரும் பிராமணுளுக்கு அன்னதானம் ஒரு மனதாகச் செய்ய கொடுமை செய்யும் பீடையானது விலகும் (எ-று.)

பிணிகொண்ட நடையின் காலபலன்.

223. வி[illegible]ருமே நடைதனிலே வியாதிகண்டால்
விசனமதுவு மிகுதியுண்டாம் மாதமொன்றில்
நலமாக வேலவர்க்கு அபிஷேகம்செய்து
நங்கையரும் கன்னியற்குக் களபம்பூமி
பலருமுண்ட வன்னமது அன்பாய்செய்து
பண்டிதற்கு உபசாரம் பலவும்செய்து
இலகவே மருந்தீதல் செய்வாராஞல்
எழும்பியதோர் அப்பில்வந்த பிணிதான் போச்சே.

(இ-ள்.) நடையாகிய தனது பட்சியில் வியாதியானது காணில் விசனப்படும்படியாக அதிகமாகும் மாதம் ஒன்றினில் அதற்கு வேலவர்க்கு அபிஷேகமானதுச்செய்து கன்னிகாஸ்திரிகளுக்கு களபமானது பூசி அன்னமானதுப்படைத்தும் பண்டிதர்களுக்கு உபசாரங்கள் பலதுஞ் செய்தும் மருந்தானது ஈவாராகில் அப்பில்வந்து வாய்த்தப் பிணியானது தீர்ந்து போய்விடும். (எ-று.)

பிணிகொண்ட அரசன் காலபலன்.

224. போச்சென்ற வரசுதனில் வியாதிகண்டால்
புண்ணிய நாளெட்டில் தீரும் தீரும்
ஆச்சென்ற சிவனுக்கு அபிஷேகம்செய்து
அப்பனே அரசுபிர தட்சணமேசெய்து
வாச்சென்ற நோயினர்க்கு மருந்துதானே
வளமாகச் கொடுத்தவனே விளங்கும்பீடை
காச்சென்ற அக்கினியால் வந்தபீடை
கலைவதற்கு ஓமங்கள் செய்திடாயே.

(இ-ள்.) தன்னுடைய பட்சியானது அரசாகவிருக்கில் வியாதியானது காணில் அது எட்டு நாளில் தீரும் அதற்கு சிவனுக்கு அபிஷேகஞ் செய்து அரசுமரத்தைப் பிரதட்சணமாகச்சுற்றி நோய்க்கு மருந்து கொடுத்துவற விளங்கி நின்ற பீடையானது அக்கினியால் வாய்த்ததற்கு ஓமங்கள் செய்து நீக்குவாய் (எ-று.) (3)

பிணிகொண்ட நித்திரையின் காலபலன்.

225. செய்துதான் உறக்கத்தில் வந்தபீடை
தீருவது மாதமொரு மூன்றுக்குள்ளே
கொய்துதான் சடலத்தை நோகப்பண்ணும்
குலவியதோர் காளிக்கு அபிஷேகஞ்செய்து
வையதுதான் வாயுவினல் வந்ததாலே
மாருதிக்கு வடமாலை மகிழ்ந்துசாற்றி
நொய்துதா வைத்தியன்கை மருந்து ஈந்தால்
நொந்துமிக வருத்தமாய்த் தீரும்பாரே.

(இ-ள்.) தன்னுடைய பட்சியானது நித்திரையிலிருக்க வந்தப் பீடையானது தீருவது மாதம்மூன்றுக்குள்ளாகும் இதற்குள் சடலத்தை நோகச் செய்யும் அதற்கு காளிகாபரமேஸ்வரிக்கு அபிஷேகமானது செய்துவைக்கவும் இப்பிணி வாய்வினல் வந்ததாகையால் மாருதிக்கு வடமாலையானது சாற்றி வைத்தியனுடைய கையினல் மருந்தானது ஈந்தாயாகில் நொந்து வருத்தமாகத்தீரும் (எ-று.) (4)

பிணிகொண்ட மரத்தின் காலபலன்.

226. தீருமோ மரணத்தில் வியாதிகண்டால்
தீருவது வெகுவருத்தம் திங்களாறில்
தேறுமோ தேருதோ வென்பார்கோடி
செய்வினையோ தீவினையோ வென்பார்கோடி
ஆறுமாமுகன் செயலோ நடக்குமாகில்
அரசுபகை யாவதுதா னிவனுக்கில்லை
தீருமொரு பரிகாரம் என்னவெனில்
செம்பீரமாம் சனிக்கபிஷேகங்கள் செய்யே.

(இ-ள்.) தன்னுடைய பட்சியானது மரணமாகவிருக்க பிணியானது காணில் அது தீருவது வெகு வருத்தமாகும், மாதம் ஆறுக்குள்ளும் தேருமோதேருதோ வெனப்பேசுவார்கள் செய்வினையோ தீவினையோ வென்பார்கள் கோடி ஆறுமுகக்கடவுளின் செயலானது நடக்குமாகில் அரசுப் பகையாவது இவனுக்கில்லையாம் இதற்குப் பரிகாரம் ஒன்றுளது அது என்னவெனில் சனிக்கு அபிஷேகஞ் செய்து வைக்கவேண்டுமென்பர்.

இதுவுமது.

227. செய்துபா ராகாச வெளியீதாகும்
திடமான ஊணரசு பகையாகாது
நெய்துபார் சத்துருவின் கொடுமைமெத்த
நெறியான மித்துருவே யிருக்கவேண்டும்
கொய்துபார் கூத்தனென்ற தினமரணநாளும்
கூடியே யில்லாம லிருக்கவேண்டும்
வைதுபா ரிதுகளும் பகையாகாது
வந்ததென்று லுயிர்சேதம் வருகும்பாரே.

(இ-ள்.) செய்துபார்க்க ஆகாசவெளியாகும் இதில் ஊண் அரசு பக்கை இவைகளாகாது சத்துருவின் கொடுமையானது மெத்த வுண்டாகும் மித்துருவாகயிருக்கவேண்டும் கூத்தனாகிய எமனுடைய மரண நாளும் கூடியில்லாதிருக்கவேண்டும் இவைகளில் பகையாகாது அப்படியிருக்கில் உயிர்ச்சேதமானது வருகும். (எ-று.) (6)

பிணிப் படலத்தின் பொதுவிதி சிறப்புவிதி உ-ற்கும் வரலாறு.

228. ஆகுமே சாமமதைக் குறுக்கி நன்றாய்
அப்பனே நாழிகையாய்ப் பிரித்துச்சொன்னோம்
போகுமே விநாடியங்கே வாய்த்ததனால்
புண்ணியனே யொருநாளும் பொய்த்திடாது
ஏகுமே விநாடியது பிசகிப்போனால்
எடுத்ததொரு காரியங்கள் பிசகும்பாரு
சாகுமே நேரமது பிசகிற்றானால்
சண்டாள யெத்தொழிலும் பிசகும்பாரே.

(இ-ள்.) ஜாமமானதைக்குறிக்கி நன்றாகவும் நாழிகையாகப் பிரித்துச் சொன்னோம் விநாடியானது வாய்க்கில் ஒருபோதும் பொய்யாது விநாடியானது பிசகிப்போகுமாகின் எடுத்த காரியம் பிசகாகப்போகும் நேரமானது பிசகுமாகின் எத்தொழிலும் பிசகும் (எ-று.) (7)

229. பிசகாமல் விநாடியங்கே வறியவேண்டும்
பிணக்கறுக சாஸ்திரத்தில் வினையம்வேண்டும்

அசையாம லொருமனதாய் யிருத்தவேண்டும்
அறிவான புத்தியினு லறியவேண்டும்
திசையான குருவினிடம் கேள்விவேண்டும்
செய்த்தொழிலும் கைபாகம் தெரியவேண்டும்
வசமான பெரியோர்க்கு வணக்கம் செய்தால்
வழியான தொழில் செய்யும் வகைசொல்வாரே.

(இ-ள்.) பிசகாமற்படிக்கு விநாடியை அறியவேண்டும் பிணக்கானது அறுக்கும்படியாக சாஸ்திரத்தில் வினயமானது வைக்கவேண்டும் மனதை ஒன்ருக இருத்தல்வேண்டும் அறிவாகியபுத்தியினுல் அறியவேண்டும் குருவினிடத்தில் அடுத்துகேள்வியானது கேட்கவேண்டும் செய்யும்படியான தொழிலும் கைபாகமும் தெரியவேண்டும் இவைகளையுணர்ந்து பெரியோர்களை வணங்கிக்கேட்பாயாகில் வழியாக நடத்தும் தொழிலைச்சொல்லுவர் (எ-று.) (8)

சிறப்புவிதி.

பிணிகொண்ட ஊண்காலமுதல் விநாடியின் பலன்.

230. சொல்லவே ஊண்முதலாம் விநாடிதன்னில்
தொடர்பிணிதான் நாலைந்து நாளில்தீரும்
வெல்லவே நோயதுதான் பெலனேயில்லை
வெற்றியா மரசுபகை இருக்கொண்ணுது
அல்லவே யிவன் பகையிற் பிணிதான்மெத்த
ஐங்கரனுர்க் கபிஷேகம் செய்தால்மைந்தா
சல்லியங்கள் கொடுத்துநின்ற பிணிகளாலே
சஞ்சலங்க ளொன்றுமில்லை சவுக்கியமாமே.

(இ-ள்.) தன்னுடையபட்சி ஊண் முதல் விநாடியில் பிணியானது தோன்றிடில் அது நாலு ஐந்து நாளில் தீரும், நோயானது பெலன்செய்யாது இதில் அரசுபகையாக இருக்கலாகாது அப்படிக்கிருக்கில் பிணியானது மெத்தச்செய்யும் அதற்கு விநாயகக்கடவுளுக்கு அபிஷேகமானது செய்து மருந்தானது ஈந்தாயாகில் சல்லியமாகத் தொடுத்துநின்ற பிணியானது அகன்றுவிடும் (எ-று.) (9)

பிணிகொண்ட ஊண்கால உ-ம் விநாடியின் பலன்.

231. சவுக்கியமாம் ஊணிரண்டாம் விநாடிதன்னில்
சரீரத்திற் பிணியதுதான் சாருமாகில்
அவத்தமில்லை நாளேழிற் குணமதாகும்
ஐக்கரனுர்க் கருச்சனைசெய் தடிபணிந்தால்
சிவக்குமொரு வரசுபகை யிராதுமைந்தா
திடம்செய்ய மாட்டாது வலுவேயில்லை
குவித்திருக்கு மொருபிருதி வியன்கூருய் நின்ருய்
கொள்கையினுற் வந்ததிந்தக் குணம்தான்பாரே.

(இ-ள்.) ஊண்பட்சியில் இரண்டாம் விநாடியில் பிணியானது கொள்ளில் அது நாள் ஏழில்தீரும் விநாயகக்கடவுளுக்கு அர்ச்சனையான துச்செய்து அடிபணிந்து நிர்ப்பாயாகில் அரசுபகையானது இராது திடமானது செய்யாது வலிவானது குறையும் பிருதிவின் கூறுகின்ற வியாதியானது குணமாகும் (எ-று.) (10)

பிணிகோண்ட ஊண்கால ௩-ம் விநாடியின் பலன்.

232. குணமான ஊண்மூன்றும் விநாடிதன்னில்
குறித்தவுடல் வந்தபிணி நாள் ஒன்பானில்
மணமாகத் தீருவதே திண்ணம் திண்ணம்
வழிக்காகை விநாயகர்க்குப் பூசைசெய்து
கனமாகா தரசுபகை யிருந்தாலுந்தான்
கண்டிப்பு மெத்தவில்லை அரசும்பாதி
இனமான் வரசுபகை ஊணில்வலுவில்லை
என்னசெய்வான் கோபமது செய்யொண்ணுதே.

(இ-ள்.) ஊண்பட்சி மூன்றும் விநாடியில் பிணியானதுகொள்ளில் அது நாள் ஒன்பதில் தீருவது திண்ணமாகும், அதற்கு விநாயகர்க்கு பூசையானதுசெய்துவறில் அரசுபகையாகவிருக்கினும் கெடுதியானது ஒன்றுமிராது அரசில் பாதியாகும், அரசு பகையினும் ஊணிலும் வலுவானதுமில்லை கோபஞ்செய்க ஒண்ணுது (எ-று.) (11)

பிணிகோண்ட ஊண்கால ச-ம் விநாடியின் பலன்.

233. ஒண்ணுத ஊண்நான்காம் விநாடிதன்னில்
உடலில்வரும் பிணியணி அதுநாள்பதின்மூன்றுக்குள்
திண்ணமாய் தீர்ந்துவிடும் செப்பினேன்பார்
சித்திவிநாயகர்க் கவலும் கடலை தேங்கா
வண்ணமாம் பால்பழங்கள் படைத்துமைந்தா
வணக்கமாய் பிராமணுேப சாரம்செய்தால்
அண்ணல்பகை யிருந்தாலும் வலுச்செய்யாது
அப்பனே பிரிதிவியின் கூறிதாமே.

(இ-ள்.) ஊண்பட்சி நான்காம் விநாடியில் தேகத்தினிடமாக பிணியானதுகொள்ளில் அது நாள் பதின்மூன்றில் தீர்ந்துபோகுமெனச் சொன்னோம் அதற்கும் விநாயகக்கடவுளுக்கு அவல் கடலை தேங்காய் பால் பழம் இவைகளைபடைத்தும் பிராமணுளுக்கு உபசாரஞ்செய்யில் அண்ணலுடைய பகையாகவிருக்கினும் வலுவானது செய்யாது இதுப் பிரிதிவின் குறியாகுமென்பர் (எ-று.) (12)

இதுவுமது.

234. கூற்றுன ஊணஞ்சாம் விநாடிதன்னில்
கொண்டபிணி பதினஞ்சு நாளில்தீரும்

வேற்ருன வரசுபகை வேதைசெய்யும்
விநாயகர்க்கு அபிஷேகம் செய்துமேலும்
சாற்றிய வேதியர்க்கு அன்னதானம்
தன்மையுடன் செய்திடவே தணிந்துபோகும்
பாற்ருன ஊணதிலே வந்தரோகம்
பரிவான பிரிதிவியைச் சார்ந்ததாமே.

(இ-ள்.) ஊண்பட்சி ஐந்தாம்விநாடியில் கொண்டப்பிணியானது பதினைந்துநாளில் தீரும் அரசு பகையாகவிருக்கில் வேதனையானதுசெய்கும், அதற்கு விநாயகக்கடவுளுக்கு அபிஷேகமானது செய்வித்து பிராமணுளுக்கு அன்னதானஞ் செய்துவைக்கில் பிணியானது தணிந்துபோகும், ஊண்காலத்தில் வந்தரோகமானது பிரிதிவைச் சார்ந்ததாமென்பர்.

பிணிகோண்ட நடைகால முதல் விநாடியின் பலன்.

235. சாந்தமாம் நடைதனிலே முதல்விநாடி
சரீரத்திற் பிணியதுதான் சாருமாகில்
நேர்ந்தபடி சடலத்தை வருத்தம் செய்து
நீங்குமடா நாள்பத்தில் வினைநில்லாது
வேந்தனவன் பகைத்ததினுல் வினையேயில்லை
மேதினியி லிருவருக்கும் தோழனுகும்
வாந்தமயில் வாகனத்தில் ஏறியாடும்
வடிவேலரைத் தொழுது வணக்கம்கொண்டே.

(இ-ள்.) தன்னுடைய பட்சிநடையில் முதல்விநாடியில் பிணியானது கொள்ளில் அது தேகத்தை வருத்தப்படச்செய்தும் பிணியானது நீங்கும், பத்துநாளில் வினையானது நில்லாது அரசுபகையாகினும் வினையானதில்லையாம் பூமியின்மீது இருவ்வருக்குந் தோழனுகவிளங்கும் அன்றியும் மயிலின்மீதேறி நடனமானது புரியும் வடிவேலரைத்தொழுது வணங்குவாய் (எ-று.) (14)

பிணிகோண்ட நடைகால உ-ம் விநாடியின் பலன்.

236. கொள்ளவே நடையிரண்டாம் விநாடிமைந்தா
குறித்தபிணி பதினஞ்சு நாளில் மைந்தா
தள்ளவே சாந்தமதாம் மைந்தாகேளு
தண்ணீரிற் பகைத்ததொரு பீடைதானு
கொள்ளவே கொல்வதில்லை செந்தூர்வாழும்
குமரகுரு செயலிருக்கிற் குறையொன்றில்லை
விள்ளவே திண்ணமது மனிதர்சொன்னுர்
வேந்தனிட பகைபெரிதாம் சொல்லினேனே.

(இ-ள்.) நடை இரண்டாம் விநாடியில் பிணியானதுகொள்ளில்அது பதினைந்துநாளில் தீரும் தண்ணீர் பகைத்தப்பிணியானது கொல்லாது

அதற்கு குமாரகுருக் கடவுளின் கிருபையானதிருக்கில் குறையானது ஒன்றும் அணுகாதென திண்ணமாக மனிதர்கள் சொன்னார்கள் ஆகினும் அரசுபகையாகில் பெறிதாகும் (எ-று.) (15)

பிணிகோண்ட நடைகால ௩-ம் விநாடியின் பலன்.

237. சொல்லவே நடைமூன்றும் விநாடிதன்னில்
தோன்றினதோர் பிணியதுநாளிருபதுக்குள்
சல்லியமாம் பிணியாலே வருத்தல்மெத்த
சண்முகனார் கருமையில் சாந்தமாகும்
சல்லவிடும் சத்துரு ஊணரசாகாது
கலங்காத மனத்தையும்தான் கலங்கச்செய்வான்
தொல்லையது அப்புவினால் வந்தபீடை
தொலைந்துபோம் தாமிசத்தில் துடிசெய்யாதே.

(இ-ள்.) நடையில் மூன்றும் விநாடியில் தோன்றிய பிணியானது இருபது நாளிற்குள்ளாகச் சல்லியமாகிய இப்பிணியினால் வருத்தமானது அதிகமாகும் அது சண்முகக்கடவுளின் கிருபையினால் நோயானது சாந்தமாகும் அன்றியும் அதில் சத்துரு ஊண் அரசு இவையாகாது அப்படிக் கிருக்கில் கலங்காத மனத்தையுங் கலங்கச்செய்குவான் தொல்லையாகிய அப்புவினால் வந்தப்பீடையாகும் இதுதாமிசமாகத் துலைந்துபோகும் பாதைசெய்யாது (எ-று.) (16)

பிணிகோண்ட நடைகால ச-ம் விநாடியின் பலன்.

238. துடியான நடைநான்காம் விநாடிதன்னில்
தொடுத்தபிணி நாளிருபத்தைந்தில் மைந்தா
துடிவான சண்முகத்தின் கிருபையாலே
வயித்தியத்தாற் சாந்தியால் தீர்ந்துபோகும்
முடிவான விந்துவங்கே தரித்தநேரம்
மொழியகின்ற நவக்கிரக தோஷத்தாலே
கடுகியே வந்தபிணி நீரின்கூறும்
கலக்கமிடும் சத்துருவின் பகையாகாதே.

(இ-ள்.) நடையின் நான்காம் விநாடியில் தொடுத்த பிணியானது நாள் இருபத்தைந்தில் சண்முகக்கடவுளின் கிருபையினால் வயித்தியத்தினாலும் சாந்தியினாலும் தீர்ந்துபோகும், விந்துவானது தரித்தநேரம் நவக்கிரகங்களின் தோஷத்தினாலும் வந்தப் பிணியானது நீரினுடைய கூறும் சத்துருபட்சியின் பகையாதாம் (எ-று.) (17)

பிணிகோண்ட நடைகால ரு-ம் விநாடியின் பலன்.

239. ஆகாத நடை ஐந்தாம் விநாடிதன்னில்
அப்பனே தேகத்தில் பிணிதான் வந்தால்

போகாது வரசுபகை புகவொண்ணாது
போசனத்தின் பகையறையிற் பொல்லாதப்பா
நோகாது நோகுமடா தேகம்மைந்தா
நுண்ணிதாம் பாசமது ஒன்றுக்குள்ளே
வேகாது வெந்தல்லோ நீரதாகும்
வேலவர்க்கு அபிஷேகம் செய்யச்சொல்லே.

(இ-ள்.) நடையின் ஐந்தாம்விநாடியின் தேகத்தினிடமாக பிணியானதுதோன்றில் அப்போது அரசுபகையாகவிருக்க ஒண்ணாது ஊண் பகையாகினும் பொல்லாதாகவிருக்கும் நோயானதுபெருகும், மாதம் ஒன்றுக்குள்ளே வெந்து நீராகப்போகும் அதற்கு வேலவற்கு அபிஷேகமானது செய்கவும் (எ-று.) (18)

இதுவுமது.

240. செய்யவே முருகனிட கிருபையாலே
தீராத வியாதியஸ்தன் தோஷந்தீரும்
கொய்யவே வரசுபகை யிருந்தாலப்பா
கொடுமையுள்ள சனியனுக்கு அபிஷேகந்தான்
நொய்தாகும் நோயதுதான் வலுச்செய்யாது
நுவலாது என்னசொல்வேன் ஜலத்தின்கூறும்
எய்யவந்தல்லாமல் வேறொன்றில்லை
யிவன்பிழைத்த தயன்எழுத்தின் பெலனென்பாரே.

(இ-ள்.) செய்ய முருகக்கடவுளின் கிருபையால் தீராதவியாதியஸ்தரின் வியாதியானது தீரும், தோஷமானது அகலும், அரசுபகையாகவிருக்கில் சனிக்கு அபிஷேகஞ்செய்யதீரும், நோயானது வலுவுசெய்யாது இப் பிணியானது சலத்தின் கூறுகும், எய்யும்படியானதன்றி வேறொன்றுமில்லை இவன் பிழைத்தது அயன்விதியின் பெலனென்பர்.

பிணிகோண்ட அரசுகால முதல் விநாடியின் பலன்.

241. பெலமாக வரசுமுதல் விநாடிதன்னில்
பெரிதாக உடலில்வந்த பிணிதானையா
தலமான வக்கினியார் சூடுகொண்டு
ஜடலமெல்லாம் வெந்துருகு மெழுமமாகி
நலமான நாள்மூன்றில் குணமதாகும்
நற்சடையோன் சிவன்தனக்கு அபிஷேகந்தான்
வலம்வந்து செய்திடவே நோய்களெல்லாம்
மக்களே தீர்ந்திடுதல் திண்ணமாமே.

(இ-ள்.) தன்னுடையபட்சி அரசாக அதில் முதல் விநாடியில் தேகத்தினிடமாக வந்தப்பிணியானது அக்கினியால் சூடானதுகொண்டு சடல

மாதியந்தமும் வெந்துஉருகி மெழுகுபோலாகி நாள்மூன்றில் குணமாகும் சிவபிரானுக்கு அபிஷேகமானதுசெய்து வலமாகப் பிரதட்சணங்கள்செய்ய மெய்யிற்கொண்ட நோய்கள்யாவும் தீர்ந்துவிடும் வலிவானது உண்டாகும் (எ-று.) (20)

பிணிகோண்ட அரசுகால உ-ம் விநாடியின் பலன்.

242. திண்ணமடா வரசிரண்டாம் விநாடிதன்னில்
ஜெடலத்தில் வந்தபிணி திரம்செய்யாது
வண்ணமடா நாளைந்தில் தீர்ந்துபோகும்
வண்மையுள்ள சிவகிருபை யானதாலே
சொன்னமடா வக்கினியும் றகைத்தலேது
துடியான சனியினிடத் தோஷத்தாலே
எண்ணமடா பீடையது விலகும்பாரு
எள்ளளவும் நோய்பெலனே இல்லைத்தானே.

(இ-ள்.) அரசில் இரண்டாம் விநாடியில்தேகத்தினிடமாகத்தோன்றியபிணியானது தொந்தரவு செய்யாது, அப்பிணி நாளைந்தில் தீர்ந்துபோகும், சிவபிரானுடைய கிருபையானதால் சொல்லினேம், அக்கினியானது தகிக்கினும் அதினால் ஏதுமில்லை, சனியனுடைய தோஷத்தினால் பீடையானது விலகிப்போகும் எள்ளளவேனும் நோயானது பலக்காது.

பிணிகோண்ட அரசுகால ௩-ம் விநாடியின் பலன்.

243. இல்லையடா வரசுமூன்றும் விநாடிதன்னில்
எழும்பியதோர் தேகத்தில் வந்தநோவு
தொல்லையடா வென்றுசொல்லி நினைத்திடாதே
துடியான சிவனுக்கு அபிஷேகம்செய்தால்
சள்ளையடா ஒன்றுமில்லை நாளெட்டுக்குள்ளே
சடலத்தில் வந்தபிணி தள்ளிப்போகும்
பிள்ளைகளே அக்கினியால் வந்ததோஷம்
பெலம் செய்ய மாட்டாது திரும்பாரே.

(இ-ள்.) அரசில் மூன்றும்விநாடியில் தேகத்தினிடமாக பிணியானது காணில் அதைத் தொல்லையென்று சற்றும் யோசிக்கவேண்டாம், சிவபிரானுக்கு அபிஷேகஞ்செய்யில் சள்ளையாகிய பிணியானது யாதொன்றுமிராது, நாள் எட்டிற்குள் தேகத்தைவிட்டுப் பிணியானது நீங்கிவிடும் இது அக்கினியால் வந்த தோஷமாகையால் தோஷமானதுச் செய்யாதென்பர் (எ-று.) (22)

பிணிகோண்ட அரசுகால ச-ம் விநாடியின் பலன்.

244. திரமாமரசு நான்காம்விநாடி
செடலத்திலே வந்தபிணி தினம்தான்பத்தில்
மாறிவிடும் சனியினிட தோஷம்தானும்
மக்களே சிவந்தனக்குக் குளிரவைதீ

நீரிவிடும் நோயதுதான் விளைநில்லாது
நிலத்தரசு ஒருவரிடம் பகையுமில்லை
காரிழையாள் பூமடந்தை கிருபையாலே
கண்டபலன் நானுரைத்தேன் கருத்தில்வையே.

(இ-ள்.) அரசின் நான்காம்விநாடியில் தேகத்தில் வந்துத்தோன்றிய பிணியானது நாள்பத்தில் மாறிப்போகும் இந்த சனியால் விளைந்த தோஷம் அதற்கு சிவபிரானுக்கு அபிஷேகஞ்செய்ய நோயானது நில்லாமல் ஓடிப்போகும், அரசுபட்சியாவும் பகையில்லை லட்சுமியினுடைய கிருபையால் கண்ட பலனையுரைத்தேன் கருத்தில்வைப்பாய் (எ-று.) ()

பிணிகொண்ட அரசுகால ரு-ம் விநாடியின் பலன்.

245. கருத்தான அரசு ஐந்தாம் விநாடிதன்னில்
கண்டபிணி பன்னிரண்டு நாளில்தீரும்
வருத்தமது செய்யாது வலிதுகொஞ்சம்
மனமகிழ்ச்சியில்லாது வியாதிபோலும்
பொருத்தமது வக்கினியாற் கண்டசூடு
பொருமையுள்ள சிவனுமையாள் கிருபையாலே
தரிப்பதுவே யில்லையில்லை நோய்கள்தானே
தண்மையாய்த் தேகமது சவுக்கியமாமே.

(இ-ள்.) அரசின் ஐந்தாம் விநாடியில் கண்டபிணியானது பன்னிரண்டு நாளில் தீரும் வருத்தமானதுசெய்யாது, வலிவானதுகுறையும், மனமகிழ்ச்சியில்லாத வியாதிபோல் தோன்றும், அது அக்கினியால் வந்த சூடாகும், இது பரமேஸ்வரனும் உமையபார்வதி கிருபையாலும் அணுகாது நோய்கள் தேகமானது சவுக்கியமாகவிருக்கும் (எ-று.) (24)

பிணிகொண்ட நித்திரைக்கால் முதல்விநாடியின் பலன்.

246. ஆமப்பா உறக்கத்தில் முதல்விநாடி
அப்பனே தேகத்தில் பிணிதான்வந்தால்
காமப்பா வாயுவினுற் கண்டதோஷம்
கடினமடா திரும்புவது நாளெட்டுக்குள்
சோமப்பா வரசுபகை ஆகாதுபாரு
சொன்னேனடா காளிக்கு அபிஷேகம்செய்தால்
நாமப்பா அனுமனுக்கு வணக்கம்செய்தால்
நன்மையதா யப்பிணிதான் தீரும்பாரே.

(இ-ள்.) தன்னுடையபட்சி நித்திரையாகவிருக்கில் அதில் முதல் விநாடியில் பிணியானதுகாணில் அது வாயுவினல் வந்ததோஷமாகும், இப்பிணி திரும்புவது கடினமாகும் நாளானது எட்டிற்குள்ளாகவுமென்

பர், அரசுபகையாகவிருக்கிலாகாது அதற்கு காளிக்கு அபிஷேகமானது செய்து ஆஞ்சநேயர் சன்னதியை சுற்றிவரில் கொண்டபிணியாவுந்தீரும்.

பிணிகோண்ட நித்திரைகால உ-ம் விநாடியின் பலன்.

247. திருமப்பா உறக்கமிரண்டாம் விநாடிதனில்
ஜெடலத்தில் வந்தபிணி தீர்வதரிதேயாகும்
மாறுமப்பா லகுவாகித் திரும்பப்பின்னும்
மனத்துயரம் ரம்பவுமா மடைஞ்சல்மெத்த
ஆறுமப்பா கண்டவர்கள் விதிப்பயனே வென்று
அலறுவார் உலறுவார் அகிலந்தன்னில்
தேறுமப்பா நாளதுதான் பதினைந்துக்குள்
திடமான காளிக்கு அபிஷேகம்செய்யே.

(இ-ள்.) நித்திரையில் இரண்டாம் விநாடியில் தேசத்தினிடமாக வந்தபிணி தீர்வதரிதாகும் அப்படிக்கு தீர்ந்துவிடினும் அப்பிணி மறுபடியும் தோன்றி மனத்துயரமுண்டாக்கும் இடஞ்சலானது மெத்தவிளையும், கண்டவர்கள் யாவரும் விதிப்பயனேவென்று அலருவார்கள் உலகத்தின் மீது இப்பிணியானது பதினைந்து நாளைக்குள் தீரும் அதற்கு காளிகா தேவிக்கு அபிஷேகம் செய்துவைக்கவும் (எ-று.) (26)

பிணிகோண்ட நித்திரைகால ௩-ம் விநாடியின் பலன்.

248. செய்யவே உறக்கம் மூன்றும் விநாடி
தேகத்தில் பிணிவந்தால் சேதம்போல்
நொய்யவே ஜடலத்தை நோகச்செய்தே
நொருக்கிவிடும் வாய்வினால் வந்ததோஷம்
வையமதில் காளிக்கும் பலியும் பொங்கல்
வயிரவர்க்கு வடமாலை மகிழ்ந்துசாற்றி
எய்யவே பண்டிதன்கை மருந்தை ஈந்தால்
இதுதீர இருபதுநாள் செல்லும்பாரே.

(இ-ள்.) நித்திரையில் மூன்றும் விநாடியில் தேகத்தில் பிணியானது கொள்ளில் சேதமாவதுப்போல் காட்டும், நொய்யும்படியாக சடலத்தை நோகும்படியாகச் செய்யும் இது வாய்வினால் வந்த தோஷமானதால் இதற்கு காளிகாதேவிக்கு பலிகொடுத்து பொங்கலிட்டு வயிரவர்க்கு மாலையானது சாற்றி வைதியனைக்கொண்டு மருந்தானது ஈவாயாகில் இப்பிணியானது இருபது நாளில் தீர்ந்து விடுமென்பர் (எ-று.) (27)

பிணிகோண்ட நித்திரைகால ௪-ம் விநாடியின் பலன்.

249. சொல்லுமொரு உறக்கம் நான்காம் விநாடி
தீவினையாம் பிணிகொண்டால் தேகம் தன்னில்

சொல்லவே வெகுகொடுமை கொள்ளும்கொள்ளும்
கூற்றுவனு மரசுபகையாக நின்றால்
அல்லவே மாசமொரு மூன்றுக்குள்ளே
அல்லாவிட்டால் தீருவது மாசம் மூன்றில்
வெல்லவே காளிக்கு அபிஷேகம்செய்தால்
வெல்லுவது திண்ணமென்று சொல்லொண்ணாதே.

(இ-ள்.) நித்திரையில் நான்காம் விநாடிதனில் வினைப்பயனாகத் தேகத்தில் பிணியானது கொள்ளில் படமுடியாது கொடுமையானது செய்யும், அரசுபகையாக விருக்கில் மாதமூன்றுக்குள் மரணநேரும், அது தவறினால் மாத மூன்றுக்குள் நோயானதுதீரும், அதற்குக்காளிக்கு அபிடேகஞ்செய்யில் வெல்லுவது திண்ணமாகும் என்றுசொல்கவொண்ணாது

பிணிகொண்ட மரணகால ரு-ம் விநாடியின் பலன்.

250. ஒண்ணாத உறக்க மைந்தாம் விநாடிதன்னில்
உத்தமனே தேகத்தில் பிணிதானானால்
எண்ணாத சாவதுதான் எய்தும்எய்தும்
இசையாக வரசுபகை யிருந்ததனால்
தண்ணாது தண்ணுமடா க்ஷணத்துக்குள்ளே
தன்மையுள்ள அரசுமித்துரு சொல்லொண்ணாது
கண்ணாது தீருமென்று சொல்லொண்ணாது
கடினமடா அஞ்சுபத்து நாள்தான்காணே.

(இ-ள்.) நித்திரை ஐந்தாம் விநாடியில் பிணியானது கொள்ளில் மரணமானது சம்பவிக்கும் அரசுபகையாகவிருக்கில் சணத்திற்குள்ளே மரணநேரும் அரசுமித்துருவாக விருக்கில்யாதுஞ் சொல்லவொண்ணாது, பிணியானது தீருமென்று எண்ணவேண்டாம் கடினமாகிய நாள் 5-க்குள் காண்பாய் (எ-று.) (29)

பிணிகொண்ட மரணகால முதல் விநாடியின் பலன்.

251. நாளான மரணத்தில் முதல்விநாடி
நலமான தேகத்தில் பிணிதான் வந்தால்
கோளாதே கூற்றுவனு மரசுபகையானால்
கெணிதமது மாசம்தான் இரண்டுக்குள்ளே
பாழாகப் போகுமடா ஜடலம்தானும்
பழிகாரன் நோவானால் ஒடுங்கவைப்பான்
தாளாதவாகாச வெளியின் தோஷம்
தண்மையால் வருமானால் மாசமாறே.

(இ-ள்.) தனதுபட்சி மரணமாகவிருக்க அதில் முதல் விநாடியில் தேகத்தில் பிணியானது தோன்றிடில் அப்பிணி எமனாகவிருந்து பாதிக்குங் கூட அரசுபகையாகவிருக்கில் கணிதந்தவறாமல் மாதம் இரண்டுக்

குள்ளாக சடலமானது பாழாக மரணமாகிவிடும் பழியாகிய நோயாகில் ஒடுங்கச்செய்யும் இது ஆகாயவெளியின் தோடமானதால் தன்மையாக வருமாயின் மாதமாகும் (எ-று.) (30)

பிணிகோண்ட மரணகால உ-ம் விநாடியின் பலன்.

252. ஆராத மரணமிரண்டாம் விநாடிதன்னில்
அப்பனே தேகத்தில் பிணிதான்கொண்டால்
தீராத வரசுபகை பொல்லாதப்பா
க்ஷணத்திலே தேகம்விட்டு உயிரை நீக்கும்
தேராமல் சூனியத்தில் சேர்ந்த தோஷம்
திடமான கூற்றனவன் பிடரினின்று
பாராம லிவ்வுடலை யழிப்பானன்றோ
பழியாகும் வருஷமன்றிற் பாருபாரே.

(இ-ள்.) மரணம் இரண்டாம் விநாடியில் தேகத்தில் பிணியானது தோன்றில் அரசு பகையாகில் பொல்லாதாகும் க்ஷணத்தில் தேகத்தை விட்டு உயிரை நீக்கும் இது சூனியத்தில் சேர்ந்த தோடமானதால் கூற்றுவனாகிய எமன் பிடரியினிடமாக நின்று இத்தேகத்தையழிப்பான் அதாவது வருட மொன்றிலாகும் (எ-று.) (31)

பிணிகோண்ட மரணகால ங-ம் விநாடியின் பலன்.

253 ஒன்றான மரணம் மூன்றும் விநாடி
உத்தமனே யுடலதனிற் பிணிதான் வந்தால்
நன்றான வாகாச வெளியின் தோஷம்
நலமான ஊணரசு பகையாகாது
சென்றான சூனியத்திற் சேர்ந்த நேயம்
திடமான கங்கையிட சாபம்போல
கண்டான உடல்விட்டு உயிர்போமப்பா
கனிவாக திரும்புவது அரிதாம்காணே.

(இ-ள்.) மரணம் மூன்றும் விநாடியில் தேகத்தில் பிணிவரில் அது ஆகாசவெளியின் தோடமாகும் அதற்கு ஊண் அரசு பகையாகவிருக்கலாகாது, சூனியத்திற் சேர்ந்த நேயமாகவும் கங்கையினுடைய சாபம் போலும் உடலைவிட்டு உயிரானதுபோகும் இது திரும்புவது அரிதாகும் பாரென்பர் (எ-று.) (32)

பிணிகோண்ட மரணகால ச-ம் விநாடியின் பலன்.

254. அரிதாகும் மரணம் நான்காம் விநாடி
அப்பனே ஐடலம் அழிக்கவந்த நோயாம்
பெரிதாகும் சத்துருநாள் மரணவேளை
பேணியே வரசுபகை யாகவேண்டும்
சரியான தினமரண மாகவேண்டும்
சண்டாள சூனியமும் சேரவேண்டும்

குறியாக அவன் ஜடலமழிந்து போகும்
குணமாக மாட்டாது வருத்தமாமே.

(இ-ள்.) மரணம் நான்காம் விநாடியில் தேகத்தில் பிணிகொள்ளில் அது சடத்தையழிக்கவந்த நோயாக விளங்கும் சத்துருநாளில் மரணஞ் சம்பவிக்கும் அரசு பகையாக விருக்கவேண்டும் தினம் மரணவேளையாக வேண்டும் அதில் சூனியமுஞ் சேரவேண்டும் இவ்விதமாக விருக்கில் சடலமானது அழிந்துபோகும் குணப்படமாட்டாது வருத்தமாகும் ()

பிணிகோண்ட மரணகால ரு-ம் விநாடியின் ப்லன்

255. வருத்தமடா மரணமைந்தாம் விநாடிதன்னில்
மக்களே உடலழிந்த வந்தநோய்கள்
கருத்தனடா பிதாவான பிரமன்சேர்ந்த
கணக்கென்ற தொகை சரிதா னினிவேறில்லை
விருத்தனென்ற காலனவன் தானேவந்தால்
வேணபடி பட்டதினல் வருவதேது
மருத்தொருசொல் சொல்லாது உயிர்போம்போது
வாழ்க்கையென்ன ஆசையென்ன வருமோபாரே.

(இ-ள்.) மரணம் ஐந்தாம்விநாடியில் நோய்கொள்ளில் உடலையழிக்க வந்த பிணியாகும் பிரமதேவள் எழுதிய கணக்கு சரியாகும் வேறொன் றும் யோசிக்கவேண்டுவதில்லை காலனுனவன் வரும்போது வேணபடி யாகப் பாடுபடினும் பிராணன் திரும்புவதேது உயிர் நீங்கும்போதுமறுத் தொருமொழியும் புகலமாட்டாது வாழ்க்கையும் ஆபாசமும் வாராது.

பிணிகால அளவு.

256. வருமென்ற பிணிகால அளவு சொல்வேன்
வழியான ஊண்தனக்கு மாசமொன்று
குறுகியதோர் நடைதனக்கு காலமப்பா
குலாவியதோர் மாசங்கள் ஆறதாகும்
தருமமிகு வரசாட்சி தனக்கோ என்னில்
தன்மையுள்ள பட்சமொன்ருய்ச் சார்ந்துநிற்கும்
மருமமில்லை தூக்கத்தின் காலம்மைந்தா
வருஷமொன்ரு மிதில்மிகுந்து வாழலாமே.

(இ-ள்.) பிணியின் காலவளவு சொல்லுவேன் கேட்பாயாகவும், ஊணில் மாதம் ஒன்ருகும், நடையாகில் அதற்குக் காலம் மாதம் ஆரு கும் அரசாகவிருக்கில் அதற்குப் பட்சம் ஒன்ருக நிற்கும் நித்திரையின் காலம் வருடம் ஒன்ருகவிருந்து வாழ்குவர் (எ-று.) (35)

இதுவுமது.

257. வாழாத மரணத்தின் காலம்கேளு
மகிழ்ச்சியில்லை வருஷமது மூன்றதாகும்
கேளாத பிணிக்காள காலம் ஈராம்
கெடுதியாய்ச் சூனியம் உற்றிருந்ததாலே
மாளாத வரசுபகை யானதோஷம்
மக்களே ஒன்றுபத்தாய் வளரும்பாரு
ஆளாக வருள்செய்யும் மாமுனிவன் வாக்கால்
அறிந்தபடி யறிவித்தேன் திண்ணமாமே.

(இ-ள்.) மரணத்தின் காலங் கேட்பாயாக அதற்குக் காலம் வருடம் மூன்றாகும் பிணிக்காகியகாலம் ஈறாகும் சூனியமுற்றிருக்கிலும் அரசு பகையான தோடத்தினாலும் ஒன்று பத்தாக வளரும் இவைகள் முனிவருரைத்த வாக்கின்படியாக அறிவித்தேன் வலிமையாக (எ-று.) (36)

இதுவுமது.

258. திண்ணமாம் ரோமரிஷி முனிவன்வாக்கு
திண்ணமென்று மனதுரிதியாகக்கொண்டால்
எண்ணமாம் காலமுழு தரியலாகும்
எடுத்ததொரு காரியமும் ஜெயமேயாகும்
வண்ணமாம் ஞானவிதி கைவசமேயாகும்
மகத்தான கன்மமெட்டும் பலிக்கும்பாரு
கண்ணதாம் வேளைகண்டு முடிக்கவேண்டும்
கண்மணியே சாந்திசொல்வேன் கருதிப்பாரே.

(இ-ள்.) வலிவுபொருந்திய ரோமரிஷியாகிய முனிவருடையவாக்குத் திண்ணமென்றும் மனதுறுதியாகக் கொண்டிமிருக்கில் காலமுழுதும் அறியலாகும் எடுத்தகாரியங்கள் செயமாகும் ஞானம் கைவசமாகும் கன்மங்கள் எட்டும் பலிதமாகும் இவைகளை வேளையானது கண்டு முடிக்கவேண்டும் இனி சாந்திசொல்லுவேன் கேளும் (எ-று) (37)

சாந்திப்போது.

259. பாரடா பாரிலுள்ள மாந்தர்கையா
படருமொரு பிணியதுதான் விலகுதற்கு
நேரடா சாந்திசெய்தால் தீரும்பாரு
நேர்மையுள்ள பீடையது தீரவிட்டால்
சாரடா பாரைதனில் பாசிபற்றி
தள்ளுவதுபோல் சுறுக்கி சரீரம் நோகும்
ஏரடா தொடுத்திது கனம்பீடை
என்மகனே அரிவாகும் ஊணைக்கேளே.

(இ.ள்.) பாரின்கண்ணுள்ள மாந்தர்களுக்கு தோன்றும் நோயானது விலகுதற்கு சாந்திசெய்யில் தீரும் அப்படிக்குப் பீடையானது தீராவிட்டால் அது பாறையின்மீது பாசைபற்றிச் சறுக்கித் தள்ளுவது போல் சுருக்கிச் சரீரம் நோவும் இதுதொடுத்தது கன்மபீடையாகும் அறிவாகிய ஊணைக்கேளுமென மேலோராகிய ரோமரிஷி மகாமுனிவர் அருளிச்செய்தனர். (எ-று.) (38)

ஊண் காலப்பிணிக்குச் சாந்தி.

260. ஊணென்ற பட்சியினால் வரும்நோய் தீர்க்க
உத்தமனே கணபதியை நிறுத்தி மைந்தா
வேணமட்டும் வெள்ளைமலர் சாத்திநின்று
மென்மேலும் உபசாரத்துடன் வணங்கி
ஆனென்ற ஓம் ஸ்ரீம் ஹரிங் ரீம் சங் உச் என
ஐயும் கிலீம் கணபதி சர்வசாப
வாணென்ற மசிநசி எனவே மைந்தா
மனதொரு மித்தாயிரத் தெட்டுருத்தான் ஓதே.

(இ-ள்.) ஊண்பட்சியினால் வாய்ந்த நோயானது தீர்க்கச்சாந்தி யாதெனில் விநாயகக்கடவுளை நிறுத்தி வெள்ளைமலர்கள் சாத்தி கை கட்டி வாய் பொத்தி வணங்கி ஓம் ஸ்ரீம் ஹ்ரீங்ரீம் சங் உச்சன ஐயுங் கிலியும் கணபதி சர்வசாபமும் மசி நசி என்று ஒருமனதாக ஆயிரம் உரு சபித்தல் வேண்டும் (எ-று.) (39)

இதுவுமது.

261. உருவான அதன்பிறகு கும்பம்வைத்து
ஒருபடி நெல்பரப்பி அருகோணமிட்டு
திருவான காரணபஞ் சாட்சரம்கீறி
செயமான காரியபஞ்சாட்சரமுஞ் சேர்த்து
ஒருவான சக்கரத்தில் சூலம்விட்டு
ஓம அம் உம் சிவ சிவா என்றுநாட்டு
தருவான கும்பத்தில் சலம் நிரைத்து
தண்மையுள்ள மாவிலையை யதன்மேல் வையே.

(இ-ள்.) மேற்கூறியவண்ணம் உருக்கொடுத்த பின்பு கும்பம்வைத்து ஒருபடி பச்சைநெல்லைக் கொட்டிப் பரப்பி அறுகோணச்சக்கரம் போட்டு அதில் பஞ்சாட்சரத்தைக்கீறி அதில் காரியபஞ்சாட்சரத்தையுஞ் சேர்த்து சக்கரத்தில் சூலம்போட்டு அதில் ஓம் அம் உம் சிவ சிவா என்று நாட்டி கும்பத்தில் சலம் நிரைத்து மாவிலையை அதின்மேற் சொருகிகேளும்.

இதுவுமது.

262. வைத்தபின்பு அதன்மேலே தேங்காய் வைத்து
வாகான நூல்சுற்றி ஆடைசாற்றி
வைத்தவொரு கும்பத்தின் முன்னே ஐயா
வஸ்துவுடன் சத்தியும்தான் வைத்துமைந்தா

நெய்த்ததொரு வர்க்கவகை மிகப்படைத்து
நேரிருந்து ஓம் ஐயும் கிலியும் சௌவும்
தைத்ததொருபாணமட ா அங் உங் கென்று
சர்வபீடைகளும் மசி நசி யென்றோதே.

(இ-ள்.) மேற்கூறியபடி மாவிலைவைத்து அதின்மேல் தேங்காயை நிறுத்தி அதற்கு நூல்சுற்றி ஆடைசாத்தி வைத்திருக்கும்படியான கும்பத்திற்கு முன்னே வத்துவும் சத்தியும் வைத்து பழவர்க்கங்கள் படைத்து எதிராக நின்று ஓம் ஐயும், கிலியும் சவ்வும் ஒரு மனதாக அங் உங் என்றும் செபித்து சர்வ பீடைகளும் மசி நசி யென்று ஓதவும். (41)

இதுவுமது.

263. ஓடாதே ஆயிரத்தெட் டுருவுவானால்
உத்தமனே ஓமகுண்டம் இரண்டுபோடு
வாடாத சமித்துவகை சொல்லக்கேளு
வன்னிமுன் அரசுருகி தர்ப்பை நெல்லு
ஏடாதே ஆவின்நெய் ஆகுதிகள் செய்து
என்மகனே குண்டத்திற் குபசாரம்செய்து
கோதிலா அட்சரத்தைச் சொல்லக்கேளு
குணமாக முதலுரைத்த தெடுத்து ஓதே.

(இ-.ள்) மேற்கூறியபடி ஆயிரத்தெட்டு உருவு ஓதியவுடன் ஓமகுண்டம் இரண்டும்போடும் சமுத்து வகைகள் சொல்லக்கேளும் வன்னி அரசுதர்ப்பை நெல்லு ஆவினுடைய நெய் இவைகள் ஆகுதிகள் செய்து குண்டத்திற்கு உபசாரஞ்செய்து கோதிலாத அட்சரங்களைச் சொல்லக் கேளும் முதலாக உரைத்ததை எடுத்தோதவும் (எ-று.) (42)

இதுவுமது.

264. ஓதியதோருரு ஐயாயிரமானால்
உத்தமனே பெலியுடனே பொங்கலிட்டு
கோதில்லாமல் எல்லாம் குடத்தில்போட்டு
குடத்துநீ ரவன்சிரசில் விடுக்கும்போது
ஆதிதனைச் சிவசிவா யெனநினைத்து
அப்பனே அபிஷேகம் செய்துபாரு
நீதியாம் நாளதுதான் பதினொன்றானால்
நிலையாது பீடையெல்லாம் விலகும்பாரே.

(இ-ள்.) ஓதிய உருவானது ஐயாயிரமாகில் அதின்பிறகு பலி கொடுத்து பொங்கலிட்டு பின்பு குடத்தில் தர்ப்பை முதலானதும் போட்டு அந்த குடத்திலிருக்கும் நீரை நோயாளியின் சிரசில் விடும் போது ஆதிக்கடவுளாகிய பரமசிவனை சிவ சிவா வென்று நினைத்து அபிடேகஞ் செய்து பார்க்கில் பதினொரு நாளைக்குள்ளாக பீடையாவும் விலகிப்போகும் (எ-று.) (43)

இதுவுமது.

265. விலகுமே வெள்ளியினால் தகடுசெய்து
வியாதி உச்சாடனம் விதித்தெழுத்தை மாறி
கலகமில்லா தேவியென்ற வாலைபூசை
கைபாகம் தப்பாமல் கனிந்துசெய்து
நிலையான முன்தகட்டை முன்புவைத்து
நிகழ்ந்து உச்சாடனம் உரு ஆயிரத்தெட்டேயானால்
விலகாமலிருந்திட்ட பீடைபோச்சு
மென்மேலுங் கன்னிக்கு உபசாரஞ் செய்யே.

(இ-ள்.) விலகும்படியாக வெள்ளியினால் தகடுசெய்து வியாதியின் உச்சாடனமாக விதித்த.எழுத்தை மாறி கலகம் விலக தேவியாகிய வாலை பூசை கைபாகந் தவிராமல் செய்து முனபு எழுதிய தகட்டை முன்பாக வைத்து உச்சாடனம் உரு ஆயிரத்தெட்டு சபித்தானபின் விலகாதிருந்த பீடையானது போகும் மென்மேலாக உபசாரஞ் செய்குவாய் (எ-று)

நடை காலப்பிணிக்குச்சாந்தி.

266. செய்துபார் நடையதனிற் பீடைவருமாகில்
தீர்ப்பதற்கு விநாயகரை வைத்துக்கொண்டு
கொய்துபார் குண்டமிரண்டு கும்பம்வைத்து
கூறுன சமித்துவகை சொல்வேன் மைந்தா
நைவான அரசுவன்னி யறுகுதர்ப்பை
நல்லவிளா மரசுபலா கருங்காலிச்சுப்பல்
நெய்வான நெற்பொரியும் கடலைமொச்சை
நேராகக் கலந்துகொண்டு குண்டம்போடே.

(இ-ள்.) நடைப்பட்சியில் பீடை வருமாகில் அதற்குச் சாந்தி யாதெனில் விநாயகக்கடவுளை நிறுத்தி குண்டமென்னும் இரண்டு கவசம் வைத்து சமுத்தின்வகை சொல்வேன் கேளும் அரசுவன்னி அறுகு தர்ப்பை விளா பலா கருங்காலி இவைகளின் சுப்பலும் நெற்பொறி கடலை மொச்சை இவைகளைக்கலந்துகொண்டு குண்டமானது போட்டுக் கேளும்

இதுவுமது.

267. போடவே ஆவின்நெய் இலுப்பைநெய்யும்
புண்ணியனே யிரண்டுமொன்றாய் கலந்துகொண்டு
நாடவே யெக்கியத்தில் ஆகுதிகள்செய்ய
நல்லதொரு அட்சரத்தைச் சொல்லக்கேளு
ஆடவே ஓம் ஸ்ரீம் ரீம் அங் உங் என
ஐயுங் கிலியுங் கணபதி சர்வபீடா
தேடவே சித்தியென்று பதினையிரந்தான்
செலுத்துவாய் பொங்கல்பெலி உபசாரஞ் செய்யே

(இ-ள்.) குண்டம்போட்டு எரிகின்ற தீயினில் பசுவின்நெய்யும் இலுப்பை நெய்யும் ஒன்ருய்க்கலந்துகொண்டு எக்கியத்தில் ஆகுதிசெய்ய வேண்டும் அதற்குரிய அட்சரத்தைக்கேளும் ஓம் ஸ்ரீம் ரீம் அங் உங் என் றும் ஜயம்கிலியும் கணபதி சர்வபீடா அகன்றுபோக பதிஞயிரம் உரு சபித்துப் பொங்கலிட்டு பலிகொடுத்துபசாரஞ் செய்குவாய் (எ-று.)(46)

இதுவுமது

268. செய்துகொண்டு குண்டத்தின் சாம்பலெல்லாம்
திரணமும்தான் போகாமல் கும்பத்தில்போட்டு
பெய்துநீர் குளுப்பாட்டி சுவாயென்றேதான்
பிரியமுடன் சிவன்பாதம் பெரிதும்போற்றி
செய்துகொண்டு ரவித்தகடு அதனில்மைந்தா
திரமான தம்பனத்தை எழுதிக்கட்டு
வைதுகொண்டி போகுமடா நடையின்பீடை
மக்களே பதிஞறுநாள் செய்துபாரே.

(இ-ள்.) செய்தபின்பு குண்டலத்திலுள்ள சாம்பல் யாவையும் கொஞ்சமும் விடாமல் எடுத்துக் கும்பத்தில்போட்டு அந்த நீரை நோயா ளியின் சிரசில்விட்டு குளிப்பாட்டி சிவாயவென்று சிவபிரானுடைய பாத கமலங்களைப்போற்றி ரவித் தகடுகொண்டுவந்து அதனில் தம்பனத்தை எழுதிக்கட்ட நடையினில் தோன்றிய பீடையானதுபோகும் ஆனல் பதிஞறுநாள் செய்து பார்க்கவேண்டும் (எ-று.) (47)

அரசு காலப்பிணிக்குச்சாந்தி

269. செய்யவே வரசுதனில் பீடைவந்தால்
திடமான கணபதியை வைத்துப்போற்றி
நெய்யவே கும்பத்தை முன்னேவைத்து
நேர்முகமாய் வாலேதனைப் பூஜைசெய்து
கொய்யவே குண்டமது இரண்டுசெய்து
கொளுத்த சமுத்துவகை சொல்வேன்மைந்தா
நைவான வரசு சந்தனமேயாகும்
நன்மையுள்ள நெற்பொரி காராவின் நெய்யே

(இ-ள்.)அரசுபட்சியாகவிருக்கின் பீடையானது தோன்றில் அதற்கு சாந்தியாதெனில் கணபதியைவைத்துப்போற்றி கும்பகலசம் முன்னுக வைத்து வாலையைப்பூசித்து குண்டம் இரண்டாகசெய்துவைத்து கேளும் கொளுத்தும்படியான சமுத்துவகைசொல்வேன் அரசுசந்தனம் நெற் பொறி இவைகளை எறிந்து அதில் பசுநெய் விடவேண்டும் (எ-று.) (48)

இதுவுமது.

270. நெய்யான ஆகுதிகள் செய்துக்கொண்டு
நேரிருந்து ஐயாயிரம் நீபோடு
துய்யாத பலியுடனே தூபம்காட்டி
தோணவே சாம்பலெல்லாம் கும்பத்திட்டு
கையாலே பிணியாளன் தலைமேல்விட்டு
கருணையுள்ள சிவன்பதத்தைக் கருத்தில்வைத்தால்
மெய்யவே வருகின்ற பிணிகள் ஒடும்
மேலான சுவர்னத்தால் தகடுசெய்யே.

(இ-ள்.) நெய்யைவிட்டு ஆகுதிகள்செய்துக்கொண்டு நேராகநின்று உருவானது ஐயாயிரம்போட்டு பலியானதுகொடுத்து தூபங்காட்டி பின்பு ஓமத்தின் சாம்பல்கள்யாவும் கும்பத்திலிட்டு பிணியாளனுடைய சிரசில் கையால்விட்டு சிவபிரானுடைய பத்தியைக் கருத்தில்வைத்து ஒரு மனதாகச் செய்யில் வருகும்படியான பிணிகள்யாவும் பறந்தோடிப் போகும் சொர்ன தகடுசெய்துக்கேளும் (எ-று.) (49)

இதுவுமது.

271. தகடதிலே மசியெழுத்தை வரிந்துகொண்டு
தப்பாமல் நாளேழு பூசைசெய்து
விகடமிதில்லாமல் போடும்போது
மேலான பீடையெல்லாம் விலகிப்போகும்
சகடமிதில் சிவன்கிருபை மெத்தவுண்டு
தரணிதனில் அறிந்தவர்கள் வணங்கிப்போற்றி
அகடில்லாது துலகதனில் வாழ்வார்பாரு
ஆதலினல் பீடையதில் விலகும்பாரே.

(இ-ள்.) மேற்கூறியபடி தகடுசெய்து அதில் மசியென்ற எழுத்தை எழுதிக்கொண்டு தவறாமல்படிக்கு நாள் ஏழும் பூசையானதுசெய்து விகடமானது இல்லாமற்போடும்போது இடிபோல்வந்த பீடைகள்யாவும் விலகிப்போகும் சிவபெருமானுடைய கிருபையானது மெத்தவுண்டாகும் இதனையறிந்தவர்கள் வணங்கிப்போற்றி அகடானதுயில்லாமல் உலகின்கண் வாழ்வார்கள் இதினல் பீடையானது விலகுமென்பர். ()

நித்திரை காலப்பிணிக்கு சாந்தி.

272. பாரடா உறக்கத்தில் வரும்பீடைதானே
பதிவிடுத்து விலகுதற்கு பக்குவம்கேளீர்
நேரடா வைப்புதிசை வைத்துக்கொண்டு
நேர்முகமாய் வாலையின்முன் குப்பம்வைத்து

ஓரடா ஓமகுண்டம் நாள்தான்போக
உத்தமனே சமுத்துவகை உரைப்பேன் ஐயா
கோரடா பாலரக அத்தி இத்தி
குலவியதே வன்னிமுன்னே உருவிஎள்ளே.

(இ-ள்.) நித்திரைப்பட்சியில்வருகும்படியான பீடையானது தேகத்தைவிட்டு விலகப்பக்குவம்சொல்வேன் கேட்பாயாகவும், அப்புவின் திசையாகவிருந்து அதற்கு நேர்முகமாக வாலையின்முன்னாக கும்பகலசம் நிருத்தி ஓமகுண்டமானது வளர்த்த சமுத்துவகைகள் சொல்வேன் கேளும் பாலை, அரசு, அத்தி இத்தி வன்னி முன்னி நாயுருவி எள்ளும்.

இதுவுமது.

273. எள்ளுடனே நவதான்யம் நெற்பொரியும்சேர்த்து
என்மகனேயாவின்நெய் இலுப்பைநெய்யும்
தெள்ளுடனே தேங்காய்நெய் கலந்துகொண்டு
தெற்பையினாற் கோரிவிடும் உருஎருமட்டும்
அள்ளுடனே ஓம் ரீம் கிலியும் ஐயும் சௌவுமென்று
அப்பனே ஸ்ரீம் ஹிரீம் அங் உங் சிவ என்று
கிள்ளுடனே சர்வபீடை மசிநசி என்று
கெட்டியாக எழுபதினாயிரம்தான் போடே.

(இ-ள்.) மேற்கூடிய எள்ளுடன் நவதானியமும் நெற்பொறியுஞ் சேர்த்து எக்கியமானது வளர்த்தி ஆவின்நெய்யும் இலுப்பன் நெய்யும் தேங்காய்நெய்யும் ஒன்றாகக்கலந்துகொண்டு தைத்துகொண்டு தெர்ப்பையினால் எடுத்துவிட்டுக்கொண்டு வருவாய் உருவானது எருமட்டும் ஓம் ரீம் கிலியும் ஐயும் சௌவும் என்றும் சொல்லிப்பிறகு சர்வப்பீடையும் மசிநசி யென்று எழுபதினாயிரம் உருசெபிக்கவேண்டுமென்பர் (எ-று.) (52)

இதுவுமது.

274. போடடா குண்டமொன்றில் தம்பனம்தான்
புகழான மற்றொன்றில் பேதனம்தான்
கேடடா வித்வேஷணம்தான் மூன்றில்
கெடியான நான்கிவிடும் பேதனம்தான்
நாட்டா பெலியுடனே தூபங்காட்டி
நலமான குண்டத்தில் சாம்பல்வாறி
கேடடா கும்பத்தில் விடுத்துமைந்தா
குளுப்பாடச் சிவன்தனக்கு அபிஷேகம்செய்ய

(இ-ள்.) மேற்சொன்னப்படி போட்டு குண்டம் ஒன்றில் தம்பனமும் மற்றொன்றில் பேதனமும் மூன்றாவதில் வித்வேஷணமும் நான்கில்

பேதனமும்போட்டு அடைத்து பெலியானதுகொடுத்து தூபங்காட்டி சாம்பலை கும்பகலசத்திலிட்டு அந்த நீரில் பிணியாளனை குளிக்கவைத்து சிவபிரானுக்கு அபிஷேகஞ்செய்துவைக்கவும் (எ-று.) (53)

இதுவுமது.

275. செய்யவே ரவிமதியும் சேர்த்துக்கொண்டு
திரமாகத் தகட்டில் உச்சாடனம்தான் கீறி
எய்யவே பிணியாளன் தனக்குக்கட்டி
ஓடிவிடும் பீடையென்ற தோஷமெல்லாம்
துய்யவளாம் கன்னிக்கு உபகாரஞ்செய்ய
சொற்பெரிய வேதியர்க்கு உபகாரஞ்செய்
வையகத்திலிவைகளெல்லாம் நன்றுநன்றாய்
மக்களே மண்டலம்தான் அரையச்செய்யே.

(இ-ள்.) சூரியன் சந்திரன் இவர்களைச் சேர்த்துக்கொண்டு தகட்டில் உச்சாடனத்தைக்கீறிப் பிணியாளனுக்குக்கட்ட ஓடும் பீடையாகிய தோஷங்கள்யாவும் கன்னிகைக்கும் வேதியர்களுக்கும் ஆனால் ஒருமண்டலம் வரைக்குஞ் செய்கவேண்டும் (எ-று.) (54)

மரணகாலப்பிணிக்கு சாந்தி.

276. செய்யடா மரணத்தின் பீடைவருமாகில்
திரும்புவது வருத்தமடா சிவன்செயலேவேண்டும்
துய்யவனும் கணபதியை வைத்துப்போற்றி
தொடுத்திடுவாய் வாலையிடம் கும்பம்வைத்து
மெய்யான ஓமகுண்டமும் எட்டுபோடு
விளம்புகின்ற சமித்துவகை சொல்வேன்மைந்தா
ஸைதஅரசு அத்தி இத்தி உருவிவன்னி
தனதான கருங்காலி மாவின்கொம்பே.

(இ-ள்.) மரணப்பட்சியின்காலம் பீடையானது சம்பவிக்குமாகில் அது திரும்புவது வருத்தமாகும் சிவன் செயலாகுமென்ன வேண்டும் அதற்கு கணபதியை வைத்துப்போற்றி வாலையினுடைய கும்பம்வைத்து ஓமகுண்டமானது எட்டுயிட்டு சமுத்துவகைசொல்வேன் சேட்பாயாக அரசு அத்தி இத்தி நாயுருவி வன்னி கருங்காலி மாவின்கொம்பு (எ-று.)

இதுவுமது.

277. கொம்புடனே புரசுசுப்பல் நெல்லிசுப்பல்
கோர்வையாய் நவதான்யம் பொறியுங்கூட்டி
அன்புடனே வேதைநெய்யும் செம்மறியின்நெய்யும்
அப்பனே இலுப்பைநெய்யும் தேங்காய்நெய்யும்

தென்புடனே புன்னைநெய்யும் புங்கன்நெய்யும்
தெளிவான வேம்பின்நெய் பன்றிநெய்யும்
இன்புடனே கேசரியின் நெய்யுங்கூட்டி
எடுத்திடுவாய் எக்கியத்தில் இனிதாம்பாரே.

(இ-ள்.) புரசு நெல்லி நவதானியம் நெற்பொறி இவைகளை ஒன்றாகக் கூட்டி வைத்துக்கொண்டு எக்கியமானதுவளர்த்தி அதில் பசுநெய் செம்பிலி ஆட்டுநெய் இலுப்பைநெய் தேங்காய்நெய் புன்னைநெய் புங்கம்நெய் வேப்பன்நெய், பன்றியின்நெய் கேசரியின்நெய் இவைகளை ஒன்றாய்க்கூட்டி எக்கியத்தில் விட்டுவரவேண்டும் (எ-று.) (56)

இதுவுமது.

278. பாரேநீ குண்டமெட்டில் கன்மமெட்டு
பரங்காக ஜபம்பதினாயிர மேயானால்
வாறேநீ நினையாத பொங்கல்பெலிதூபம்
வேணதும்செய் தெரிந்ததனைக் கும்பத்திட்டு
நேரேநீ நின்றுசதா சிவத்தைப்போற்றி
நீர்கொண்டு அவன்சிரசில் அபிஷேகித்தால்
சோராமல் மண்டலம் ஒன்றிவ்வண்ணம்தான்
தொடர்ந்துநின்ற தோஷமெல்லாம் விலகும் பாரே.

(இ-ள்.) குண்டமானது எட்டு கன்மமானது எட்டு இதற்கு ஜெபம் பதினாயிரம் ஜெபிக்கவேண்டும் பிறகு பொங்கலிட்டு பெலியானது கொடுத்து தூபமானதுகாட்டி வேணதுஞ்செய்தெரிந்து அதைக்கும்பத்திலிட்டு சதாசிவத்தைப்போற்றி அந்நீரை பிணியாளன் சிரசில்விட்டு அபிஷேகஞ் செய்வித்து வரவேண்டும் இவ்வண்ணமாக ஒரு மண்டலம் செய்துவரில் தொடர்ந்திருக்கும்படியான பிணிகள் யாவும் விலகிப் போகும் (எ-று.) (57)

இதுவுமது.

279. விலகுமே இவ்விதத்தால் வந்ததோஷம்
வேறென்னும் இவ்வண்ணம் சாந்திதானே
சலனமில்லை செய்துகொண்டால் நீங்கும் நீங்கும்
தரணிதனில் சவுக்கியமாய் வாழலாகும்
இலகுவதாயென்னசெய்யப் போகுதென்று
எளிதாக நினைத்துவிட்டால் இழுத்துக்கொல்லும்
அலையவேபிரமலபி உள்ளமட்டும்
அலக்கழிக்கும் பீடையின்னம் தோணும்பாரே.

(இ-ள்.) மேற்கூறிய வண்ணம் செய்துவரில் தோஷமானது விலகும் பூமியின்மீது சவுக்கியமாக வாழ்குவர் இந்த நோயானது என்ன

செய்யப்போகிறதென்று எளிதாக நினைத்துவிடில் அதுபாதையானதுச் செய்து கொல்லும் பிரமதேவனுடைய லபியானது உள்ளமட்டும் அலங் கோலப்படுத்தும் பீடையானது தோணும் (எ-று.) (58)

இதுவுமது.

280. தோணுமே உலகிலுள்ள பசாசர்க்கெல்லாம்
தோணுதுபஞ்சபட்சி சூட்சமப்பா
காணுமோகருக்கிடையும் கருமானம்தான்
கருணைவைத்து ஆசானேகாட்டவேண்டும்
பேணவேமனதுருகி ஆகவேண்டும்
பிசகினல் பஞ்சபட்சி பிசிகிப்போகும்
ஆணவே அட்சரங்க ளறியவேண்டும்
அறிவதென்று லறிதாகும் உரைப்பேன் ஊணே.

(இ-ள்.) பூமியினுள்ள பசாசுகளெல்லாம் தோணுவது பஞ்சபட்சியின் சூட்சமாகும் கருக்கடையும் கருமானமும் கருணையானதுகூர்ந்து ஆசான்காட்டவேண்டும் மனமானது அதின்பேரில்வைத்து ஆகவேண்டும் அதில் பிசகினல் பஞ்சபட்சிசாஸ்திரம் பிசகிப்போகும் அன்றியும் அதற்குறிய அட்சரங்களை அறியவேண்டும் அப்படிக்கு அறிவதென்றல் அறிதாகும் உரைப்பேன் ஊணே (எ-று.) (59)

பிணிப்படலம் முற்றிற்று.

உ

கடவுள் துணை.

யாத்திரைப்படலம்.

பொதுவிதி.

யாத்திரைக்கு ஊண்காலபலன்.

281. ஊணதிலே வழிப்பயணம் புறப்பட்டால்தான்
உத்தமனே உடலிலொரு பிணியுமில்லை
தோணவே போசனங்கள் வர்க்கவகையுண்டு
சொல்லறிய தோழருடன் பிறப்பு உறவாகும்
தாணுவாய் தன்னிடத்திற் பொருளுடைமைசேரும்
சஞ்சலங்கள் மனத்திற்குச் சற்றுமில்லை
மாண்புடைய வரசன்தான் சத்துருவேயானல்
வழிநடையில் துயரம் மெத்த வழுத்தலாமோ.

(இ-ள்.) தனதுபட்சி ஊணுகவிருக்க அப்போது யாத்திரையாக ஊர்ப்பயணம்போகில் தேகத்தில் பிணியானது நாடாது போசனமும் வர்க்கவகையுமுண்டாகும் தோழர்க்கூடன் பிரபுக்கள் உறவாகும் தன் வசமாகப் பொருளும் உடைமையுஞ்சேரும் சஞ்சலமானது மனதில் சற்று மிராது அதில் அரசபட்சி சத்துருவாகவிருக்கில் பயணத்தில் துயரமானது நேரும் (எ-று.) (1)

இதுவுமது.

282\. வழுத்தவே உடல்தனக்கு வருமமுண்டாகும்
வகையான போசனங்கள் வாய்த்திடாது
கொளுத்துமோர் சிறுகுசண்டை களவுமாகில்
கொடுமையாய் உறவினரை அகற்றிவைப்பான்
தழைத்ததோர் மனதிற்கு எள்ளளவேனும்
சந்தோஷம் சலனமல்லால் சற்றுமில்லை
சுழித்ததோர் சத்துருவின் வலிதாகாது
துணையான மித்துருவின் வலிதுநன்றே.

(இ-ள்.) சொல்லும்படியாக தேகத்திற்கு வலுவுண்டாகும் இஷ்டமான போசனங்கள் அகப்படமாட்டாது சிறுகும்சண்டையும் களவும் நேரும் உறவில்பகையாகி அகற்றிவைப்பான் மனதிற்கு எள்ளளவேனும் சந்தோஷமில்லை சஞ்சலமானதுபெருகும் இதில் சத்துருபட்சியின் வலிவானதாகாது துணையாகும்படியான மித்துருபட்சியாகவிருக்கில் வலிவானது செய்கும் நன்மையாகும் (எ-று.) (2)

யாத்திரைக்கு நடைகாலபலன்.

283\. நன்றல்லநடையிலே போகொண்ணுது
நடைந்தலைவதல்லாது மற்றொன்றில்லை
பண்டுறவாயிருந்தவரும் பகைவராவர்
பசிநேரம் பொசிக்குமிந்தப் பலனுமில்லை
வண்டியாம் கூந்தல்நல்லார் சோர்வுமில்லை
வழக்குகளிற் சென்றாலும் வெல்வதில்லை
கொண்டமனையாட்டியுடன் கொடுமைமெத்த
கூற்றனென்ற சத்துருஊண் அரசர்காலே.

(இ-ள்.) தனது பட்சியானது நடையாகவிருக்கும்போது ஊர்ப்பயணம் போகவொண்ணுது அப்படிக்குபோகில் நடந்து அலைவதேயன்றி யாதுகாரியமுமாகாது பழமையாகிய சினேகிதமாயிருந்தவர்கள் பகையாகுவர் பசிநேரத்திற் பொசிப்பானது கிடைக்கமாட்டாது மாதர்களுடைய சோர்வானதுமில்லை வழக்கு எடுத்துச்சென்றாலும் வெல்லமாட்டாது தன்னுடைய மனைவியால் கொடுமையானது மெத்தவிளையும் எமனைப்போல் நேரும் சத்துரு ஊண் அரசாகயிருக்கலாகாது (எ-று.) (3)

இதுவுமது.

284. அரசனும்மித்துருதான் இருந்தால்நன்று
அலைந்தாலும் பொசிப்புக்கு இனமுண்டாகும்
சிரசபுரி வந்ததொரு பீடைதன்னை
சிலகுதன்னை நீக்கிவைப்பான் சிணத்திலேதான்
சரசமில்லை உறவதனிற் சொர்ப்பலாபம்
சரீரத்தில் பிணிவந்து தானேநீங்கும்
பரிசமென்ற மணமதுதான் செய்யொண்ணது
பகைவந்து ஒருபோது வாழார்பாரே.

(இ-ள்.) அரசுபட்சியானது மித்துருவாகவிருக்கில் மிகவும் நன்மையாகும் அலச்சல்படினும் பசிவேளைக்கு போசனமானதுகிடைக்கும் தேகத்தினீடமாக தோன்றியப்பீடையும் சிலுகையும் நீக்கிவைப்பான் ஒரு க்ஷணநேரத்தில் தானும் சரசமானதுயில்லை உறவின்முறையாறில் சொர்ப்பலாபங்கிடைக்கும் சரீரத்தில்வந்த பிணியானது நீங்கும் மணமானது செய்க ஒண்ணது அப்படிச்செய்யில் பகையானதுவந்து வாழார் (எ-று.)

யாத்திரைக்கு அரசின்காலபலன்.

285. வாழ்வான அரசுதனிற் பயணமானல்
மனதிற்கு எள்ளளவேனும் பீடையில்லை
கேளீமாம் உறவினர்கள் ஆனந்தங்கோடி
கெடியான போக போக்கியங்களுண்டாம்
மாளாத சத்துருக்களின வழக்கும்வெல்லும்
மணம்செய்ய நன்ருகப் பெருகிவாழ்வார்
ஏழ்மையில்லாப் பொருளுடன் வஸ்திரங்களுண்டு
இன்பமுண்டரசனிட இணங்கப்பாரே

(இ-ள்.) தனதுபட்சி அரசாக விருக்கில் ஊர்ப் பயணமானதுப் போகில் மனதிற்கு யாதொரு பீடையுமில்லை உறவின்முறையார்கள் அநேகமாக வந்து கூடுவார்கள் போகபோக்கியமுண்டாகும் சத்துருகளின் வழக்கானது வெல்லும் மணமானதுசெய்க நன்ருகப்பெருகிவாழ்குவர் ஆடையாபரணங்களுண்டாகும் ஏழ்மைப்படவைக்காது அரசர்களின் இன்பமுண்டாகும் (எ-று.) (5)

இதுவுமது.

286. பாரடா சொன்னதில் ஓர் பழுதுமில்லை
பகையில்லை பகைத்தபேர் ஜெயிப்பதில்லை
சேரடா பிறபுஉற வாகும்பாரு
சேர்க்கையுமே மெத்தவுண்டு மனமகிழ்ச்சியுண்டு
ஆரடாவாசனைத்தான் வெல்லப்போருர்
ஆராலும் கூடாது சுகமதிகமாகும்

நேரடா சத்துருவாயில்லா விட்டால்
நேர்ந்தபடி வெல்லுமது திண்ணம்தானே.

(இ-ள்.) மேற்கூறியபலனில் யாதொரு பழுதானதுமில்லை பகையுமில்லை அப்படி பகைத்தபேரும் ஜெயிக்கமாட்டார்கள் பிரபுக்களின் உறவானதுகூடும் நன்மையும் மனமகிழ்ச்சியுமுண்டாகும் அரசுபட்சியை எந்தப்பட்சியும் வெல்லமாட்டாது ஒருவராகிலும் இவன்தன்னை வெல்லமுடியாதாகும் சுகமானது பெருகும் சத்துருவில்லாதிருக்கில் மனதின்படி வெல்லுவது திண்ணமாகும் (எ-று.) (6)

யாத்திரைக்கு நித்திரைக் காலபலன்.

287. திண்ணமதரம் நித்திரையிற் சொல்லொண்ணுது
தீராதநோய்வரும் உண்ணல் தின்னலில்லை
வண்ணமதாம் முன்னுறவும் பகையதாகும்
வழக்குரவிற் சென்ருலும் சேதமாகும்
கண்ணனுமா யிருந்தாலும் வாராதுகண்டாய்
கடினமடா போனவர்கள் மீளார்மீளார்
முன்னமேபட்சியது உறங்கிற்றையோ
மூடர்களே சத்துரு ஊண் அரசாகாதே.

(இ-ள்.) தனதுபட்சி நித்திரையாகவிருக்கில் அப்போது ஊர்ப்பயணம் யாத்திரைபோகலாகாது அப்படிக்குப்போகில் தீராதநோயும் உண்பதற்கு அன்னமுமறிதாகும் உறவாகயிருந்தவர்கள் பகையாகுவார்கள் வழக்கெடுத்துப்போகில் சேதமானதுநேரும் எவ்வளவும் பலனுனது வராது ஊர்ப்பயணமாகப்போனவர்கள் திரும்பியும்வந்துசேரார்கள் நித்திரைப்பட்சியில் சத்துரு ஊண் அரசு ஆகாவாம் (எ-று.) (7)

இதுவுமது.

288. அரசாகில் சத்துருதான் கொடுமைமெத்த
அலக்கழிப்பான் மனம்புண்ணுய்நோகச்செய்வான்
சுரமான சூடுகொண்ட உடலும் காந்தி
சுழல்வண்டு சுழல்வதுபோல் துன்பம்மெத்த
பரமான வாபத்துக்காளுமாகி
பகைத்தவர்கள் நகைத்திடவே பழிகள்செய்வான்
சரமான பிரசண்ட வாய்வுகள்வே
சருகதுவும் பாம்பின்வாய் தவளையாமே.

(இ-ள்.) அரசாகச் சத்துருப் பட்சியிருக்கில் கொடுமையானது மெத்த விளவிக்கும், அலங்கோலமாகச்செய்யும், மனமானது புண்ணுய் விடும் சூடுகொண்ட உடல்போல் காந்தியாகி சுழல்வண்டு சுழல்வது போல் துன்பமானதுமெத்தவுண்டாகும் ஆபத்துக்காளாகியும் பகையாளி

கள் நகைக்கும்படியாகப் பழியானது செய்குவன் பிரசண்டவாயிவினில் அகப்பட்ட சருகுபோலும் பாம்பின்வாயிலகப்பட்ட தவளைபோலும் அலையும்படிசெய்கும் (எ-று.) (8)

யாத்திரைக்கு மரணகாலபலன்.

289. தவளையடா மரணத்திற் பயணமானல்
சத்துருதான் ஊணரச தாகிநின்றால்
கவலையென்ன இனிமேலும் சாவுதிண்ணம்
கைப்பொருள்போ மற்றொருவர் உதவியில்லை
கவலையால் மனம்கொதித்து நோகும்புண்ணாய்
சண்டாள சத்துருவின் பகையாகாது
சிவன்சொல்ல முனிவர்சொன்ன திதுதப்பாது
சென்றவர்கள் திரும்பிவரமாட்டார் பாரே.

(இ-ள்.) தனதுபட்சி வலிவாகவிருக்கில் மனமானது நினைத்தது போல் வந்துக்கூடாது, போனபொருளானது கைவசமாகமாட்டாது சிந்தையானதுநொந்து புண்ணாகி செடலமானது நோயாகும், மனத்துயரம்படுவது மல்லாமல் பழியானதுவந்தணுகும் ஆதலால் மரணகாலத்தில் யாதொரு காரியமும்செய்ய உத்தேசிக்கில் அது கூடிவராதாம் (எ-று.)

இதுவுமது.

290. மாட்டாத மரணத்தில் மித்துருவலிதானல்
மனம்நினைத்துப் போனதுபோல் வருவதில்லை
தேட்டமாம் பொருளதுகைச் சிக்கிடாது
சிந்தைநொந்து புண்ணாகிச் செடலம்நோயால்
பாட்டிலே மனத்துயரப்பட்டு நின்று
பதறுவதுமல்லாமற் பழிவந்தெய்தும்
நீட்டியதோர் மரணத்தில் யாதொருகாரியமும்
நினைத்தாலும் நீனிலத்திலாகாதுபாரே.

(இ-ள்.) தனதுபட்சி மரணமாகவிருக்கும்போதும் சத்துருபட்சி ஊண் அரசாகயிருக்கினும் ஊர்பயணம்போகில் கவலையானதுயில்லை மரணமானது திண்ணமாகும், கைப்பொருளானதுபோகும் தனக்கு ஒருவருடைய உதவியுமிராது மனமானது கொதித்து புண்ணாகும், சத்துருப்பட்சியின்பகையானது ஆகாது இது சிவனும் முனிவருஞ் சொன்னதிது தப்பாது இந்த வேளையில் ஊர்ப்பயணம்போனவர்கள் மீண்டுவாரார்கள்.

பொதுவிதி சிறப்புவிதி நிற்கும் வரலாறு.

291. ஆகாதே எதும்குறிக்கித் தெளிவாய்ச்சொன்னேன்
அப்பனே பகலொன்று சாமமொன்று

நோகாது யதைகுறிக்கி நாழிகையாய்ச் சொன்னேன்
நுணுக்கமாய் விநாடியில் நுவலக்கேளு
வாகா வகைவிபரமாகத்தானே
வளமாகப் பார்த்தறிந்து வரிசையாக
வேகாதபொருள்போல் ஞானமார்க்கம்
விள்ளாமல் விள்ளுமடா ஊணேக்கேளே.

(இ-ள்.) மேற்கூறிய பலன்கள்யாவும் தெளிவாகச் சொன்னேன் அதில் பகல் ஒன்றுக்கு ஜாமம் ஐந்தாகும் அதைக்குறிக்கி நாழியாகச் சொன்னேன் இனி விநாடியில் சொல்வேன் கேட்பாயாக கேட்டு விபரமாகத்தானும் பார்த்து உணர்ந்து வேதாகமப் பொருள்போல் ஞான மார்க்கமானது விளங்கும் ஊண் காலப்பலன் கேட்பாயாகவும் (எ-று.)

சிறப்புவிதி.

யாத்திரைக்கு ஊண்கால முதல் விநாடியின் பலன்

292. ஊண்கால அவனிமுதல் விநாடிதன்னில்
ஊர்ப்பயணம் யாவரேனும் போவாராகில்
சேணரிய பட்டணமும் பாற்சோறுண்டு
திரவியங்களுண்பரி ஜெனங்களுண்டு
மாணரிய மன்னருறவாகும்பாரு
மழையுண்டு மங்கள சோபனங்களுண்டு
வேணபடிநினைத்த காரியங்கள்கூடும்
மீளவும் பிணிவருவ தில்லைபாரே.

(இ-ள்.) தனதுபட்சி ஊண்முதல் விநாடியில் ஊர்ப்பயணமானது போகில் போகும்படியான பட்டணத்தில் பாலுஞ்சோறும் பொசிக்கக் கிடைக்கும், திரவியமுண்டாகும், பரிசனங்கள் உண்டாகும், அரசர்கள் உறவாகுவார்கள், மழையும்பெய்யும், மக்களும் விருத்தியடைகுவார், சோபனங்கள்கூடும், தான் அவ்விடம்விட்டு மீண்டுவருமளவும் நோயானது அணுகாது (எ-று) (12)

யாத்திரைக்கு ஊண்கால 2-ம் விநாடி பலன்.

293. பிணியில்லை ஊணிரண்டாம் விநாடிதன்னில்
பிரயாணம் செயில்நினைத்த தெல்லாமாகும்
கனிவர்க்கம்போசன வர்க்கங்களுண்டு
கலந்துரவாம் போசனங்கள் கடுகிக்கூடும்
வனிததெனும் வாணிபமாம் மகிழ்வும்மெத்த
வழிநடையில் அணியுண்டு ஆடையுண்டு
தனியான அரமித்துரு வாகநின்றல்
தான் நடத்தும்காரியந்தான் சொல்லவொண்ணுதே.

(இ-ள்.) ஊண் இரண்டாம்விநாடியில் பிரயாணமாகில் மனதில் நினைத்தவைகள்யாவுங் கைகூடும், கனிவர்க்கமும் போசனவர்க்கங்களு முண்டாகும், உறவானதுகூடும், வாணிபம் பலிதமாகும், மகிழ்ச்சியானது மெத்த உண்டாகும், பயணமாகப்போகையில் அணியும் ஆடையுங் கிடைக்கும், அரசுபட்சியானது மித்துருவாகயிருக்கில் தான் நடத்தும் படியான காரியங்கள் சொல்கவொண்ணுதாம் (எ-று.) (13)

யாத்திரைக்கு ஊண்கால ௩-ம் விநாடியின் பலன்.

294. சொல்லொண்ணு தூண்மூன்ரும் விநாடிதன்னில்
துலைதூரம்பிரயாணம் போவாரேயாகில்
கல்லணையமனத்துயரம் சற்றுமில்லை
கண்டவர்கள் வெகு உறவாய்க் கலந்துக்கொள்வார்
தொல்லையில்லை போசனத்திற் குறையொன்றில்லை
ஸ்தூலமதாபிணியில்லை பகைகளில்லை
அல்லல்தருமரசுசத்துரு வாகநின்ருல்
அடுத்தவர்கள் பகையுண்டு சோரமாமே.

(இ-ள்.) ஊண் மூன்ரும் விநாடியில் துலதூரமாக ஊர்ப்பயணம் போகில் மனத்துயரமானது சற்றுமிராது, கண்டோர்கள் யாவரும் உறவாகவந்து கலந்துக்கொள்வர், தொல்லையானதுயிராது, போசனத்தில் குறைவுபடாது, தேகத்தில் பிணியானது அணுகாது, பகையானது நேராது, அரசுபட்சியானது சத்துருவாகநிற்கில் அடுத்தயிடத்தில் பகையுண்டாகும், சோரம்போகும் (எ-று.) (14)

யாத்திரைக்கு ஊண்கால ச-ம் விநாடியின் பலன்.

295. சோரமில்லை ஊணதில் நான்காம்விநாடி
துணிந்தேகில் துணையுண்டு தோகையுண்டு
சாரமென்றபொருளுண்டு சம்பத்துண்டு
கலங்காதே ஒருபோதும் கலக்கமில்லை
காரமென்ற பந்துகளில் சேர்க்கையுண்டு
கலங்காதே ஒருபோது கலக்கமில்லை
வீரமென்ற வேந்தனிடப் பகையாகாது
வேந்தனிடப் பகைமிகவும் துயரமாமே.

(இ-ள்.) ஊண் ஐந்தாம் விநாடியில் பயணமாகப்போகில் துணிவும் துணையும் தோகையரும் உண்டாகும் பொருளானது கிடைக்கும் சம்பத்துண்டாகும், சகலமான பந்துக்களும் உறவாவார்கள், மணமானதுகூடும் பந்துக்கள் சேர்க்கையுண்டாகும், கலக்கமானதுயில்லை, அரசுபட்சியாகவிருக்கில் ஆகாது அதினல் துயரமுண்டாகுமென்பர் (எ-று.) (15)

யாத்திரைக்கு ஊண்கால டு-ம் விநாடியின் பலன்

296. துயரமூண் ஐந்தாம் விநாடிதன்னில்
துலைதூரம் பிரயாணம் தொடர்ந்துபோகில்
சயமான வழியதனிற் பகைகளுண்டு
தடையுண்டு மனத்தடங்கா இடர்களுண்டு
கயமான ஒருத்தருர வாகும்பாரு
கவந்ததினல் வரும்பீடை கழன்றுபோகும்
பயரான வரசுபகையிருந்தால்மோசம்
பணியார்கள் பிறரொருத்தர் பாசத்தோரே.

(இ-ள்.) ஊண் ஐந்தாம் விநாடியில் துலதூரமாக பிரயாணம்போ இல் போகும்வழியில் பகையானதுநேரும் தடையாகும், மன்தடங்காத யிடரானது நேரும், அதில் ஒருவருடைய உதவியாகும், உறவுகூடும், வரும்படியான பீடையானது தவர்ந்துபோகும், அரசுபட்சியாகவிருக்கில் மோசம் சம்பவிக்கும் யாவரும் மதியார்கள் (எ-று.) (16)

இதுவுமது.

297. பாசமென்ற வரசுபகை இருந்தால்மோசம்
பழிவருமே வழிநடையிற் களவுபோகும்
வீசிநின்ற பிணியுண்டு வரசுபகையுண்டு
மேலான மனுவுதவி யில்லையில்லை
தாசியரிற் பிரசனங்கள் சல்லியமேசெய்வார்
தனதாகவிருந்தவரும் பேசார் பேசார்
மோசமென்று திசைநோக்கி வருவான் மூங்கை
தொய்குழலான் பூமடந்தை யுதவியில்லைபாரே.

(இ-ள்.) அரசுபகையாகவிருக்கினும் மோசமாகும் நடக்கும்வழியில் களவானதுபோகும், பிணியானது உண்டாகும், அரசர்களால் பகை நேரும் தனக்கு மனிதர்கள் உதவியானதுயில்லையாகும், பந்துசனங்கள் சல்லியஞ் செய்குவார் உறவாகவிருந்தவர்களும் பேசமாட்டார்கள் இது மோசமென்று நினைத்து தன்பதியை நோக்கி வந்துச் சேர்குவான் அப் படிக்கு வந்து சேர்ந்தும் பூமாதன்கிருபை இல்லாகுைம் (எ-று.) (17)

யாத்திரைக்கு நடைகால முதல்விநாடியின் பலன்.

298. உதவியல்லா நடைமுதலால் விநாடிதன்னில்
உத்தமனே ஊர்ப்பயணம் போவாராகில்
சதியாக வீண்நடையால் நடத்திக்கொல்லும்
தண்மையுள்ள மனுவுதவி இல்லையில்லை
கதிவியதோர் சுகபோகம் தானுமில்லை
களவுபோய் பெண்கையாற் கலகமாகும்

பதமாவதொருபோதும் வருவதில்லை
பழிகார ஊணரசின் பகையாகாதே.

(இ-ள்.) தனதுபட்சியானது நடையாகவிருக்க அப்போது ஊர்ப் பயணம்போகில் வீணாக நடையானது நடத்திக்கொல்லும் ஒருவருடைய உதவியுமிராது சுகபோகங்களுமில்லை களவானதுபோகும் பெண்களினால் கலகம் சம்பவிக்கும் நினைத்தகாரியம் ஒருபோதும் கைவசப்படாது பழியானது விளவிக்கும் ஊண் அரசுபட்சிகள் பகையாகவிருக்கலாகாது.

யாத்திரைக்கு நடைகால உ-ம் விநாடியின் பலன்.

299 பகையான நடையிரண்டாம் விநாடிதன்னில்
பார்தனிலே ஊர்ப்பயணம் நடக்கொண்ணாது
தொகையான போசனத்தால் துயரமாகும்
துணையொருவருதவியில்லை நாவில்நோயாம்
வகையான பொருள்கூடும் களவுபோகும்
மன்னரால் கண்டிக்க வருமேயப்பா
தகையான போசனத்தில் மித்துருவேயானால்
ஜனவுதவி கொஞ்சமுண்டாம் தன்மைபாரே.

(இ-ள்.) நடையின் இரண்டாம் விநாடியில் ஊர்ப்பயணமானது போகவொண்ணாது அப்படிக்குப்போகில் போசனத்திற்கும் துயரப்படுகுவன் இவன் தனக்கு துணைவர்கள்யாருமில்லாதவனாகியும் உதவியானது அற்றுமிறுப்பான் நாவில் நோயானது அணுகும் பொருளானது கைகூடும் களவானதுபோகும் அரசர்களால் தண்டிக்கப்படுகுவன் ஊண் பட்சி மித்துருவாகயிருக்கில் சனங்கள் கொஞ்சம் உதவியுண்டாகும். ()

யாத்திரைக்கு நடைகால ௩-ம் விநாடியின் பலன்.

300. தன்மையென்ற மூன்றும்விநாடிதன்னில்
தனச்சேத முயிர்க்குதவி தானேயில்லை
உண்மையென்ற மித்துருவுஞ் சத்துருவாய் எதிர்ப்பன்
உலகத்தில் துணையிவனுக்கொருவரில்லை
வண்மையென்ற தந்தைமனம் வெறுத்துப்போகும்
வழிநடையில் வெகுதுயரம் வருகும்பாரு
திண்ணமென்ற சத்துருஊண் அரசனானால்
தீவினைகள் மெத்தவுண்டு சீரழிப்பன்தானே.

(இ-ள்.) நடையின் மூன்றும்விநாடியில் ஊர்ப்பயணமானது போகில் தனச்சேதமாகும், தன்னுடைய உயிர்க்கு உதவியானதுயில்லையாகும் மித்துருவும் சத்துருவுமாக எதிர்ப்பன் பூமியின்மீது துணையானது இவன்தனக்கு ஒருவருமில்லையாம் தகப்பனுடைய மனமானது வெருத்

துப்போகும், போகும்படியான வழியில் வெகுத்துயரமாகநேரும் சத்துருப்பட்சி ஊண் அரசாகவிருக்கில் தீவினையானது மெத்த உண்டாகும் சீரானது அழிந்துபோகும் (எ-று.) (20)

யாத்திரைக்கு நடைகால சு-ம் விநாடியின் பலன்.

301. சீரழிவாம் நடைநான்காம் விநாடி தன்னில்
திரமாக ஊர்ப்பயணஞ் செய்வாராகில்
கோரணிக்கு உள்ளாகி விதிவசத்தைநொந்து
கொடுந்துயரால் புண்ணாகிக் குமுருவான்பார்
தாரணியிற் சத்துரு ஊணரசாகாது
சண்டாள கொடுமைமெத்த தயங்கசெய்வான்
தேருமிந்த இருவர்களும் மித்துருவாய் நின்றால்
செயமுண்டு பிறருதவி செய்வார்பாரே.

(இ-ள்.) நடையின் நான்காம்விநாடியில் ஊர்ப்பயணம் போவாராகில் விசனக்கடலில் மூழ்கி விதிவசத்தை நினைந்துநொந்து கொடுந்துயரமாகி மனம்புண்ணாகி உருகுவான் சத்துருபட்சியானது ஊண் அரசாகவிருக்கலாகாது அப்படிக்கு இருக்கில் கொடுமையானது மெத்தசெய்குவன் மேற்கூறிய பட்சிகள் இரண்டும் மித்துருவாகவிருக்கில் ஜெயமானது உண்டாகும் பிரமனுஷர்களும் உதவியானது புரிகுவாரென்பர். ()

யாத்திரைக்கு நடைகால ரு-ம் விநாடியின் பலன்.

302. செய்தவொரு நடைஐந்தாம் விநாடிதன்னில்
சேர்ந்திருவர் தங்களிலே மித்துருவானால்
நொய்துமனம் புண்ணாகித் தெளிவமாகும்
நொடிக்குள்ளே மனமகிழ்ச்சி துவளலாகும்
எய்திவரிலாசியுற வானலப்பா
என்மக்கள வெகு சுகங்கள் ஏய்தும்பாரு
தையலர்கள் உறவாகுஞ் சந்தோஷமுண்டு
தயவான வரசுவுற வாகுங்காலே.

(இ-ள்.) நடையின் ஐந்தாம்விநாடியில் இரண்டுபட்சியும் மித்துருவாகவிருக்கில் அப்போது ஊர்ப்பயணம்போகில் மனமானதுநொந்து புண்ணாகி தெளிவாகும் நொடியினில் மனமகிட்சியானது பெருகும் அதினால் சந்தோஷம் உண்டாகும் அரசு உறவாகில் (எ-று.) (22)

யாத்திரைக்கு அரசுகால முதல் விநாடியின் பலன்.

303. உறவாகுமரசதிலே முதல் விநாடி
உத்தமனே பிரதேசம் போகநன்று
நிறைவான சொல்லுண்டு வருத்தமுண்டு
நினைத்தபடி சுகமுண்டு உதவியுமுண்டு

குறைவான காரியங்கள் வருவதில்லை
கூடிவரும் பரிசனங்கள் அரசர் உறவாகும்
பரவுமொரு மணமுண்டு பகையோயில்லை
பகையான பேர்களும் வந்துறவாவாரே.

(இ-ள்.) தனதுபட்சி அரசாகவிருக்கில் அதில் முதல்விநாடியில் பிரதேசம்போக நன்மையுண்டாகும் நிலையாகச் சொல்லானது பலிக்கும் வருத்துண்டாகும் நினைத்தவண்ணஞ் சுகமானதுண்டாகும் உதவியானது பெருகும் குறையாக யாதுகாரியமும்வாராது பரிசனங்கள் கூடிவருவார்கள் அரசர்களின் உறவுகூடும் மனையில் ஒரு மணமானது நடக்கும் பகையானதுயிராது பகையாகவிருந்தபேர்கள் வந்து உறவாவார்கள் (எ-று.)

யாத்திரைக்கு அரசுகால உ-ம் விநாடியின் பலன்.

304. பாரான அரசிரண்டாம் விநாடிதன்னில்
பரிவாகப் பிரதேசம் பயணமாகில்
நேரான தடையில்லை துயரமில்லை
நினைத்தபடி முடிப்பதற்குப் பிரபுஉறவாவன்
காரான மனமகிழ்ச்சி அதிகமுண்டாங்
கண்கொள்ளாக் காட்சிகளிற் களிக்கலாகும்
தேரான பூமிதனம் கைவசமேசேரும்
செல்வமது செப்பவென்றல் வடங்கிடாதே.

(இ-ள்.) அரசு இரண்டாம் விநாடியில் பிரதேசம்போக பிரையாணமாகில் யாதொருதடங்கலும்வராது துயரமானதுசெய்யாது தான் மனதில் நினைத்தவண்ணம் முடிப்பதற்கு பிரபுவினுடைய உறவானதுகூடும் மனமகிழ்ச்சியானது அதிகமாக உண்டாகும் கண்கொள்ளாக்காட்சியானதுகண்டு களிக்கச்செய்யும் பூமியுந்தனமும் கைவசமாகச்சேரும் செல்வமானதை சொல்ல முடியாதென்பர் (எ-று.) (24)

யாத்திரைக்கு அரசுகால ங-ம் விநாடியின் பலன்.

305. அடங்காத வரசுமூன்றும் விநாடி
அப்பனே பயணம் தானுவாராகில்
தடங்கானு முதவியினுல் சுகங்களுண்டு
சண்டாள சத்துருக்களில்லையில்லை
மடங்காத வாழ்வென்றல் மதிக்கப்போமே
மன்னர் உறவாகு மனமகிழ்ச்சியுண்டாம்
ஒடுங்காத பூபரந்து துணைதானுண்டு
உரைக்கஒண்ணுதிவன்வாழ்வு உரைக்களன்னுலரிவே.

(இ-ள்.) அரசு மூன்றும் விநாடியில் பயணங்கொள்வாராகில் அதினுல் சுகங்களுண்டாகும் சத்துருக்கள்நேரார்கள் இவனுடையவாழ்வை

என்னுல்மதிக்கப்போகாது மன்னர்கள் உறவாகும் அதினுல்மனமகிழ்ச்சி புண்டாகும் பூமாதுவின் துணையுண்டாகும் இவனுடையவாழ்வை என்னு லுரைக்கலாகாது (எ-று.) (25)

யாத்திரைக்கு அரசுகால ச-ம் விநாடியின் பலன்.

306. அரிதானவரசு நான்காம் விநாடி
அப்பனே கங்குகரை இல்லைசெல்வம்
பெரிதான விடங்களிலே மனம் சேர்க்கையுண்டு
பின்தொடருமாண் குழந்தை பிரபலமேயாகும்
சரியான பொருள் வரத்து உண்டாம் மேலும்
சவுக்கியமென்ற சுகபோகம் சுத்தமுண்டு
குரியான இவன் தன்னுல் குலமீடேறும்
குவலயத்திலுண்டாகும் வெகு உதவிபாரே.

(இ-ள்.) அரசு நான்காம் விநாடியில் பயணங்கொள்ளில் சொல்ல முடியாத செல்வமானதுபெருகும் பெருத்தயிடங்களில் மனமானதுச் சேர்க்கையாகும் பின்துடர்ந்துவரும் ஆண்குழந்தைக்குப் பிரபலமுண் டாகும் மதிக்கத்தக்க பொருளானதுடன் செல்வமானது ஓங்கும் சவுக் கியமும் போகபாக்கியமும் உண்டாகும் இவனுல்குலமானது ஈடேறும் பூமியின்மீது வேண உதவியுண்டாகுமென்பர் (எ-று.) (26)

யாத்திரைக்கு அரசுகால ரு-ம் விநாடியின் பலன்.

307. உதவியென்ற வரசு ஐந்தாம் விநாடிதன்னில்
உத்தமனே எத்தொழிலும் செய்யநன்று
பதவியென்ற காயசித்தி யோகசித்தி
பண்பானஞானசித்தி மந்திரசித்தி
சதமாக நினைத்து கைவசமேயாகும்
சண்டாளநேரமங்கே சலிப்பதாகு
அதமென்றசொல்பேச்சு உத்தமம்தானுச்சு
அப்பனே இவ்வேளை வாய்ப்பதரிதாமே.

(இ-ள்.) அரசு ஐந்தாம் விநாடியில் ஊர்ப்பயணம்போகவும் யா தொரு காரியமும் நன்மையாகும், பதவியென்னும் காயசித்தியும், யோக சித்தியும், ஞானசித்தியும், மந்திரசித்தியும், கைவசமாகும் சண்டாளநேர மாகில் சலிப்பாகும் அதமாகிய சொல்லானதுப்போகும் உத்தமமாகும் இப்பேர்க்கொத்த வேளையானது வாய்ப்பதரிதாகும் (எ-று.) (27)

யாத்திரைக்கு நித்திரைகால முதல் விநாடியின் பலன்.

308. அரிதென்ற உறக்கத்தின் முதல்விநாடி
அப்பனே பிரதேசம் போகும்காலே
கரியென்ற தன் உயிர்தான் தவிக்கும்பாரு
தயங்காத மனம்கூட தவித்துப்போகு

விரிகின்ற ஐம்புலனும் துயரப்பட்டு
மெலிவதல்லால் சுகமொன்று மில்லை யில்லை
அரிகின்ற பரிஜெனங்க ளில்லையில்லை
அப்பனே சன்டாள நேரந்தானே.

(இ-ள்.) தனது பட்சியானது உறக்கமாகவிருக்கில் பிரதேசம்போவாராகில் தன்னுடைய உயிரானது தவித்துநிற்பார்கள் மணங்கூடுவது தவிர்ந்துபோகும் ஐம்பலனும் வாடித்துயரப்படச்செய்யும் சுகமானது ஒன்றுமிராது பரிஜெனங்களுமில்லை இது சண்டாள நேரமாகும் (எ-று.)

யாத்திரைக்கு நித்திரைகால உ-ம் விநாடியின் பலன்.

309. நேரான உறக்கமிரண்டாம் விநாடி
நினைத்திட்ட காரியங்கள் வசப்படாது
கூரான சரீரத்திற் பிணிதான் வந்தால்
கூற்றவன்போல் உடல் உயிரைக் கொடுமைசெய்யும்
பாரான சண்டாளர் பகைதான்மெத்த
பகைத்ததினால் வெகு கொடுமைபழிகள்சூழும்
ஆரான சிவன் கிருபை அகலநிற்கும்
அவன் சடலந்துயரத்தால் அழுந்தும்பாரே.

(இ-ள்.) உறக்கம் இரண்டாம் விநாடியில் பயணமாகப்போகில் நினைத்தகாரியங்கள் கைவசப்படமாட்டாது தேகத்தில் பிணியானது வந்துதோன்றில் எமனைப்போல் உடலையும் உயிரையும் கொடுமையானது செய்கும் சண்டாளர்கள் நகைத்தலினால் மெத்தப்பகையாகில் சூதுங் கொடுமையும் பழியும்நேரும் சிவபிரானுடைய கிருபையானது அகன்றுப் போகும் அவனுடைய சடலமானது துயரத்தால் அழுந்தும் (எ-று.)(29)

யாத்திரைக்கு நித்திரைகால ந-ம் விநாடியின் பலன்.

310. அழுந்துகின்ற உரக்கம் மூன்றும் விநாடி
அப்பனே பிரயாணமாவாராகில்
கொழுந்து போம்மனு உதவி இல்லாமல்தான்
கொள்ளையுமாம் வெள்ளத்திலவதியாகும்
கழிந்துபோம் சடலமுருவாவதில்லை
கண்டவர்களினுடனே கலத்துறவேயில்லை
அழிந்துபோம் உயிர்ச்சேதமாகுமைந்தா
அப்பனேயிவன் துயரம் தீர்வதரிதாமே.

(இ-ள்.) உறக்கம் மூன்றும் விநாடியில் பிரயாணம்போவாராகில் கொழுந்தானதுபோகும் மனுஷருதவியானது சற்றுமிராது கொள்ளையானதுப்போகும் வெள்ளத்தில் அவதிப்படச்செய்கும் சடலமானது உருவில்லாமல் அழிந்துப்போகும் யாவரும் இவனிடத்தில் கலந்து உறவாடமாட்டார்கள் உயிர்ச்சேதமானதுவரும் இவனுடைய துயரமானது தீர்வதரிதாகும் (எ-று.)
(30)

யாத்திரைக்கு நித்திரைக்கால ச-ம் விநாடியின் பலன்.

311. அரிதான உறக்கம் நான்காம் விநாடி
அப்பனே வழிபயணம் போகொண்ணாது
பிரிவான வழியிடையில் சஞ்சலத் தாலேயா
வெகுதுயரம் வந்திடும் பார்விஷதிருஷ்டியுண்டாம்
குறைவான காலமென்றும் பிரஜனங்கள் பேசும்
கூடினபேர் புறப்பட்ட நேரமென்பார்
சரியான வேளையல்ல சண்டாளவேளை
தன்மையுள்ள மித்துருவரசாகில் நன்றே.

(இ-ள்.) உறக்கம் நான்காம் விநாடியில் வழிப்பயணமானது போக வொண்ணாது அப்படிக்குப்போகில் படமுடியாது துயரமானது வந்தணுகும், விஷதிருஷ்டியானது உண்டாகும், இவன் தனக்கு உறவான கால மென்று உலகத்தார்கள் பேசுவார்கள் சிலதுபேர்கள் தான் புறப்பட்ட வேளை பொல்லாதென்பர், இது சரியான வேளையல்ல சண்டாள வேளை யாகு மென்பர், ஆகில் மித்துரு பட்சியானது அரசாகவிருக்க நன்றாம்.

யாத்திரைக்கு நித்திரைக்கால ரு-ம் விநாடியின் பலன்.

312. நன்றில்லாத உறக்கம் ஐந்தாம் விநாடி தன்னில்
நாட்டிலே பயணம்வந்து போவாராகில்
குன்றென்றமுனை முகத்திற் போனாற்போல
கொடுமையாயுயிர்ச்சேதம் வருமே திண்ண
மண்ணென்ற விஷதிருஷ்டியாலேசாவான்
மக்களே சோரனால் சாவுமுண்டு
கன்னென்ற பெண்ணுறவால் உயிர்தான் சேதம்
கடினமவன் திரும்புவது மில்லைப்பாரே.

(இ-ள்.) உறக்கம் ஐந்தாம் விநாடியில் பயணமானதுவந்து போவா ராகில் சண்டையின்முகத்திற்போனதுபோல்கொடுமையானதுநேர்ந்து உயிர்சேதமானது வந்து சம்பவிக்கும் அதுதவறில் விஷ திருஷ்டியினால் மரணமாகுவன் சோரர்களாலும் மரணமுண்டாகும் பெண்பாலின் உற வினால் உயிர்ச்சேதம் நேரும் கடினமாகும் திரும்பிவந்து தன்பதி சேர் வதுவும். (எ-று.) (32)

யாத்திரைக்கு மரணகால முதல் விநாடியின் பலன்.

313. இல்லையென்ற மரணமுதல் விநாடி தன்னில்
என்மகனே ஊர்ப்பயணம்போகொண்ணாது
தொல்லையடா போனவர்கள் திரும்பார்மைந்தா
தோணாமல் உயிர்தவிப்பார் துணையில்லாமல்
சல்லியமாம் சோரர்தன்னா லுயிரும்சேதம்
சண்டாள உயிர்க்கெவர்தான் துணையாவார்கள்

கொல்லுமடா அண்டினபேர் தமையுங்கூட
கொடுமையுள்ள நாட்பயண மாகாதாமே.

(இ-ள்.) தனது பட்சி மரணமாகவிருக்க அதில் முதல்விநாடியில் ஊர்ப்பயணமானது போகவொண்ணுது அப்படியல்லவென்றும்போகில் போனபேர்கள் மறுபடியும் திரும்பி வாரார்கள் உயிரானது தவிப்பார்கள் துணையில்லாமலும் இன்னமும் சோரர்களால் உயிர்ச்சேதமானது வருகும் உயிர்க்கு யாவர்களும் துணையாகமாட்டார்கள் அவனுடன் அண்டிப்போவோர்களையுங்கொல்லும் ஆகையில் அந்தநாள் பகையாகாது என்பர் (எ-று.) (33)

யாத்திரைக்கு மரணகால உ-ம் விநாடியின் பலன்.

314. ஆகாதமரண மிரண்டாம் வுநாடிதன்னில்
அப்பனே புறப்பட்டால் உயிர்ச்சேதமாகும்
வேகாது வெந்துமனம் புண்ணுய்நோகும்
வேறுபட்ட அன்றிலைப்போல் துன்பமெய்தும்
சாகாத பிணம்போல உயிர்தவித்து
தனக்கொருத்தர் துணையின்றி வாடாநிற்பன்
நோகாமல் போவதில்லை பழிபகைகள்வரும்
நோவதுதான் மெத்தவுண்டு நொந்துவிடும்மனமே.

(இ-ள்.) மரணம் இரண்டாம்விநாடியில் பிராணம்போகில் உயிர்ச்சேதமானதுநேரும் மனமானது வெந்து புண்ணுகும்படி நோகும் வேறுபட்ட அன்றில் பட்சியைப்போல் துன்பமானது நேரும் சாதபிணம் போல் உயிரானது தவித்து தனக்கு ஒருவரும் துணையில்லாமற்படிக்கு வாடிநிற்கச்செய்யும் மனமானது நோகாமற்போகாது பழியானது வரும் நோயானது மெத்தவும் பாதிக்கும் மனம் நொந்துவிடும் (எ-று.) (34)

யாத்திரைக்கு மரணகால ந-ம் விநாடியின் பலன்.

315. மனமென்ற மரணம் மூன்றும் விநாடி
வழிப்பயணம் தான்போகில் மரணமாவா
இனமென்ற சனச்சேதம் தனமும்சேதம்
என்பங்களா உடலில் வந்த பிணிதீராது
சனமென்ற அவரிருந்து முதவியில்லை
சண்டாளரவர்களும்தான் சத்துருவாவர்
கனமென்ற மித்துரு அரசாக நின்றால்
கருதவே பிறருதவி செய்வார்பாரே

(இ-ள்.) மரணம் மூன்றும் விநாடியில் வழிப்பயணம்போகில் மரணமாகுவர் இனச்சேதமும் தனச்சேதமுமாகும் தேகத்தினிடமாகவந்துபிணியானது தீராது, தனக்கு அளவற்ற சனங்களிருந்தபோதிலும் உதவியானது புரியார்கள் சண்டாளர் அவர்கள் சத்துருவாகத் தோன்றுவார்கள் மித்துருபட்சியானது அரசாகவிருக்கில் பிறர்கள் உதவியுண்டாம்(எ-று.)

யாத்திரைக்கு மரணகால ச-ம் விநாடியின் பலன்.

316. பாரான மரணம் நான்காம் விநாடி
பயணமதாய்ப் புறப்பட்டால் மரணமெய்தும்
வேறொருவர் துணையில்லை விஷத்தால் மாய்வன்
விழல்கொண்ட கானகத்தில் மிருகவதையாகும்
சோரமென்ற சோரர்களால் களவுமுண்டு
தொலையாத இடைஞ்சல்வந்து தோணும்பாரு
கூறான கூற்றுவனே துணையாக நின்று
கொல்வனென்று கும்பமுனி சொன்னாரன்றே.

(இ-ள்.) மரணம் நான்காம் விநாடியில் ஊர்ப்பயணமாகப்போகில் மரணமாகுவர் ஒருவருடைய துணையுமில்லாமல் விஷத்தினால் மாய்குவன் கானகத்தில் மிருகங்களினால் வதைப்படுவன் சோரர்களால் களவானது போகும் தொலையாத இடைஞ்சலானதுவந்து சம்பவிக்கும்மென் துணையாகநின்று கொல்லுவானெனக் கும்பமுனியானவர் சொன்னார் (எ-று.)

யாத்திரைக்கு மரணகால ரு-ம் விநாடியின் பலன்.

317. சொன்னதொரு மரணமைந்தாம் விநாடிதன்னில்
துலைதூரம் பிரயாணம் செய்வாராகில்
தன்னாலே உயிர் தனக்கும் மனம் புண்ணாகும்
சண்டாளநேரமது தலையெடுக்கொட்டாது
கொன்றுடும் கூற்றுவன்தான் பிடறிதேறிக்
கொன்றிடவே நின்றிடுவன் கொக்கரித்து
சன்யாசி யாக்கிவிடு மிதுபொய்யல்ல
தத்தளித்து நெஞ்சமது தவிக்கும்பாரே.

(இ-ள்.) மரணம் ஐந்தாம் விநாடியில் துலதூரமாகப் பிரயாணம் போவாராகில் தன்னாலேதானே தனக்கு மனமானது புண்ணாகும் உயிர்க்கு பாதைநேரும் இந்தநேரமானது தலையெடுக்கவொட்டாமல் செய்யும் கூற்றுவனென்னும்படியான எமன் பிடரியின்மீது ஏறி கொல்லும்படியாக நிற்பான் கொக்கரித்துக்கொண்டும் இவன் தன்னைச்சன்னியாசியாக்கிவிடும் இப்பலன் பொய்யாகாது தத்தளித்து நெஞ்சானது தவிக்கும்படியாக செய்யுமென்பர் (எ-று.) (37)

இதுவுமது.

318. தவிக்கவேவேண்டாம் நீ பட்சிபகை நீங்கி
தனத்தான மித்துருவிற் செய்தாயானால்
குவிக்கவே எத்தொழிலும் கூடும்பாரு
குணம்குறிகள் நிலையறிந்து கூறலாகும்
தவிக்காமல் சகலகலை வல்லபமுமுண்டாகும்
தானறிந்தாலவன்யோகி அவனே சித்தன்

துவக்கமுறும் யாத்திரையை சொன்னோமின்னம்
தொல்புவிமேல் மனைக்கோலம் சொல்லுவோமே.

(இ-ள்.) தவிக்காமற்படி பட்சிகளினுடைய பகையை நீக்கி மித்துரு பட்சியில் யாதொருகாரியங் கைகூடும் குணக்குறிகளின் நிலையானது அறிந்துக்கூறப்படும் சகலகலை வல்லபமுமுண்டாகும் இதையறிந்தவனே யோகியுஞ் சித்தனுமாகுவன் யாத்திரையின் பலனைச்சொன்னோம் இன்னும் பூமியின்மீது மனையானது கோலும் பலன்சொல்வோம் கேட்பாயாகவும் (எ-று.) (38)

யாத்திரைப்படலம் முற்றிற்று.

உ

கடவுள் துணை.

மனைப்படலம்.

மனைக்கோலுதற்கு ஊண்கால முதல் விநாடி
உ-ம் விநாடியின் பலன்.

319. சொல்லுகிறேன் ஊண்முதலாம் விநாடிதன்னில்
துடியாக மனைமுகூர்த்தம் செய்வாராகில்
வெல்லுகிறேன் முன்னூறு வருஷம்தான்
மேல்மேலும் சுகமாக வாழ்ந்திருப்பார்
தொல்லையொன்று மில்லையடா விநாடிரெண்டில்
சுகமாக இருநூற்று அன்புகொண்டு
சல்லியமொன்றில்லாமல் வாழ்ந்திருப்பார்
தன்பதிக்கு மதிக மதாம் வாழ்வுண்டாமே.

(இ-ள.) சொல்வேன் ஊண்பட்சியின் முதல்விநாடியில் மனைமுகூர்த்தமானதுசெய்யில் அம்மனை முன்னூறு வருஷம் வரைக்கும் மேன்மேலாக சுகமாக வாழ்ந்திருப்பார் தொல்லையானது ஒன்றும் அணுகாது ஊணில் இரண்டாம் விநாடியில் மனையானது கோயில் இருநூறு வருஷம் வரையிலும் அன்போடு சல்லியமில்லாமல் வாழ்ந்திருப்பார் தன்பதியில் அதிக வாழ்வுண்டாகும் (எ-று.) (1)

மனைக்கோலுதற்கு ஊண்கால ௩-ம் விநாடி
ச-ம் விநாடிகளின் பலன்.

320. வாழலாம் ஊண்மூன்றும் விநாடிதன்னில்
மக்களே இருநூறு வருஷம் தானும்

கோளான தொன்றுமில்லை செல்வமிச்சம்
கோத்தலங்கள் குறைவின்றி வாழலாகும்
வேளான நான்காம் விநாடிதன்னில்
வீடுசெயில் வருஷ மிருபதினெட்டுபத்து
கோனுன குடிதழைத்து வாழும்பாரு
கூர்மையுடன் வாழ்ந்திருப்பார் நன்மைதானே.

(இ-ள்.) ஊண் மூன்றாம்விநாடியில் மனையானது கோலில் இருநூறு வருஷம்வரைக்கும் கோளாரில்லாமல் செல்வமானது பெருகிவாழ்வர் கோத்திரமானது விருத்தியாகும் நான்காம்விநாடியில் மனையானதுகோலில் நூற்றி எண்ணூறு வருஷம் வரைக்கும் கோனெனப்புகழும்படியாக குடியானது தழைத்து வாழ்குவர் நன்மையானதுபெருகும் (எ-று.) (2)

மனைக்கோலுதற்கு ஊண்கால ரு-ம் விநாடியின் பலன்.

321. நன்மையென்ற ஊண்ஐந்தாம் விநாடிதன்னில்
நல்மாக வாழ்ந்திருப்பார் பதினைந்து பத்து
சென்மையுடனவ்விடத்து சோபனங்கள் கூடும்
தினந்தோறும் போஜனத்தின் சிறுமையில்லை
துன்மையின்று பால்பசுக் கட்டிவாழும்
துய்யவஸ்திர பூஷணங்க ளதிகமாகும்
தின்மையென எச்செயலும் வருவதில்லை
ஜெகமாக வாழ்ந்திருப்பார் திண்ணம்தானே.

(இ-ள்.) ஊண் ஐந்தாம் விநாடியில் மனையானதுகோலில் நூற்றி எண்பது வருஷம் வரைக்கும் வாழ்ந்திருப்பார் அம்மனையிற் சோபனங்கள்கூடும் ஒருநாளும் போசனத்திற்கு சிறுமைபடமாட்டார்கள் பால்பசுவும்கட்டிவாழ்குவர் வஸ்திரங்களும்பூஷணாதிகளும் அதிகமாகப்பெருகும் தீமையானது அணுகாது ஜெயமாக வாழ்ந்திருப்பார் வலிமையாகவும்.()

மனைக்கோலுதற்கு நடைகால முதல் விநாடி
உ-ம் விநாடிகளின் பலன்.

322. திண்ணமடா நடைதனிலே முதல் விநாடி
செய்தக்கால் மனைமுகூர்த்தம் வருஷ நூறு
எண்ணமடா வாழ்வு சுகமதிகம் மில்லை
என்மகனே வாழ்ந்திருப்பார் சுகமதாக
கன்னமிடம் களவிதிலே போகும்பாரு
கலங்குமே மனது பின்வாகும்
சொன்னமடா ரண்டாம் விநாடிதன்னில்
தொடுத்தமனை தொண்ணூறு வருஷம்தானே,

(இ-ள்.) நடைப்பட்சியின் முதல்விநாடியில் மனையானது கோவில் நூறுவருஷம்வரைக்கும் வாழ்வும் சுகமும் அதிகமாகவிராது ஆகிலும்சுகமாக வாழ்ந்திருப்பார்கள் கன்னமானதுயிட பொருளானதுபோகும் மனமானது கலங்கும் பின்பு போனபொருள்கிடைக்கும் ஊண் இரண்டாம் விநாடியில் மனையானது கோவில் அம்மனைத் தொண்ணூறு வருஷமிருக்கும் (எ-று.) (4)

மனைக்கோலுதற்கு நடைகால ௩-ம் விநாடியின் பலன்.

323. தொண்ணூறு வருஷமிதில் சுகமும் துக்கம்
கொடுத்திடுமோ வாழ்வுமணம் சுருக்கமாக
எண்ணரிய நடைமூன்றும் விநாடிதன்னில்
எடுத்தமனை வருஷமதற் கெண்பதாகும்
கண்ணூறு மெத்தவுண்டு களவுபோகும்
கட்டியதோர் வருஷமொரு முப்பதுக்குள்
பொன்னூறு தண்டமுண்டு தீக்கோளுண்டு
பொல்லாத மனிதனென்று சொல்லுவாரே.

(இ-ள்.) மேற்கூறியமனையில் தொண்ணூறு வருஷமாதல் சுகமுந் துக்கமும் அனுபவிக்கச்செய்யும் வாழ்வும் மணமும் சுருக்கமாகும் நடைமூன்றும் விநாடியில் மனையானதுகோவில் அம்மனைக்கு வயது எண்பதாகும் மனவருத்தமுண்டாகும் களவானதுபோகும் அம்மனைக்கட்டின முப்பதுவருஷத்திற்குள்ளும் கெண்டமானது சம்பவிக்கும் தீயினால் பயமானதுநேரும் அம்மனைக்கெசமானைப் பொல்லாதவனென்று சொல்லுவர்.

மனைக்கோலுதற்கு நடைக்கால ௪-ம் விநாடியின் பலன்.

324. சொல்லுவோம் நடைநான்காம் விநாடிதன்னில்
தொடுக்கமனை எழுபத்து வருஷம்தானும்
சல்லியம்தான் ஒழிந்ததில்லை துன்பம்மெத்த
சண்டையுடன் வெகுகொடுமை சகிக்கொணாது
தொல்லையாய் அரசனிடம் பகையும் சூழும்
துன்பமுடன் தெண்டனையும் அதிக முண்டாம்
அல்லலையா யந்தமனை கொஞ்சநாளில்
அடைபடுமே தீபமும்தான் னரிதாம்பாரே.

(இ-ள்.) நடை நான்காம்விநாடியில் மனையானது கோரிடில் அதற்கு வயதானது எழுபது வருஷமாகும் சல்லியமானது ஒழியாது துன்பமானது அணுகும் சண்டையுடன் கொடுமையானது சம்பவிக்கும் அதினால் சகிக்கொண்ணாத பாதையாகும் அரசர்களுடைய பகையானதுநேரும் தெண்டம்வருகும் அம்மனையானது கொஞ்சம்நாளில் அடைபட்டிருக்கும் தீபமானது ஏற்றவும் அரிதாகும் (எ-று.) (6)

மனைக்கோலுதற்கு நடைக்கால ரு-ம் விநாடியின் பலன்.

325. அரிதாகும் நடைஐந்தாம் விநாடிதன்னில்
அகம் எடுத்தவருஷம் அது அறுபதாகும்
குறியான அந்தமனை வாழ்வு கொஞ்சம்
கொண்டபெண்டிற் சேதமும் ஆம் சொல்வார் இல்லை
எரியாகும் நன்மை என்ற காரியங்கள்
எடுக்கமனம் ஒட்டாது இடைஞ்சல் ஆகும்
சரியான சடலத்தில் நோய் உண்டாகும்
சண்டாளசத்துருவின் பகை ஆகாதே.

(இ-ள்.) அரிதாகும் ஐந்தாம் விநாடியின் அது அறுபதுவருஷம் ஆகும் அந்தமனைவாழ்வு கொஞ்சம் கட்டினபெண்ஜாதி இறந்துவிடும் சொல்வாரில்லை நல்லகாரியத்தைச்செய்ய மனம்வராது திரேகத்தில் நோயுண்டாம், பட்சி சத்துருவாயிருக்கிறதினால் அந்த காரியத்தைச் செய்ய ஆகாது (எ-று.) (7)

மனைக்கோலுதற்கு அரசுபகைகால முதல் விநாடியின் பலன்.

326. ஆகுமே அரசுமுதல் விநாடி தன்னில்
அப்பனே மனைமுகூர்த்தம் செய்வாருகில்
ஏகுமே வருஷம் அது ஆயிரந்தான்
என்னசொல்வேன் வாழ்வதென்றால் சொல்லொண்
சேகரமாம் மனைக்குதிரை கட்டல் ஆகும் [ணாது
சிவிகைதனில் ஏறுதற்கு யோகம்ஆகும்
வர்கானவாழ்வுமணம் செய்யல்ஆகும்
மங்களமாய்தான்யிருந்து வாழுந்தானே.

(இ-ள்.) தன்பட்சியானது அரசில் இருக்கும்போது வீடுவாங்கி முகூர்த்தம்செய்தால் ஆயிரவருஷம் வாழலாம் மனையில் குதிரைக்கட்டலாம் நினைக்கும்போது பல்லக்குயேரலாம் பிள்ளைகளுக்கு கலியாணமாகும் மங்களமாய் இருக்கலாம் (எ-று.) (8)

மனைக்கோலுதற்கு அரசுகால உ-ம் விநாடியின் பலன்.

327. வாழுமே அரசுண்டாம் விநாடிதன்னில்
வருஷம் அது எண்ணூறு மகிழ்ந்தசெல்வம்
ஆறுமே சுகபோகம் அதிகம் ஆக
அப்பனே மங்களமாம் இருந்துவாழும்

கேளுநீ அரசர் உறவாகும்பாரு
கெதிபெறவேமனுக்கூட்டம் மஜனசேர்க்கைமிச்சம்
நாளான அந்தமனே எப்போதுந்தான்
நலமானலட்சுமியால் வாசம் ஆமே.

(இ-ள்.) அரசாண்டவினடி எண்ணூறுவருஷம் வரையில் இருந்து வாழலாம் உனக்கு அரசர் சிநேகமாகும் மேலுலட்சுமிகடாக்ஷம் கூடி யிருக்கும் (எ-று.) (9)

மனைக்கோலுதற்கு அரசுகால ௩-ம் விநாடியின் பலன்.

328. வாசம் அடா அரசுமூன்றும் விநாடிதன்னில்
வருஷம் அது அறுநூறு மகிழ்ச்சி ஆகும்
நேசம் அடா அரசரும் வந்திருப்பார்பாரு
நேர்மை உளப் பிரபுவினிட நேசம்ஆகும்
தேசம்அடா வெகுதூரம் பேருண்டாகும்
திருவென்றபொருளுடமை கைவசமே ஆகும்
பாசம்அடா அரசுநிகர் மனைக்குவாசம்
பரிவாகத் தானிருந்து வாழும்பாரே.

(இ-ள்.) அரசில் மூன்றும் விநாடியிலே இருந்தால் அறுநூறுவருஷம்வரையில் மகிழ்ச்சியாக இருக்கலாம் பந்துக்கள்வந்து சேர்வார் உன்னுடைய பெயர் வெகுதூரம்வரையில் சொல்லுவார், பொன்பொருள் ஆனை குதிரை மாடு ஆடு வந்துசேரும் (எ-று.) (10)

மனைக்கோலுதற்கு அரசுகால ச-ம் விநாடியின் பலன்.

329. பாரில்உயர் அரசுநான்காம் விநாடிதன்னில்
பத்தி எடுக்கில்வருஷம்தான் நூற்றைன்பதாகும்
நேருகின்றவாழ்வதிகம் செல்வம் என்றால்
நிருபதிக்கும் அதிகம் அமரம்மதிக்கொண்ணாது
சேர்ருகின்ற குலங்கிளைகள் செல்வம்ஆகும்
சொற்பெரிய ஆளடிமை வந்துசேறும்
ஏறுகின்றபரிஏறி நடப்பன் அல்லால்
என்மகனே கால்நடையாய்த் திரியான்தானே.

(இ-ள்.) உனக்கு நான்காம்விநாடியின் பலன் சொல்லுகிறேன் கவனமாய் கேட்டுக்கொள்ளு நூற்றிஐம்பது வருஷம் வரையில் குறைவிராது செல்வம்வந்து சேரும் யாரும் மதிக்கக்கூடாத கால்நடையாய் திரிய மாட்டாய் குதிரையேறி சவாரிசெய்வாய் (எ-று.) (11)

மனைக்கோலுதற்கு அரசுகால ௫-ம் விநாடியின் பலன்.

330. தான் என்ற அரசுஐந்தாம் விநாடிதன்னில்
தனதானமனை முகூர்த்தம் செய்வார்ஆகில்
தேனென்றவருஷம் அது நானூறும்
செல்வம் என்றால் நாவினால்சொல்லொண்ணாது
மானென்றவிழிமடவார் சேர்க்கை மிச்சம்
வந்திடுமேபொருளுடமை கைவசமதாக
ஏனென்றசத்துருவே இல்லையில்லை
என்மகனே தீமை ஒன்றும் இல்லைத்தானே.

(இ-ள்.) உனக்கு ஐந்தாம் விநாடியின்பலன் என்னவென்றால் மனைக்கு முகூர்த்தம் செய்வார்களானால் அவா நானூறுவருஷம்வரையில் இருக்கும் செல்வம் நாவால் சொல்லக்கூடாது மாதர்கள் சேர்க்கையாகும் அநேக பொருள்சேரும் உனக்கு சத்துரு இல்லை (எ-று.) (12)

மனைக்கோலுதற்கு நித்திரைகால முதல் விநாடியின் பலன்.

331. இல்லை என்ற உருக்கமுதல் விநாடிதன்னில்
என்மகனே மனைமுகூர்த்தம் செய்வாராகில்
கொள்ளையேபோகும் அப்போ அக்கினியால்வாதை
கூடிவரமாட்டாது ஒருசுகமுமில்லை
சள்ளையென்றபிள்ளையில்லை மனுவுதவியில்லை
க்ஷணநேரம் அகிலும் சந்தோஷமில்லை
தொல்லையடாவருஷம் ஒரு அன்பதுக்குள்
துன்பமெத்தவுண்டாகும் சொல்லொண்ணாதே.

(இ-ள்.) யாதொருவரும் மனைமுகூர்த்தம் செய்வாராகில் கொள்ளைபோகும் நெருப்பால் அபாயம் நேரிடும் எந்த எண்ணம் கைகூடாது எனக்கு பிள்ளை இல்லை மனுஷர் உதவியில்லை ஐம்பதுவருஷம் வரையில் துன்பம் நேரிடும் (எ-று.) (13)

மனைக்கோலுதற்கு நித்திரைகால உ-ம் விநாடியின் பலன்

332. ஒண்ணாதவுறக்கம்ரெண்டாம் விநாடிதன்னில்
உத்தமனே மனைமுகூர்த்தம் செய்வாயானால்
தன்னாலே அழிந்துவிடும் நாற்பதுக்குள்
தணம்யென்ற தணலதனால் வாதையாகும்

எண்ணுதேமனுவுதவி இல்லையில்லை
இல்லறத்தில்சுகமில்லை நோய்வுண்டாகும்
கண்ணுதநெஞ்சதுவும் கண்ணும்பாரு
கலந்திடுமே மூதேவி வாசந்தானே.

(இ-ள்.) உனக்கு இரண்டாம் விநாடியில் மனைமுகூர்த்தம் செய்தால் அது நாற்பது வருஷத்துக்குள் அழிந்துவிடும் தனங்களும் நாசமாகும் உனக்கு மனுஷர் உதவியில்லை வீட்டில் சுகமில்லை திரேகத்தில்நோயுண்டாகும் மூத்தவளாகிய மூதேவி வாசமாயிருப்பாள் (எ-று.) (14)

மனைக்கோலுதற்கு நித்திரைக்கால ௩-ம் விநாடியின் பலன்.

333. வாசமாம் உறக்கமூன்றும் விநாடிதன்னில்
மக்களேமனைமுகூர்த்தம் செய்வாருகில்
பாசமாம் வருஷம் முப்பத்தைந்துக்குள்ளே
பாழடையுமல்லாது சுகமேயில்லை
நேசமாய் உறவில்லை பிள்ளையில்லை
நினைத்ததொருகாரியங்கள் நேர்வதில்லை
நாசமாய் உறக்கமென்ற வேளைதானும்
நன்மை ஒருநாளும் இல்லை நாசந்தானே.

(இ-ள்.) பட்சியானது தூங்கும்பொழுது வீடுகளைவாங்கி முகூர்த்தம் செய்தால் அது முப்பத்தைந்து வருஷத்தில் பாழடைந்துவிடும் உனக்கு உறவில்லை பிள்ளையுமில்லை (எ-று.) (15)

மனைக்கோலுதற்கு நித்திரைக்கால ௪-ம் விநாடியின் பலன்.

334. நாசமடா உறக்கம் நான்காம் விநாடிதன்னில்
நல்லதொருமனையெடுக்கில் முப்பதாண்டு
தோஷமதாமனையதுதான் பாழதாகும்
சொல்லொண்ணுதுயரமது தோணும் தோணும்
பாரமுள்ளவுறவில்லை பொருள் சேர்க்கையில்லை
பண்பானசுகமில்லை புத்திரர்களில்லை
நேசமாம்வாழ்வில்லை பிசாசுநேரும்
நினையாத பீடையெல்லாம் நிலைக்கும்பாரே.

(இ-ள்.) குழந்தாய் நான்காம் விநாடியில் மனைமுகூர்த்தம் செய்தால் அது முப்பது வருடத்துக்குள் பாழடைந்துவிடும் சொல்லொண்ணுத துயரம்வரும் பந்துவில்லை பொருளும் இல்லை புத்திரரும் இல்லை வாழ்வுமில்லை பிசாசு ஆகிய பீடைவந்துசேரும் (எ-று.) (16)

மனைக்கோலுதற்கும் நித்திரைகால ரு-ம் விநாடியின் பலன்.

335. நிலைக்குமடாவுறக்கம் ஐந்தாம் விநாடிதன்னில்
நேர்மையுள்ள மனைமுகூர்த்தம் செய்வாராகில்
புலைப்பதுகேள் வருஷமொரு இருபதுக்குள்
பாழடையுமல்லாது·தீபம் இல்லை
துலைக்குமடாபிறசனங்கள் உதவியில்லை
துன்பம்தான் தினையளவும் தொலைந்திடாது
அலைக்குமடாமூதேவி வாசம் தானும்
அப்பனே சத்துருவின் பகையாகாதே.

(இ-ள்.) மகனே ஐந்தாம் விநாடி உறக்கமானதால் வீடுவாங்கி முகூர்த்தம்செய்தால் இருபதுவருடத்துக்குள் பாழடைந்து தீபம்வைப் பாரில்லாமல்போகும் துன்பந்தான்வரும் பட்சி சத்துருவானபடியால் மூதேவிசேரும் (எ-று.) (17)

மனைக்கோலுதற்கு மரணகால முதலாம் விநாடியின் பலன்.

336. பகையானமரணத்தின் முதல்விநாடி
பாழாகும் வருஷமொரு இருபதுக்குள்
தொகையானமித்துருகாண் அரசனாகில்
சொல்லியதோர் தொகைபடிக்குத் துயரம்தோணும்
வகையானசத்துருதான் அரசனாகில்
மக்களே ஒருபோதும் வாழ்வதில்லை
தகையான வருஷமொரு ஐந்துக்குள்ளே
தன்னாலேயழிந்துமனைப் பாழாம்பாரே.

(இ-ள்.) மைந்தா மரணத்தின் முதல்விநாடியின் இருபது வருடத் துக்குள் வாசம் மித்துருவானவன் அரசன் ஆகில் வாழ்வுயில்லை ஐந்து வருடத்துக்குள் பாழடைந்துவிடும் (எ-று.) (18)

மனைக்கோலுதற்கு மரணகால உ-ம் விநாடியின் பலன்.

337. பாழானமரணமிரண்டாம் விநாடிதன்னில்
பாலகனே மனையதுதான் பரிந்தெடுக்கில்
கோளானவருஷமொரு பத்துக்குள்ளே
குலைந்துபோம்மனையதனிற் குடியேயில்லை
தேளானவிஷமதனால் மரணமாகும்
தெண்டனையே பொருட்சேதம் துயரம்மெத்த
சூழான அக்கினியால் வாதையாகும்
தொலைக்குதற்கு மனுவுதவியில்லைத்தானே.

(இ-ள்.) பாலகனே இரண்டாம்விநாடியில் மனையெடுத்தால் பத்து வருடத்துக்குள் குடிகிடையாது தேள்கடித்தால் விஷமேறிமரணமாகும் பொருள்சேதம் துயரம்மெத்த உண்டாகும் அக்கினியால் பாதையாகும்.

மனைக்கோலுதற்கு மரணம் ௩-ம் விநாடியின் பலன்.

338. இல்லையென்ற மரணம் மூன்றும் விநாடிதன்னில்
என்மகனே மனமுகூர்த்தம் இடுவாராகில்
கொள்ளையடா வருஷமது ஐந்துக்குள்ளே
குடியேறல் ஒருநாளும் இல்லையில்லை
சள்ளையடாகோலினவன் மரணமாவான்
சண்டாளநேரமது கரையேறாது
தொல்லையடா அம்மனையில் மூதேவித்தான்
சூழுமென்றுதொல்புவியோர் சொல்லும்பாரே.

(இ-ள்.) அப்பனே மூன்றாம்விநாடியில் முகூர்த்தம்செய்தால் ஐந்து வருடத்தில் குடியேரமாட்டாது மரணம்கோவிலில் ஆகும் கரைதட்டு படாது தொல்லையினால் மூதேவி அந்தமனையில் சேருமென்று சொல்வார் உலகத்தார் (எ-று.) (20)

மனைக்கோலுதற்கு மரணம் ௪-ம் விநாடியின் பலன்.

339. சொல்லுகின்ற மரணநான்காம் விநாடிதன்னில்
சொல்லியதோர் மனைகளிலே முகூர்த்தம் செய்தால்
கொல்லுமே வருஷமொரு மூன்றுக்குள்ளே
குடியேறலொருநாளும் யில்லையில்லை
வெல்லவே யிவனருகில் கூற்றன் நின்று
வேண்டியபடி மனம்போலே முடித்துக்கொள்வான்
வல்லதாம்மணமுகூர்த்தம் செய்தபோதே
வந்திடுமே மனத்துயரம் சொல்லொண்ணாதே.

(இ-ள்.) சண்டாளனாகிய நாலாம்விநாடியின் மனைகளில் முகூர்த்தம் செய்தால் மூன்றுவருடத்தில் கொன்றுவிடுமே குடிவிளங்கவைக்காது எமன் நின்று தன்மனம்போல முடித்துகொள்வான் கலியாணம் செய்த போதே மனவருத்தம் வந்துவிடும் (எ-று.) (21)

மனைக்கோலுதற்கு மரணம் ௫-ம் விநாடியின் பலன்.

340. ஒண்ணாத அஞ்சாம் விநாடிதன்னில்
உத்தமனே மனைமுகூர்த்தம் செய்வாராகில்
எண்ணாதவருஷமது ஒன்றுக்குள்ளே
இறைவனும் அவன் சடலமழிந்துபோகும்
தன்னாலேலுயிர்ச்சேதம் மாகும்பாரு
சண்டாள பட்சியுடப்பகையிருந்தால்
விண்ணானவருஷமது குறைந்துபோகும்
மேன்மையுள்ள சீரழிவுமெத்தமாமே.

(இ-ள்.) கர்ம்மமாகிய ஐந்தாம் விநாடியில் மனைமுகூர்த்தம் செய்தால் ஒருவருடத்துக்குள் இறந்துவிடுவான் அவன்தானே உயிர் மாய்த்

துக்கொள்வான் சண்டாளபட்சி பகையிருந்தால் வீணனவருடம் குறைந்து சீரழிவுவருமென்று (எ-று.) (22)

மனைக்குப் பலாபலன் கூட்டும் வகை.

341. சீரழிவு செய்திடுமே ஊணதாகில்
சீராகச்சொன்னவற்றுட் கால்வரிசை குறையும்
மாரழிவுகொண்டிடுவன் கூறிய பீடைகளில்
மக்களேகால்வரிசைதான் அதிகம் ஆகும்
கூரழிவு செய்திடுவான் கொடுமைமெத்த
கூடிவரமாட்டாது பொருட்சேதமாகும்
பாரழிவுசெய்திடுவான் போசனத்திலுள்ள
பகையெல்லாம் வருமானப் பகையதாமே.

(இ-ள்.) பாழானபட்சியானது ஊணதாகில் சொன்னவஸ்து கால் வரிசைகுறையும் மாரிழவுபீடை கால்வரிசை அதிகமாகும் கொடுமைகூடி வரமாட்டாது பொருள்சேதமாகும் போஜனத்தில் பகைவரும் வருமான பகைவரும் (எ-று.) (23)

இதுவுமது.

342. பணியாத அரசனிடப்பகையேயானல்
பண்பாகமுன்சொன்ன பலனிற்பாதி
தொகையாகும் கூறினதோர் பீடைதானும்
தொடுத்துவிடும் மூவிரட்டிலதிகமாகும்
வகையாகக் கூடிவரமாட்டாதையா
மக்களே முன்னுள்ள பொருளும்சேதம்
நகைசெய்வாருலகத்திலுள்ளபேர்கள்
நல்லதென்று பார்மகளும் சிரிப்பான்பாரே

(இ-ள்.) அரசில்பகையானல் முன்சொன்னதில் பாதிபீடை மூவிரண்டில அதிகமாகும் கைகூடிவரமாட்டாது மகனேமுன்உள்ள பொருள் சேதம் உலகத்தார் பரிகாசம்செய்யார் மகளும் சிரிப்பாள் (எ-று.) (24)

இதுவுமது.

343. சிரிப்பான ஊண்அரசு சத்துருவாய் நின்ருல்
சேதமோனுயிர்ச்சேதம் பொருளும் சேதம்
குறிப்பானமனம் நொந்துபுண்ணதாகும்
குடிகெடுத்த சத்துருவின் பகையாகாது

மரிப்பாகும் அந்தமனை முற்றுப்பாழாம்
வருமானம் எவ்வளவென்னும் வகைசெய்யாது
தெரிப்பாரே உலகிலுள்ள பிறஜெனங்களெல்லாம்
செய்வினையோ யென்றுமனம் தவித்துக்கொள்வார்.

(இ-ள்.) பட்சியானது ஊண் அரசு சத்துரு உயிர்சேதம் பொருள் சேதம் மனம்புண்ணுகும் பகைஆகாது மனைபாழாகும் செய்வினையென்று சொல்வார் (எ-று.) (25)

மனைக்கு ஆயுசு கூட்டும்வகை.

344. தவியாத பூமிதனில்மனைகள்கோலும்
தன்வயது சொல்லக்கேள் தண்மையாக
கதையாகுஊண் அதிலேகோலும் காலம்
தொகையாக முந்நூறு வயசேசொல்வார்
செமையானநடைதனக்குவயதுமைந்தா
திரமாக ஒருநூறுசெப்பலாகும்
குவியாது அரசுக்குவயது கேட்கில்
கூசாதேமாயிரந்தான் கூர்ந்துபாரே.

(இ-ள்.) அரசே தன்பட்சியானது ஊண்காலமாயிருந்தால் முந்நூறு வயதுசொல்வார் நடையிலிருந்தால் பட்சி நூறுவயது சொல்வார் பட்சி அரசானல் ஆயிரவருடம் இருப்பான் (எ-று.) (26)

இதுவுமது.

345. கூர்ந்துபார்வழக்கத்தில் வயது கொஞ்சம்
கொஞ்சமெனில் ஐம்பது தாணுகும்பாரு
நொந்துதான் மரணத்தின் வயசுனுட்பம்
நிகழ்த்தயென்ருல் இருபதெனும் வருஷமைந்தா
சாந்துபார்சத்துரு ஊண் அரசில்லாவிட்டால்
தண்மையுடன் சொன்ன சொல்லும் பழுதேயில்லை
சேர்ந்துபார் மித்துருவின் வலுவுண்டாயில்
செம்மையுடன் யொன்றுபத்தாகும்பாரே.

(இ-ள்.) கூர்மையுள்ள உனது புத்தியால் கவனமாய்ப் பார்த்துக் கொள்ளு உனக்குவயது கொஞ்சம் ஆனதால் ஐம்பதுவருஷம் இருப் பாய் அல்லது இருபதுவயது இருப்பாய் உனதுபட்சி ஊணுயிருக்கும் போது அரசில்லாவிட்டால் பழுதுமில்லை மித்துருவின் வலுஉண்டானல் ஒண்ணுக்கு பத்தாகும் (எ-று.) (27)

மனைப்படலம் முற்றிற்று.

உ

கடவுள் துணை.

இருதுப்படலம்.

346. பாரான பாவையர்தம் வாழ்வும்கேடும்
பண்புளதும் உள்ளதுபோம் பகர்வீர்என்ன
நேரான மானிடர்தான் நின்றுகேட்கில்
நீணிலத்தி லவள்பிறந்த நாளைக்கேளு
ஆரானப்பிரந்திடுநாள் சொல்வாராகில்
அப்பனே அதுகொண்டு சொல்லவேணும்
ஒரான ருதுவாகும் காலம்கண்டு
உண்மையாம் அநுபோகம் ஊணுஊணே.

(இ-ள்.) மானிடராகப்பிறந்த பெண்ணுக்கு வாழ்வுகேடும் உள்ள பொருள்போம் அந்தபெண்ணுக்கு பிறந்தநாள் அப்படிப்பட்டது ஊணு காலமாய் இருக்கும் (எ-று.) (1)

ஊண்கால இருதுவின் பலாபலன்.

347. ஊண்என்ற பட்சியிலே ருதுதான்ஆகில்
உண்பதிலு முடுப்பதிலும் குறைஒன்றில்லை
சேண்என்றபொருள்உண்டு செல்வம்உண்டு
செப்பொண்ணுச் செயல்உண்டு பாலுமுண்டு
மான்என்றவாழ்வுண்டு வாஞ்சைவுண்டு
வழியானபிள்ளைகள் மற்றெல்லாமுண்டு
கோன்என்றசிவகளைதான் அதிகமாகும்
கூட்டுறவாம் மித்துருதான் அரசுநன்றே.

(இ-ள்.) பெண்ணுனது தன்பட்சி ஊணுயிருக்கும்போது ருதுவானுல் அதின்பலன் என்னவென்ருல் தின்பது அதிகம் உடுப்பது உயர்ந்த சேலை பொருள் வருத்து உண்டு செல்வமுண்டு பிள்ளைகள் உண்டு பாலுண்டு முகத்தில் அந்தபெண்ணுக்கு சிவகளைகள் அதிகமாயிருக்கும்.

இதுவுமது.

348. நன்ருனமித்துருதான் அரசனுகில்
நடக்குமடா உதவியினுல் அதிகலாபம்
குன்ருதுஒருபோதும் வாழ்வுதானும்
கூட்டிவைக்கும் சுகபோகம் குலமேசெல்வம்

மன்றாடும் பூங்குழலாள் ஆயுள்மட்டும்
வாழ்வுசொல்லஎவராலு மதிக்கொண்ணுது
சென்றாடும்சத்துருவின் பகையாகாது
சீரழிவுசெய்திடுவான் திண்ணந்தானே.

(இ-ள்.) அந்த பெண்ணின் பட்சியானது மித்துரு அரசாயிருந்தால் அனேகம்பேர் உதவிசெய்வார் குலமும் விளங்கும் வாழ்வுசொல்ல மதிக்கக்கூடாது ஆனல் சத்துரு பகையாகாது பகையானல் அழிந்துவிடுவான் (எ-று.) (3)

இதுவுமது.

349. தானவனைய் இருந்தவரைப் பிரித்துவைப்பான்
தனம்பொருளைப் பவுஷுங்களைத் தவருசெய்வான்
கோனவனென்றறியாம லுலகத்தோர்கள்
குதித்திடுவார் ஒருதொழிலைக் குறித்துக்கொண்டு
மானனையாமின்னர்கள் பூர்க்குங்காலம்
மதிவேணும்நேரமங்கே வாய்க்கவேண்டும்
தேனனையாள் கலியுகத்திற் கோடிக்கொன்று
திடமாகத்தா னிருந்துவாழ்வார்தானே.

(இ-ள்.) அநேகபொருள் வருத்துவை தராமல் செய்வான் யெந்த வேலையை குறித்து போகிறேமோ அந்தவேலையை ஆகாமல் செய்வான் அது யெதினல் யென்றால் அந்தபெண் ருதுவானகாலம் (எ-று.) (4)

நடைகால இருதுவின் பலாபலன்.

350. வாழாதநடைகளிலே ருதுவேயானல்
வாழ்வில்லைசுகமில்லை மனுக்கட்டியில்லை
மாளாதசத்துருஊண் அரசாய்நின்றால்
மற்றதொருதீவினையும் சொல்லொண்ணுது
ஆளானமித்துருஊண் அரசனுகில்
அதனுடையகொடுமையும் அகற்றிவைப்பான்
கேளான வாழ்வுண்டு சுகமுமுண்டு
கொடியானஊண் அரசுசத்துரு ஆகாதே.

(இ-ள்.) நடைபட்சியாயிருக்கும்போது ருதுவானல் வாழ்வுமில்லை சுகமும் இல்லை சத்துரு ஊண் அரசாயிருக்கும்போது ருதுவானல் தீவினை இன்னதென்று சொல்லமுடியாது மித்துரு ஊண் அரசாயிருக்கும்போது ருதுவானல் அந்த கொடுமையை மாற்றிவைப்பான் எப்போதும் ஊண் அரசு சத்துரு இதுகள் ஆகாது (எ-று.) (5)

இதுவுமது.

351. சத்துருவாய்நின்றக்கால் வருஷம்ஒன்றில்
தான்வாழ்வுபோய்விடும் தாய்தந்தைசேதம்
செற்றுவிடும்பிரவிகள் கானபொருளுஞ்சேதம்
தீவினையாம் அகலாதவேசிஆவாள்
நைந்துவிடும்உடலில்நின்று பிணிகள்தானே
நசிந்துபோம் அக்குடிதான் நாசமாக
மத்தியமே ஆகுமென்று முதல்நூல்தன்னில்
வசநித்தார் குருமுனியும் வசனித்தாரே.

(இ-ள்.) அந்த பெண்ணின்பட்சி சத்துருவாய் இருந்தால் வாழ்வு போகும் தாயார் தகப்பனர் இறந்துவிடுவார்கள் அண்ணன் தம்பியும் தங்கை தமக்கையும் சேதம் தானும் தாசியாவாள் வியாதிகாணும் குடியும் பாழாகப்போம் குருமுனி சொன்னவாக்கியம் தவராது (எ-று.) (6)

அரசுகால இருதுகால பலாபலன்.

352. வசநித்த அரசிலேருதுதானகில்
வாக்கினல் அவள்வாழ்க்கை வழுத்தொண்ணது
அசனித்தே பாக்கியம்என்ன பவிசுஎன்ன
அனைவர்களும்கைகட்டி நிற்பதென்ன
நிசமித்தவாழ்வதுதான் ஆயுள்மட்டும்
நிலைக்கும்பார் மென்மேலும் பெருகிமைந்தா
விஷமித்தசத்துருவே யில்லையில்லை
விளம்பும் ஒருபோசனத்தின் சத்துருஆகாதே.

(இ-ள்.) அரசில்பட்சி யிருக்கும்போது ருதுவானல் அவளுடைய வாழ்வு சொல்லமுடியாது பாக்கியவதியாயிருப்பாள் வந்தவர்கள்கைகட்டிக்கொண்டு நிற்பார்கள் வாழ்வானது ஆயுள்மட்டும் குறைவிராது சத்துருமில்லை சாப்பாட்டில் சத்துருகூடாது (எ-று.) (7)

இதுவுமது.

353. ஆகாதபோஜனத்தின் சத்துருதான்ஆனல்
அகற்றிவைப்பான் வாய்க்குரிசி ஆனதெல்லாம்
நேராதமித்துருதான் அரசஞனல்
நொடிக்குள்மனம் புண்ணுகித்தெளிவுண்டாகும்.

சோகமதாய்க்கண் காணுக்காட்சியான
சொர்ப்பனத்தின் கதைபோலத்தொலைந்துபோகும்
வேகமாம்போஜனத்திற் சத்துருதான்என்ன
வேணபடி நடப்பதற்கு நடுக்கும்பாரே.

(இ-ள்.) போஜனத்தில் சத்துருயிருந்தால் வாய்க்கு ருசியானதெல்லாம் தவரிப்போகும் சத்துருவானவன் அரசில் இருந்தால் மனதை புண்ணகச் செய்வான் அது கனவில்கண்டதுபோல் ஆய்விடும் சாப்பாட்டில் சத்துருவிருந்தால் வேண்டியதெல்லாம் தருவான் (எ-று.) (8

நித்திரைகால இருதுவின் பலாபலன்.

354. பாரடா உறக்கத்தில் ருதுதானாகில்
பார்ப்பதென்ன அவள்உயிரே பங்குமாகும்
சேரடாவாழ்வில்லை மணமுமில்லை
ஜெகத்திலே பின்னுதவிதானுமில்லை
ஆரடாவுதவிசெய்ய நினைத்தாலுந்தான்
அடிமாண்டிவளுயிரு மழிந்துபோகும்
சேரடாநினைத்ததெல்லாம் கைவசப்படாது
சரியாக அவள்முகமு மிறங்கும்பாரே.

(இ-ள்.) நித்திரையில் ருதுவானால் அவள் உயிர் பங்காகபோகும் கலியாணமில்லை வாழ்வுயில்லை நினைத்தகாரியமெல்லாம் கைகூடாது அவள் முகமும் இளத்துபோகும் (எ-று.) (9)

இதுவுமது.

355. இறக்குவதுயேதாலே தூக்கத்தாலே
எண்ணமென்ற பிரசண்டவாய்வினாலே
இறங்குவதுமனம் புண்ணாய்ப்போனதாலே
எடுத்ததொருகாரியங்கள் பலியாத்தாலே
உறங்குவதில் பட்சியுடப்பகையாகாது
உற்றதுணையாருமில்லை உலகத்துள்ளே
மயங்குவது பிரம்பிலி உள்ளமட்டும்
மனுஉதவியில்லாமற் போகும்பாரே.

(இ-ள்.) அந்த தூக்கமானது பிரசண்டவாய்வானதினாலே மனம் புண்ணாவதும் எந்தகாரியம் செய்தாலும் பலியாமல்போவதும் தூக்கத்தில் எப்போதும் பகைகூடாது மனிதர் உதவியுமில்லாமல்போகும். (10)

இதுவுமது.

356. போகாதபொருள்போகும் வாழ்வுபோகும்
புனிதமென்ற சொல்போகும் தனமும்போகும்
சாகாத உயிர்போலதவிக்கும்பாரு
சண்டாள சத்துருஊண் அரசனுனல்
வேகாதுவெந்துவிடும் பொசிப்போவில்லை
மேதினியில் மித்துருஊண் அரசனுகில்
நோகாது கனவுகண்ட காட்சியைப்போல்
வெந்துமே நொந்துமனம் கலங்கும்பாரே.

(இ-ள்.) பொருள்போய்விடும் வாழ்வுபோகும் தனமும்போகும் உயிர் போகாத பிணமாய்தவிக்கும் சத்துரு ஊண் அரசானுல் சாப்பாடு கிடையாது மித்துரு ஊண் அரசானுல் அதுகனவில் கண்டகாட்சிபோல ஆயிவிடும் (எ-று.) (11)

இதுவுமது.

357. கலங்குவாள் ஐம்புலனும் ஒடுங்குமட்டும்
கண்டவர்கள் அவளுடனே கலந்துபேசார்
துலங்குவாள் தாமரையின் யிலைத்தண்ணீர்போல்
துயரங்கள் மெத்தவுண் டுயிர்தானப்பா
நலங்குவா ளுயிரிருந்து செற்றபிணம்போலே
நாநிலத்தி லிவட்குதவி யெவருமில்லை
விலங்குவா ளிவளையறி யாமலையோ
வீழ்ந்தோமோ யென்றுபர தவிப்பார்தானே.

(இ-ள்.) கலங்கி அழுது தவிப்பாள் பஞ்சபூதங்களும் ஒடுங்குமட்டும் யார் பார்த்தாலும் பேசமாட்டார்கள் அவள் மனதானது தாமரையிலையில் தண்ணீர் நிற்பதுபோல இருக்கும் துயரங்கள் மெத்தவாகும் செத்த பிணம்போல் இருப்பாள் உதவியாருமில்லை பரதவிப்பாள் (எ-று.) (12)

இதுவுமது

358. தவிப்பதுதானே தாலேவேளையாலே
சண்டாள சத்துருபகை யானதாலே
குவிப்பதுபோல் பொருளாசை மெத்தவுண்டு
கூடிவர மாட்டாது குமுறும்நெஞ்சம்

சலிப்பதுபோல் சொல்வார்கள் தரணியோர்கள்
சலிப்பார்கள் பிறர்யிவளுக் குதவிசெய்யார்
அவிப்பதுபோ லுயராதுதான் வுள்ளமட்டும்
அலைந்தலைந்து மலஜல மழியும்பாரே.

(இ-ள்.) தவிப்பது தன்னுடைய தரித்திரதிசையினல் பொருள்சம் பாதித்து குவித்துவிட வேண்டுமென்று நினைப்பாள் அந்த எண்ணம் நிர வேரமாட்டாது நெஞ்சானது குமுரும் சலித்துவிட்டால் அலைஅலைந்து மலஜலம்போகும் (எ-று.) (13)

மரணகால இருதுவின் பலன்

359. அலைவான மரணத்தில் திரண்டாளாகில்
அழுந்திடுமே வருஷமொன்றில் ஜடலந்தானும்
குலையுமே ளவள்பொருள்தான் மித்துருவலிதானல்
குடிகெடுத்த சத்துருவலிதாகுமாகில்
கலையுமே மாசமொரு மூன்றுக்குள்ளே
கடினமடா குடிவாட்கை கடைதேறது
இலைபோலே நாளுக்கு நாள்தான்தேய்ந்து
இவளுயிர்தான் எவ்வுலகில் இருக்காதுபாரே.

(இ-ள்.) தன்பட்சியானது மரணத்தில் இருக்கும்போது திரண்டா ளாகில் அழிந்துவிடும் ஒருவருடத்தில் மித்துருவலிவினல் பொருள்தான் போகும் சத்துருவலிவானல் மூணுமாசத்தில் கடைதேராது இவளுயிர் இந்த உலகத்தில் இருக்காது (எ-று.) (14)

இருதுப்படலம் முற்றிற்று.

உ

கடவுள் துணை

முகூர்த்தப்படலம்.

360. இருக்கும்ருதுபார்க்கும் இந்தவகையைப்போல
என்னென்ன காரியங்கட் காமோவென்னில்
வருக்காது வருஷந்தான் பிறக்கும் காலம்
தனித்ததொரு மாசமது பிரக்குங்காலம்

வருக்கமுதல் நினைப்பார்கள் வரவுபாரு
மற்றுளது வகைவித்து எடுத்தல்பாரு
குருகாகக்குருகு மந்தகொள்கைபகைபாரு
கோடிவஸ்திரம் வாங்கினதின் குணமும்பாரே.

(இ-ள்.) இந்தவகையினால் என்னகாரியம் ஆகுமென்றால் தான் பிறந்த காலம் வரவுபாரு விதைவித்து எடுக்குதல்பாரு கோடிவஸ்திரம் வாங்கின காலம்பாரு இன்னம் போகர்பஞ்சபட்சி வாங்கிப்பார்த்தால் தெரியும்பாரு (எ-று.) (15)

இதுவுமது.

361. குணமான விலைகிறயம் குடியாபாரம்
கொண்டுவைத்து ஆளுகின்ற உறவின்சேர்க்கை
மணமான வான்முறையாம் சம்பந்தங்கள்
வல்பிணித் தீர்வதற்காய் மருந்தூதல்
கனமான பெரியோர்களைக் காணுநேரம்
கனிவான நற்காலம் துற்காலங்கள்
மணமான காரியங்கள் செய்யும்நேரம்
வசனித்தேன் உரோமரிஷி வகையாய்த்தானே.

(இ-ள்.) எதாகிலும் ஒருபொருள் விலைக்கிவாங்குதல் குடித்தனம் போதல் வியாபாரம் உறவின் சேர்ந்தார் தன்சம்மந்தங்கள் பிணிநீங்கும் பொருட்டு மருந்து கொடுக்குதல் பெரியவர்களை காணுதல் கல்லியாண காரியம் செய்தல் நன்று யென்று உரோமரிஷியார் சொன்னவாக்கியம்.

முகூர்த்தப்படலம் முற்றிற்று.

உ

கடவுள் துணை

நலந்தீங்குப் படலம்.

362. பாரில்வூண் அரசுமடம் செய்யநன்று
பதியெடுக்க நிலங்கொள்ள பயிர்கள்செய்ய
ஏருநடமா டாடுகொள்ள பணிகள்செய்ய
எதிரத்தச் செயங்கொள் ளாபரணம்பண்ண

தாரணியிற் சுயம்பாட அடிமைதேர்க்க
　　தக்கதுவாய் வாழ்வுடனே சம்பத்துண்டாம்
பாருன நடையுறக்கம் சாவிற்செய்தால்
　　மனுச்சேதம் பொருட்சேதம் வகையாய்ப்பாரே:

(இ-ள்.) தன்பட்கியானது ஊண் அரசாயிருந்தால் ஊருக்குபோக பதியெடுக்க நிலம்வாங்க பயிர்செய்ய மாடு ஆடு நகைசெய்ய வியாபாரம் பண்ண சுயம்பாட சம்பத்துண்டாம் பட்சியானது நடையிலிருந்தால் உரக்கத்திலிருந்தாலும் சாவிலிருந்தாலும் மனிதர்சேதம் பொருள்சேதம் என்று போகர் பஞ்சபட்சியில் பார்த்தால் தெரியும் என்ருர் (எ-று.) (1)

இதுவுமது.

393. வகையாகப்பார்த்துமனம் தெளியவேணும்
　　வல்லவர்கள் பெரியோரை வணங்கவேணும்
தொகையாகசாஸ்திரத்தில் வினையம் வைத்து
　　தொடிகுறிபோற்கேள்வியினுல் அறியவேண்டும்
பகையாகயிருந்ததினுல் வருவதென்ன
　　பஞ்சபட்சி சாஸ்திரத்தை உலகமீதில்
நகையாகாதே வெறும்பிலுக்க ருடனேகூடி
　　நளினம்போல் மித்துருவின் நிலையைப்பாரே.

(இ-ள்.) பஞ்சபட்சி சாஸ்திரம் நன்ருகபார்த்து தெளியவேணும் பெரியவர்களை அடுத்து கேள்கவேணும் சாஸ்திரங்களை ஆராய்ந்து பார்க்கவேணும் கேள்வி இருக்கவேணும் ஆகிலும் போகர் பஞ்சபட்சி இருக்கிறது அதில் வாங்கிப்பார்த்தால் எல்லாம் விரிவாக சொல்லும். வீணருடன்கூடி சிரிக்காதே இது மித்துருவின் நிலையென்ருர் (எ-று.) (2)

நலந்தீங்குப்படலம் முற்றிற்று.

உ

கடவுள் துணை.

வெற்றிதோல்விப் படலம்.

364. சற்றுருவின் நிலையே வைத்துக்கொண்டு
　　வினவிநீகேட்கும்வகை சொல்லச்சொல்லும்
பற்றுகிற கனமாறுல் நடையில்வைத்து
　　பவிசுகள் அரசிலே இருந்துக்கொண்டு

வெற்றியாம் அக்ஷரத்தை ஓதுஓது
வெல்லுவது திண்ணமென்று உறுதிக்கொள்ளு
சத்தியமாய் முனியுரைத்த மொழிதப்பாது
தனிவழக்கு வெல்லுவதற்கு வகையைக்கேளே.

(இ-ள்.) சத்துருவை நிலேயில்வைத்துக்கொண்டு எதிரிகேழ்க்கும் சொல்லச்சொல்லி ஆகிறகாரியமானுல் நடையில்வைத்தும் அல்லது அரசில்வைத்தும் பஞ்சாட்சரத்தை சொல்லவேணும் காரியம் வெல்லுமென்று சொல்லவேணும் சத்தியமாய் போகச்சொன்ன பஞ்சபட்சியைப் பார்த்தால் தெரியும் வழக்கானது வெல்லும் (எ-று.) (1)

இதுவுமது

365. வகையென்ன யெதிரியைத்தான் தூக்கம்சாவில்
வைத்துநீ ஊணரசில் இருந்துக்கொண்டு
நகையென்ன கேட்பவனை நடையில்வைத்து
நவிலவே யெதிரியுமே நளுவிப்போவான்
தொகையென்ன சத்துருவின் பகையாகாது
தொடாமல் நடப்பதற்கு அக்ஷரத்தைமாறு
பகையென்ற சொல்போச்சு வுறவுண்டாச்சு
பார்த்தவர்கள் சமர்த்தன்என ஆகும்பாரே.

(இ-ள்.) எதிரியினுடைய பட்சியை தூக்கம் சாவில்வைத்து உன் பட்சியை அரசில்வைத்து தாமொருகாரியம் கேழ்ப்பவனை அவன்பட்சி நடையில் வைத்துச்சொன்னுல் நளிவிபோவான் ஆனுல் சத்துருபகை கூடாது ஒருகாரியம்ஆகும் பொழுதாயிருந்தால்அக்ஷரத்தை-மாறு-பகை-உறவு-பார்ப்பவர் கெட்டிக்காரன்யென்று சொல்வார் அதிலும் போகர் பஞ்சபட்சியைப்பார்த்தால் இன்னம் விளம்பரமாக தெரியும் (எ-று.) (2)

இதுவுமது.

366. ஆகுமே பக்ஷியின் தன் தொழிலேத்தானும்
அப்பனே வகைவிபர மாகச்சொன்னேன்
ஏகமாய்ப் பதினெண்பர் சொல்லார்சொல்லார்
என்மகனே நான்வெளியாய்ச் சொல்லிவைத்தேன்
போகுமே யெதிரியுடப் பகையும்போச்சு
பூதலத்தில் நடக்கும்வகை தெரியலாச்சு
சேகரமாங் காலபலன் அறிந்துகொண்டால்
செல்வமென்று கோடியாய்ச் செழிப்பதாமே.

(இ-ள்.) நானுனபடியால் இதை வெளியாகச் சொன்னேன் பதி ணென் சித்தர்கள்சொல்லார் என்னோடு போகர் பஞ்சபட்சி சொல்லி யிருக்கிறார் அதைவாங்கிப்பார்த்தால் இன்னம்தெளிவாய்க்காணும் எதிரி பகையில்லை காலபலத்தை தெரிந்துகொண்டால் கோடியுகமானாலும் குறைவில்லாமல் வாழலாம் (எ-று.) (3)

இதுவுமது

367. பத்தான இந்தநூற் கிணையேயில்லை
பண்பான தவங்கோடி ஈந்தாலுந்தான்
முத்தான சாஸ்திரத்தை வெளிவிடாதே
முன்னோர்கள் மனதடக்கம் செய்துவைப்பார்
வித்தான பொருள்களெல்லாம் இதிலேதோன்றும்
வேதாந்த சுழிமுனையு மிதுவேயாகும்
கொத்தான அடிகொடுத்து முடிவரைக்கும்
கூறினேன் வாழ்வதற்காய்க் கூறினேனே.

(இ-ள்.) பத்துசாஸ்திரம் வாங்கிபார்த்தாலும் இந்த பஞ்சபட்சி சாஸ்திரமாகாது ஆகிலும்போகர்சொன்ன பஞ்சபட்சி என்னிலும் சிறப் பாகசொன்னார் கோடிதனங்கொடுத்தாலும் சொல்லமாட்டார் இதை வெளிவிடாதே பெரியோர்கள் அடக்கமாகவைத்திருந்தார் காணுதபொ ருள்யெல்லாம் இதில்காணும் முதலிலிருந்து முடிவரைக்கும் வாழும்படி யாய் சொன்னேன் (எ-று.) (4)

வெற்றிதோல்விப் படலம் முற்றிற்று.

உ

கடவுள் துணை.

அஷ்டகன்மப் படலம்.

ஆதிவாரம் திதி நக்ஷத்திர இராசிபலன்.

368. கூறினேன் ஞயரதில் அசுபதியும்சஷ்டி
குணமாக மிதுனமும் மோகனமேயாகும்
தேறினேன் பரணியும் ஏகாதசி
திறமாக கடகமுமே ஸ்தம்பனமேயாகும்

வாறினதோர் கார்த்திகையும் துதிகைதானும்
வளமாக சிங்கமது வேஷணமுமாகும்
தூறினே னுரோகணியும் சத்தமியுங்கூட்டி
சுகமான கன்மமது பேதனமும்பாரே.

(இ-ள்.) சஷ்டி, அசுபதி, மிதுனம், பரணி, ஏகாதசி, கடகம், அஸ்தம், கார்த்திகை, சிங்கம், ரோகணி, சத்தமி, இதுகள் ஆகாது, என்று போகர் பஞ்சபட்சி சொன்னார் அதிலும் பார்த்தால் தெரியும் (எ-று.) ()

இதுவுமது.

369. பாரடா சீரிடமும் துவாதசியோடு
பண்மையுள்ள துலாகோலும் உச்சாடணமேசெய்யும்
கூறடா ஆதிரையும் திரிதிகையும் சேர்ந்தால்
குறியான விருச்சிகமும் மரணமேசெய்யும்
தீரடா புனர்பூசம் அஷ்டமியுங்கூடில்
செகம்புகழும் தனுசதுவும் வசியமாகும்
சாரடா பூசத்தோடு திரையோதசிமகரம்
சண்டாள ஆகிருஷ்ண மாகுந்தானே.

(இ-ள்.) மிருகசீரிடம், துவாதசி திருவாதிரை, விருச்சிகம், இதுகள் கூடியிருந்தால் மரணம்நடக்கும் புனர்பூசம், அஷ்டமி இருந்தால் ஜெகம்புகழும் தனுசு, பூசம்திரையோதசி, மகரம், இதுகள்சேர்ந்து இருந்தால் ஆகிருஷ்ணம் ஆகும்தானேயென்று அகஸ்தியர் பஞ்சபட்சி உறையில்பார்த்தால் தெரியும் (எ-று.) (2)

இதுவுமது.

370. தானென்ற ஆயிலியம் திரிதிகையுங்கும்பம்
தரணிதனில் மோகனமே செய்யும்பாரு
வானென்ற மகத்துடனே நவமிசேர்ந்தால்
வகையான மீனமது ஸ்தம்பனமுமாகும்
தேனென்ற பூரமுடன் அமாவாசைமேஷம்
திகைப்புள்ள வித்வே ஷணமுமாகும்
கோனென்ற உத்திரமும் பஞ்சமியுஞ்சேர்ந்தால்
கூறியதோ ரிடபமது மோகனந்தாமே.

(இ-ள்.) ஆயிலியம், கும்பம், நவமி, மீனம், அஸ்தம், பூரம், அமாவாசை, மேஷம், உத்திரம், பஞ்சமி, ரிஷபம் இதுகள்சேர்ந்து இருந்தால் நலமென்று போகர் பஞ்சபட்சியும் சொல்லியிருக்கிறார் என்னை வெருக்க வேண்டாம் (எ-று.) (3)

இதுவுமது.

371. தாமேதா னஸ்தமுடன் தசமியதுகூடில்
தண்மையுள்ள மிதுனமே உச்சாடணமதாகும்
தாமேதான் சித்திரையும் அம்மாவாசை
தரித்ததொரு கற்கடகம் மாரணமதாகும்
தாமேதான் சுவாதியுடன் சஷ்டியுமேசேரில்
தயவானசிங்கமது வசியமதுவாகும்
தாமேதானிவ்வகையாய் கண்டபேர்க்கு
தரணிதனிலெதிரியில்லை சாற்றுவதுமாமே.

(இ-ள்.) அஸ்தம், தசமி, மிதுனம் உச்சாடனமுமாகும், சித்திரை, அமாவாசை, கடகம், மரணமதாகும் சுவாதி, சஷ்டி, சிங்கம், வசியமாகும் இந்தவகையெல்லாம் கண்டபேர்களுக்குயாரும் எதிரில்லையென்று போகர் பஞ்சபட்சியில் பார்த்தால் தெரியும் என்றார் (எ-று.) (4)

இதுவுமது.

372. மாமோக விசாரமுடன் பிரதமைகற்கட்க
மகத்தான மாரணமு மாகும்பாரு
பாமோக அனுடமுடன் சஷ்டியோடு
பகையான சிங்கமுமே வசியஞ்செய்யும்
காமோக கேட்டையுடன் ஏகாதேசி
கன்னியுமே ஆகிருஷ்ணம் கனிவாயாடும்
கோமாக மூலவுட துதிகைதானும்
குலாவிய துலாத்துடனே மோகனமுமாமே.

(இ-ள்.) விசாரமுடன், பிரதமை, கற்கடகம், மகத்தாக, மரணமாகும் அனுடம், சஷ்டி, சிங்கம், வசியஞ்செய்யும், கேட்டை, ஏகாதசி, கன்னியுமே ஆகிருஷ்ணம் நல்லதாகும் மூலம், துதிகை, துலாத்துடன், மோகனமாகும் இதுகள் எல்லாம் போகர் பஞ்சபட்சிபார்த்தால் விரிவாய் சொல்லும் (எ-று.) (5)

இதுவுமது.

373. மோகமுள்ள பூராடம் சத்தமியுங்கூட்டி
முரிமையுடன் விரிச்சகமும் ஸ்தம்பனமுமாகும்
பாகமுள்ள உத்ராட துவாதேசிதானும்
பணியுமடா வேஷணமும் பணிந்துமதுமாகும்
தாகமுள்ள திருவோணம் திரிதிகையுமாரம்
தப்பாமல் பேதனமே செய்யும்பாரு

தேகமுள்ள அவிட்டமுடன் அஷ்டமியுங்கும்பம்
தெளிந்துபார் உச்சாடணமே செய்யும்பாரே.

(இ-ள்.) பூராடம், சத்தமி கூடியிருந்தால் விருச்சிகம், ஸ்த்தம்பனமாகும் உத்தராடம், துவாதசி, திருவோணம், தப்பாமல்பேதனம், செய்யும்பாரு அவிட்டம், அஷ்டமி கும்பம், உச்சாடனம் செய்யுமென்று போகர்பஞ்சபட்சியும் சொல்லியிருக்கின்றார் (எ-று.) (6)

இதுவுமது.

374. செய்யுமே உத்திராடத் திரயோதேசி
செயமான மீனமுடன் மாரணமுமாகும்
வையுமே சதயமுடன் சதுர்த்தியோடு
வளமான வேஷமுமே செய்யும்வசியம்
குய்யுமே பூரட்டாதி நவமிகற்கடகம்
கொண்டுவரு மாகிருஷ்ணம் குணமாய்ப்பாரு
நையுமே ரேவதியும் சதுர்த்தசியும்மிதுனம்
நயமான மோகனமே செய்யும்பாரே.

(இ-ள்.) உத்திராடம், திரயோதசி மீனமுடன் மரணம் ஆகும் சதயம் சதுர்த்தசி, வேஷம், செய்யும், வசியம் பூரட்டாதி நவமி கற்கடகம், ஆகிருஷ்ணம் குணமாய்ப்பாரு ரேவதி, சதுர்த்தசி, மிதுனம், மோகனம், செய்யுமென்று போகர் பஞ்சபட்சியும் சொல்லியிருக்கிறார் (எ-று.) (7)

இதுவுமது.

சோமவாரம் திதிநக்ஷத்திரம் இராசி பலன்.

375. பாரப்பா திங்களுடன் அசுபதியுந்தானும்
பஞ்சமியுங் கற்கடகம் ஸ்தம்பனமுமாகும்
நேரப்பா பரணியுடன் தசமிசிங்கம்
நேர்மையுள்ள வித்வேஷணம் செய்யும்பாரு
ஆரப்பா கார்த்திகையும் அம்மாவாசை
அப்பனே கன்னியுமே பேதமுமாகும்
சாரப்பா உரோகணியும் பிரதமையும்துலாமும்
சார்வான உச்சாடனமே ஆகும்பாரே.

(இ-ள்.) அசுபதி, பஞ்சமி, கற்கடகம், ஸ்தம்பனம், பரணி, தசமி, சிங்கம், வித்வேஷணம் செய்யும்பாரு கார்த்திகை, அமாவாசை, கன்னி, பேதமாகும் உரோகணியும், பிரதமை, உச்சாடனம் செய்யும் என்று போகர் பஞ்சபட்சியும் சொன்னார் (எ-று.) (8)

இதுவுமது.

376. ஆகுமே மிருகசீ ரிடமும்சஷ்டி
அதிவிருட்சிக யாரணமுமே செய்யும்பாரு
ஏகுமே திருவாதிரையும் ஏகாதேசி
இனிதான தனுசுடனே வசியம்மாகும்
போகுமே புனர்பூசம் துதிகைதானும்
புனிதமுடன் மகரமும் ஆகிருஷ்ணம்ஆகும்
சாகுமே பூசமுடன் சதமியும்கும்பம்
தனியாகு மோகனமே செய்யும்பாரே.

(இ-ள்.) மிருகசீரிடம், சஷ்டி, விருசசிகம், இம்மூன்றும் மரணம் செய்யும் திருவாதிரை, ஏகாதசி, தனுசு, இதுகள் வசியமாகும் புனர்பூசம், துதிகை தானும் மகரம், ஆகிருஷ்ணமாகும் பூசம், சத்தமி, கும்பம், இதுகள் இருந்தால் மோகனம் செய்யுமென்று போகர் பஞ்சபட்சியில் விரிவாகச் சொல்லுகிருர் (எ-று.) (9)

இதுவுமது.

377. பாரேநீ யாயிலியம் துவாதசிமீனம்
பத்திரமே ஸ்தம்பனமும் பதிவாய்க்காணும்
நேரேநீசுகமுடனே திரிதிகையும்மேஷம்
நினைவான வித்வேஷணமே செய்யும்பாரு
தேரேநீ பூரமுடன் அஷ்டமியும்இடபம்
தெளிவான பேதனமே மாகும்பாரு
காரேநீ உத்திரமும் திரையோதேசி
கனிவான மிதுனமுமே உட்சாடணமுமாமே.

(இ-ள்.) ஆயிலியம், துவாதசி, மீனம், திரிதிகை, மேஷம், வித்துவேஷணம் செய்யும் பூரம், அஷ்டமி, இடபம், பேதனமாகுமென்றும் உத்திரம், திரையோதசி, இதுகள் இருந்தால் மிதுனம், உச்சாடனம். ()

இதுவுமது.

378. ஆமப்பா மஸ்தமுடன் சதுர்தசியோடும்
அப்பனே கற்கடமும் மாரணமுமாகும்
போமப்பா நவமியுடன் சோதிசிங்கம்
புகழ்பெரிய வசியமுடன் செய்யும்பாரு
நாமப்பா சித்திரையும் சதுர்த்தசிகன்னி
நயமான மாகிருஷ்ணம் மாகும்பாரு

காமப்பா விசாகமுடன் பஞ்சமியும்துலாமும்
கனிவான மோகனமே செய்யும்பாரே.

(இ-ள்.) அஸ்தம், சதுர்த்தசி, கற்கடகம், இதுகள் இருந்தால் மரண மாகுமென்றும் நவமி, சோதிலிங்கம், வசியம் செய்யுமென்றும் சித்திரை, சதுர்த்தசி, கன்னி யிருந்தால் ஆக்கிருஷ்ணம் செய்யுமென்றும் விசாகம், பஞ்சமி, துலாம், மோகனம் செய்யும் (எ-று.) (11)

இதுவுமது

379. செய்துபார் தசமியுடன் அனுஷம்மீனம்
திரண்டதொரு விருட்சிகமும் ஸ்தம்பனமாம்
கொய்துபார் கேட்டையுடன் அமாவாசி
குணமான தனுசதுவும் வித்வேஷணம்செய்யும்
பைதுபார் மூலமுடன் பிரதமையும்மரகம்
பணிவான பேதனமே செய்யும்பாரு
நைதுபார் பூராடம் சஷ்டியோடும்
நயமான கும்பமே உட்சாடணமாமே.

(இ-ள்.) தசமி, அனுடம், மீனம், விருச்சிகம், ஸ்தம்பனமாகும், கேட்டை, அமாவாசை, தனுசு, வித்வேஷணம் செய்யுமென்றும் மூலம், பிரதமை, மகரம், பேதனம் செய்யும் பூராடம், சஷ்டி, கும்பம், இதுகள் இருந்தால் உச்சாடனம் செய்யும் (எ-று.) (12)

இதுவுமது.

380. உட்சாடணம் திருவோணம் யேகாதேதி
உறவான மீனமது மாரணமாகும்
திட்சாட்டிய திருவோணம் துதிகைதானும்
திருந்தியதோர் மேஷமே வசியமாகும்
நட்சாட்டி யவிட்டமுடன் சத்தமியுமிடபம்
நன்மையென்ற யாதருஷ்ணம் செய்யும்பாரு
மைசாட்டிய உத்திராட்டாதி துவாதேசி
மறவாமல் மோகமே செய்துபாரே.

(இ-ள.) திருவோணம், ஏகாதசி, மீனம், இதுகள் இருந்தால் மாரணமாகுமென்றும் திருவோணம், துதிகை, மேஷம் இதுகளிருந்தால் வசியமாகுமென்றும் அவிட்டம், சத்தமி, இடபம், ஆகிருஷ்ணம் செய்யுமென்றும் உத்திரட்டாதி, துவாதசி இதுகள் இருந்தால் மோகனம்செய்யும் (எ-று.) (13)

மங்களவாரம் திதிநட்சத்திர இராசி பலன்.

381. செய்துபார் ரேவதி திரிதிகையுடன்கண்டும்
திரமானஸ்தம்பனமே செய்துபாரு
நெய்துபார் பூரட்டாதி அஷ்டமியுஞ்சிங்கம்
நுண்மையுடன் வித்வேஷணமாகும்
நைதுபார் ரேவதியும் திரையோதசி
நலமான கன்னிகையுமே பேதனமாகும்
வைதுபார் செவ்வாயும் மசுபதியும்சதுர்த்தி
வளமான துலாம்அதுவு முச்சாடணமாமே.

(இ-ள்.) ரேவதி, திரிதிகை, இருந்தால் ஸ்தம்பனம் செய்யுமென் றும் பூரட்டாதி, அவிட்டம், சிங்கம் இருந்தால் வித்வேஷணம், செய்யு மென்றும் ரேவதி, திரையோதசி, கன்னி இவைகள் இருந்தால் பேதன மாகும் செவ்வாய், அசுபதி சதுர்த்தசி, துலாம் இதுகள் இருக்குமாகில் உச்சாடனம் செய்யும் (14)

இதுவுமது.

382. ஆமப்பா பரணியுடன் நவமியுங்கூட்டி
அப்பனே விருட்சிகம் மாரணமேசெய்யும்
நாமப்பா கார்த்திகையும் சதுர்த்தேசிதானும்
நலமான வசியமென்ற தொழிலுமாகும்
போமப்பா ரோகணியும் பஞ்சமியும்மகரம்
பொருள்வரத்து மாகி மாகிருஷ்ணம்செய்யும்
தாமப்பா மிருகசீரிடம் தசமியோடும்
தனதான கும்பமே மோகனமாமே.

(இ-ள்.) பரணி, நவமி, விருச்சிகம், இருந்தால் மரணம் செய்யு மென்றும், கார்த்திகை, சதுர்த்தசி, இதுகளிருக்குமாகில் வசியமாகு மென்றும், ரோகணி, பஞ்சமி, மகரம், பொருள்கள்வருந்தும் ஆக்கிருஷ் ணம் செய்யுமென்றும், மிருகசீரிடம், தசமி, கும்பம் இதுகளிருந்தால் மோகனம் செய்யுமென்றும் (எ-று.) (15)

இதுவுமது.

383. மோகமே திருவாதிரை அமாவாசை
முனையுள்ள மீனமே தம்பனமாகும்
கோனமே புனர்பூசம் பிரதமையும்மேஷம்
குடிகெடுத்த வித்வே ஷணமாகும்
வாகனமே பூசமுடன் சஷ்டியோடும்
வழியான இடபமே பேதனம்செய்யும்

சாகனமே ஆயிலியம் யேகாதேசி
தனிவாழ மிதுனம் உட்சாடணமாமே.

(இ-ள்.) திருவாதிரை, அமாவாசை, மீனம் இருந்தால் தம்பனமாகு மென்றும் புனர்பூசம், பிரதமை, மேஷம், வித்வேஷணம், சஷ்டி, இடப மிருந்தால் பேதனம் செய்யுமென்றும் ஆயிலியம், ஏகாதசி, மிதுனமிருந் தால் உச்சாடனம் செய்யமென்ருர் (எ-று.) (16)

இதுவுமது.

384. ஆமென்ற மகமுடனே துதிகைகூட்டி
அப்பனே கற்கடக மாரணமாகும்
வேமென்ற பூரமடா சத்தமியும்கூட்டி
மேன்மையுள்ள சிங்கமே வசியமாகும்
ஓமென்ற யுத்திரம் துவாதேசிதன்னில்
உலகமெல்லாம் மாகிருஷ்ணம் செய்யும்பாரு
தாமென்ற மஸ்தமுடன் திரிதிகையுங்கூட்டி
தனப்பிறந்த துலாமுடனே மோகனமாம்பாரே.

(இ-ள்.) நாமடா, மகம், துதிகை, கற்கடகம், மாரணம், செய்யு மென்றும் பூரம், சத்தமி, சிங்கம், கூடியிருக்கில் வசியமாகும், உத்திரம், துவாதசி, ஆகிருஷ்ணம் செய்யுமென்றும், அஸ்தம், திருதிகை, துலாம், மோகனம், செய்யுமென்றும் போகநாயனர் புகன்ற பஞ்சபட்சியைப் பார்த்தால் தெளிவாய்த்தோணும் (எ-று.) (17)

இதுவுமது.

385. பாரப்பா சோதியுடன் அஷ்டமியும் விருட்சிகம்
பகர்கின்ற தம்பனமே யாகும்பாரு
நேரப்பா சித்திரையும் திரையோதேசி
நினைவான தனுசதுவும் வித்வேஷணமுமாகும்
ஆரப்பா விசாகமுடன் சதுர்த்திதானும்
அழகான மாரணமே பேதனமும்பாரு
கூறப்பா அனுடமே நவமிகும்பம்
குடிகெடுத்த உட்சாடன மாகும்பாரே.

(இ-ள்.) சோதி, அஷ்டமி, விருட்சிகம், ஸ்தம்பனம் செய்யுமென் றும் சித்திரை, திரையோதசி, தனுசு கூடியிருக்கையில் வித்வேஷணம், செய்யுமென்றும் விசாகம், சதுர்த்தசி இருக்கில் மாரணம் செய்யுமென் றும் அனுடம், நவமி, கும்பம், உச்சாடனமாகுமென்றும் உரோமரிஷி சொன்னுர் (எ-று.) (18)

இதுவுமது.

386. ஆகுமே கட்டையுடன் சதுர்த்தேசிமீனம்
அழித்துவிடும் மாரணமு மாகும்பாரு
ஏகுமே மூலமுடன் பஞ்சமிரிஷபமேஷம்
என்னசொல்வேன் வசியமடா எதிரிதோர்வை
போகுமே பூராடம் தசமியோடு
புகழ்பெரிய இடபமுமே மாகிருஷ்ணமாகும்
வேகுமே யுத்திராடம் அமாவாசு
விதனமுள்ள மிதுனமுமே மோகனமும்செய்யும்

(இ-ள்.) அப்பனே, கேட்டை, சதுர்த்தசி, மீனம், அழிந்து மாரணம் ஆகும் மூலம், பஞ்சமி, ரிஷபம், மேஷம், இதுகள் சேர்ந்திருந்தால் எதிரிதோர்வடைந்து வசியமாகும் பூராடம், தசமி, இடபம், ஆகிருஷ்ணம் செய்யுமென்று அகஸ்தியர் அருளிச்செய்த பஞ்சபட்சி உறையில் பார்த்தால் தெளிவாய்த்தெரியும் (எ-று.) (19)

இதுவுமது.

387. செய்யுமடா திருவோணம் பிரதமையும்சேர்ந்தால்
சேர்க்கையுள்ள கற்கடகம் ஸ்தம்பனமுமாகும்
மையுமடா அட்டமுடன் சஷ்டியோடும்
பின்துறுதி யானசிங்கம் வித்வேஷணமும்செய்யும்
கொய்யுமடா உத்திரட்டாதி ஏகாதேசி
குலாவியதோர் கன்னியுடன் பேதனமுமாகும்
நொய்யுமடா சதையமுடன் பேதனமாகும்
ஞேஷம்உள்ள துலாமதுரம் உட்சாடணமேபாரே.

(இ-ள்.) ஐயனே, திருவோணம், பிரதமை, கற்கடகம் ஸ்தம்பனமாகும் அஷ்டம், சஷ்டி, சிங்கம், சேர்ந்திருக்கில் வித்வேஷணம் செய்யும் பாரு உத்திரட்டாதி, ஏகாதசி, இதுகள் சேர்ந்திருக்கில் பேதஞ்செய்யுமென்றும் (கன்னி) சதயம், துலாம், அணைந்து இருக்கில் உச்சாடனமாகுமென்றும் போகநாயனர் பாடிய பஞ்சபட்சி உறையைப் பார்த்தால் தெளிவாய்காணும் (எ-று.) (20)

புதவாரம்திதி நட்சத்திரம் இராசிபலன்.

388. பாரப்பா பூரட்டாதி சத்தமியும்சேர்ந்தால்
பரிவான விருச்சிகம் மாரணமாகும்
ஆரப்பா ரேவதியும் துவாதேசிதனிசு
அப்பனே வசியமடா அன்பாய்ச்சொன்னேன்
ஏரப்பா யிதனுடனே பசுபதியும்திரிகையும்
என்மகனே மகரம் மாகிருஷ்ணமாகும்

சாரப்பா பரணியும் அஷ்டமியும்நவமி
சார்வான கும்பமுமே மோகனமுமாமே

(இ-ள்.) குழந்தாய், பூரட்டாதி, சத்தமி, விருச்சிகம், ஒன்றோடொன்று சேர்ந்தால் மரணமாகும் ரேவதி, துவாதசி, தனுசு, எல்லாம் வசியமாகும் பசுபதியும் திரிதிகை, மகரம், ஆகிருஷ்ணம், செய்யுமென்றும் பரணி, அஷ்டமி, நவமி, கும்பம், இதுகள் சேர்ந்துமிருக்கில் மோகனம் பண்ணுமென்றும் சுருக்கு பஞ்சபட்சியிலும் சொல்லியிருக்கிறது.

இதுவுமது.

389. மோகமுள்ள கார்த்திகையும் திரையோதசி
முன்யானே மீனமுடன் ஸ்தம்பனமுமாகும்
தாகமுள்ள ரோகணியும் சதுர்த்திமேடம்
தப்பாமல் வித்வதோஷணமும் செய்யும்பாரு
ஆகமுள்ள மிரிகசீரிடம் நவமியோடும்
அன்பான யிடபமே பேதனமாகும்
வாசமுள்ள திருவாதிரையும் சதுர்த்தேசிமிதுனம்
வழிவான உட்சாடண மாகும்பாரே

(இ-ள்.) பாலகனே, கார்த்திகை, திரயோதசி, மீனம், ஆகில் ஸ்தம்பனமாகுமென்றும் ரோகணி, சதுர்த்தசி, மேடம், வித்வேஷணம், செய்யுமென்றும் மிருகசீரிடம், நவமி, இடபம் இதுகள் சேர்ந்து இருக்கில் பேதனம் செய்யுமென்றும், திருவாதிரை, சதுர்த்தசி, மிதுனம் இம்மூன்றும் சேர்ந்து இருக்கில் உச்சாடனம் செய்யுமென்றும் உரோமரிஷியார் சொல்லியிருக்கிறார் (எ-று.) (22)

இதுவுமது.

390. ஆகுமே புனர்பூசம் பஞ்சமியும்சேர்ந்தால்
அப்பனே கற்கடகம் மாரணமாகும்
ஏகுமே பூசமுடன் தசமியோடு
என்னசொல்வேன் சிங்கமடா வசியமாகும்
சாகுமே மாயிலியம் அம்மாவாசி
வன்மையுள்ள கன்னியுமே மாகிருஷ்ணமாகும்
போதுமே மகமுடனே பிரதமையும்நல்ல
புகழ்பெரிய துலாத்துக்கு மோகனம்பாரே

(இ-ள்.) மகனே புனர்பூசம், பஞ்சமி, கற்கடகம் கூடியிருக்கில் மரணஞ் செய்யுமென்றும் பூசம், தசமி, சிங்கம், இம்மூன்று மிருக்குமாகில் வசியமாகும் ஆயிலியம், அமாவாசை, சேர்ந்து இருக்கில் ஆகிருஷ்ணம்

செய்யுமென்று மகம், பிரதமை, துலாத்தும், இதுகள் சேர்ந்திருக்குமா
கில் மோகனம் செய்யுமென்றும் அகஸ்தியர் பஞ்சபட்சி உறையில் பார்த்
தால் தெரியும் (எ-று.) (23)

இதுவுமது.

391. பாரேதான் பூரமுடன் சஷ்டிகூட்டி
பரிவான விரிசிகமுடன் ஸ்தம்பனமாகும்
காரேநீ உத்திரம் ஏகாதசி
கலந்ததொரு தனுசதுவும் வித்வேஷணமாகும்
தேரேநீ அஸ்தமுடன் துதிக்கைதானும்
திறமான மகரமே பேதனம்பாரு
கோரேநீ சோதியென்ற சத்தமியுங்கூட்டி
கும்பமுடனே உட்சாடண மாகும்பாரே.

(இ-ள்.) பாலகனே பூரம், சஷ்டி, விருச்சிகமாயிருக்கில் ஸ்தம்பன
மாகும் உத்திரம், ஏகாதசி, தனுசுவாயிருக்கில் வித்வேஷணம் செய்யு
மென்றும் அஸ்தம், துதிகை, மகரம், பேதனம் செய்யுமென்றும் சோதி,
சத்தமி, கும்பமுடன் உச்சாடனம் செய்யுமென்று போகர் திருவாய்மலர்ந்
தருளிய போகர் பஞ்சபட்சியைப் பார்த்தால் விரிவாய் தெரியும் (எ-று.)

இதுவுமது.

392. ஆகுமப்பா சித்திரை துவாதேசிமீனம்
அதுநடத்தும் மரணந்தா னாகும்பாரு
போகாதப்பா விசாகமுடன் திரிதிகைதானும்
புகழ்பெரிய மேடமே வசியமாகும்
வாகுமப்பா அனுடமுடன் அஷ்டமியும்கூடில்
வலியான மிடபமே மாகிருஷ்ணனாகும்
ஏகுமப்பா கேட்டையுமே திரைபோதேசி
என்சொல்வேன் மிதுனமா மோகனமுமாமே.

(இ-ள்.) சீடனே சித்திரை, துவாதசி, மீனம், பெரியோர் உறைத்த
படி மரணந்தானாகும் விசாகம், திரிதிகை; மேடம் வசியமாகும் அனுடம்
அஷ்டமி இடபம் சேர்ந்து இருக்கில் ஆகிருஷ்ணம் செய்யுமென்று கேட்
டை; திரயோதசி; மிதுனம்; மோகனம்செய்யுமென்று முதியோர் உறைத்
தபடி சுருக்கு பஞ்சபட்சியைப் பார்த்தால் சுருக்கமாய் தெரியும் (எ-று.)

இதுவுமது.

393. ஆமென்ற மூலமுடன் சதுர்த்தியோடு
அப்பனே கற்கடக ஸ்தம்பனமுமாகும்

வேமென்ற பூராடம் நவமியப்பா
மேதினியில் சிங்கமுமே வித்வேஷணமுமாகும்
காமென்ற உத்திராடம் சதுர்த்தேசிகன்னி
கனிவான பேதமே செய்யும்பாரு
நாமென்ற திருவோணம் பஞ்சமியும்கூடல்
நலமான துலாமதுவும் உட்சாடணமுமாமே.

(இ-ள்.) மாணுக்கா மூலம் சதுர்த்தசி கற்கடகமாயிருக்கில் ஸ்தம்பனம் செய்யுமென்று பூராடம் நவமி சிங்கம் இருக்கில் வித்வேஷணம் செய்யுமென்று உத்திராடம் சதுர்த்தசி கன்னி இது சேர்ந்துமிருக்கில் பேதனஞ்செய்யுமென்று திருவோணம் பஞ்சமி துலாம் இதுகள் சேர்ந்துமிருக்கில் உச்சாடனம் செய்யுமென்று உரோமரிஷியார் சொல்லியது.

இதுவுமது.

394. ஆமென்ற அவிட்டமுடன் தசமிகூடில்
அழகான விருட்சிகமும் அங்கேமாரணமுமாகும்
போமென்ற உத்திரட்டாதி அமாவாசைதனுசு
புகழ்பெரிய வசியமப்பா என்னசொல்வேன்
தேமென்ற தபமும்பிர தமையும்மகரம்
செம்மையுள்ள மாகிருஷ்ணம் செய்துபாரு
நாமென்ற பூரட்டாதி சஷ்டிகூட்டி
நலமான கும்பமே மோகனனுமாமே.

(இ-ள்.) சிரியனே அவிட்டம் தசமி விருச்சிகம் மரணமாகுமென்றும் உத்திரட்டாதி அமாவாசை தனுசுமாயிருக்கில் உலகம் வசியமாகுமென்று பிரதமை மகரம் கூடியிருக்கில் ஆகிருஷ்ணம் செய்யுமென்று பூரட்டாதி சஷ்டி கும்பம் கூடியிருக்கில் மோகனமாகுமென்று முதியோருரைத்தபடி உரோமரிஷி சொன்னுர் (எ-று.) (27)

குருவாரம் திதி நட்சத்திரம் இராசி பலன்.

395. மோகனந்தான் ரேவதியும் ஏகாதேசி
உண்மையுள்ள மீனமப்பா ஸ்தம்பனமூமாகும்
வாகனந்தான் வியாழன்அங்கே அசுபதியுந்துதிகை
மக்களேமேஷமப்பா வித்வேஷணமுமாகும்
கோகனமே பரணியுடன் சப்தமியும்சேர்ந்தால்
குலாவியதோர் இடபமுமே பேதனமுமாகும்

சோகந்தான் கார்த்திகையும் துவாதேசிமிதுனம்
சொன்னேனடா உட்சாடணமே செய்யும்பாரே.

(இ-ள்.) குழந்தாய் ரேவதி ஏகாதசி மீனம் இம்மூன்றும் சேர்ந்திருந்தால் ஸ்தம்பனமாகும் வியாழன் அசுபதி துதிகை மேஷம் இதுகளிருந்தால் வித்வேஷணமாகும் பரணி சப்தமி இடபமிருந்தால் பேதனமாகும் கார்த்திகை துவாதசி மிதுனம் இதுகளிருந்தால் உச்சாடனம் செய்யுமென்று போகர்சொன்ன பஞ்சபட்சி உறையைப்பார்த்தால் இன்னம் விரிவாக தெரியுமென்றார் (எ-று.) (28)

இதுவுமது.

396. செய்யுமே ரோகணியும் திரிதிகையுங்கூடில்
திடமானகற்கடகம் மாரணமுமாகும்
நையுமே மிருகசீரிடம் அஷ்டமியும்சேர்ந்தால்
நளினமுள்ள சிங்கமங்கே வசியமாகும்
கொய்யுமே திருவாதிரைத் திரையோதேசி
குணமான கன்னியுடன் ஆகிருஷ்ணமாகும்பாரு
வையுமேபுனர்பூசம் சதுர்த்திதுலாமொன்று
வணங்குமடா மோகந்தான் மார்க்கம்பாரே.

(இ-ள்.) மகனே ரோகணி திரிதிகை கற்கடகம் சேர்ந்திருந்தால் அது மரணம்செய்யுமென்றும் மிருகசீரிடம் அஷ்டம் சிங்கமிருந்ததாக எல்லாம் வசியமாகும் திருவாதிரை திரையோதசி கன்னி சேர்ந்திருந்தால் ஆகிருஷ்ணம் செய்யுமென்று புனர்பூசம் சதுர்த்தசி துலாமிருந்தால் மோகனந்தான் செய்யுமென்றும் அகஸ்தியர் பஞ்சபட்சி உரையைப்பார்த்தால் இன்னம் பளிங்கரமாகத்தெரியும் (எ-று.) (29)

இதுவுமது.

397. மார்க்கமுள்ள பூசமுடன் நவமிசோலை
மக்களே ஸ்தம்பனமும் மகிழ்ந்துகாணும்
ஏற்கையுள்ள ஆயிலியம் சதுர்தேசிதனுசு
என்மகனே வித்வே ஷணமுமாகும்
சேர்க்கையுள்ள மகமுடனே பஞ்சமியுஞ்சேர்ந்தால்
திடமானமகரமுமே பேதனமே செய்யும்
ஆர்க்கையுள்ள பூரமுடன் தசமியோடு
அப்பனே கும்பமும் உட்சாடமுமாமே.

(இ-ள்.) மைந்தா பூசம் நவமி சோலை இதுகளிருக்குமாகில் ஸ்தம்பனம் செய்யுமென்றும் ஆயிலியம் சதுர்த்தசி தனுசு இதுகளிருந்தால் வித்

வேஷணம் செய்யுமென்றும் மகம், பஞ்சமி, மகரமிதுகளிருந்தால் பேதனம் செய்யுமென்றும் பூரம், தசமி, கும்பம், இதுகளிருந்தால் உச்சாடனம் செய்யுமென்றும் சுருக்கு பஞ்சபட்சியைப் பார்த்தால் இன்னம் கண்ணுடியைப்போல் தெரியும் (எ-று.) (30)

இதுவுமது.

398. ஆமப்பா யுத்திரமும் மமாவாசை
அப்பனே மீனமுமே மாரணமுமாகும்
நாமப்பா மஸ்தமுடன் பிரதமையும் சேர்ந்தால்
நலமான மேஷமுமே வசியமாகும்
காமப்பா சோதியென்ற சஷ்டிகாளை
களைக்கு மாகிருஷ்ணன் கண்டுபாரு
போமப்பா சித்திரையும் ஏகாதசி
புனிதமுடன் மிதுனமுமே மோகனம்பாரே.

(இ-ள்.) பாலா, உத்திரம், அமாவாசை, மீனம் இதுகளிருந்தால் மாரணம் செய்யுமென்றும் அஸ்தம், பிரதமை, மேஷம், இதுகள் கூடியிருந்தால் எல்லாம் வசியமாகும் சோதி சஷ்டி, காளை, இதுகள் ஒத்துமையாயிருந்தால் ஆகிருஷ்ணம் செய்யுமென்றும் சித்திரை, ஏகாதசி, மிதுனம், இதுகளிருந்தால் மோகனம் செய்விக்குமென்றும் அகஸ்தியர் அருளிச்செய்த பஞ்சபட்சி உறையைப்பார்த்தால் இன்னம் துலக்கமாக தெரியும் (எ-று.) (31)

இதுவுமது.

399. பாரென்ற விசாகமுடன் துதிகைதானும்
பார்மகனே கற்கடகம் தம்பனமுமாகும்
சீரென்ற மனுமடா சத்தமியுங்கூட்டி
சிறப்பான சிங்கமுமே வித்வேஷணங்கள்செய்யும்
காரென்ற கேட்டையடா துவாதேசிகன்னி
கனமான பேதனமே யாகும்பாரும்
வாரென்ற மூலமுடன் திருதிகைதுலாந்தான்
மக்களே உட்சாடனமாம் மகிழ்ந்துபாரே.

(இ-ள்.) மதளை, விசாகம், துதிகை, கற்கடகம், இதுகளிருக்குமாகில் ஸ்தம்பனம் செய்யுமென்றும் அனுஷம், சத்தமி, சிங்கம், இதுகளிருக்கில் வித்வேஷணம் செய்யுமென்றும் கேட்டை, துவாதசி, கன்னி, இதுகள் பொருத்தமாயிருந்தால் பேதனம் செய்யுமென்றும் மூலம் திருதிகை, துலாம், இதுகள் மார்க்கமாயிருந்தால் உச்சாடனம் செய்யுமென்றும் சொன்னுர் இன்னம், இராமதேவர்சொன்ன பஞ்சபட்சி உறையைப் பார்த்தால்தெரியும் (எ-று.) (32)

இதுவுமது.

400. மகிழ்ந்துபார் பூராடம் அஷ்டமியும்கேளும்
மனதுபோல் மாரணமு மாகும்பாரு
நெகிழ்ந்துபார் யுத்திராடம் திசையோதேசி
நேரான தனுசதுவும் வசியமதுவாகும்
இருந்துபார் திருவோணம் சதுர்த்திசேர்ந்தால்
என்மகனே மகரமுமே மாகிருஷ்ணமாகும்
மகிழ்ந்துபார் மவிட்டமுடன் நவமிகும்பம்
தனதான மோகனமாம் தானேபாரே.

(இ-ள்.) சிஷியா, பூராடம், அஷ்டமி, இதுகள் பார்வையா யிருந்தால் மரணம் செய்யுமென்றும் உத்திராடம், திரையோதசி, இதுகளிருந்தால் வசியமாகுமென்றும் திருவோணம் சதுர்த்தசி, 'மகரம், இதுகள் பார்த்தால் ஆகிருஷ்ணம் செய்யுமென்றும் அவிட்டம், நவமி, கும்பம், இதுகளிருக்கில் மோகனம் செய்யுமென்றும் போகர் சொன்ன பஞ்சபட்சி உறையைப்பார்த்தால் தேங்காய் பிளந்தாப்போல் தெரியும்(எ-று.)

இதுவுமது.

401. தானென்ற உத்திரட்டாதி சதுர்த்தேசிமீனம்
தப்பாமல் தம்பனமே செய்யும்பாரு
மானென்ற சதயமுடன் பஞ்சமியும்மேஷம்
மணம்போலே வித்வே ஷணமேசெய்யும்
நாளென்ற பூரட்டாதி தசமிகாளை
நலமானபேதவே மாகும்பாரு
தேனென்ற ரேவதியும் அம்மாவாசை
சிரந்ததொரு மிதுனமுமே உச்சாடனமுமாமே.

(இ-ள்.) ஆச்சடா, உத்திரட்டாதி, சதுர்த்தசி, மீனமிதுகள் பார்வையாயிருந்தால் தம்பனம் செய்யுமென்றும் பூரட்டாதி, தசமி, காளை இதுகள் பார்வையாயிருந்தால் பேதனம் செய்யுமென்றும் ரேவதி, அமாவாசை, மிதுனம், இதுகளிருந்தால் உச்சாடனமாகுமென்று இன்னும் சுருக்கு பஞ்சபட்சியைப் பார்த்தால் தேங்கா உடைத்தாப்போல் விளங்கும் (எ-று.) (34)

சுக்கிரவாரம் திதி நட்சத்திரம் இராசி பலன்.

402. மானென்ற வெள்ளியுடன் அசுபதியுங்கூடில்
மக்களே பிரதமையும் கண்டுமாரணமாம்

தேனென்ற பரணியுடன் சஷ்டிசேர்ந்தால்
திடமான சிங்கமது வசியமாகும்
வேனென்ற கார்த்திகையும் ஏகாதேசி
விதமான கன்னியுமே மாகிருஷ்ணமாகும்
கோனென்ற ரேவதியும் துதிகைதானும்
கொண்டுதுலாம் மோகனமே செய்யும்பாரே.

(இ-ள்.) வெள்ளி அசுபதி பிரமை இதுகள் மரணம்செய்யும் மகம் பரணி சஷ்டி சிங்கம் இது வருமாகில் வசியமாகுமென்றும் கார்த்திகை ஏகாதசி கன்னி இது சேர்ந்துவருமாகில் ஆகிருஷ்ணம் செய்யுமென்றும் ரேவதி துதிகை துலாம் இதுகளிருக்குமாகில் மோகனம் செய்யுமென்று விஞடியார் சொன்னவாக்கியம் (எ-று.) (35)

இதுவுமது.

403. செய்யுமடா சிரிடமும் சத்தமியுங்கூட்டி
ஜெயமான தேளதுவும் தம்பனமுமாகும்
ஐயுமடா திருவாதிரையும் துவாதேசிதனுசு
அப்பனே வித்வேஷணம் செய்யும்பாரு
நய்யுமடா புனர்பூசம் திரிதிகையுங்கூட்டி
நயமான மகரமேவ பேதனமேசெய்யும்
கொய்யுமடா பூசமுடன் அஷ்டமியுங்கும்பம்
குலாவிய உட்சாடனம் குறித்துச்செய்யே.

(இ-ள்.) சத்தமி தேள் இதுகளிருந்தால் ஸ்தம்பனம் செய்யுமென்றும் திருவாதிரை-துவாதசி-தனுசு இது சேர்ந்திருக்குமாகில் வித்வேஷணம் செய்யுமென்றும் புனர்பூசம்-திரிதிகை-மகரம் இது கூடியிருந்தால் பேதனம்-செய்யுமென்றும்-பூசம்-அஷ்டமி-கும்பம் இதுகள் சார்ந்து யிருக்குமாகில் உச்சாடனம் செய்யுமென்றும் உரோமரிஷியார் சொன்ன பஞ்சபட்சியைப் பார்க்கிலும் போகர் பஞ்சபட்சியைப் பார்த்தால் இன்னம் விரிவாய்சொல்லும் (எ-று.) (36)

இதுவுமது.

404. குறித்துநீ செய்துபார் ஆயிலியமேகாதேசி
குணமான மீனமுமே மரணமுமாகும்
மறித்துப்பார் மகமுடனே சதுர்த்திமேடம்
மன்னரெல்லாம் மனமகிழ்ந்து கேளும்வசியம்
செறித்துப்பார் பூசமுமே நவமிகாளை
க்ஷணத்திலே மாகிருஷ்ணம் செய்வார்பாரு

விறித்துப்பார் உத்திரமும் சதுர்த்தேசியோடு
மிதுனமெல்லாம் மோகனமே ஆகும்பாரே.

(இ-ள்.) ஆயிலியம்-ஏகாதசி-மீனம் இது மாரணம் செய்யுமென்றும் மகம்-சதுர்த்தசி-மேடம் அரசர்களெல்லாம் வசியமாம் பூசம்-நவமி-இதுகள் ஒருநிமிஷத்தில் ஆகிருஷ்ணம் செய்யுமென்றும் உத்திரம்-சதுர்த்தசி-மிதுனம் மோகனம் செய்யுமென்றும் விஞடியார் சொன்ன வாக்கைப் பார்க்கிலும் அகஸ்தியர் பஞ்சபட்சி உரையைப் பார்த்தால் இன்னம் தெளிவாய்க்காணும் (எ-று.) (37)

இதுவுமது.

405. ஆகுமே அஸ்தமுடன் பஞ்சமிகற்கடகம்
அன்பான தம்பனமே அழகாய்ச்செய்யும்
யேகுமே சோதியுடன் தசமிசிங்கம்
என்னசொல்வேன் வித்வேஷணந்தான் எதிரியில்லை
தேசமே சித்திரையும் அமாவாசியோடு
ஜெயமான கன்னியுமே பேதனமுமாகும்
போகுமே விசாகமுடன் பிரதமையும்துலாமும்
பெரிதான உச்சாடனமாய்ப் பேசும்பாரே.

(இ-ள்.) அஸ்தம் பஞ்சமி, கற்கடகம், அது தம்பனம் செய்யுமென்றும் சோதி, தசமி, சிங்கம், இதுகள் நிமிஷத்தில் விரோதமாக்கிவைக்கும் சித்திரை, அமாவாசை, கன்னி, உலகத்தை பேதனம் செய்யுமென்றும் விசாகம், பிரதமை, துலாம், பொதுவாக உச்சாடனம் செய்யுமென்றும் விஞடியார் சொல்லியதைப்பார்க்கிலும் இராமதேவர் பஞ்சபட்சியைப் பார்த்தால் அனேகமாய் வெளியாய் தெரியும் (எ-று.) (38)

இதுவுமது.

406. பேசுமடா அனுடமுடன் சஷ்டிகேளும்
பேதகமாம் மரணந்தான் செய்யும்பாரு
வீசுமடா கேட்டையுந்தான் ஏகாதேசி
விதமான தனுசதுவும் வசியமாகும்
ஏகமடா மூலமுடன் துதிகைதானும்
என்னசொல்வேன் மகரமுமே ஆகிருஷ்ணமேசெய்யும்
வீசுமடா பூராடம் சத்தமியுங்கும்பம்
ஓடிவரும் மோகந்தான் உனக்குத்தானே

(இ-ள்.) அனுடம்-சஷ்டி தொடுத்து மாரணம் செய்யுமென்றும கேட்டை-ஏகாதசி-தனுசு-யாரையும் வசியமாக்கிவிக்கும் மூலம் - திரி

திகை-மகம் இதுகள் கோபத்தை உண்டுபெண்ணி ஆகிருஷ்ணம் செய்யும் பாரு பூராடம்-சத்தமி-கும்பம் இதுகள் மோகனமானது ஓடிவரும் என்றும் விஞடியார்சொன்ன மொழிப்படி அறிந்துபாருங்கள் இதனிலும் சுருக்கு பஞ்சபட்சியைப் பார்த்தால் கண்ணுடியைப்போல் காணும். (39)

இதுவுமது.

407. தானேதா உத்திராடம் துவாதேசிமீனம்
தண்மையுள்ள தம்பனமே சரிநின்றுடும்
கோனேதான் திருவோனந் திரிதிகையுங்கூட்டில்
குணமான மேடமெங்கே வித்வேஷணமுஞ்செய்யும்
தேனேதான் சதயமுடன் திரையோதசி
செனித்ததொரு மிதுனமங்கே உச்சாடனமாகுமங்கே
மானேகேள் ரோமனுட வாக்கியந்தன்னை
மகிழ்ந்துபார் மனங்கொண்டு அஷ்டகன்மமாமே.

(இ-ள்.) உத்திராடம், துவாதசி, மீனம், வருத்தமுடன் ஸ்தம்பனம், செய்யுமென்றும், திருவோணம், திரிதிகை, மேடம், இருக்குமாகில், வித்வேஷணம் செய்யுமென்றும் சதயம், திரயோதசி, மிதுனம், உச்சாடனம் செய்யுமென்றும் மானேகேள் உரோமரிஷி வாக்கியத்தை மனமிழந்து உன்னிப்பாய் நன்றாய்பாரு (எ-று.) (40)

இதுவுமது.

சனிவாரம் திதி நக்ஷத்திர இராசி பலாபலன்.

408. மானென்ற பூரட்டாதி சதுர்த்திகற்கடகம்
மன்னவனே மாரணந்தான் மனம்போல்செய்யும்
தேனென்ற உத்திரட்டாதி நவமிசிங்மம்
தெளிவாகும் வசியமடா செம்மையாகும்
வானென்ற ரேவதியும் சதுர்த்தேசிகன்னி
வகையான ஆகிருஷ்ணம் வலியுண்டாகும்
ஏனென்ற சனியுடனே அசுபதிபஞ்சமியும்
என்மகனே துலாமிதுவும் மோகமுமாமே.

(இ-ள்.) பூரட்டாதி, சதுர்த்தசி, கற்கடகம், இதுகள் மாரணந்தான் செய்யுமென்றும் உத்திரட்டாதி, நவமி, சிங்கம், வசியமானது செவ்வை செய்யும், ரேவதி, சதுர்த்தசி, கன்னி, இதுகள் ஆகிருஷ்ணம் செய்யுமென்றும் சனி, அசுபதி, பஞ்சமி, துலாம், இது அனைத்தும் மோகனம் செய்யுமென்றும் விஞடியாகசொன்ன தமிழைப்பார்க்கிலும் போகர் சொன்ன பஞ்சபட்சியைப் பார்த்தால் படிகம்போல் காணும் (எ-று.)(41)

இதுவுமது.

409. ஆமப்பா பரணியுடன் தசமிகூடில்
அப்பனே விருட்சிகமும் ஸ்தம்பனமுமாகும்
நாமப்பா கார்த்திகையும் அமாவாசை
நலமான தனுசுடனே வித்வவேஷணமுமாகும்
ஓமப்பா ரோகணியும் பிரதமையும்மகரம்
உத்தமனே பேதனமாய் முடியும்பாரு
காமப்பா மிருகசீரிடம் சஷ்டிகும்பம்
கனிவான உட்சாடனமாய்க் காணும்பாரே.

(இ-ள்.) பரணி, தசமி, விருச்சிகம், ஸ்தம்பனம் செய்யுமென்றும் கார்த்திகை, அமாவாசை, தனுசு, வித்வேஷணம் செய்யுமென்றும் ரோகணி, பிரதமை, மகரம், இதுகள் பேதனம் செய்யுமென்றும் மிருகசீரிடம், சஷ்டி, கும்பம், இது உச்சாடனம் செய்யுமென்றும் விஞடியார் சொன்ன வழிப்படியாய் அகஸ்தியர் பஞ்சபட்சி உரையைப் பார்த்தால் தெளிவாய் தெரியும் (எ-று.) (42)

இதுவுமது

410. காணுமே திருவாதிரை யேகாதேசி
கனிவான மீனமுமே மரணமுமாகும்
வேணுமே புனர்பூசம் துதிகைதானுப்
மேலான மேஷமுடன் வசியமாகும்
தோணுமே பூசமுடன் சத்தமியும்இடபம்
கொடுத்திடும்பார் ஆகிருஷ்ணம் சொல்லப்போகா
நாணுமே ஆயிலியம் துவாதேசிமிதுனம்
நலமான மோகனமே நயந்துகாணே.

(இ-ள்.) திருவாதிரை, ஏகாதசி, மீனம், மாரணம் நடக்குமென்றும் புனர்பூசம், துதிகை, மேஷம், வசியம் செய்யுமென்றும் பூசம், சத்தமி, இடபம் இது ஆகிருஷ்ணம் செய்யுமென்றும் ஆயிலியம், துவாதசி, மிதுனம், இது மோகனம்செய்யுமென்றும் விஞடியார் சொன்னமொழியைப் பார்க்கிலும் இராமதேவர் சொன்ன பஞ்சபட்சியைப் பார்த்தால் கண்ணடியைப்போல் காணும் (எ-று.) (43)

இதுவுமது

411. நயந்துபார் மகமுடனே திரிகையும்சேர்ந்தால்
நலமான கடகம் ஸ்தம்பனமுமாகும்
பயந்துபார் பூரணமே அஷ்டமியும்சிங்கம்
பரிவான மேஷனந்தான் பதிவாய்க்காணும்

கயந்துபார் உத்திரமும் திரையோதேசி
கன்னியுடன் பேதனமுங் கலந்துகாணும்
சயந்துபா ரஸ்தமுடன் சதுர்த்திதுலாமும்
சாற்றினேம் உட்சாடணமாம் சார்ந்துபாரே.

(இ-ள்.) மகம், திரிதிகை, கடகம், தம்பனம் செய்யுமென்றும் அஷ்டமி, சிங்கம், மேஷம், இதுகள் பேதனம் செய்யுமென்றும் உத்திரம், திரையோதசி,கன்னியிருந்தால் வித்வேஷணம்செய்யுமென்றும்அஸ்தம், சதுர்த்தசி, துலாம், சொல்லவொண்ணாத உச்சாடனம் செய்யுமென்றும் விணுடியார் சொன்ன வாக்கியப்படி சுருக்கு பஞ்சபட்சியைப் பார்த்தால் தெரியும் (எ-று.) (44)

இதுவுமது.

412. சாருமடா நவமியுடன் சோதிசோலை
சண்டாள மாரணமாம் சார்ந்துபாரு
ஏருமடா சித்திரையும் சதுர்த்தேசிதனுசு
என்னசொல்வேன் வசியமடா இசைந்துகாணும்
ஆருமடா விசாகமுடன் பஞ்சமியுந்தனுசு
அப்பனே ஆகிருஷ்ணம் அழகாய்ச்செய்யும்
தேருமடா அனுஷ்டமது தசமிகும்பம்
செய்யுமப்பா மோகனமும் திரமாய்ப்பாரே.

(இ-ள்.) நவமி, சோதி, சோலை இதுகள் மாரணம் செய்யுமென்றும் சித்திரை, சதுர்த்தசி, தனுசு, வசியமென்றும் விசாகம், பஞ்சமி, தனுசு, பொல்லாத பகைவருமென்றும் அது ஆகிருஷ்ணம்செய்யுமென்றும் அனுஷம், தசமி, கும்பம்; மோகனம் செய்யுமென்றும் விணுடியார் வாக்கியப்படி தவராது ஆகிலும் அகஸ்தியர் சொன்ன பஞ்சபட்சி உரையைப் பார்த்தால் தெரியும் (எ-று.) (45)

இதுவுமது.

413. திரமான கேட்டையுடன் அம்மாவாசை
சிறந்ததொரு மீனமங்கே ஸ்தம்பனமுமாகும்
பரமான மூலமது பிரதமையும்மேட
பழியான வித்வேஷணங்கள் பதியாய்க்காணும்
சரமான பூராடம் சஷ்டிகாலை
தப்பாமல் பேதனமே தனிவாய்க்காணும்
உரமான உத்திராடம் ஏகாதேசி
உத்தமனே மிதுனமது உட்சாடனமுங்காணே.

(இ-ள்.) கேட்டை, அமாவாசை, மீனம் இது தம்பனம் செய்யுமென்றும் மூலம் பிரதமை மேஷம், இடி வித்வேஷணம் செய்யுமென்றும் பூராடம், சஷ்டி காளை இது பேதனம்செய்யுமென்றும் உத்திராடம்,ஏகாதசி, மிதுனம், உச்சாடனம் செய்யுமென்றும் வினடியார் சொன்னவாக்கியம் தவராது ஆகிலும் போகர் ப்ஞ்சபட்சியைப் பார்த்தால் தெரியும் (எ-று.)

இதுவுமது.

414. காணப்பா திருவோணம் திருதிகைதானும்
கனிவான சுற்கடகம் மாரணமுமாகும்
பூணப்பா அவிட்டமுடன் சத்தமியுஞ்சேர்ந்தால்
புண்ணியனே சிங்கமது வசியமாகும்
தோணப்பா உத்திரட்டாதி துவாதேசிகன்னி
சொல்லவொண்ணு ஆகிருஷ்ணம் துடியாய்ச்செய்யும்
வேணப்பா சதயமுடன் திரிதிகையுந்துலாமும்
வேணபடி மோகனமாம் விரும்பிச்செய்யே.

(இ-ள்.) திருவோணம், கிருத்திகை, கற்கடகம், இது மாரணம் செய்யுமென்றும் அவிட்டம் சத்தமி சிங்கம் இது வசியமாகுமென்றும் உத்திரட்டாதி, துவாதசி, கன்னி இது ஆகிருஷ்ணம் செய்யுமென்றும் சதயம், திருதிகை, துலாம் இது மோகனம் செய்யுமென்றும் விஞடியார் சொன்னபடி போகர் பஞ்சபட்சியைப் பார்த்தால் தெரியும் (எ-று.)(47)

சோலையென்பது விருட்சிகம்

இதுவுமது.

415. விரும்பியே பூரட்டாதி அஷ்டமியுந்தேரும்
மேலான ஸ்தம்பனமாம் வேணபடியாகும்
கரும்பியே ரேவதியுந் திரையோதேசி
கனிவான தனுசதுவும் வித்வேஷணமாகும்
அரும்பியே யிந்தநாள் ஆகவேணும்
அப்பனே நட்சத்திரம் திதிராசிவேளைக்கண்டு
துரும்பியே எவ்வகையும் பார்க்கும்போது
தொடுத்திடுவாய் யிதினென்றுங் குறையாமற்றனே.

(இ-ள்.) பூரட்டாதி, அஷ்டமி, தேளு இது தம்பனம் செய்யுமென்றும் ரேவதி திரையோதசி தனுசு இது வித்வேஷணம் செய்யுமென்றும் விரும்பியபடி இந்தநாள் வரவேணும் நட்சத்திரம் திதி இராசிவேளை இதுகள் நன்ருய் பார்த்து செய்யவேண்டும் எந்ததொழில் செய்யவேண்டுமாகில் பஞ்சபட்சியைப் பார்த்துதான் செய்யவேண்டியது (எ-று.)(48)

இதுவுமது.

416. குறையாமல் செய்ததினால் பலிதமாகும்
குணங்குறிகள் பார்ப்பதற்கு இதுவேவேணும்
பகையாமல் போனதினால் பலிக்குமுன்னே
பஞ்சாங்க பலதிரட்டை அநுசரித்துக்கொள்ளும்
மறையாமல் சொல்லிவைத்தேன் சாஸ்திரத்திலுள்ள
வகையெல்லா மாறுபத்து பக்ஷியாய்ச்செய்தால்
நிறையாமல் அவ்வளவும் தப்பேயில்லை
நிஜமடா பஞ்சபக்ஷி வித்தைதானே.

(இ-ள்.) குறையாமற்படிக்கு மேற்கூறியவண்ணம் செய்துக்கொண்டுவரில் யாதொரு காரியமும் பலிதமாகும் குணம்குறி இவைகள் பார்ப்பதற்கு இதுவே யாதாரமாகும் பகையில்லாமல் இருக்கில் பலிதமாகும் ஆனால் பஞ்சாங்கத்தை முன்னதாகப் பார்த்துவைத்துக்கொண்டும் பிறப்பில்லாமல் சொல்லிவைத்திருக்கும் சாஸ்திரத்திலுள்ளவைகள் யாவும் பார்த்தும் பக்ஷியாகச்செய்யில் ஒன்றுந்தப்பில்லாமல் நிஜமாகும் பஞ்சபட்சி வித்தையும் (எ-று) (49)

இதுவுமது.

417. பக்ஷிவித்தை ஒருபோதும் பழுதேயில்லை
பாராமல் போனதினாலே பழுதேயாகும்
கொச்சிவித்தை பலிப்பதுதான் ஏதினாலே
குறிகுணங்கள் நேரமங்கே குறைவிதாலே
வச்சிவித்தை கருக்குருவும் கண்டபேர்க்கு
வணங்குமடா பட்சிவித்தை மயக்கமில்லை
நச்சிவித்தை யிதற்குநிகர் ஒன்றுமில்லை
நாட்டிலே யித்தொழிலைச் சொல்லொண்ணாதே.

(இ-ள்.) பட்சிவித்தையில் யாதொரு பழுதுமிராது அதைப் பாராவிடில் பழுதானது நேரும் கொச்சிவித்தையானது பலிப்பதுயேது நாளையெனில் குறி குணம் நேரம் இவைகள் குறைவதினாலும் அப்படிக்கில்லாமலுணரும் பொருட்டாய்க் கருவும் குருவுமறிந்து கண்டுணர்ந்தப் பேர்களுக்கு பட்சிவித்தையில் மயக்கமாயிராது இந்தவித்தைக்கு நிகர்வேறொன்றுமில்லை பூமியின்மீது இத்தொழிலைச் சொல்லவும் ஒண்ணாதென்றனர்.

அஷ்டகன்மப்படலம் முற்றிற்று.

உ

கடவுள் துணை.

பீடை நிவாரணப் படலம்.

ஊண்பட்சியில் பீடைவருங்கால் நிவாரணம்.

418. பாரடா யுலகிலுள்ள மாந்தர்க்கையா
படருகிற பீடையது தீராவிட்டால்
சாரடா மாறயிலே பீடைபற்றி
தள்ளுவது போல்சறுக்கும் தவித்துரேகும்
தேரடா பஞ்சபட்சி தொழிலைக்கண்டு
ஜெகமதிலே நிலை அளவுங்கண்டு
ஏதடா கொடுத்ததொரு கன்மபீடை
என்மகனே துடராமல் தீர்க்கவூணே.

(இ-ள்.) பார்ப்பாயாகவும் பூமியின் கண்ணுள்ள மாந்தர்கள் யாவத்திராட்கும் துடரும்படியான பீடையானது தீராவிடிலும் மாறையில் பீடையானது பற்றிடினும் அவையை நீக்கும்படியான வித்தையைக் கேளும் அதாவது பஞ்சபட்சியின் தொழிலைக்கண்டும் பூமியின்மீது நிலையும் அளவுங்கண்டும் தொடுத்தக்கன்மத்தின் பீடையானது துடருமல் தீரும்படிக்கு ஊணிற்கேளும் (எ-று.) (1)

இதுவுமது

419. ஊணென்ற பட்சியிலே வரும்பிதீர்க்க
உத்தமனே கணபதியை வைத்துக்கொண்டு
வேனென்ற வெள்ளைபுஷ்பம் சாத்திக்கொண்டு
விநாயகர்முன் உபசாரம் செய்துபோற்றி
தேனென்ற மந்திரந்தான் சொல்லக்கேளு
தினமான அக்ஷரந்தான் ஓம்ஸ்ரீயுங் அங்உங்கென்று
தானென்றயெழுத்துடனே ஐயுங்கிலியுங் கணபதிசர்வசாபம்
நசிமசிஎன்றுசாற்றுவாய் ஆயிரத்தெட்டுறுவமாமே.

(இ-ள்.) ஊண்பட்சியின் கண்டப்பீடையானதுந்தீர அதற்குக் கணபதியைவைத்து வெள்ளைப்புஷ்பமானதுச் சாற்றி விநாயகர் முன்நின்று உபசாரஞ்செய்துப்போற்றி மந்திரமானதுச்சொல்வேன் கேட்பாயாகவும் அதற்கு அட்சரம் யாதெனில், ஓம், ஸ்ரீயுங் அங் உங் யென்னும் யெழுத்தினுடன் ஐயும் கிலியும் கணபதி சர்வசாபம் நசிநசி என்று சொல்லி ஆயிரத்தெட்டு உருவானது கொடுக்கவும் (எ-று.) (2)

இதுவுமது.

420. உருவான அதின்பின்பு கும்பம்வைத்து
ஒருபடிநெல் தான்பரப்பி அறுகோணமிட்டு
திருவான கரணபஞ்சா க்ஷரத்தைவைத்து
ஜெயமாகவேணுமென்று காரியபஞ்சாக்ஷரமுவைத்து
வருவான சக்கரத்தில் சூலமிட்டு
மைந்தனே அதில்நடுவில்ஒங்-அங்-சிவசிவயென்றுபோடு
தருவான கும்பத்தில் சலத்தைவைத்து
வண்மையுள்ள மாங்குழையை யதின்மேல்வையே.

(இ-ள்.) உருவானதுக் கொடுத்தான்பின்பு கும்பகலசம் வைத்தும் ஒருபடி பச்சைநெல் கொட்டிப்பறப்பி அதில் அருகோணச் சக்கரமெழுதி அதில் பஞ்சாட்சரத்தையடைத்து சக்கரத்தில் சூலமானதுப்போட்டு அதற்கு நடுவில் ஒங் அங் சிவ சிவா யென்றுப் போட்டு கும்பத்தில் கலசத்தை வைத்தும் மாவிலையதில் சொருகி கேளும் (எ-று.) (3)

இதுவுமது.

421. வைத்தபின்பு அதின்மேலே தேங்காவைத்து
வாகாக நூல்சுற்றி ஆடைசாற்றி
கைத்ததொரு கும்பத்தின் முன்னேயப்பா
கலந்துவைப்பாய் வமுதுடனே சுத்திதானும்
நெய்த்ததொரு வர்க்கவகை உபசாரஞ்செய்து
நேமகமாய்இருதோருஒம் ஐயுங்கிலியும்சவ்வும்ஈறுண்
வைத்தபின்பு இன்னமடா அங்உங்கென்று
சாற்றுவாய் பீடையெல்லா மசிநசியென்றோதே.

(இ-ள்.) வைத்தானபின்பு அதின்மேல் தேங்காயை வைத்தும் அதற்கு நூலானதுச்சுற்றி அடையானதுச்சாற்றி கும்பத்தின்முன்னுக அமுதானதுப்படைத்து அதைச்சுற்றியும் வர்க்கவகைகள்வைத்து உபசாரஞ்செய்து ரேமஞமாக விருந்தும் ஓம் ஐயும் கிலியும் சவ்வும் என்றுசொல்லிப் பின்பு அங் உங் கென்றும் சாற்றிப் பீடைகள்யாவும் நசி நசி யென்றோதவும் (எ-று.) (4)

இதுவுமது.

422. ஓதடா ஆயிரத்தெட் டுருவுமானால்
உத்தமனே ஓமகுண்டம் ரெண்டும்போடு
வாதடா சமுத்துவகை சொல்லக்கேளு
வன்னிமுன்னே அரசுருவி கொப்பைநெற்பொரியும்

ஏதடா ஆவின்நெய்யால் ஆகுதிகள்செய்து
என்மகனே குண்டத்துக் குபசாரம்பண்ணி
கோதடாஅக்ஷரத்தை சொல்லக்கேளு குணமாகவேணுமென்று
ஓம்ஸ்ரீயும் அங்உங்சருவபீடை நசிநசிஎன்றோதே.

(இ-ள்.) ஆயிரத்தெட்டு உருவும் ஆனவுடன் அதின்பின்பு ஓமகுண்டமானது இரெண்டுமிட்டுக்கேளும் சமுத்துவகைசொல்வேன் அதாவது வன்னி முன்னை அரசு நாயுரிவி வெற்பை நெற்பொறி இவைகளைக் கொண்டுவந்து எக்கியமானது வளர்த்தி ஆவின்நெய்யால் ஆகுதிகள் செய்து குண்டத்துக்கு உபசாரமானதுச்செய்து அப்போதுச் சொல்லும் படியான அக்ஷரம் யாதெனில் ஓம் ஸ்ரீயும் அங் உங் சர்வபீடையும் நசி நசி யென்று ஓதவும் (எ-று.) (5)

இதுவுமது.

423. ஓதியபின் உருஅங்கே ஐயாயிரமானால்
உத்தமனே பொங்கல்பெலி நைவேத்தியஞ்செய்து
கோதியெடு சாம்பலெல்லாங் கும்பத்திற்போட்டு
குடத்துநீர் அவர்சிரசில் விடும்போதப்பா
ஆதிசிவ னைநினைத்து ஓம்சிவசிவாஎன்று
அப்பனே அபிஷேகம் செய்துபாரு
நீதியால்நாளதுதான் பதினைன்றானால்
நிலைக்குமோ பீடையெல்லாம் விலகும்பாரே.

(இ-ள்.) ஓதிய உருவானது ஐயாயிரமானவுடன் பொங்கலிட்டுப் பெலியானதுக் கொடுத்து நைவேத்தியஞ்செய்து குண்டத்தில் உள்ள சாம்பல்கள் யாவையும் கும்பத்திற்போட்டு அந்தக் குடத்துநீரைப் பீடையுள்ளோன் சிரசில்விடும்போது ஆதிபராபர வஸ்துவாகியச்சிவபிரானை நினைத்து ஓம் சிவா சிவாயென்று அபிஷேகமானதுச்செய்து நாள்பதினைன்றாகில் பீடையானது நிலையானது விட்டுப்போகுமென்பர் (எ-று.)

இதுவுமது.

424. விலகுமே மதியென்ற தகடுசெய்து
மேலான உட்சாடன அக்ஷரத்தைவைத்து
கலகுமே தேவியென்ற வாலைபூசை
கைப்பாகந் தப்பாமல் வைத்துக்கொண்டு
நீங்குமே அதின்முன்பு தகடுவைத்து
நீஓது உட்சாடணம் ஆயிரத்தெட்டானால்

விலகுமே பீடையென்ற தோஷமெல்லாம்போச்சு
நில்லாது கன்னிக்கி உபசாரஞ்செய்யே.

(இ-ள்.) விலகும்படியாக மதியென்னுந் தகடானதுச்செய்து அதில் உச்சாடனயெழுத்தை யெழுதியடைத்து வாலையினுடைய பூசையானது செய்து கைபாகமானது தப்பாமல் செய்துவைத்துக்கொண்டு அப்பூசைக்குமுன் தகட்டைவைத்து உச்சாடனத்தை ஆயிரத்தெட்டுச் செபித்து குளிசமானதுக் கட்டப் பீடையென்னும் தோஷங்கள் யாவுந்தீரும் ஆனல் கன்னிக்கு உபசாரஞ்செய்கவும் (எ-று.) (7)

நடைப்பக்ஷியில் பீடைவந்தால் விலக்க.

425. செய்துபார்நடைதனிலே பீடைவந்தால்
தீர்ப்பதற்குவிநாயகனை வைத்துக்கொண்டு
கொய்துபார்கும்பம்வைத்து கும்பரெண்டு
கூறுவேன்சமித்துவகை சொல்லக்கேளு
நைதுபார் அரசுவன்னி உருவிதெர்ப்பை
நல்லவிழாமரசுப்பி கருங்காலிதூளும்
நொய்துபார்நெற்பொரியும் கடலைமொச்சை
நேராகக்கரந்துகொண்டு கும்பம்போடே.

(இ-ள்.) நடைப்பட்சியில் பீடையானது அணுகுமாகில் அதைத்தீர்ப்பதற்கு விநாயகக்கடவுளை நிறுத்தி கும்பகலசமானது வைத்து குண்டமானது இரண்டுயிட்டும் சமுத்துவகையானதுச் சொல்வேன் கேட்பாயாக அரசு வன்னி நாயுருவி தெர்ப்பை விளாம் மரம்சுப்பல் கருங்காலி சந்தணத்தூள் நெற்பொறி கடலை மொச்சை இவைகளைக் கலந்துக் கொண்டு எக்கியமானது வளர்த்தி அதிற் சொல்லக்கேளும் (எ-று.) (8)

இதுவுமது.

426. போடவே ஆவிநெய்யும் இலுப்பைநெய்யும்
புண்ணியனேஇரண்டுமொன்ருய் கலந்துகொண்டு
நாடவேயெக்கியத்தில் ஆகுதிகள்செய்து
நல்லதொருஅக்ஷரத்தை சொல்லக்கேளு [என்று
தேடவேஓம்-ரீயும்-அவ்வும்கிலியும்-அங்உங் பீடைநசி நசி
செலுத்துவாய்உருவையங்கே பதினுயிரமேதானும்
வாடவேண்டாங்காண பொங்கல்பெலியுடனே
மைந்தனேசோடச உபசாரஞ்செய்யே.

(இ-ள்.) ஆவியினுடைய நெய்யும் இலுப்பைநெய்யும் ஒன்ருய்க்கலந்துக்கொண்டு எக்கியத்தில் ஆகுதிகள்செய்து அதற்கோதும் அட்சரத்தைக் கேளும் ஓம் ரீயும் அவ்வும் கிலியும் அங் உங் பீடை நசி நசி யென்

றுச் சொல்குவாய் உருவானதுப் பதினாயிரம்கொடுத்து வாடாமற்படிக்கு பொங்கலிட்டுப் பலியானதுக் கொடுத்து சோடச உபசாரஞ்செய்து கேளும் (எ-று.) (9)

இதுவுமது.

427. செய்துகொண்டுகும்பத்து சாம்பலெல்லாம்
திரணமதுபோகாமல் கும்பத்தில்போடு
ஐதுகொண்டுஆதியென்ற சிவனைப்போற்றி
அப்பனேசிவசிவா என்றுபூசி
கொய்துகொண்டுவாலையுட தியானஞ்செய்தால்
குமரியவள்முன்புவந்து நிற்பாளப்போ
வைதுகொண்டுபோகுமடா நடையின்பீடை
மக்களேநாள்பதினென்று செய்துபாரே.

(இ-ள்.) செய்தானபின்பு கும்பத்திலுள்ள சாம்பல்கள்யாவும்கொஞ்சமும் விடாமல் கலசத்திற்போட்டு ஆதிசிவபெருமானைப்போற்றி சிவசிவாயென்று யெடுத்துப்பூசி வாலையினுடைய தியானமானதுச்செய்ய குமரியானவள் முன்பாகவந்து நிற்பாள் அப்போது நைதுக்கொண்டுப் போகும் நடையில்தோன்றியப் பீடையாது ஆனால் இவ்விதமாக பதினேறுநாள் செய்கவும் (எ-று.) (10)

இதுவுமது.

428. செய்வாயேஅரசுதனில் பீடைவந்தால்
திடமானகணபதியை வைத்துப்போற்றி
நெய்வாயேகும்பம்குடம் முன்னேவைத்து
நேமமாம்வாலையுட பூசைசெய்து
கொய்வாயேகும்பமது ரெண்டும்போடு
கொழுந்துகிறசமுத்தினுட விபரங்கேளு
மையாவே அரசுசந்தனமும் ஆகும்
மக்களேநெல்கொண்டு ஓமஞ்செய்யே.

(இ-ள்.) அரசுபட்சியாகவிருக்கின் பீடையானது அணுகுமாகின் அது தீர்வதற்கு விநாயகரை வைத்துப்போற்றி கும்பமும் குடமும் முன்னாகவைத்தும் வாலையுடைய பூசையானதுச்செய்து கும்பமானது இரெண்டும்போட்டு சமுத்தினுடைய விபரத்தைக்கேட்டாயாக அரசு சந்தனக் கட்டையும் போட்டு அக்கினிமூட்டி நெய்யானதுவிட்டும் ஓமஞ்செய்குவாய் (எ-று.) (11)

இதுவுமது.

429. செய்யவேநேமகமாய் உருவமங்கேதான்
திரமாகஐயாயிரம் செய்துபாரு
கொய்யாயுதபெலியுடனே தீபங்காட்டி
தோணவேசாம்பலெல்லாம் குடத்திற்போடு
கையாலேகுடமெடுக்கும் போதெல்லாந்தான்
கருணையுடன்சிவனைநின் கருத்தில்வைக்க
மெய்யாகவினைதெரித்துப் போகும்பாரு
மேலானசேதனத்தால் தகடுபோடே.

(இ-ள்.) நேமமாக உருவானது ஐயாயிரங் கொடுத்து பெலியானது இட்டு தீபமானதுக்காட்டி பின்பு ஓமம்வளர்த்திய சாம்பலைக்குடத்திற் போட்டு கையிற்குடமானதை யெடுக்கும்போதெல்லாம்சிவபிரானை உன்னுடைய கருத்தில் தியானஞ்செய்தும் வாய்த்தவினையானது தீர்ந்துப் போகும் அன்றியும் மேலாகியப் பேதனத்தால் தகடானதுப்போட்டும்.

இதுவுமது.

430. தகடதிலேயெழுத்தை வறைந்துகொண்டு
தப்பாமல்நாளேழு பூசைசெய்து
விகடதிலேயில்லாமல் போகும்போது
மேலானபீடையெல்லாம் விலகிப்போகும்
சகடதிலேகிருபைமெத்த சிவன்தான்உண்டு
தரணிதனில்கண்டவர்கள் வணங்கிப்பூசி
அகடதிலேஉலகுதனில் வாழ்வார்பாரு
அப்பனேபீடையது விலகும்பாரே.

(இ-ள்.) தகட்டில் யெழுத்தானதை வரைந்துக்கொண்டும் தப்பாமற்படிக்கு நாள்யேழும் பூசையானதுச் செய்துவருகையில் விகடத்தில் இல்லாமற்போகில் பீடையானது யாவும் விலகிப்போகும் கிருபையானது சிவபிரான் மேலாகவைப்பார் பூமியின்மீது கண்டோர்கள் வணங்கிப் பூசிப்பார்கள் பூமியில் மேன்மையாக வாழ்வார்கள் பீடையானது விலகிப்போகும் பாரென்பார் (எ-று.) (13)

இதுவுமது.

431. பாரடாஉறக்கத்தில்வரும் பீடைதன்னை
பதியைவிட்டுவிலகுதற்கு பண்புகேளு

நேரடாகணபதியை வைத்துக்கொண்டு
நேகமாய்வாலையுட கும்பம்வைத்து
ஓதடா ஓமகுண்டம் நாலுபோடு
உத்தமனேசமித்துவகை சொல்லக்கேளு
கோரடா ஆலரசு அத்திஇத்தி
குலாவியதோர்வன்னிமுன்னை உருவிஎள்ளே.

(இ-ள்.) பார்க்கப் பட்சியானது உறக்கமாக யிருக்கும்போதிற் பீடையானது அணுகில் அதுதீர்வதற்கு விநாயகக்கடவுளை நிருத்தி வாலையினுடையக் கும்பம்வைத்து ஓமகுண்டமானது நாலுபோட்டு சமுத்துவகை சொல்லக்கேளும் ஆல், அரசு, அத்தி, இத்தி, வன்னி, முன்னை, நாயுருவி எள்ளும் (எ-று.) (14)

இதுவுமது.

432. எள்ளுடனே நவதானியம்நெற் பொரியும்சேர்த்து
என்மகனே ஆவிநெய்யும் இலுப்பைநெய்யும்
தெள்ளுடனேதேங்காய் நெய்கலந்துகொண்டு
தெற்பையினால்கொரிந்துவிடு உறவேறமட்டும்
அள்ளுடனே ஓம்-ரீயும்-கிலியும்-ஐயும்-சவ்வும்என்று
அப்பனே-ஸ்ரீம்-ரீயும்-நசி—நசிஎன்று
தள்ளடா துற்புத்திஒரு நினைவாய்க்கொண்டு
சரியாகபதினாயிரம் உருவைப்போடே.

(இ-ள்.) எள்ளுடன் நவதானியம் நெற்பொறி இவைகளைச்சேர்த்து எக்கியமானது வளர்த்தி அதில் ஆவினுடையநெய்யும் இலுப்பைநெய்யுந் தேங்காய்நெய்யும் கலந்துக்கொண்டு தெர்ப்பையினாலெடுத்துச் சொறிந்துக்கொண்டு உருவானது ஏற்றிய விபரங்கேளும் ஓம் ரீயும் கிலியும் ஐயும் சவ்வும் யென்றும் ஓம் ரீயும் நசி நசியென்று துர்ப்புத்தியானதை நீக்கி மனதை ஒருநினைவாக நிருத்திக்கொண்டு பதினாயிரம் உருப்போடவும் (எ-று.) (15)

இதுவுமது.

433. போடடாகும்பமொன்றில் ஸ்தம்பனமேபோடு
புகழானபேதனமும் போட்டுதீரும்
கேளடாதேஷணமும் ஆகும்பாரு
கெடியானமோகனமும் கெட்டியாய்ச்செய்து
நாளடாபெலியுடனே தூபதீபங்காட்டி
நலமாகவேணுமென்று சாம்பல்வாரி

கோடடாகுடந்தனிலே கலந்துகொண்டு
குழுறவிடுசிவனை நினைந் தபிஷேகஞ்செய்ய.

(இ-ள்.) கும்பம் ஒன்றில் ஸ்தம்பனம்போட்டு மற்ற இரெண்டாவதில் பேதனத்தைப்போட்டு மூன்ருவதில் வித்துவேஷணத்தைப்போட்டு நாலாவதில் மோகனத்தைப்போட்டும் பெலியானதுக்கொடுத்து தூப தீபங்காட்டி நலமாக வேணுமென்றும் சாம்பலானதுவாறிக் குடத்தில் கலந்துக்கொண்டு சிவபிரானை நினைத்துப் பீடையுடையவன் சிரசில் அபிஷேகஞ்செய்தும் (எ-று.) (16)

இதுவுமது.

434. செய்தபின்பு ரவிமதியுஞ் சேர்ந்துகொண்டு
திரமாகக் கண்டித்து உட்சாடனமேசெய்ய
நொய்துகொண்ட பிணியாளன் மேலேபோடு
ஓடிவிடும் பீடையென்ற தோஷந்தானும்
தொய்துகொண்ட கன்னிக்கு உபசாரஞ்செய்து
சொற்பெரிய சிவனுக்கு அபிஷேகம்பண்ணி
வைத்துகொண்டு போகுமடா பீடையென்றதோஷம்
மக்களே மாண்டவர்தான் அறையஞ்செய்யே.

(இ-ள்.) செய்தானபின்பு சூரியனையும் சந்திரனையும் சேர்த்துக் கொண்டு உச்சாடனஞ்செய்து பிணியாளனுடைய மீதிற்போட ஓட்டமானதுப் பிடிக்கும் பீடையாகிய தோஷங்கள்யாவும் பின்பு கன்னிக்கு உபசாரமானதுச்செய்து சிவபிரானுக்கு அபிஷேகம் பண்ணிவைத்து வந்தையாகில் பீடையான தோஷங்கள்யாவும் தீண்டாதோடிபோகும் (எ-று.)

மரணபக்ஷியில் பீடைவந்தால் விலக்க.

435. செய்யப்பா மரணத்தில் பீடைவருமாகில்
திரும்புவதுவெகுவருத்தம சிவன்செயலும்வேணும்
தொய்யப்பாகணபதியை வைத்துக்கொண்டு
தொடுத்திடுவாய்வாலையிட கும்பம்வைத்து
நெய்யப்பா ஒமகுண்டம்எட்டுப்போட்டு
நோக்குகிறசவத்துறை சொல்லக்கேளு
தையப்பாஅரசுவன்னி நாயுருஅத்தி
தனதான்கருங்காலி ஆலின்கொம்பே.

(இ-ள்.) பட்சிமரணமாக விருக்குங்காலம் பீடையானது அணுகுமாகில் அது திரும்புவது வெகுவருத்தமாகும் ஆகினும் சிவன்செயலாகும்

அதற்குக் கணபதியைவைத்து வாலையினுடைய கும்பத்தை நிருத்தி ஓம குண்டமானது எட்டுயிட்டுச் சமுத்தின் வகைகள் சொல்வேன்கேளும் அரசு வன்னி நாயுருவி அத்தி கருங்காலி ஆலின்கொம்பும் (எ-று.) (18)

இதுவுமது.

436. கொம்புடனே மரசுப்பி அருகுவோடு
கோர்வையாய் நவதானியம் நெற்பொறியுங்கூட்டி
அன்புடனேமேதநெய்யும் செம்மறியின்நெய்யும்
அப்பனேஇலுப்பைநெய்யும் தேங்காநெய்யும்
தென்புடனேபுங்கெண்ணெய் புன்னையெண்ணெய்
தெளிவானவேப்பெண்ணெய் பன்றிநெய்யும்
விம்புடனேகேசரியின் நெய்யுங்கூட்டி
விரவியேஎக்கியத்தில் விடுவாய்பாரே.

(இ-ள்.) மாஞ்சுப்பல் அருகு நவதானியம் நெற்பொறி இவைகளைக் கூட்டி யெக்கியமானதுவளர்த்தி பசும்நெய் செம்பிலியாட்டுநெய்யும் இலுப்பைநெய் தேங்காய்நெய் புங்கயெண்ணெய் புன்னையெண்ணெய் வேப்பெண்ணெய் பன்றியுடையநெய்யும் கேசரியின்நெய்யும் இவைகளைக்கூட்டி எக்கியத்தில் விடவும் (எ-று.) (19)

இதுவுமது.

437. பாரேநீகும்பமெட்டில் அஷ்டகன்மமெட்டும்
பாங்காகசெபஞ்செய்து உருபதினாயிரமேயானால்
வேரேநீநினையாத பொங்கல்பெலிதூபம்
வேணபடிசெய்துகொண்டு சாம்பல்குடத்திற்போடு
நேரேநீநின்றுகொண்டு சிவனைப்போட்டு
நீர்விடுவாய்அவன்சிரசில் அபிஷேகஞ்செய்தால்
தூரேநீஇவ்வகைதான் மண்டலந்தான்ஒன்று
தொடுத்துவிடுபீடையது விலகும்பாரே.

(இ-ள்.) கும்பமானது யெட்டினும் அஷ்டகர்மமெட்டும் போட்டும் செபமானதுச்செய்து உருபதினாயிரமானவுடன்வேறு சிந்தனையெண்ணாமல் பொங்கலிட்டுப் பொலியானதுக்கொடுத்து தூபதீபங்காட்டி அந்த வோமகுண்டத்திலுள்ள சாம்பலை குடத்திற்போட்டு நேராக நீ நின்றுக் கொண்டு சிவபிரானை தியானஞ்செய்து அந்தநீரை பிணியாளன் சிரசில் விட்டு அபிஷேகமானதுச் செய்துக்கொண்டு வர ஒருமண்டலம்வரைக்கும் தொடுத்த தோஷங்கள் யாவும் விலகிப்போகும் (எ-று.) (20)

இதுவுமது.

438. விலகுமேஎவ்விதத்தால் வந்தபீடை
மேலானபிரபுக்குவந்த தோஷமெல்லாம்
அசங்குமேசெய்துகொண்டால் பீடையில்லை
அப்பனேதல்லிவிடும் சுகமாகவாழ்வார்
இலகுமேஎன்னசெய்யப் போகுதென்று
எளிதாகநினைத்துகொண்டால் பீடைகொல்லும்
அலகுமேபிரமலபி உள்ளமட்டும்
அலைச்சல்மிகுபீடை சணம்தோணும்பாரே.

(இ-ள்.) விலகிப்போகும் எவ்விதத்தால் வந்ததோஷமாகிலும் மேலாகியப் பிரபுக்கு வந்தப்பீடையாவும் சாந்தியானதுச் செய்துக்கொள்ளில் பீடையானதுயில்லைச் சுகமாகவாழ்குவார் இந்தப்பீடையானது என்னசெய்யப்போகிறதென்று யெளிதாக நினைத்துக்கொண்டிருக்கில் பீடையானதுக் கொல்லும் பிரமதேவன் லபித்தலபி மட்டுக்கும் அலைச்சலும் பீடையுந்தோணும் (எ-று.) (21)

பீடைநிவாரணப்படலம் முற்றிற்று.

உ

கடவுள் துணை.

அட்சரமாறல் படலம்.

439. தோணுமேஉலகிலுள்ள அக்ஷரத்துக்கெல்லாம்
தோணுதபஞ்சபட்சி சூட்சந்தானும்
காணுமேகருக்குருவும் காணுதுபாரு
கடினமடாஆசானும் காட்டவேணும்
பேணுமேமனதுருத்தி யாகவேணும்
பிசகினல்பட்சிவித்தை பிசகிப்போகும்
ஆணுமேஅக்ஷரங்கள் அறியவேணும்
அறிவதுதான்வெகுநினைவாய் செலுத்துவாயே.

(இ-ள்.) தோணும்படியாக உலகின் கண்ணுள்ள அக்ஷரத்துக்கெல்லாம் தோணுதாக விளங்கும் பஞ்சபட்சியின் சூட்சமானது இதில் கருவுங் குருவுங் காணுது யாதலால் கடினமானவித்தை ஆசானல் கண்டுத்

தெளியவேணும் மனமானது உரிதிக்கொள்ளவேணும் மனமானது பிச கிப்போகுமாகில் பட்சிவித்தையும் பிசகிப்போகும் ஆனதால் அட்சரங் களை அறியவேணும் அறிவதற்கு அறிவை ஒரு நினைவாகச் செலுத்து வாய் (எ-று.) (1)

அக்ஷரமாறலறிய.

440. செலுத்துவாய்பூருவத்தின் பகலுக்கப்பா
திடமானஆகிருஷ்ணம் வசியம்ரெண்டு
வழுத்துவாய்பூருவத்தின் இரவுதன்னில்
வளமானமோகனமும் தம்பனமுமாகும்
பழுத்துவாய் அமரத்தின் பகலுக்கப்பா
பகையானஉட்சாடணமும் வித்வேஷணமுமாகும்
கொழுத்துவாய்அமரத்தின் இரவுதன்னில்
குடிகெடுத்தமாரணமும் பேதனமுமாமே.

(இ-ள்.) செலுத்துவதுப் பூர்வபட்சத்தின் பகலுக்கு யெதுவெனில் ஆகிருஷ்ணமும் வசியம் இவைரெண்மோம் பூர்வபட்சம் இரவில்போசன மும் ஸ்தம்பனமுமாகும் அமரபட்சம் பகலிற்கு வித்துவேஷணமும் உச் சாடனமாகும் அமரபட்சம் பயிரவில் மாரணமும் பேதனமாகும் (எ-று.)

இதுவுமது.

441. ஆகுமேபூருவத்தின் பகலுக்கப்பா
அதுசரிநீகடையிலையை பிடித்துமாறு
ஏகுமேபூருவத்தின் னிரவுதன்னில்
பொல்லாதநாலெழுத்தின் மாரலைநீஒது
ஏகுமேஅமரத்தின் பகலுக்கையா
என்னசொல்வேன் கொண்டெழுத்துமாறலிலேயில்லு
வேகுமேஅமரத்தின் னிரவுதன்னில்
வெட்டவெளியாக்கிவிடும் நடுத்தலையைமாறே.

(இ-ள்.) பூர்வபட்சத்தின் பகலிற்கு சரியாகக் கடை நிலையானதைப் பிடித்து மாறவேண்டும் பூர்வபட்சத்தின் இரவிற்கு நாலெழுத்தின் மாற லானதை ஓதவேண்டும் அமரபட்சத்தின் பகலிற்கு இரெண்டுயெழுத்து மாறலாக இருக்கவேண்டும் அமரபட்சம் இறவிற்கு வெட்டவெளி யாக் கும்படியாக நடுத்தலையை மாறவேண்டும் (எ-று.) (3)

திக்குகளின் அஷ்டகன்மம் அறிக.

442. மாரிவிடுபேதனமும் மாரணமும்தெற்கு
வகையாகவித்வேஷணமும் மோகனமும்வடக்கு
கோறியிடும்தம்பனமும் மோகனமும்வடக்கு
குலாவுகின்றவசியமும் ஆகிருஷ்ணமும்கிழக்கு
வாரிவிடும்தொழிலையங்கே தனித்திருந்துபாரு
வணங்குவார்உலகத்தோர் மனதறிந்துசொல்லு
நீரிவிடும்பாவத்துக் காளாகாதே
நிமிஷத்தின்எதிரிவுடல் நீரிப்போமே.

(இ-ள்.) மாறுவதுப் பேதனமும் மாரணமும் தெற்காகவும் வித்து வேஷணமும் மோகனமும் மேற்காகவும் தம்பனமும் உச்சாடனமும் வடக்காகவும் வசியமும் ஆக்கிருஷ்ணமும் கிழக்காகவும் போட்டு இருந்துப் பட்சிகளின் தொழிலைப்பாரும் வணங்குவார்கள் உலகத்தோர்கள் மனதறிய நீசொல்குவாய் ஆகினும் பாபத்திற்கு நீயாளாகப் போகாமற் படிக்குச் செய்குவாய் அப்படிச் செய்வாயாகில் ஒரு நிமிஷத்தில் யெதிரியினுடைய உடலானது நீரிப்போகும் (எ-று.) (4)

இதுவுமது.

443. போகுமேஅஷ்டகன்மம் இடற்கீடல்ல
பொல்லாங்குகருத்தொழிலும் இதற்கீடல்ல
ஆகுமேசல்லியங்கள் ஒட்டியங்கள்
அணுகாதுதொட்டியத்தில் அவர்க்கெல்லாந்தான்
சாகுமேமந்திபறம் கெணங்கள்பூதம்
சண்டாளபிசாசுமுதல் ஐயன்துற்கை
வேகுமேபட்சிவித்தை கண்டபோதே
மேலானவித்தையென்று மெச்சினரே.

(இ-ள்.) அஷ்டகர்மமானது இதற்கு ஈடாகமாட்டாதுப் பொல்லாங்கு செய்யும்படியானத்தொழிலும் இதற்கிணையல்ல சல்லியம் ஒட்டியம் தொட்டியம் இவைகளில் ஒன்றும் அணுகாது சாகும் மந்திபறம் கெணங்கள் பூதம் பசாசு ஐயனர் துர்க்கை இவைமுதலானதும் வெந்துப்போகும் பட்சியினுடைய வித்தையைக்கண்டபோதும் அதினல் இதனை மேலாகிய வித்தையென்று மேலோர்முதல் யாவர்களும் மெச்சினர்களென்றனர் (எ-று.) (5)

இதுவுமது.

444. மெச்சினர்பதினெண்பேர் சித்தரெல்லாம்
வெகுகோடிரிஷிகளெல்லாம் மெச்சினர்கள்

கொச்சினர்உலகத்தில் அனந்தங்கோடி
கூர்மையுள்ளமனமுள்ளோர் காணவேணும்
பட்சியென்றதொழிலைத்தான் பார்த்தபேர்க்கு
பகையில்லையொருநாளும் பகைத்தோரில்லை
லட்சியென்ற ஆயுதம்மனத்தடக்கஞ்செய்தால்
மற்றைவித்தைநிமிஷத்தில் வரும்பார்நவிலுவேனே.

(இ-ள்.) மெச்சினர்கள் பதினெண்பேராகிய சித்தர்கள் யாவரும் அத்துடன் வெகுகோடி ரிஷிகளும் மெச்சினர்கள் சந்தோஷமடைந்தார்கள் உலகின்கண் அனந்தங்கோடி மனுக்கள் ஆகினு மிதனை கூர்மையாகிய புத்தி உள்ளோர்களும் மனமுள்ளோர்களும் காணவேண்டும் பட்சியென்னுந்தொழிலை பார்த்தபேர்க்குப் பகையானது நேராது பகைப்போர்களும் இல்லை லட்சியென்னும் ஆயுதத்தை மனதடக்கம்செய்யில் மர்மவித்தைகள் யாவும் நிமிஷத்தில் வரும்படியாகச் சித்தியுண்டாக்கும்.

பிரமன் பிருதுவின் வீட்டின் அக்ஷரம்.

445. நவிலுவேன்உருவையிங்கே வகுத்துக்கொண்டு
நாட்டடாபிரிதியில் நாற்கோணவீடு
நவிலுவேன்உருவையிங்கே வகுத்துக்கொண்டு
தப்பாமல்அங்கென்றும் நங்கென்றுந்தான்
நவிலுவேன்ரெண்டெழுத்து கோசம்பீசம்
வைத்துமேரெண்டெழுத்து கொண்டுவோது
அவிலுவேன்கருவையங்கே தொட்டுக்கொண்டு
அப்பனேவோதிப்பார் பலிக்கும்பாரே.

(இ-ள்.) நவிலும்படியாகிய உருவை வகுத்துக்கொண்டும் பிரிதிவில் நார்க்கோணத்தைப்போட்டும் நான்முகதேவனுடையப் பீஜத்தைவைத்தும் தப்பாமற்படிக்கு அங்-நங் யென்றும் இரண்டெழுத்தைசொல்லி ரோமம் பீஜம்வைத்து இரண்டெழுத்தைக்கொண்டு ஓதும் கருவைத் தொட்டுக்கொண்டு ஓதிடில் பலிக்குமென்பர் (எ-று.) (7)

மால் அப்பு வீட்டின் அக்ஷரம்.

446. பலிக்குமடாஅப்பினிட வீடுமக்காள்
பாரானபிறைபோலே மாதினிடவீடு
செலிக்குமடாமாலினுட பீசம்வைத்து
கேள்மகனேஇங்கென்றும் அங்கென்றுந்தான்

நலிக்குமடா அதினுடைய கோசபீசம்
நாட்டியேகருத்தொட்டு நேரம்பார்த்து
வலிக்குமடாஓர்மனது கொண்டுஓத
வாரிவிடும்செய்தொழிலின் வரிசைபாரே.

(இ-ள்.) பலிக்கும்படியாகிய அப்புவினுடைய வீடு எவ்விதமிருக்குமெனில் பிறைபோலிருக்கும் மாலின்வீடானது செலிப்பதற்கு மாலினுடைய பீசமானது வைத்தும் இங்-அங் என்றும் போட்டும் நலிக்கும்படி அதினுடையக்கோசம் பீசம் நாட்டி கருவானதுதொட்டு நேரமானதுப் பார்த்தும் ஒரு மனதாகக்கொண்டு ஓதசெய்தொழில்தப்பாமல் பலிக்கும் பாரென்றனர் (எ-று.) (8)

ருத்திரன் தேயுவினுடைய வீட்டின் அக்ஷரம்.

447. வரிசையாய்தேயுவினுட வீடுமக்காள்
வளவானமுக்கோணம் சிவனுடையவீடு
பரிசையாம்சிவனுடைய பீசம்வைத்து
பார்மகனேஇங்கென்றும் சிங்கென்றுந்தான்
வரிசையாய்யதினுடைய கோசபீசம்
கலந்துவைத்துகருவையங்கே தொட்டுவைப்பாய்
உரிசையாய்நின்றுசபம் செய்யும்போது
உத்தமனேமுக்கோணம் பொல்லாதுபாரே.

(இ-ள்.) தேயுவினுடையவீடு எவ்விதமெனில் முக்கோணம் அது சிவனுடைய வீடாகும் அதற்குச் சிவனுடைய பீசமானதுவைத்து இங்-சிங் என்று வரிசையாக அதனுடைய கோசபீசம் கலந்துவைத்து அதற்குக் கருவானதுத்தடவி ஒருமனதாக நின்று செபஞ்செய்யும்போது முக்கோணம் பொல்லாதாகும் (எ-று.) (9)

மயேஸ்வரன் வாயுவினுடைய வீட்டின் அக்ஷரம்.

448. பொல்லாதவாயுவென்ற வீடுமக்கள்
பெரியமஹாசுவாதிஷ்டானத்தின் வீடுஅறுகோணம்
நில்லாதேமயேஸ்வரத்தின் பீசம்வைத்து
நின்றுடும் எங்கென்றும் வங்கென்றுதான்
சொல்லாதகோசமென்ற பீசம்வைத்து
தொட்டிவாய்கருவையங்கே நேரம்பார்த்து
வல்லாதவாயுவென்ற பிரசண்டவீடு
வாரிவிடும்வெளிதனிலே மதிக்கொண்ணாதே.

(இ-ள்.) வாயுவினுடைய வீடானது சுவாதிஷ்டான வீடாகும் அது எவ்விதமிருக்குமெனில் அறுகோணமாகும் அதற்கு மயேசுரனுடைய பீசமானதுவைத்து எங்-வங் என்று கோசமென்னும் பீசமானதுவைத்தும் கருவைத்தொட்டு நேரமானதும் பார்த்து வாயுவென்னும் பிரசண்ட வீரவாரி யெறிந்துவிடும் வெளியில் இதை மதிக்கொண்ணுதென்றும் கூறினர் (எ-று.) (10)

சதாசிவம் ஆகாசம் வீட்டின் அக்ஷரம்.

449. மதிக்கவேபோகாது ஆகாசவீட்டில்
மதிரவியும்பூண்டிருந்த மீசனுடவட்டம்
கதிக்கவேபீசனுட பீசம்வைத்து
கனிவான ஒங்கொன்றும் எங்கென்றுந்தான்
விதிக்கவேரெண்டெழுத்தின் கோசபீசம்
மேவியேசுத்திவரப் பதிந்துகொண்டு
சதிக்கவுமேகருத்தொட்டு நேரம்பார்த்து
சரிவியொடு ஏகவெளியில் வாரிவிடும்பாரே.

(இ-ள்.) யாவரும் மதிக்கப்போகாத ஆகாசத்தின்வீட்டில் சந்திர சூரியனும் புகுந்திருக்கும்படியான வட்டவடிவமாகும் அதில் யீசனுடையப் பீசத்தைவைத்தும் ஒங்-அங் என்றும் இரண்டெழுத்தை கோசம் பீசம் சுத்திவரும்படியாகப் பதித்துக்கொண்டும் கருவானதுத்தொட்டு நேரமானதுப்பார்த்தும் யேகவிடில் வாரிக்கொண்டுப் போமென்பர். ()

பஞ்சபூதம் பேர்தலின் பலன்.

450. வாரிவிடும் ஆகாயம் வாய்வும் சேர்ந்தால்
மக்களேஒருவருமே மதிக்கப்போகா
நீரிவிடும்பிரசண்ட வாய்வுசேர்ந்து
நிலைக்கவே ஒட்டாது நிலைகொள்ளாது
மாரிவிடும்தொழில்கூர்மை வெளியில்கார்த்து
மாட்டுவதுபோலருமே மனதிலெண்ணி
ஆரிவிடும் அஷ்டன் சர்மவித்தைப்பா
அறிவுள்ளோர் அறிவார்கள் அறிந்துபாரே.

(இ-ள்.) வாரிக்கொண்டுப்போகும் ஆகாசமும் வாய்வுஞ்சேர்ந்தால் ஒருவராலேயும் மதிக்கப்போகாது நீரிவிடஞ்செய்யும் பிரசண்டவாய்வானது சேர்ந்தும் நிலைக்கவொட்டாது நிலையானதுங்கொள்ளாது மாறிவிடச்செய்யுந் தொழிலின் கூர்மையை வெளியாகக்கார்த்து மாட்டுவது போல் மனதிலெண்ணி அஷ்டகர்மவித்தையை அறிவுள்ளப்பேர்கள் அரிவார்கள் அறிந்துப் பார்க்கவும் (எ-று.) (12)

இதுவுமது.

451. அறிந்துபார் ஆகாசவெளியுங்காத்து
அப்பனே அக்கினியும் சேர்ந்துகொண்டால்
வரிந்துபோம் கண்ணுக்கு நிமைதோணாது
என்மகனே அக்கினியும் வாய்வுஞ்சேர்ந்தால்
பிரிந்துபோம் ஏகவெளி கூடிக்கொண்டால்
பேசுவதொன்றுமில்லை பெண்ணாசை
சரிந்துபோங்கைவல்யம் வாய்வுந்தீயும்
தானறிந்தால் அவனைவெல்வார் இல்லைத்தானே.

(இ-ள்.) ஆகாசவெளியும் காத்தும் அக்கினியும் சேர்ந்துக்கொள்ளுமாகின் எரிந்துப்போய்விடும் கண்ணுக்கு நிரையானதுத் தோணமற்படிக்கும் அக்கினியும் வாய்வுஞ்சேர்ந்தால் பிரிந்துப்போய்விடும் ஏகவெளியானதுக் கூடிக்கொள்ளுமாகின் பேசுவது யாதுமில்லாமற்போகும் பெண்ணாசையரும் கைவல்யமாகும் வாய்வானதுத் தீரும் இதைதானறிந்தவனை வெல்லுவதற்கு யாருமில்லையாகும் (எ-று.) (13)

இதுவுமது.

452. இல்லையே அக்கினியுந் தண்ணீர்சேர்ந்தால்
என்மகனே தண்ணீரும் அக்கினியைவெல்லும்
தொல்லையாய்வாழ்வங்கே கூடும்போது
தொடுத்ததொழில்நாட் செல்லுஞ்சுருக்கேயில்லை
கல்லையேஅப்பதுவை சேர்க்கொண்ணாது
கனிவானமண்ணதுவுந் தண்ணீர்சேர்ந்தால்
இல்லையேகாணமல் தண்ணீர்வற்றி
இரங்கிவிடும்மண்ணதுவும் உண்ணும்பாரே.

(இ-ள்.) அக்கினியுந் தண்ணீருஞ் சேருமாகின் அக்கினியைத் தண்ணீரானது வெல்லும் அதில் வாய்வானதுகூடில் தொடுத்தகாரியஞ்செய்ய நாளானதுச்செல்லும் சுருக்காகமுடியாது அப்புவை அதில் சேர்க்கொண்ணாது பின்னுந் தண்ணீருஞ்சேருமாகில் காணமற்படிக்கு தண்ணீரானது வற்றி இரங்கிவிடும் மண்ணதுவும் உண்ணும் (எ-று.) (14)

சத்திசிவக்கூறு.

453. உண்ணுமே அஞ்செழுத்தில் ரெண்டுபழுதில்லை
என்றுமேபேசுவது எளிதோசொல்லு

மண்ணுமே தண்ணீருங் கூடியல்லோ
மனுமென்றசீவசெந்தை வளர்த்து உறவாடி
எண்ணுமேயுலகமென்ற வாழ்க்கையெல்லாம்
இரண்டிஞல் உண்டாச்சு இசைந்துபாரு
கண்ணுமே உயிரதுவை வளர்த்ததுபோலப்பா
களிவான மண்தண்ணீர் அறிவதுதான்பெரிதே.

(இ-ள்.) உண்ணும்படியான ஐந்துயெழுத்தினில் இரண்டெழுத்துப் பழுதில்லையாகும் அப்படிக்குச்சொல்லுவது எளிதாகுமோவெனில் மண் ணுந்தண்ணீருங்கூடி மனுவென்னும் சீவஜெந்துக்களை வளாத்தும் உற வாடியும் எண்ணும் உலகமென்றவாழ்க்கையானதெல்லாம் இவையிரண் டிஞல் உண்டாச்சு தென்பதை இசைந்துபார்க்கவும் கண்ணுளது உயிரை வளர்ப்பதுபோலும் மண்ணுந் தண்ணீரும் அறிவதுப் பெரிதாமென்பர்.

இதுவுமது

454. பெரிதான மண்ணல்லோ சத்திசத்தி
பேசுவமே கூடாது சிவன்தான்தண்ணீர்
நெரிதான சத்திசித்தி கண்டபேர்கள்
நீடுழி காலமெல்லாம் நிறையாதோறும்
சரியான உலகத்தில் சிறுமைபெற்று
தான்திரிவார் அவரைஒருவர் அறியமாட்டார்
அரிதான சித்துருவித்தை எவர்சொல்வார்கள்
அப்பனே யிவர்மனதை யரிவார்பாரே.

(இ-ள்.) பெரிதாகிய மண்ணுனதும் சத்தியாகும் சிவன் தண்ணீரா கும் நெரியாக சத்தியுஞ் சித்தியுங் கண்டபேர்கள் நீடூழிகாலம்வரைக்கும் நிறையாகத்தோன்றி உலகத்தின்கண் சிறுமையானதுப்பெற்றுத் திரி வார்கள் அவரை யொருவரும் அறியமாட்டார்கள் இவ்விதமான சித்து வித்தை எவருஞ் சொல்லமாட்டார்கள் அவர்களுடையமனதை யறிவார் கள் (எ-று.) (16)

இதுவுமது.

455. அரியாரோ அவர்மனதை நோகச்செய்தார்
அருகிவிடும் அவர்குடியும் அழிந்துபோகும்
தெரியாரே அவர்க்குப காரஞ்செய்தோர்
சிறுமைவிட்டு பெருமையிலே தேரிவாழ்வார்
சரியான நற்பதவி அவக்கோகிட்டும்
சண்டாள சென்மமென்ஞல் தரிகொள்ளாது

நெரியாரே உலகத்தோ டொத்துவாழ்வார்
நேரறிந்து அவர்குணத்திற் நின்றுதேறே.

(இ-ள்.) அவர்களுடையமனதை நோகச்செய்வாருகில் அவர்கள் குடியானது அழிந்துப்போகும் அவர்க்கு உபகாரஞ்செய்தபேர்கள் சிறுமையானது அகன்றுப் பெறுமையானதுபெற்று தேரிவாழ்வாகள் நல்ல பதவியானதுக்கிடைக்கும் சண்டாளசென்மமாயிருக்கில் அப்பதவிகிட்டாது நெறியறிந்தோர்கள் உலகத்திேனுடு ஒத்துவாழமாட்டார்கள் அவரைநேராகவறிந்து அவருடைய குணத்தில் நின்றுத் தேறுவது நன்மையாமென்பார் (எ-று.) (17)

இதுவுமது.

456. தேருவதுயெளிதல்ல வெகுநாட் செல்லும்
செகத்திலேகோடியிலே ஒருவன் உண்டு
ஆறுவதுகோடியிலே அணுகாதுபாரு
அப்பனே பெண்ணுசை அற்றுப்போச்சு
கோருவது பொருளாசை மண்ணின் ஆசை
குடிகெடுத்த காமவெறி குழலாளைத்தள்ளி
ஏறுவது சத்திசிவம் பூசைவிட்டால்
இழந்திடுவாய் சத்தியமாய் யெண்ணிக்கொள்ளே

(இ-ள்.) அப்படிக்குத்தேறுவதும் எளிதிலாகாது வெகுநாளானதுச் செல்லும் அப்படிக்காகினும் செகத்தில் கோடிபேர்களில் ஒருவனுண்டென்பர் அக்கோடிக்கும் அணுகாது பெண்ணுசையானது அற்றுப் பொருளாசை குடிகெடுக்கும்படியான காமவெறியாலுண்டாகும் குழலாளாசையைத் தள்ளியும் சத்திசிவம்பூசையானதை விட்டால் இழைந்துப்போகுவாய் சத்தியமாக யெண்ணிப்பார்க்கவும் (எ-று.) (18)

இதுவுமது.

457. கொள்ளுவது பட்சிவித்தை அறியவேணும்
கூடுதலின் வாழுமுயிர் தெரியவேணும்
துள்ளுவது நிலையில் நின்று வாசிவிட்டால்
தூலமென்றகாயமது அழிந்துபோகும்
அள்ளுவது பிரதிஷ்டைக்குள் ஆகிக்கொண்டு
அப்பனே பாசவினை யடுத்துக்கொள்ளும்
வெல்லுவது சத்திசிவம் பூசைசெய்தால்
மேலான பட்சிவித்தை பலிக்கும்பாரே.

(இ-ள்.) பட்சியினுடைய வித்தையை அறியவேண்டும் பொருந்தியில் வாழும்படியான உயிரைத்தெரியவேணும் நிலையில்நின்று வாசியானது

விடில் காயமானது அழிந்துப்போகும் பிரதிஷ்டைக்குள்ளும் ஆக்கிக் கொண்டும் பாசவினைகளானது அடுத்துக்கொல்லும் சத்திசிவம் பூசை யானதுச்செய்யில் மேலாகிய பட்சிவித்தைப்பலிக்கும் (எ-று.) (19)

இதுவுமது.

458. பாரப்பாபஞ்சபட்சி சுருக்கம் சொல்வேன்
பார்தனிலே ஒருவருக்குஞ் சொல்லவேண்டாம்
நேரப்பா கலியுகத்தில் பழிக்கஞ்சார்கள்
நேர்மையுள்ள மனமுள்ளோர் தேடிப்பார்த்து
ஆரப்பாகோடியிலே ஒருவனுண்டு
அமர்ந்திருப்பார் ஞானநிலை அறிவுதங்கி
சீரப்பாயிருந்தோதோ மனஞ்சோதித்து
தெள்ளுதமிழ்பட்சி வித்தை செப்புவாயே.

(இ-ள்.) பார்ப்பதற்கும் பஞ்சபட்சியின் சுருக்கமானதுச் சொல்லு வேன் அதை இப்பாரின்மீது யார்க்குஞ் சொல்லவேண்டாம் ஏனெனில் இந்த கலியுகத்தில் பழித்தேட அஞ்சார்கள் நேர்மையும் மனமும் உள் ளோர்களைத்தேடிப்பார்த்தும் கோடியிலொருவனைக் கண்டும் அரிந்தி ருப்பார்களின் ஞானநிலையைக்கண்டு அரிவானதுத்தங்கியும் இருப்போ ரின் மனதைச்சோதித்து தமிழ் பட்சிவித்தையைச் சொல்வாய் (எ-று.)

இதுவுமது.

459. செப்புவாய் வருஷமது பனிரண்டானல்
திடமானமனதென்று அரிந்துகொண்டு
ஒப்புவாய் சூக்ஷாதி சூக்ஷமெல்லாம்
ஒளித்துவைத்துமைத்ததெல்லாம் சொல்லுவாய் நீ
தப்புவாய் சகலகரு மானமெல்லாம்
தானடக்கஞ் செய்துகொண்டு அறிவில் நில்லு
அப்புவாய் பெரியோரை கற்புடையபேரை
அகந்தையாய்ச்சொல்வரவர் அழிந்திடுவார் தானே.

(இ-ள்.) சொல்லிப் பனிரெண்டுவருஷம் வரைக்கும் அவனை மன மானதுச்சோதித்து சூட்சாதி சூட்சங்கள் யாவும் ஒளித்து வைத்துக் கொண்டு மற்றவைகள்யாவுஞ் சொல்லி தன் அடக்கமானதுச் செய்துக் கொண்டு அறிவில்நின்றும் பெரியோரையும் கற்புடையோரையும் அகந் தைச் சொல்லுவார்கள் அழிந்துபோவார்கள் (எ-று.) (21)

இதுவுமது.

460. அழிந்திடுவார்பட்சியைநீ பார்த்துக்கொண்டு
அப்பனே உடலினுட சக்கரத்தைவைத்து
நெளிக்கவே பிரிதிவியில் நாற்கோணமிட்டு
நேர்மையுள்ள அங்கென்றுந்தான்
குளிக்கவே பிரீங்கென்று கோசம் பீசம்வைத்து
கூட்டுவாய் யவன்பேரை சுற்றிவரபதித்து
களிக்கவே கருத்தொட்டு வோதுவகைகேளு
கனிவாக அங்நங்பிரீங்ஸ்ரீங் இன்னுன்நசிநசிஎன்றோதே

(இ-ள்.) ஆதலால் பட்சியை நீ பார்த்துக்கொண்டும் உடலின் சக்கரத்தைவைத்து பிரிதிவில் நாற்கோண சக்கரமெழுதி அதில் அங்கென்றும் அக்ஷரம்பதிந்து பிரீங்கென்றுக் கோசம் பீசம்வைத்து அதில்அவன்பேரை சுற்றிலும்பதிந்து கருவானதுத்தொட்டு ஓதும்வகையைக் கேட்பாயாகவும் அங்-நங்-பிரீங்-ஸ்ரீங்-என்று இன்னுன்கையும் நசி-யென்று ஓத வேண்டுமென்பர் (எ-று.) (22)

இதுவுமது.

461. ஓடுகிறபோதெல்லாசெய் வகையைநினைத்து
ஓர்வகையாய் நின்றுசெபம் ஆயிரத்தெட்டுமானால்
ஏதுகிறவசியம் ஆகிருஷ்ணமே செய்யும்
என்மகனே நாலெழுத்தில் தம்பனமோகனமாம்
ஓதுகிறரெண்டெழுத்தில் பேதனமும் உட்சாடணமும்
மக்களே நடுத்தலையை பிடித்துமாறு
கூறுகிறமாரணமும் வித்வேஷணமுஞ்செய்யும்
குறியான அறுபத்துநாளும் ஆடும்பாரே.

(இ-ள்.) ஓதும்போதெல்லாம் தான்செய்யும் தொழிலை நினைத்தும் ஓர் மனதாகநின்று செபம் ஆயிரத்தெட்டுக் கொடுத்தானபின் வசியம் ஆக்கிருஷ்ணம்செய்யும் நாலுயெழுத்தில் தம்பனமும் மோகனமாகும் இரெண்டெழுத்தில் பேதனமும் உச்சாடனமுமாகும் இதனை நடுத்தலையைபிடித்து மாறவேண்டும் மாரணமும் வித்வேஷணமும் செய்யும் கூடிய அறுபத்துநாலும் ஆகும் பாரென்பர் (எ-று.) (23)

இதுவுமது.

462. ஆடுமேதொழிலறிந்து பூசை சொய்தால்
அப்பனே அனுவளவுந் தப்பாதப்பா

போடுமே ஓர்மனதாய் செய்யும்போது
புண்ணியனே எக்கியமாய் முடிந்துதானல்
சாடுமேதேவிக்கு பொங்கல் பெலியுடனே
தனதானருத்திரர்செபம் தாக்கும்போது
வாடுமே குறித்தபட்கி மாண்டுபோகும்
மக்களே நாள்மூன்றில் அழிந்துபோமே.

(இ-ள்.) ஆடுதற்குத் தொழிலானது அறிந்துப் பூசையானதுச் செய்யில் அணுவளவேனும் பிசகாது ஒருமனதாகச் செய்யும்போது யெக்கியமாக முடிந்ததுயாமாகில் தேவிக்கும் பொங்கல்பெலிகொடுத்து ருத்திர செபஞ்செய்து முடிக்கும்போது குறித்தபட்சியானது மாண்டுபோகும் நாள் மூன்றில் அழிந்துப்போகுமென மேலோர் கூறினர் (எ-று.) (24)

இதுவுமது.

463. அழிந்துபோம் செய்வகையே நினைத்துக்கொண்டு
அப்பனே தொடுத்திடுவாய் எழுத்தரிந்துமாறு
தெளிந்துபோம் தொழிலுக்கு வர்க்கவகைக்கண்டு
திடமாகநீயிருந்து வோதும்போது
கழிந்துபோகும் குறித்தபட்சி உடல்சிதறிப்போகும்
கண்மணியே கண்மனது தோஷந்தோஷம்
நெளிந்துபோம் பட்சியது பொல்லாதப்பா
நேற்றறிந்து குப்பறிந்து நீசெய்வாயே.

(இ-ள்.) அழிந்துப்போகும் ஆதலால் செய்வகையை அறிந்துக் கொண்டும் தொடுப்பாய் யெழுத்தை யறிந்துமாறியும் தொழில்வர்க்க வகைக்கண்டு திடமாக நீயறிந்தும் ஓடும்போது கழிந்துப்போகும் குறித்த பட்சியினுடல் சிதறிப்போகும் கன்மதுதோஷமாகும் பட்சியானதுப் பொல்லாதப்பா அதை நேராக அறிந்து குறிப்பினைகண்டும் நீசெய்வாய்.

இதுவுமது.

464. செய்வதுதான் யாருக்குச் செய்யவேணும்
செகத்திலே எனத்துரோகி குருத்துரோகிக்கும்
கொய்துதான் பெரியோரை தூஷிப்போர்க்கும்
கொடுமையுள்ளவஞ்சகர்க்கும் கற்பழித்தபேர்க்கும்
நெய்வதுதான்பொய்சூது கற்றபேர்க்கும்
நேர்மையுள்ள பிராமணரை பழித்தபேர்க்கும்

நைவதுதான் சிவாலயங்கள் அழித்தபேர்க்கும்
நயமில்லா தவத்தோர்க்கு செய்வார்பாரே.

(இ-ள்.) செய்வது யாருக்குச் செய்யவேண்டுமெனில் எனத்துரோகி குருத்துரோகிக்கும் பெரியோர்களை தூஷிப்போர்க்கும் கொடுமையான துச்செய்யும் வஞ்சகர்களுக்கும் பொய் சூதும் செய்து கற்பை அழித்தவர் களும் பிராமணுளைப் பழித்தபேர்களுக்கும் சிவாலயங்களை அழித்தபேர்க் கும் நலமில்லாதத் தவத்தினேற்கும் செய்யவேண்டுமென்பர் (எ-று.) ()

அப்புவின்வீட்டின் அக்ஷரம்.

465. பாரப்பா அப்புவுக்கு பிறையாம்வீடு
பணிந்துநல்ல இங்கென்றும் மங்கென்றுந்தான்
கோரடா ஸ்ரீங்கென்றும் கோசபீசம்வைத்து
கூட்டுவாயவன்பேரை சுற்றிவைத்து
காரடா கருவையெங்கே தொட்டுக்கொண்டு
களிவாக ஓதும்வகை-இங்-மங்-கென்று
தேரடா விடங்கட்கு கங்கென்றுசொல்லி
தேயேஇன்றுளை நசி-நசியென்று சுற்றிவையே.

(இ-ள்.) அப்புவின்வீடுப் பிரைபோலிருக்கும்படிக் கீறி அதில் இங் மங்-ஸ்ரீங்-யென்றும் கோசபீசம் வைத்துக்கூட்டி அவன் பெயரெழுத் தைச் சுற்றிலும் பதிந்து கருவைத்தொட்டுக்கொண்டு ஓதும்வகையைச் சொல்வேன் கேளும் இங்-மங்-கென்றும் விஷத்திற்கு கங்-கென்றுச் சொல்லியும் நசி-நசி யென்று சுற்றிவைப்பாய் (எ-று.) (27)

தேயுவின்வீட்டின் அக்ஷரம்.

466. சுத்திவைத்து முன்போலே செய்துபாரு
துடியான அஷ்டகன்மம் ஆகும்பாரு
குத்திவைத்து தேயுவினுடைய வீட்டைக்கேளு
குறியான முக்கோணம் சிவனுடைய ஆட்டம்
கத்திவைத்து உங்கென்றும் சிங்கென்றுந்தான்
கருதுவாய் டங்கென்று கோசபீசம்வைத்து
முத்திவைத்து ஓதுவது உங்சிங்கென்று
மொழியடா -டங்கென்று -ரங்-லங்நசிநசியென்றேதே.

(இ-ள்.) சுத்திவைத்து முன்போலும் செய்துபார்க்க அஷ்டகன்ம மாகும் தேயுவினுடைய வீட்டைக்கேளும் அதாவது முக்கோணமாகும் சிவனுடைய ஆட்டம்வைத்து உங்-சிங்-கென்றும் டங்-கென்றும் கோச

பீசம்வைத்து முத்தியானதுவைத்து ஓதுவது உங்-சிங்-ஆகும் மங்-கென்று ரங்-லங்-நசி-நசி யென்று ஓதவேண்டும் (எ-று.) (28)

இதுவுமது.

467. என்றல்லோஎதிரியுட பேரைச்சுற்றி
எழுதுவாய் கருவையங்கேதொட்டுவைத்து
நன்றல்லோசுத்தியுடன் வஸ்துவைத்து
நலமாகமுன்சொன்ன படியேயோது
மன்றல்லோ அஷ்டகன்மம் அறுபத்திஞலும்
வகையுடனேசெய்வதுதான் பலிக்கும்பாரு
குன்றல்லோவெடிமருந்து இதற்கொவ்வாது
குடிகெடுத்தபட்சிவித்தை கூறொண்ணுதே.

(இ-ள்.) என்றுவோதி யெதிரியினுடையபெயரைச் சுற்றிலுமெழுதி அதில் கருவைத்தொட்டுவைத்தும் சுத்தியுடன் வஸ்துவும்வைத்து முன்சொன்னபடியாக ஓதவேண்டும் அஷ்டகன்மம் அறுபத்திஞலும் வகையாகப் பலிக்கும் குன்றைப் பிளக்கும்படியான வெடிமருந்தும் இதற்கிணையாகமாட்டாது ஆகையால் குடிகெடுக்கும்படியான பட்சிவித்தையைச் சொல்லொண்ணுது (எ-று.) (29)

வாயுவின் வீட்டின் அக்ஷரம்.

468. கூறவொண்ணுவாயுவினுட வீட்டைக்கேளு
குமரகுருசக்கரந்தான் அறுகோணமப்பா
மாறவொண்ணு-எங்-மங்-கென்றுபோடு
மறையாதேவீங்கென்றும் கோசபீசம்வைத்து
தேறவொண்ணுசிவத்துக்கு எழுத்தைக்கேளு
திரமான எங்-வங்-வீங்-கங்-ரங்-இன்னுணை நசிநசி என்ரோது
நேயெண்ணுக்கருத்தொட்டு வோதும்போது
நீறிவிடும்பிரசண்டை வாய்வுதானே.

(இ-ள்.) வாயுவினுடைய வீட்டைக் கேட்பாயாகவும் குமரகுருவின் சக்கரமாகிய அறுகோணமாகும் அதைக்கீரி அதில் எங்-மங் கென்றுப்போட்டு மறையாமல் வீங்கென்றும் கோசபீசம்வைத்தும் தேறவொண்ணுத சிவத்திற்கு யெழுத்தைக்கேளும் எங்-வங்-வீங்-கங்-ரங்-இன்னுனே நசி-நசி-என ஓதி கருவான்துதொட்டு ஓதும்போதில் நீரிவிடும் பிரசண்ட வாயுவானது (எ-று) (30)

ஆகாயத்தின் வீட்டின் அக்ஷரம்.

469. தானென்ற ஆகாயவட்டவீடு
சதாசிவனர்வாழும் அந்தவீட்டிலப்பா

தேனென்ற-ஒங்-யங்கென் றபோடு
திரமாக டங்-ரீங்-காரம் கோசபீசம்வைத்து
மானென்ற தேவியைத்தான் வருந்திக்கொண்டு
வளமாகவோதும்வகை நன்றாய்க்கேளு
பானென்ற ஒங்-உரிங்-கங்-சங்-இன்ஞனெ நசிநசி
பரமபதம் வழிநோக்கிப் பதைத்துச்செய்யே.

(இ-ள்.) ஆகாயத்தின்வீடு வட்டவடிவாகும் அதில் சதாசிவன் வாழ்ந்திருப்பார் அதைக்கீறி அதில் ஒங்-யங்-கென்றும் பதித்து டங் ரீங் காரம் கோசபீசம்வைத்து தேவியை வருந்திக்கொண்டு ஓதும் வகையைக் கேளும் ஒங் உரிங் கங் சங் இன்ஞனெ நசி யென்றும் பரமபதத்தின் வழியைநோக்கிப் பதைத்துச் செய்வாய் (எ-று.) (31)

பிரிதுவிக்கு கடத்தலையாகப் பிடித்து மாறல்.

470. பகையாது கடத்தலையைப் பிடித்துமாறல்
பகைத்தபேர் எல்லாரும் உன்பதமேசேர்வார்
நகையாது நசியைவிட்டு வசியென்றுவோது
நலமான பொருள்களெல்லாம் நசியைநினையாதே
வகையாதேமற்ற அஞ்சு தொழில் கட்கப்பா
வகையாக நசியைவிட்டால் பலியாதுபாரு
துகையாது தொழிலறிந்து வோதவேணும்
துடியான பகைபோச்சு உறவுமாச்சே.

(இ-ள்.) பகையாகாதுக் கடைத்தலையைப் பிடித்துமாறிடில் பகையாகவிருந்தபேர்கள் யாவரும் உறவாவார்கள் நசியைவிட்டு வசியென்று ஓதவும் நன்மையாகியத் தொழில்செய்யும்போது நசியை நினைக்கப் படாது மற்ற ஐந்துத்தொழிலுக்கும் நசியை விட்டுவிடுவையாகில் பலியாமற்படிக்கு ஓதில் பகையானதுப்போகும் உறவானது வந்துக்கூடுமென்பர் (எ-று.) (32)

சுபகாரியத்துக்கு சேபம் செய்யும் ஸ்தலம்.

471. உறவானதொழில்கள் எல்லாம் மித்துருவைச்சேர்த்து
ஓதுவாய் ஒருமனதாய் இருந்துகொண்டு
பறவான நல்லதோர் காரியங்கள்
பலிக்குமடாவில்வமரம் பிதியிலிருந்தோது
மறவான சிவாலயங்கள் கெங்கையோரம்
வளர்ந்த நந்தவனத்திலே இருந்து செய்தால்

திரமான மூன்றுவகை தொழிலுமாகும்
தின்மை என்றதொழில் செய்யும் தலத்தைக்கேளே.

(இ-ள்.) உறவாகியத் தொழில்கட்கெல்லாம் மித்துரு பட்சியைச் சேர்த்துக்கொண்டும் ஒருமனதாகயிருந்து ஓதவேண்டும் நன்மையாகியக் காரியங்கள்பலிக்கும் வில்வமரத்தினடியிலிருந்து ஓதவேண்டும் சிவாலயம் கங்கைக்கரையோரம் நந்தவனம் இந்தயிடங்களில் இருந்துச்செய்யில் மூன்றுவகைத் தொழில்களுமாகும் தீமையாகியத்தொழில் செய்யும் இடத்தைக்கேளும் (எ-று.) (33)

அசுபகாரியத்துக்கு ஜெபம்செய்யும் ஸ்தலம்.

472. தலமதுதான்பாழ்வீடு மெத்தநன்று
தன்மையுள்ளமுகசந்தி பாதைஆகும்
குலமதுதான்காளியிட கோவில்ஆகும்
குலாவுகின்றபொதுவான அம்பலமுமாகும்
செலமதுதான்மாட்டைந் தொழுவம்ஆகும்
தீயெறியுங்காடாகும் சுடுகாடுஆகும்
வயதுதான்இத்தலத்தில் தொழிலைச்செய்ய
மக்களே அஞ்சுவகை தொழிலும்ஆமே.

(இ-ள்.) தலமென்பதில் பாழ்வீடாகவிருக்கில் மெத்தவும் நன்மையாகும் முச்சந்தியாகில் பகையாகும் காளிக்கோயில் பொதுவாகிய அம்பலம் மாடுகட்டியத்தொழுவம், தீபற்றியக்காடு, சுடுகாடு இந்த இடங்களில் செய்ய ஐந்துவகைத்தொழிலு மாகுமென்பர் (எ-று.) (34)

இதுவுமது.

473. தொழிலாகும்வகையேது சொல்லக்கேளு
துடருமுன்னேபக்ஷியைநீ கண்டபோதே
குளியாகும்அந்திடத்தை சுத்திபண்ணு
குணமாகமந்திரத்தால் சிவசிவாசொல்லு
தழவாகும்பச்சிலைக்கி சாபம்நீங்கி
தண்மையுடன்காப்பிட்டு சிலைபோல்வருந்துபாரு
தெளிவாகும்சக்கரத்தில் அக்ஷரத்தைவைத்து
நேர்மையுள்ளசக்கரத்தால் கருத்தொட்டுபூசைசெய்யே.

(இ-ள்.) தொழிலாகிய வழியைச் சொல்லக்கேளும் துடர்ந்துவரும் முன்னதாகப் பட்சியை நீ கண்டபோதும் குறியாகிய ஐந்திடத்தையும் சுத்தி பண்ணியும் குணமாகிய மந்திரத்தால் சிவசிவாயென்று சொல்லியும் பச்சிலைக்குச் சாபமானதை நீக்கியும் காப்புக்கட்டி சிலைபோல் வருந்

திப் பின்பு சக்கரத்தில் அட்சரத்தைவைத்து அச்சக்கரத்திற்கு கருவான துத் தொட்டுயிட்டுப் பூசையானதுச் செய்வாய் (எ-று.) (35)

இதுவுமது.

474. பூசைசெய்துநிர்வாணத் தோடேநின்று
பிடுங்குவாய்கிழக்குமுக மாகநின்று
பூசைசெய்துவேர்வாங்கி தேவிமுன்பு
பண்பாகவைத்துநீ தூபபெலியுடனே
வோசைசெய்து வேரெடுத்துவைக்குந் தலைமைக்கண்டு
விழியானபெலிகொடுத்து புதைக்கும்போது
நாசைசெய்துபோகுமடா தொழில்பொல்லாது
நாடாதேவெகுபாவங் கொடுமையாமே.

(இ-ள்.) பூசையானதுச்செய்து நிர்வாணத்தோடே எதிரில்நின்றுப் பிடுங்குவாய் கிழக்குமுகமாகநின்றும் பூசைசெய்துதேவியின்முன்பு பண்பாகவைத்து தூபங்கொடுத்து பெலியானதுவாங்கி வேரையெடுத்து வைக்குந் தலைமையைக்கண்டும் பொலியானதுக்கொடுத்துப் பொதைக்கும்போது நாசமானதுச்செய்யும் தொழிலானதுப் பொல்லாது ஆதலால் இதனை நாடிச்செய்யவேண்டாம் கொடுமையாகியப் பாவமானதுச் சம்பவிக்குமென்பர் (எ-று.) (36)

இதுவுமது

475. கொடுமையுள்ளவஞ்சகர்க்குச் செய்யவேணும்
கொலையானபேர்களுக்குச் செய்யவேணும்
அடுமையென்றுவந்தவற்கு அறிவித்தக்கால்
அப்பனேஅவன்செய்யும் பலனிற்பாதி
வடுமையென்று மனமறியச் சொன்னையானல்
வந்திடுமேவெகுபாவம் வந்துசூழும்
தடுமையுள்ளபித்தர்கள் தான்வந்துஎய்ப்பார்
தள்ளிவிடுமதினலே பலனுண்டாமே.

(இ-ள்.) மேற்கூறியவண்ணம் யார்க்குச்செய்ய வேண்டுமெனில கொடுமையுள்ள வஞ்சகர்களுக்கும் கொலைசெய்யும்பாபிகளுக்குச்செய்ய வேணும் அடுமையென்று அடுத்துவந்தவர்களுக்கு அறிவிக்கில் அயன் செய்யும் பலனிற் பாதியாகும் அடுமையென்று மனமானது அறியச் சொன்னையாகில் வெகுபாபம்வந்துசூழும் அடுமையுள்ளப் புத்திரர்கள் வந்துயேய்ப்பார்கள் அதைத் தள்ளிவிடுவாய் மதியினல் பலனுண்டாகும் (எ-று.) (37)

இதுவுமது.

476. பலனுண்டுஇத்தொழிலை வெளிவிடாதே
பழிக்கஞ்சாகலியுகத்தில் பழியோபாவம்
பெலனுண்டுஉலகத்தில் பகையேயில்லை
பெருமைஎன்றபெரியோர்கள் வார்த்தைசொல்வார்
கலனுண்டுஎன்றுசொல்லி சற்றுநினையாதே
கலங்காதேமனமுறுதி கழியவேணும்
சிலருண்டுவருங்காலம் தங்குங்காலம்
செடமறிவதற்கல்லோ தெளிந்துபாரே.

(இ-ள்.) பலனனது உண்டாகும் இந்தத்தொழிலை வெளியிடவேண்டாம் பழிக்கஞ்சாதக் கலியுகமாதலால் பழியானதும் வந்து சித்திக்கும் பெருமையானதுத்தங்கிய பெரியோர்கள் வார்த்தையானது சொல்லினர் கலகமானது உண்டென்று சற்றும் நீ நினைக்கவேண்டாம் கலங்காமற்படிக்கு மனதையுறுதியாகக்கொண்டுங் கழியவேணும் சிலர்கள் வருங்காலம் தங்குங்காலம் இவைகளின் சேடமானது அறியத் தெளிவாகப் பாரும் (எ-று.) (38)

இதுவுமது

477. தெளிவைத்தான் வெகுவினையும்வைத்துபாரு
செடமுழுதும்சத்துருவை மித்துருவைக்கண்டு
அழுவதுதான்உண்டானல் தொழில்செய்யும்போது
அப்பனேபட்சிக்கி பகையாகக்கூட்டு
நெளிவதுதான்பட்சிவகை இருந்திடத்திற்
நேரானகருத்தொட்டு வைக்கவேணும்
கழிவதுதான்தலைகீழாய் மாறும்போது
சண்ணுமடாகருக்குருவும் சண்ணும்பாரே.

(இ-ள்.) தெளிவில் வெகுவினையையும் வைத்துப்பாரும்சேடம்முழுதும் சத்துரு மித்துருகளைக்கண்டும் அழிவானது உண்டாகில் தொழிலானதுச்செய்யும்போதுப் பட்சியை பகையாகக்கூட்டும் பட்சிப்பகையிருக்குமிடத்தில் கருவைத்தொட்டு வைக்கவேணும் தலைக்கீழாக யெழுத்தை மாறும்போது கண்ணும் கருவும் குருவும் சண்ணும் (எ-று.) (39)

இதுவுமது.

478. சண்ணுமடாருத்திரசெபம் முடிந்ததானல்
தானினைத்தபடிமுடியும் தப்பாதப்பா

எண்ணுமடாமுன்போலே தொழிலைச்செய்து
எடுத்திடுவாய்கொள்ளியோடு அதனில்வைத்து
கண்ணுமடாருத்திரனை நினைத்துக்கொண்டு
கனிவானவஸ்துவுடனே சுத்திவைத்து
பண்ணுமடாவோர்மனதா இருந்துசெபம்செய்தால்
நினைத்தபடி ருத்திரரால் முடியும்பாரே.

(இ-ள்.) சண்ணுவதற்கு ருத்திரப்பூசையென்னும் ஜெபமானது முடிப்பாயாகில் நினைத்தக்காரியங்கள் தப்பாமல் முடியும் முன்போல தொழிலைச்செய்தும் யெடுத்துக் கொள்ளியுடன் அதில்வைத்தும் ருத்திர பகவானை நினைத்துக்கொண்டு வஸ்துவுடன் சுத்தியும் வைத்து ஓர்மன தாக யிருந்துச் செய்யில் ருத்திரரால் முடியும் (எ-று.) (40)

இதுவுமது.

479. முடிப்பாரேஅவனுடைய கருவிருப்பதாலே
மோசமதுசெய்திடுவான் பழிகொலைக்கிஅஞ்சான்
அடிப்பானேஅவனுடைய எமதண்டியினாலே
அவனடிக்க ஆர்விலக்க போராரப்பா
குடிப்பானேஉதிரமென்ற பாணந்தானும்
கொல்லுவானவனுடைய ஈரலைத்தான்தின்றுஐயா
கடிப்பானேமூளையைத்தான் தின்றுஐயா
கலங்காமல்நீயிருந்து பூசைமுடிப்பாயே.

(இ-ள்.) முடிப்பார் அவனுடைய கருவிருப்பதினாலும் பழிக்கும் கொலைக்கும் அஞ்சான் அடிப்பான் அவனுடைய கையிலிருக்கும் யெம தண்டினாலும் அவன் அடிக்கையில் அதை யார் விலக்கப்போரார்கள் அவன் குடிப்பான் உதிரபாணம் கொல்லுவான் அவனுடைய யீரலைக் கவ்வியும் கடிப்பான் மூளையைத்தின்பான் ஆனபடியால் கலங்காமற் படிக்கு நீயிருந்தும் பூசையை முடிப்பாய் (எ-று.) (41)

இதுவுமது.

480. முடிப்பாயேஉன்மனது போலேமக்கள்
முடிவதுதான்ஏதாலே கருக்குருவினாலே
செடிப்பானேஎதிரியுடல் பெலங்குறைந்ததாலே
சிவனுடையருத்திரர்களை கோபத்தாலே
வடிப்பானேகாலனென்ற துகைமுடிந்ததாலே
வந்துதடாஇந்தவினை மறிக்கப்போகா

குடிப்பானருத்திரனும் உதிரத்தைதானும்
கோபமதைஒருவரால் திருப்பொண்ணுதே.

(இ-ள்.) முடிப்பாய் உன்னுடைய மனதுபோலும் அது எவ்விதமெனில் கருவினுலுங் குருவி நாலுமாகவேண்டும் யெதிரியுடைய பலன் குறையுமாகில் சிவனுடைய ருத்திரர்களைக் கோபத்தினுலும் அடிப்பான் காலனென்ற துகையானது முடிந்ததினுலும் வந்துவாய்த்த யிந்தவினையை மறிக்கப்போகாது குடிப்பான் ருத்திரனும் உதிரத்தைப் பாணமாகச்செய்வன் கோபத்தை ஒருவனுலுந் திருப்பொண்ணுது (எ-று.) (42)

இதுவுமது.

481. திருப்புவதுகருவறிந்த பேரேஅல்லால்
ஜெகத்திலுள்ளபேர்களோ திருப்பப்போருர்
கருப்புவதுருத்திரனுட மந்திரந்தானப்பாகருதுவது ஓம்ஸ்ரீம்
கிரீம்அங்உங் மதுமாங்கிருஷார்மூர்த்தி வாவாவென்று
வருப்புவதுஉருவங்கே நூற்றிருபத்தெட்டு
வருந்தினுல்ருத்திரனும் மனதில்தோணும்
முருப்புவனுமுன்சொன்ன எழுத்தைக்கூட்டி
முடிக்கினுல்எதிரியில்லை முடிந்துபோச்சே.

(இ-ள்.) அதைத் திருப்புவது யாரெனில் கருவானது அறிந்தபெயரல்லாமல் ஜெகத்தில் யார் திருப்பப்போருர்கள் சொல்வது ருத்திரனுடைய மந்திரமாகும் அதாவது எவ்விதமெனில் ஓம் ஸ்ரீம் கிரீம் அங் உங் மதுமாங்கிஷ ருத்திரமூர்த்தி வாவாவென்று உருவானது நூற்றியிருபத்தெட்டுகொடுத்து வரிந்திடில் ருத்திரன் மனதில் தோன்றுவான் முன்சொன்ன எழுத்தைக்கூட்டி முடிக்கிவிடுவாயாகில் உனக்கு எதிரியில்லை முடிந்துப்போவாரென்பார் (எ-று.) (43)

இதுவுமது.

482. போச்சுதடாமுன்சொன்ன படிதப்பாது
பொல்லாதபட்சிவித்தைபொய்சொல்லாதே
தாட்சியொன்றுவாராது மனத்தடக்கம்வேணும்
தன்மையல்லோ புத்தியல்லோ கணியவேணும்
வாச்சுதென்றுஉயிர்வகை செய்யநினையாதே
வந்திடும்பார்கன்மவினை தொலைக்கொண்ணுது
போச்சுதுபார்குருபதத்தை பணிந்தோர்அப்பா
பதினெண்பேர்சாபம்இல்லை பலிக்கும்பாரே.

(இ-ள்.) போகும்முன் சொன்னப்படியாவுந் தப்பாது பொல்லாதாகிய பட்சியினுடைய வித்தையின் பொருளானதுச் சொல்கவொண்ணாது தாட்சியானது வாராமல்படிக்கு மனத்தை அடக்கவேண்டும் தன்மையாகப் புத்தியானதுத் தணியவேண்டும் பலிதமாச்சுதென்று உயிர்வகையானதுக் கொல்லநினையாதே அப்படிக்குநினைக்கில் கன்மமானது வந்து சூழும் அதைத் தொலைக்கவொண்ணாது குருவினுடைய பாதத்தைப் பணிந்தோர்களுக்கு பதினெண்பரின் சாபமானதுயில்லைப் பலிதமாகுமென்பர் (எ-று.) (44)

இதுவுமது.

483. பலிக்குமடா குருபதத்தை மறக்கொண்ணாது
பரமபதபொருளெனவே எண்ணுவாய்நீ
சொலிக்குமடா சரஸ்பதியாள் கிருபைதானும்
தொடுத்திடுமேஞானவிதி அமைக்கும்பாரு
கெலிக்குமடா உன்னுவில் சொன்னதெல்லாம்
கெணிதமுடன்உனைப்பகைத்தோர் வாழ்வதில்லை
வலிக்குமடா தன்னுயிர்போல் மன்னுயிரையெண்ணி
வாழ்வதுதான்உலகத்தோ டொத்துவாழே.

(இ-ள்.) பதிவாகத்தோன்றும் குருபதத்தை மறக்கொண்ணாது அதைப் பரமபதப் பொருளாகயெண்ணி நீயும்செய்வாயாகில் சொலிக்கும் சரஸ்வதியாள் கிருபையுனக்கும் ஞானவிதியானதுப் பலிக்கும் உன்னுவில் சொன்னது யாவும் பலிக்கும் உன்னைப் பழித்தபேர்கள் வாழமாட்டார்கள் தன்னுயிர்போல மன்னுயிரையெண்ணி வாழ்கும்படியாக உலகத்தோடு ஒத்து வாழ்குவாம் (எ-று.) (45)

இதுவுமது

484. ஒத்துநின்றவாழ்வதுதான் அறிந்துமக்காள்
உலகத்தில்பேய்க்கூத்தாம் ஆடும்பாரு
சத்துநிறைபொருள்அறியார் சண்டிமாண்பர்
சன்னியாசிரிஷிகளைப்போல் வேடம்பூண்டு
சத்துகின்றபெரியோரை வணக்கஞ்செய்து
கலந்ததினால்மறைப்புஅது வெளியாய்த்தோன்றும்
புத்திவரும்அறிவுக்கு சிவயோகம்பெற்று
பூதலத்தில்நீயும் ஒருசித்தாவாயே.

(இ-ள்.) ஒத்துயிருந்துவாழும் வகையானது அறிந்து உலகத்தில் பேய்க்கூத்தாக ஆடும் பார்ப்பாயாகவும் சத்துவுள்ளப் பொருளையறியாத சண்டிமான்பர்கள் சன்னியாசியைப்போலும் ரிஷியைப்போலும் வேஷமானதுப்பூண்டும் அலையாமல் கற்றுணர்ந்தப் பெரியோர்களைக்கண்டு

வணக்கஞ்செய்தும் அவருடன் கலக்கில் மறப்பானது வெளியாகத் தோன்றும் புத்தியானது வரும் அறிவானதுப்பெருகச் சிவயோகம் பெற்று பூதலத்தில் நீயும் ஒரு சித்தாவாயென்பர் (எ-று.) (46)

இதுவுமது.

485. சித்தனென்றபெயர்பெறவும் வெகுநாட்செல்லும்
செடலம்இருந்தால் அதிசயங்கள்காணலாகும்
பத்தனென்றகன்மவலைக் குள்ளேசிக்கி
பாழ்நரகில்வீழாதே பலம்ஏதுண்டு
சுத்தனென்றசிவனுடைய கடாட்சத்தாலே
கலந்தேறமன துருதி யாகவேணும்
வத்தனென்றஉலகத்தில் கோடிக்கொன்று
வாழுவான்இல்லறத்தில் பெரிதாம்பாரே.

(இ-ள்.) சித்தியென்று பெயரானதுப்பெருக வெகு நாளதுச்செல்லும் செடலமானது இருக்குமாகில் அதிசயங்கள்யாவுங் காணலாம் பத்தனென்றுச்சொல்லும் கன்மவலைக்குள்ளாகச் சிக்கிப் பாழ்நரகில் விழாமல் பலனானது யேது உண்டாகும் கர்த்தனென்னும் சிவபிரானுடையக் கடாட்சத்தினாலும் கலந்துயேற மனமானது உறுதியாகவேண்டும் உலகத்தில் கோடிக்கொருவர் வாழ்குவான் இல்லறத்தில் வாழ்வான்பாரும்.

அட்சரமாறல்படலம் முற்றிற்று.

உ

கடவுள் துணை.

மூலிகைப் படலம்.

486. பெரிதானசாஸ்திரந்தான் பட்சிசாஸ்திரம்
பேருலகில்மானிடர்கள் அறியாவிட்டால்
அரிதானநேரம் அங்கே அறிந்துசெய்தால்
அப்பனேசெய்தொழிலும் பங்கம்ஆமோ
குறியானதோஷமென்ற நீஐந்தானும்
குணமாகசொல்லிவைத்தேன் கிரீங்-ஸ்ரீங் கென்றுபோடு
வரிதானமுனிசொன்ன அட்சரத்தில்சேர்ந்தால்
மகிமையுண்டுஅவ்வெழுத்து எழுந்தாடும்பாரே.

(இ-ள்.) பெரிதாகிய சாஸ்திரம் பட்சிசாஸ்திரமாகும் அதைப்பூமி யின்மீது மானிடர்கள் அறியாவிடிலும் அரிதாகிய நேரத்தை யறிந்துச் செய்வாராகில் செய்யும்படியானத் தொழில் பங்கமாகாது தோஷமென் னும்படியான நீயுந்தானும் குணமாகச்சொன்னேன் கிரீங் ஸ்ரீரீங் யென் றுப்போட்டு முன்சொன்ன அட்சரத்தில்சேர்த்துபார்க்க மகிமையானது உண்டாகும் அவ்வெழுத்தும் யெழுந்து ஆடுமென்பர் (எ-று.) (1)

இதுவுமது.

487. ஆடுமேகாரியபஞ்சாட் சரமும்அப்பா
அதினுடனேகாரணமும் சேர்ந்ததானால்
கூடுமேகோசமென்ற பீஜம்சேர்ந்தால்
கூடிவிளை ஆடுமடா உடல்உயிராய்நின்று
வாடுமேயிதுமூன்றும் சேராவிட்டால்
மறப்பாவைபோலிருக்கும் ஆடாதுபாரு
தேடுமேகருக்குருவும் சேர்ந்தகாலம்
செகத்திலே அவனைவெல்லரிதாம்பாரே.

(இ-ள்.) ஆடும்படியாகிய காரியப் பஞ்சாட்சரமும் அத்துடன்காரண மானதுஞ்சேரில் கேசமென்னும் பீசமானது சேரினும் அதுக்கூடி விளை யாடும் உடலும் உயிராகநின்றும் வாடிவிடும் மேற்கூறிய மூன்றும் சேராவி டில் மறப்பாவையைப்போலிருக்கும் ஆடாது அதற்குக் கருவுங் குருவும் சேர்ந்தகாலம் பூமியின்மீது அவனைவெல்ல அரிதாகும்பாரே (எ-று.) (2)

பூர்வபட்சத்து பட்சிகளின் பச்சிலை.

488. அரிதானநேரமங்கே அறியவேணும்
அப்பனேமூலிகையும் தெரியவேணும்
சரியானசத்துருவும் மித்துருவும்நின்ற
தன்மையங்கே தெளிவாகக்காணவேணும்
பரிவானகைப்பாகம் செய்பாகங்கள்
பழக்கத்தால்ஆசானும் காட்டவேணும்
குறியானதொழில்செய்தால் பலியாதேபோமே
குருதொட்டுகாட்டவுமே முத்தியாமே.

(இ-ள்.) அரிதாகிய நேரங்களையறிந்து உணரவேண்டும் மூலிகையா னதும் தெரியவேணும் சத்துருபட்சியும் மித்துருபட்சியும் நின்றத்தன் மையைத் தெளிவாகக்காணவேணும் கைப்பாகமும் செய்ப்பாகமும் பழக் கமாகும்படியானல் கண்டுணரவேண்டும் அப்படிக்குக்குறியாமல் செய் யில் பலியாமற்போகும் குரு தொட்டுக்காட்ட முத்தியாகும் (எ-று.) (3)

இதுவுமது

489. முத்தியாய்ரோமரிஷி சொன்னவாக்கியம்
முன்பின்னுய்வாராது பழுதொன்றில்லை
பத்தியாய்ஓர்மனது கொண்டுநின்றால்
பார்க்கலாம்அதிசயங்கள் உலகத்துள்ளே
வெற்றியாய்வருவதற்கு உறுதிவேணும்
மேதினியில்சாஸ்திரத்தை வெளிவிடாதே
சத்தியமாய்நீநினைத்து வந்தாயானால்
சகலமுமேசித்திமுத்தி யாவாய்நில்லே.

(இ-ள்.) முத்தியாக உரோமரிஷியானவர் சொன்ன வாக்சியமானது முன்பினாக ஒன்றும்வாராது பழுதானது ஒன்றுமிராது பத்தியாக வோர்மனதாகக்கொண்டு நிற்கில் பார்க்கலாகும் அதிசயங்கள் யாரும் உலகத்திற்குள்ளும் வெற்றியாகவருவதற்கு உரிதியானதுவேணும் ஆகினும் உலகத்தின்மீது சாஸ்திரத்தை வெளியிடப்போகாது சத்தியமாக நினைந்து வருவாயாகில் சகலமும் சித்திமுத்தியாவாய் நிலையாகநில்லும்.

இதுவுமது.

490. நில்லென்றவல்லூருக் கீரையாகும்
நிச்சயமாய்சொல்லிவைத்தேன் ஆந்தைசிறுகீரை
வெல்லென்றகாக்கைக்கி சாரணவேர் ஆகும்
வெகுகோடிமைகோழிக்கி தகரைவேறும்
சொல்லென்றமயிலுக்கு நங்கிலிவேர்என்று
கூறினார்முனிவர்யெல்லாம் குறைசொல்லாமல்
அல்லென்றஅப்புஉப்பு நாழியென்று
அறிந்தவர்கள்பட்சிவித்தை அறிவார்பாரே.

(இ-ள்.) வல்லூருக்குக் கீரையாகும் ஆந்தைக்குச் சிருகீரையாகும் காகத்திற்குச் சாரணைவேருகும் கோழிக்குத் தகரைவேருகும் மயிலுக்குச் சங்கிலிவேருகும் கூறினர்கள் முனிவர்கள் யாவரும் துரையானதுச் சொல்லாமலும் அப்படிக்கல்லாமல் அப்பு உப்புநாழிகை இவைகளை அறிந்தோர்கள் பட்சிவித்தையை அறிவார்பாரும் யென்றனர் (எ-று.)

மூலிகைசாப நிவர்த்தி.

491. பாரேநீமூலிகைமுன் இருந்துக்கொண்டு
பகருவாய்ஓம்மூலி ஒன்றுகொண்டு

சேரேநீசருவமூலிசாபம் நசிநசி என்று
செலுத்துவாய்பதினாறு உருவும்வோதி
கோரே நீ கன்னிநூல் காப்புக்கட்டி
கொடுத்திடுவாய் வஸ்துசுத்தி தீபங்காட்டி
வேரே நீ பிடுங்குமுன்னே அட்சரத்தை ஓதி
வேளை கண்டு கருத்தொட்டு பிடுங்குவாயே.

(இ-ள்.) மூலிகையின் முன்னாதாக நின்றுகொண்டும் பேசுவாய் ஒரு மூலிகையெனநின்றும் சர்வமூலியின்சாபம் நசிநசியென்றும் பதினாறு உருவானதுக்கொடுத்துக் கன்னிநூலிற் காப்பானதுக்கட்டி வஸ்துவும் சுத்தியும் வைத்து தீபமானதுகாட்டி வேரானதுபிடுங்குதற்கு முன்னும் அட்சரத்தை ஓதி வேளையானதுப்பார்த்துக் கருவைத்தொட்டு பிணங்க வேண்டுமென்பர் (எ-று.) (6)

இதுவுமது.

492. பிடுங்குகிறபோதல்லோ நிர்வாணங்கொண்டு
பெரிதானருத்திரனை மனதில் வைத்து
நடுங்குவது வாசியைநீ உள்ளேவாங்கி
மைந்தனே நினைத்ததுபோல் எண்ணிக்கொண்டு
ஒடுங்குவது திண்ணமென்று எதிரிமுகம் நெஞ்சுமூலம்
ஊண் அடாநடை உறக்கம் சாவைவைத்து
அடுங்குமே குறித்திடத்தில் சாவெழுத்தையோது
அள்ளிவிடுகாலடி மண் கருவைத்தொட்டே

(இ-ள்.) பிடுங்கும்போது நிர்வாணமாக நின்றுக்கொண்டும் ருத்திரனை மனதில் தியானஞ்செய்து வாசியானதை உள்ளாகவாங்கி மனதில் நினைத்தவண்ணம் எண்ணிக்கொண்டும் ஒடுங்குவது திண்ணமாகுமென்றும் நினைத்து யெதிரியின்முகம் நெஞ்சுமூலம் இவைகட்கு ஊண்நடை உறக்கம் மரணம் இவைகளைவைத்தும் குறித்தயிடத்தில் சாவெழுத்தை யோதி அவனுடைய காலடிமண்ணைக் கருத்தொட்டு யெடுத்துக்கொள் வாய் (எ-று.) (7)

பீடை சம்பவித்தல்.

493. தொட்டல்லோவேர் மண்ணும் ரெண்டும் ஒன்று
சுருக்கிடவே அவ்வெழுத்தை பிடித்துமாறு
விட்டல்லோ ஐம்புலனும் சிதறிப்போகும்
மேலானவேரைத்தான் மயானஞ்சென்று
சுட்டல்லோ போடாதே வெகுகொடுமை வந்து
சூழுமடா உனதுகுலம் கடைத்தேருவதில்லை

கொட்டியதேள் அதுபோலே விஷந்தானேறும்
கூடாது ஒருவரால் திரும்பும் வகைபாரே.

(இ-ள்.) வேரும் மண்ணும் ஒன்ருக சேர்த்து வைத்துக்கொண்டு சுருக்கிடும்படியாக அவ்வெழுத்தைப்பிடித்து மாறும் அவன் தனக்கு அன் புலனுனதுச் சிதரிப்போகும் வேரையெடுத்துக்கொண்டு மயானத்தினி டஞ்சென்று சுட்டுப்போடுவாயாகில் வெகுக்கொடுமையானது நேரும் உன்னுடைய குலமானதுக் கடதேரமாட்டாது தேள்கொட்டியதுபோல் விஷமானது யேறும் ஒருவராலும் திருப்பப்போகாது திருப்பும் வகைக் கேளும் (எ-று.) (8)

பீடை நிவர்த்தி.

494. திருப்புவது நீயல்லால் வோரொருவர் இல்லை
செகத்திலே முத்தர்களும் திருப்புவதுஅறிது
கருப்புவது பிடிங்கினவேர் வித்துவிறைவிட்டு
காலை சந்தியிருநேரங் கண்டு அரசோது
முறிப்பதுவும் நடமூலம் ஊக்கமூலம்
உத்தமனே மரணவேர் பிடுங்கொண்ணுது
அறிப்பதும் ஊண் அரசுவேர் பிடுங்கொண்ணுது
அப்பனே உன்னைவெல்ல தரிதாகும்பாரே.

(இ-ள்.) திருப்புவதற்கு நீயல்லாமல் வேறொருவராலும் ஆகாது செகத்தின்கண் முத்தர்களானபேராகினும் திருப்புவது அரிதாகும் பிடுங்கின வேறின்வித்தும் விதையும்விட்டுக் காலைமாலை இருவேளையும் கண்டு அரசாக ஓதவேண்டும் நடைமூலம் உறக்கமூலம் உள்ளவேறும் மரணகாலத்தின் வேறும் பிடுங்கவொண்ணுது ஊண் அரசுவேறும் பிடுங் கவொண்ணுது உன்னைவெல்ல அரிதாகும்பாரும் (எ-று.) (9)

தன்னை வெல்லக்கூடாதென்பது.

495. பாரடா ஆகிருஷ்ணம் வசியம்ரெண்டும்
பண்பானஅரசிலே யெடுத்துஒது
தேரடாமோகனமும் தம்பனமும்ரெண்டும்
திடமானஊணதிலே ஒதிப்பாரு
வாரடாவேஷணமும் உட்சாடணமும்ரெண்டும்
மக்களேநடையெழுத்தைம் பிடித்துமாறே
கூரடாபேதனத்தை எரக்கத்தில்மாறி
குடிகெடுத்தமாரணத்தை சாவெழித்தாமாறே.

(இ-ள்.) ஆக்கிருஷ்ணமும் வசியமும் இவை இரெண்டும் அரசபட்சி யில்யெடுத்து வோதவேண்டும் மோகனம் தம்பனம் இவைரெண்டும்

ஊண்பட்சியில் ஓதவேண்டும் வித்துவேஷணமும் உச்சாடன மிவை ரெண்டும் நடைப்பட்சியின் யெழுத்தைப்பிடித்து மாறவேண்டும் பேதனத்தை உறக்கத்தில் மாறியும் மாரணத்தைச் சாவெழுத்தினல் மாரவேண்டுமென்பர் (எ-று.) (10)

இதுவுமது.

496. மாறிவிடும்நால்தொழிலும் வகையாய்ச்செய்து
மக்களேவேரைவைக்குந் தலைமையதுகண்டு
கோறிவிடும்போதடைக்கும் அட்சரத்தைஓதி
கொண்டுபோஇவனைவெல்ல திவ்வுலகில்இல்லை
வாறிவிடும்அஷ்டகன்மம் மனதுறுதிகொண்டு
மக்களேபிரர்உயிரை வதைசெய்யாதே
நீறிவிடும்தன்னுயிர்போல் மன்னுயிறைஎண்ணி
நிஜமென்றஉணராது நிமிஷம்அதுபாரே.

(இ-ள்.) மாரிவிடுவாய் நான்குத்தொழிலையும் வகையாகச்செய்து வேரினைவைக்குந் தலைமையானதைக்கண்டும் நினைக்கும்போது அடைக்கும் அக்ஷரத்தை ஓதியும் விடில் இவன்தன்னை வெல்வதற்கு இவ்வுலகின்கண் யாவருமில்லையாம் அஷ்டகன்மத்தை மனதுரிதியாகக்கொண்டும் பிறர்களுடைய உயிரை வதையானதுச்செய்ய நினைக்கவேண்டாம் தன்னுயிர்போல் மன்னுயிரையும் யெண்ணி நிமிஷமானது உரைமாட்டாது பாரும் (எ-று.) (11)

அமரபட்சிகளின் பச்சிலை.

497. பாரேநீஅமரத்தில் கொடுமைநினையாதே
பழிகாரபச்சிலையை சொல்லலொண்ணுது
பாரேநீமயிலுக்குத் தவளையாகும்
மருளாதகோழிக்கு கும்பமேனி
வாரேநீவல்லூற்கு நாய்கடுகுஆகும்
வந்ததொரு ஆந்தைக்கு அரைக்கீரையப்பா
காரேகேள்வலியனுக்கு அவிரிஅதுசேரும்
கணமானபச்சிலையை வெளிவிடாதே.

(இ-ள்.) அமரபட்சத்தில் கொடுமையானது நினைக்கவேண்டாம் பழியானதுச் செய்யும்படியானப் பச்சிலையைச்சொல்லப்படாது ஆகினும் மயிலுக்குத் தவளையாகும் கோழிக்குப்பமேனியாகும் வல்லூருக்கு நாய்க்கடுகாகும் ஆந்தைக்கு அரைக்கீரையாகும் காகத்திற்கு அவிரிவேருகும் ஆகினும் பச்சிலையை வெளியிடவேண்டாம் (எ-று.) (12)

வேர்பிடுங்குவதில் உண்டாகும்பலன்.

498. வெளிவிட்டால்நடைமூலம் பிடிங்கினுக்கால்
வெற்றியென்றதம்பனமும் மோகனமுஞ்செய்யும்
தெளிவுடனே அரசினுட வேர்பிடிங்கிக்கொண்டால்
ஜெகத்திலேமெச்சும் ஆகிருஷ்ணவசியம்ஆடும்
பழியுடனேஊண்வேரை பிடிங்கினுக்கால்
பழிக்குமடாவேஷந்தான் கண்கொள்ளாது
வளிவுடனேஉறக்கம்வேர் பிடுங்கும்போது
கனமானஉச்சாடனமும் பேதனம்செய்யுமே.

(இ-ள்.) வெளியிட்ட மூலங்களைப் பிடிங்கில் நடைப்பட்சியின் மூலமாகில் தம்பனமும் மோகனஞ்செய்யும் அரசுபட்சியின்வேர் பிடிங்கிக் கொள்ளில் ஆக்கிருஷ்ணமும் வசியமுஞ்செய்யும் ஊண்பட்சியின்வேரைப் பிடிங்கிடில் வித்வேஷணமாகும் உறக்கபட்சியின்வேர் பிடிங்கில் உச்சாடனமும் பேதனமுஞ்செய்யும் (எ-று.) (13)

இதுவுமது.

499. செய்யுமடாமரணவேர் பிடுங்கும்போது
திரும்பாது எதிரிவுடல் சிதறிப்போகும்
ஐயமடா எவ்வகையும் நினைக்கும்போது
அவ்வெழுத்தை நீபிடித்து மாறிக்கொள்ளு
பொய்யடா முன்சொன்ன படிதப்பாது
பொல்லாத அமரத்தில் தொழில் செய்யாதே
வையகத்தில் பாவியென்று பேரெடுத்தமக்கள்
மநோன்மணியாள் கிருபையில்லை வரிசைபாரே.

(இ-ள்.) மரணப்பட்சியின் வேர்பிடிங்கிடில் எதிரியின் உடலானது சிதரிப்போகும் எவ்வகையானக் காரியமும் நினைக்கும்போதும் அவ்வெழுத்தைப்பிடித்து மாறிக்கொள்ளல்வேண்டும் முன்சொன்னப்படியானது தப்பாது பொல்லாத அமரபட்சத்தின் தொழிலானதுச் செய்யவேண்டாம் வையகத்திற் பாவியென்றும் பெயரெடுப்போர்களுக்கு மனோன்மணியாள் கிருபையானதுப் பலிதமாகாது வரிசையாகப்பாரும் (எ-று.)

தன்னைத் தானறிதல்.

500. பாரே நீ உன்னுடைய ஆத்துமாவை
பகர்ந்தறிவதற்கல்லால் சொன்னேன் சூட்சம்
பாரேநீ எந்தெந்த வேலைகண்டு
பருகிடுவாய் அட்சரத்தை பிரித்துமாறு

தேரேநீ உலகத்தில் பழிசெய்யாதே
செடமிருந்தால் அதிசயங்கள் காணலாகும்
வேரேகேள் கொலைகள் வரும்பாவத்துக்கும்
விரும்பாதேரிஷியினுட சாபந்தானே.

(இ-ள்.) உன்னுடைய ஆத்மாவை பகர்ந்தரியும்படியாகச் சொன்னேம் சூட்சம் நீ அந்தந்த வேளையானதுக்கண்டு அக்ஷரத்தை விரித்து மாறவேண்டும் உலகின்கண் பழியானதுச்செய்யவேண்டாம் சடலமானது இருக்குமாகில் அதிசயங்கள் வேணதுங் காணலாகும் கொலைகள் வரும்படியானப் பாபத்திற்கு விரும்பவேண்டாம் ரிஷிகளினுடைய சாபமானது சம்பவிக்கும். (எ-று.) (15)

பக்ஷிநிலை அறிதல்.

501. சாபமென்றால் மனோன்மணியாள் கிருபைவேணும்
சண்டாள அட்சரத்தை மாறவேணும்
கோபமென்ற கொடுமையைநீ அகற்றவேணும்
குறித்தவன் தன்பட்சியுடக் கருவும்வேணும்
பாவை என்ற கன்னிநூல் காணவேணும்
பழிகாரநேரம் அங்கே பதியவேணும்
விவேகமென்ற மனதறிவால் கைபாகங்கள்
விரும்பினதே செய்பாகம் பலிக்கும்பாரே.

(இ-ள்.) மனோன்மணியாளுடையக் கிருபையானதுவேண்டும் அக்ஷரங்களையும் மாறவேண்டும் கோபத்தை அகற்றிவிடவேண்டும் குறித்தவனுடையப்பட்சியின் கருவானதுவேண்டும் கன்னிநூலதனைக் காணவேண்டும் நேரமானதுப்பதியவேணும் புத்தியென்னும் அறிவினால் கைபாகமானதும் செய்பாகமானதும் கண்டுசெய்யப் பலிக்கும்பாரென்றனர்.

பழி நிவர்த்திசெய்து கொள்ளல்.

502. பலிக்குமடா தேவியுட பூசைசெய்தால்
பாவங்கள் செய்தாலும் பழி நிவர்த்திசெய்து
கெலிக்குமடா உயிர்வதை செய்ய நினையாதே
கேசரியாள் மனம்நோக நடத்தை நடவாதே
சொலிக்குமடா உன்னுவிரியாள்கிருபை
சொரூபநிலை அறிவித்து பரகெதியைச் சேர்ப்பாள்
வலிக்குமடா உன்மனது நோக நடந்தோர்க்கு
மயக்கம் இல்லை பீடைவரும் மனதறிந்துபாரே.

(இ-ள்.) பலிதமாவதற்கு தேவியினுடையப் பூசையானதுச் செய்ய வேண்டும் பாதகங்கள் செய்தப்போதினும் அப்பழியானது நிவர்த்தியாகும் ஆகினும் நீ உயிர்வதையானதுச்செய்ய நினைக்கவேண்டாம் கேசரியாளின் மனமானது நோகவொட்டாமல் நடக்கவேண்டும் இவ்விதமாக யிருப்பாயாகில் சொலிக்கும் உன்னுடைய நாவில் ஈஸ்வரியாளுடைய கிருபையும் தன்னுடையச் சொரூபநிலையை அறிவித்து பரகெதியைச் சேர்ப்பாள் உன்னுடைய மனமானது நோக நடப்போர்க்கு பீடையானது தப்பாமல் வந்தணுகும் பார்ப்பாயாகவும் (எ-று.) (17)

இதுவுமது.

503. பாரப்பா உலகத்தில் உள்ளபேர்கள்
பணிந்திடுவார் தனங்கோடி ஈந்தாலுந்தான்
சேரப்பா பக்ஷியுட சுருக்கஞ் சொல்வேன்
திண்மை என்ற தீவினைக்கு உள் ஆகாதே
நேரப்பா உன்னுடைய மனதுதெளிவாக
நின்ற நிலைகாணவல்லவோ சொன்னேன் சூக்ஷம்
ஆரப்பாதன் அறிவைத்தான் அடக்கிக்கொண்டு
மகத்தான சிவயோகந்திருந்திடாயே.

(இ-ள்.) பார்க்க உலகத்தில் உள்ளபேர்கள் தனமானதுக் கோடி கோடியாகயீந்தும் பணிவார்கள் அன்றியும் பட்சியினுடையச் சுருக்கமானதுச்சொல்வேன் கேட்கும் தீவினைக்குள்ளாகாமற்படிக்கு மிருப்பாய் உன்னுடைய மனமானதுத் தெளிவாகவும் நிறையாக நிலையானதுக் காணச்சொன்னேன் சூட்சமாகவும் அதைக்கண்டும் தன்னுடைய அறிவை தான் அடக்கிக்கொண்டு சிவயோகத்தி லிருப்பாய் (எ-று.) (18)

புத்தி கூறுதல்.

504. இருந்திடவே காயசுத்தி செய்துக்கொண்டு
என்மகனே கற்பகம் அது உண்டுசேறு
அறிந்திடவே கூடழியா வாழ்க்கைதேட
அப்பனே மனோன்மணியாள் கிருபைசெய்வாள்
தெரிந்திடவே சித்தர்யெல்லாம் உன்னிடத்தில்வந்து
தேவையென்ற காரியங்கள் சொல்லிவைப்பார்பாரு
சொரிந்திடவே அஷ்டலக்ஷிமியும் வந்து
சொரூபானு சொரூபநிலை சொல்வாள்பாரே.

(இ-ள்.) இருக்கக் காயசித்தியானதுச் செய்துக்கொண்டும் கர்ப்பமானது உண்டுத்தேருவாய் தேகமானது அழியாத வாழ்க்கைத்தேட மனோன்மணியாள் கிருபையானதுச செய்குவாள் சித்தர்கள் முதலானோ

ரும் உன்னிடத்தில் வந்து உனக்குத் தேவையாகியக் காரியங்களைச் சொல்லிவைப்பார்கள் அஷ்டலட்சுமிகளும் வந்து சொரூபானு சொரூப நிலையைச்சொல்வர் (எ-று.) (19)

ஊண்வேளையில் வேர்பிடுங்கும் பலன்.

505. பாரடா ஊண்வேரு பிடுங்கினுக்கால்
படருகிற காரியங்கள் ஆகும்பாரு
ஆரடா சத்துருவு மித்துருவும் ஆவான்
அப்பனேசோபன காரியங்கள் நன்மை
தூரடா பீடையது விலகும்பாரு
தப்பாது பொருள்வரத்து தனஞ்செயனும் ஆவாய்
ஓரடாவேர்பிடுங்கி குலிசம் அதுஆட
ஒகோ இதின்பெருமை உறைக்கொண்ணாதே.

(இ-ள்.) ஊண்பட்சியின் வேர் பிடிங்கிடில் செய்யும்படியானக் காரியங்கள்யாவும் சித்தியாகும் பகையாகயிருந்தவர் உறவாடிவருவார்கள் சோபனக்காரியங்கள்செய்ய நன்மையாகும் பீடையானது விலகும் பொருள்வருத்தாகும் தனஞ்செயனாகுவாய் வேரைப்பிடிங்கிக் குலிசமானது ஆட அதினுடையப் பெருமையை உறைக்க ஒண்ணாது (எ-று.) (20)

நடைவேளையில் வேர்பிடுங்கும் பலன்.

506. ஒண்ணாதுநடைவேர் பிடுங்கினுக்கால்
உத்தமனே முடைப்படுத்தி வருத்தங்கொள்ளும்
எண்ணாது எண்ணமனம் இடைஞ்சல் கொள்ளும்
எவ்வளவேனும் சுகமில்லை பிரமலபிமட்டும்
தன்னாலே விதிஅமைப்பு உள்ளமட்டும்
தான் அனுபவிக்கவுமே அல்லாதில்லை
விண்ணான சித்தர்களும் திரும்பும்வகையறியார்
மேதினியில் உள்ளவரோ திரும்புவதுபாரே.

(இ-ள்.) நடைப்பட்சியின் வேர்பிடிங்கிடில் வருத்தமானது உண்டாக்கும் எண்ணாத எண்ணங்கள் எண்ணி மனதிற்கு இடஞ்சலானதுத் தருகும் கொஞ்சமேனுஞ் சுகமான்துயிராது பிரமதேவன்லபித்த வயது வரைக்கும் ஆதலால் தன்னுடையவினையை தானே யனுபவித்துத் தீரவேண்டும் சித்தர்முதலானவர்களும் இதைத் திருப்புதற்கு வகையானது அறியமாட்டார்கள் பூமியின்மீதுள்ளவர் திருப்புவாரோ யென்பர்(எ-று.)

அரசுவேளையில் வேர்பிடுங்கும் பலன்.

507. பாரே நீஅரசனிட வேர்பிடுங்கிவைக்க
பசுமை உள்ளதகடதனில் பதிந்துகொண்டால்

சாரேநீ உன்சிரசில் கட்டி இடும்போது
சகலமுமே வசியமடா உன்னைவெல்லதாகும்
கோரேநீ இவ்வுலகில் சத்துருவுமில்லை
கொங்கணவர் இவ்வேரை மெச்சிக்கொண்டார்
காரேநீ எரும்புகடை யானை தலையெல்லாம்
கைவசமே ஆகுமென்று முனிவர் சொன்னார்பாரே.

(இ-ள்.) அரசுபட்சியின் வேர்ப்பிடிங்கி அதை பசுமையாகியப் பொன் தகட்டில் வைத்துக் குலிசமாடி கட்டிக்கொண்டாயாகில் சகலமும் வசியமாகும் உன்னையாவருலும் வெல்லப்போகாது உனக்குச் சத்துருவானவருமில்லை இதைக்கொங்கணவர் இவ்வேரை மெச்சிக்கொண்டனர் ஆதலால் எரும்புகடை யானை முதலானதும் உன்கைவசமாகுமென்று முனிவரானவர் சொல்லினர் பாரும் (எ-று.) (22)

தூக்கவேளையில் வேர் பிடுங்கும் பலன்.

508. பாரப்பா உலகத்தில் வேர்பிடுங்கிக்கொண்டால்
பகையான யெதிரியுமே வெல்லவும் இல்லை
நேரப்பா எதிர்த்தானை ஜெயம் செய்யலாகும்
நேமித்தகாரியங்கள் நிமிஷத்தில் வெல்லும்
கூரப்பா இவ்வேளை கொடுமை நினையாதே
கூற்றுவந்தான் வேறில்லை கொலைகள்வரும் தோஷம்
சாரப்பாமனுவுகள்மேல் தயவுசெய்து
தன்மையுள்ள தொழில்செய்ய வேளையதுபாரே.

(இ-ள்.) உறக்கமாகிய பட்சியின்வேர் பிடிங்கிக் குலிசமாடிவைத்துக் கொள்வாயாகில் பகையுள்ள எதிரியை வெல்லலாகாது எதிர்த்தோர்களைச் செயஞ்செய்யலாகும் நிளைத்தகாரியம் நிமிஷத்தில் வெற்றியாகும் இந்தவேளையில் கொடுமையானது நினைக்கவேண்டாம் யெமன் வேறில்லை கொலைகள்வரும் தோஷமானதுநேரும் ஆதலால் மனுஷர்கள் தயவானது கூர்ந்தும் தன்மையாகியத்தொழில் செய்யும்படியான வேளைப்பார்ப்பாயாகவும் (எ-று.) (23)

மரணவேளையில் வேர்பிடுங்கும் பலன்.

509. வேளையென்னமரணவேர் பிடுங்கவென்றால்
வெல்லுவது எதிரியுமோ வெல்லுவதும்யில்லை
தாளையென்ற சத்துருவும் இல்லையில்லை
சண்டாளநேரமது செயிப்பதுவும்யில்லை
பாளையென்றபொருள் உயிர்ச்சேதமாகும்
பண்பானதுயரமது வெகு கொடுமையாகும்

காலையென்றஎருதின்மேல் ஏரும்மீசன்
கடாக்ஷம்வைத்துபார்த்தாலும் திரும்பஅரிதாம்பாரே

(இ-ள்.) மரணப்பட்சியின்வேர் பிடிங்கிடில் வெல்வதற்கு எதிரியானவர் ஒருவருமில்லை சத்துருக்களுமில்லையாம் இந்தநேரமானது செயிப்பதுவுமில்லை உறவினரும் பொருளும் உயிரும் சேதனமாகும் பழைய நாளாகவிருந்தத் துயரமானது கொடுமைசெய்யும் காலையென்றுசொல்லும் எருதின்மேல்யேறும் சிவபிரான் கடாட்சம் வைக்கினும் திரும்புவது அரிதாகுமென்பர் (எ-று.) (24)

பட்சிகளின் வலு அறிதல்.

510. அறிதாகஉலகத்தில் சத்துருவும்இல்லை
அப்பனேபஞ்சபக்ஷி அறிந்தவர்கள்முன்னே
குறியானசிங்கத்தின் முன்னேநின்று
கூத்தாடுமோநரியும் குலாவுமோசொல்லும்
தெரியானஅஷ்டகன்ம சாஸ்திரங்களெல்லாம்
வெறுபாண்டம்பக்ஷியுட சாஸ்திரந்தானப்பா
சரியானபடியென்று பதினெண்பேரும்
சகலருமேமெச்சினரே பக்ஷியதுபாரே.

(இ-ள்.) அரிதாகிய உலகத்தின்கண் சத்துருவானவர்யில்லை பஞ்சபட்சியின் சாஸ்திரம் அறிந்தவர்களின் முன்னும் சிங்கத்தின்முன் நரியானதுநின்றுக் கலங்குமேயன்றிக் குலாவிவிளையாடுமோ சொல்வாய் அஷ்டகன்ம சாஸ்திரங்கள் யாவும் வெறுப்பாண்டமாகும் பக்ஷியுடையசாஸ்திரம் இதுசரியானதென்று பதினெண்பேர்களும் மற்றுமுள்ளோர்களும் பக்ஷியை மெச்சினர்கள் (எ-று.) (25)

இதுவுமது.

511. பட்சியென்ற பஞ்சபட்சி வலுவைஎன்னல்
பகர்வதற்குஎன்னாலே முடியாதப்பா
கொச்சிஎன்றசத்துருநாள் வலுவோயில்லை
கொடுமையுள்ளநாள் அதிலே பக்ஷிபகையானால்
மெச்சிஎன்றசத்துருவை யழித்துப்போடு
மேலானபட்சியெல்லாங் கூடிக்கொண்டு
அச்சிஎன்றமித்துருவும் இருந்தாலென்ன
அப்பனேபட்சிவலு இல்லைதானே.

(இ-ள்.) பட்சியென்னும் பஞ்சபட்சியின் வலுவை சொல்வதற்கு என்னால் முடியாது அதில் சத்துருநாளாகில் வலுவானது இல்லாமற் போகும் இக்கொடுமையுள்ளநாட்களில் பட்சி பகையாகுமாகில் சத்துரு

பட்சிதனை அழித்துவிடும் மேலாகிய பட்சிகள்யாவும் கூடிக்கொண்டு மித்துருவாகயிருக்கினும் யென்னபட்சியின் வலுவானது இல்லையா மென்பர் (எ-று.) (26)

படுபட்சியின்வலுவு அறிதல்.

512. தானென்றபக்ஷி நாளையிலேஅப்பா
தனக்குவலு அற்றுவிடும் மித்துருவுமில்லை
தேனென்றசெய்காரியம் தவக்கமாகும்
ஜெயமாகமாட்டாது ஒருநாளுந்தான்
கோனென்றபட்சியது கொடும்பாம்பில்சூரியன்
கொதித்தமனம்புண்ணுகி வாடுவதுபோலே
நானென்றஆணுவங்கள் எதுவில்லாமல்
நடுங்குவார்சத்துருநாள் கொடுமையாமே.

(இ-ள்.) மேற்கூறிய பட்சியின்நாளையில் தனக்குவலுவானது அற்று விடும் மித்துருவுமிராது ஆனால் காரியங்கள்யாவுந் தவக்கலாகும் செய மானது ஒருக்காலும் ஆகமாட்டாது பட்சியானது கொடுமையாகிய பாம் பின்வாயில் அகப்பட்ட சூரியனைப்போல் மனமானதுகொதித்து வாடு வதுபோலாகும் ஆணுவமானது இல்லாமலும் சத்துருநாளில் கொடுமை யாகும் (எ-று.) (27)

இதுவுமது.

513. கொடுமையுடநாளையிலே பட்சியுடவலுவை
குறிப்பதுவும்வெகுமளவு வெகு எளிதுபாரு
அடிமையென்றுவந்தவர்க்கு இந்தநாளில்
அநியாயக்கொடுமைகளை அநுசரிக்கவேண்டாம்
கெடுமதியும்கண்ணுக்குத் தோன்றுதுபாரு
கேடுவரும்போது மதிகெட்டுவருமுன்னே
கடுகளவும்பாவமது மனதாரச்செய்தால்
கண்கெட்டுகுலநாசம் அற்றுவிடும்பாரே.

(இ-ள்.) கொடுமையாகியநாளில் பட்சிகளுடைய வலுவை குறிப் பது வெகுசுளுவும் யெளிதாகும் அருமையென்று வந்தபேர்க்கு இந்த நாட்களில் அனியாயமாகியக் கொடுமைகளைச்செய்ய நினைக்கவேண்டாம் கெடுமதியானதுவுங் கண்ணுக்குத்தோற்றுமலிருக்கும் கேடானது வரும் போது மதியானதுகெட்டுவரும் முன்னுதாகவே யென்றதை யனுசரித் துக் கொள்ளவேணும் பாவமானதை மனமறியச்செய்தாயாகில் கண்ணா னதுகெட்டும் குலமானது நாசமாகவும் அற்றுவிடும் (எ-று.) (28)

சீஷனது சன்மார்க்கம் அறிதல்.

514. அற்றுவிடும்பட்சிவித்தை சொன்னலும்தோஷம்
அப்பனேமனதறிந்து சொல்லவேணும்
கற்றுவிடுபனிரண்டு வருஷம்காத்தால்
கைபாகம்செய்முறைகள் கருச்சொல்லாதே
கொத்திவிடும்அவனுடைய குணத்தைக்கண்டு
கூறுவாய்ஜாலத்தில் சொல்லிளவுநீ
பற்றிவிடும்மனதைத்தான் அறியாவிட்டால்
பழிகாரயித்தொழிலைச் சொல்லொண்ணதே.

(இ-ள்.) பட்சிவித்தையைச்சொல்லினும் தோஷமானது சம்பவிக்கும் ஆதலால் மனதையறிந்துச் சொல்லவேண்டும் பனிரெண்டுவருஷம் தொண்டுசெய்து காத்திருப்பானுகிலும் கைப்பாகமும் செய்ப்பாகமும் கருவுஞ் சொல்லவேண்டாம் சீஷனுடைய குணத்தைக்கண்டும் ஜாலமாகச்சொல்லி நீயும் புகழ்வாய் மனதையறியாவிட்டால் பழியாகிய இத்தொழிலை சொல்லவேண்டாம் யென்றனர் (எ-று.) (29)

இதுவுமது.

515. ஒண்ணதபட்சிவித்தை பொல்லாதப்பா
உத்தமனே அவன் செய்யுங் குணத்தைக்கண்டு
எண்ணதெதொழில்செய்தால் பாவமில்லை
என்மகனே அவனுடைய குணத்தைப்பாரு
கண்ணதொழிலையங்கே சொல்லிடாதே
காட்டாதேகருக்குருவும் கருமிக்கப்பா
விண்ணதேஇடிவிழுந்து தலைதெறித்துப்போகும்
மேதினியில்அவன் குணத்தைகண்டித்தேனே.

(இ-ள்.) பட்சிவித்தையானதுப் பொல்லாதாகும் ஆதலால் அவன் செய்யும்படியானக் குணத்தைக்கண்டும் எண்ணதத்தொழிலைச்செய்யில் தோஷமானது இல்லை அவனுடைய குணத்தைக்கண்டும் சோதித்தப் போதிலும் உளவானதைச் சொல்லவேண்டாம் கருவைக் கருமிகளுக்குச் சொல்லொண்ணது அப்படிக்குச்சொல்லில் இடியானது விழுந்தாப்போல் அலைந்து யெறிந்துப்போகும் பூமியின்மீது அவனுடையகுணத்தைக் கண்டித்துச் சொன்னேன் (எ-று.) (30)

இதுவுமது.

516. தேனென்றபஞ்சபட்சி முறையைத்தானும்
செய்யாதேஉலகிலுள்ள மாந்தர்க்கையா

கானென்றகசடுள்ள மனிதர்க்கையா
காட்டாதேஉன்னுடைய கபாலம்போகும்
மானென்றமனதறிந்து சொல்லவேணும்
மகத்தானபாவங்கள் வந்துசூழும்
ஆனென்றஆணுவத்தை அடக்கினோர்க்கு
அதினுடையசூட்சத்தை அறிவிப்பாயே.

(இ-ள்.) பஞ்சபட்சியின் முறையைத்தானும் செய்யப்படாது உலகத்திலுள்ள மனிதர்களின்மீதும் தர்க்குணமுடைய மனிதர்களுக்குக் காட்டப்படாது அப்படிக்குக் காட்டுவாயாகில் உன்னுடைய கபாலமானது போய்விடும் மனமானது அறிந்துச் சொல்லவேண்டும் அல்லாவிடில் மகத்தாகிய பாவமானதுவந்து சூழ்ந்துக்கொள்ளும் ஆணுவமானதை யடைக்கினபேர்கட்கும் அதின் சூட்சத்தை அறியும்படியாகச் சொல்லுவாய் (எ-று.) (31)

எதிரியைமடக்கும் வகை

517. அறிவிப்பாய்கன்னியுட நூல்சொல்லாதே
அப்பனேகருவையங்கே வெளிவிடாதே
நிருவித்தசக்கரத்தை வெளிவிடாதே
நின்றாடும்அட்சரத்தை நினைவில்நினையாதே
மறுவித்தமூலிகையின் வகைக்காட்டாதே
வந்துநின்றசத்துரு மித்துருசொல்லாதே
கருவித்தநேரமது காட்டொண்ணாது
காட்டினால்பிழைஆவான் கண்டுபாரே.

(இ-ள்.) அப்படிக்கு அறிவித்தபோதினும் கன்னியினுடைய நூலைமாத்திரஞ் சொல்லவேண்டாம் கருவானதையும் வெளியிடாதே சக்கரத்தை நினைவில் நினைக்கவேண்டாம் நின்று ஆடும்படியான அக்ஷரத்தையும் மனதிற் கொள்ளாதிருக்கவும் மூலிகையை யறியும்படியான வழிக் காட்டவேண்டாம் சத்துருமித்துருஞ் சொல்லாதிருக்கவும் நேரமானதைக் காட்டவொண்ணாது அப்படிக்காட்டில் பிழை ஆவான் (எ-று.) ()

இதுவுமது.

518. பாரடாமூலிகைக்கு சாபம்நீங்கி
பன்பானகன்னிநூல் காப்புகட்டி
வாரடாசக்கரத்தை அதிலேவைத்து
வளமானஅட்சரத்தை மாறிப்போடு

சேரடாகருவைஅங்கே அட்சரத்தில்வைத்தால்
செலுத்தும்பார்எதிரியுயிர் தீரும்பாரு
ஆரடா அறிவார்கள் சூட்சந்தன்னை
அறிந்தவன்தான்சித்தனென்றே பேருமாச்சே.

(இ-ள்.) மூலிகையானதற்கு சாபத்தைநீக்கி கன்னிநூல்கொண்டு காப்புகட்டியும் சக்கரத்தை அதில்வைத்தும் அக்ஷரத்தைப்பதிந்து கருவைத்தொட்டும் அக்ஷரத்தில் வைத்தாயாகில் எதிரியினுடைய உயிரை வாங்கும் இதை யாரறிவார்கள் சூட்சமாகிய இதனை அறிந்தவன் சித்தனென்றும் பெயராகும் (எ-று.) (33)

சித்தன் பெருமை.

519. சித்தனென்றால்மனதடக்க மிருக்கவேணும்
ஜெகஜாலகூத்தறிந்து தெளியவேணும்
பத்தனென்றால்வாசிநிலை காணவேணும்
பழியானஇத்தொழிலைச் செய்வாயானால்
கர்த்தனெனும்சிவனுடைய் சாபம்நின்று
கருவருக்கும் இருபத்தோர் தலைமுறைக்கு
வர்த்தனென்றால்தன்னுயிர்போல்மன்னுயிரைப்பார்த்து
வழுவாமல்குருபாதத்தை மனதில்வையே.

(இ-ள்.) சித்தனென்றும் பெயர் படைக்கில் மனதடக்கமானது இருக்கவேண்டும் ஜெகஜாலக்கூத்தை அறிந்தும் தெளியவேண்டும்பத்தனென்னில் வாசிநிலையைக்காணவேணும் அப்படிக்கில்லாமல் பழியாகிய இத்தொழிலை செய்வாயாகில் சிவபிரானுடைய சாபமானது நின்று கருவானதை அழிக்கும் அது இருபத்தோர் தலைமுறைவரைக்கும் ஆதலால் தன்னுயிர்போல் மன்னுயிர்களையும் பார்த்ததும் வழுவாமற்படிக்கு குருவினுடைய பாதத்தை மனதில் வைப்பாய் (எ-று.) (34)

தேவிபூசை.

520. வையப்பாசத்துருநாள் அறிந்துக்கொண்டு
வகையாகத்தேவியுட பூசைசெய்து
நொய்யப்பாசுடலைசாம்பல் மேலேபூசி
ருத்திரன்போல்நிர்வாண ரூபங்கொண்டு
கொய்யப்பாகருவையிங்கே திலதம்போட்டு
குறித்தவன்தன்உடலிலே அட்சரத்தைவைத்து
செய்யப்பாகோடிவஸ்திரம் உடுத்திக்கொண்டு
திடப்படுத்துஉன்மனது தெளிவும்ஆச்சே.

(இ-ள்.) சத்துருபட்சியின் நாளை அறிந்துக்கொண்டும் தேவியினுடைய பூசையானதுச்செய்தும் சுடுகாட்டின்சாம்பலை மேல்பூசிக்கொண்டும் ருத்திரனைப்போல் நிர்வாணமாகும் ரூபமானதுக்கொண்டும் கருவையிங்குத் திலர்தம்போட்டு குறித்ததனுடைய உடலில் அக்ஷரத்தைவைத்தும் கோடி வஸ்திரமானதுவும் உடுத்திக்கொண்டு திடப்படுத்த உன்மனமானது திடமாகுந் தெளிவுமுண்டாகுமென்றனர் (எ-று.) (35)

ருத்திரர் கோபம்.

521. ஆச்சப்பாஎதிரியுட பேரைச்சொல்லி
அப்பனேமூலிகைமுன் இருந்துக்கொண்டு
வாச்சப்பாவஸ்துவுடனே சுத்திவைத்து
வர்க்கவகைதூபங்கள் வளமாய்ச்செய்து
பாச்சப்பாஓர்மனதாய் இருந்துக்கொண்டு
பணிந்துதான்ருத்திரனை வணக்கஞ்செய்தால்
போச்சப்பாஎதிரியுட பேரும்போச்சி
பொல்லாதருத்திரர் கோபம்செலுத்துவாரே.

(இ-ள்.) எதிரியினுடைய பெயரைச்சொல்லியும் மூலிகைக்குமுன்னாக இருந்துக்கொண்டு வஸ்துவுடன் சுத்தியானதும்வைத்து பழவர்க்கங்கள்யாவும் பறப்பியும் தூபங்கொடுத்து ஓர்மனதாக இருந்துகொண்டுப் பணிந்து ருத்திரனைப் பூசையானதுச்செய்யில் எனக்கு எதிரியாக இருந்தவனுடையப்பெயரானது அற்றுப்போகும் பொல்லாத ருத்திரர் கோபமானதைச் செலுத்துவானென்பர் (எ-று.) (36)

சோதித்தறிதல்.

522. வாருமென்றுஉலகத்தில் உள்ளபேரை
மனஞ்சோதிநெடுநாள்மனம் அறியாமல்செய்தால்
பாருமென்றுபாவத்துக்குள் ளாகவேணும்
பழிகாரர்இவர்கள் செய்திடுவார்தோஷம்
ஆறென்றஅரவவிஷம் இதற்கொவ்வாது
ஆடலாம்அஷ்டகன்மம் அறுபத்தினாலும்
ஊறென்றபட்சியுட தொழிலைச்செய்தால்
ஒருவரால்திரும்புவகை அறிவார்பாரே.

(இ-ள்.) வாருமென்று அழைத்து உலகத்திலுள்ள பெயர்களை மனதை நெடுநாளாகச் சோதிக்கவேண்டும் அப்படிச் சோதிக்காமலும் மனமறியாமலும் செய்யில் பாபத்திற்கு உள்ளாகவேண்டும் பழிக்காரராகிய இவர்கள் செய்வார்கள் தோஷத்தையும் பாம்பினுடைய விஷமானதும்

இதற்கிணையாகமாட்டாது ஆதலால் அஷ்டகன்மம் அறுபத்திநாலும் ஆடலாகும் பட்சியினுடைய தொழிலைச்செய்தால் யாவராலும் திருப்புவது அறிதாகும் (எ-று.) (37)

இதுவுமது.

523. அறியாமல்சித்தரெல்லாம் கூடிக்கொண்டு
அடக்கினார்குகைதனிலே அதைநான்கண்டு
நெறியானகலியோர்க்கு வேணும்என்று
நின்றனடாவெகுகாலம் தவசில்நானும்
குறியாதுபட்சியுட சாஸ்திரத்தைவாங்கி
கொடுத்துவிட்டேன்கொங்கணவர் கொட்டினார்பார்
பரியாசமென்றுசொல்லி நினைப்போர்க்கெல்லாம்
பலியாதுபட்சிவித்தை பண்புள்ளோர்க்கே.

(இ-ள்.) இதை அறியாமற்படிக்கு சித்தர்கள்யாவரும் கூடிக்கொண்டு குகைக்குள்ளும் அடங்கினார்கள் அதையான் கண்டு கலியுக மாந்தர்களுக்கு வேணுமென்று வெகுகாலமாகத் தவசில்நின்றும் பட்சியினுடைய சாஸ்திரத்தைவாங்கியும் கொடுத்தேன் அதைக் கொங்கணவர் கொட்டினார் ஆதலால் இதைப்பரியாசமாக நினைப்போர்களுக்கும் பலிதமானது ஆகாது பட்சிவித்தையினும் நன்மையோடு அனுசரிப்போர்களுக்குத் தடையன்றிப் பலிதமாகுமென்பர் (எ-று.) (38)

பலியாதவர் அடையும் குணம்.

524. பலியாதுமனஒருமை கொண்டேயாகில்
பலிக்குமடாக்ஷணத்தில் மதியில்லாவிட்டால்
குலியாதுவினை அறுத்தபெரியோர்தன்னை
குலமதிலேகுருவென்றும்பணியானுக்கும்
பலியாசைதன்னுயிர்போல் போற்றாதார்க்கும்
மன்னுயிறைதன்னுயிர்போல் வணங்காதார்க்கும்
கலியானகலியுகத்தில் கொடுமையுள்ள
கசடருக்குபலியாது கணமும்பாரே.

(இ-ள்.) மனதை ஒருமையாகக் கொண்டாயாகில் பலிதமாகும் ஒரு க்ஷணத்தில் புத்தியானது இல்லாவிட்டால் பலியாது அதற்கு வினையை அருத்தப்பெரியோர்கள் தன்னை குருவென்று எண்ணிப் பணியாதவர்கட்கும் தன்னுயிர்போல் மன்னுயிரைப்போற்றாதார்க்கும் மன்னுயிரைப் போல் வணங்காதவர்க்கும் கலியுகத்திலுள்ளக் கசடாகியக் கொடுமை செய்வோர்களுக்கும் பலிதமாகாது யென்பர் (எ-று.) (39)

பலிப்பவர்களின் பெருமை.

525. கண்டுபோர்பலிப்பதுவே ஆருக்கானல்
கபடமதுதான்நீக்கி ஓர்மனதுகொண்டு
வண்டுபோல்குருபதத்தைப் பணிந்தோர்க்கையா
மனதிலேஎள்ளளவேனும் கோபந்தள்ளி
தொண்டர்உலகத்தில் வணக்கஞ்செய்து
துற்புத்திபொருளாசை தள்ளினோர்க்கும்
சண்டாளன் என்றபேர் ஆகாதப்பா
தன்மையுள்ளபுருஷருக்கு பலிக்கும்பாரே.

(இ-ள்.) பலிப்பது யாருக்காகில் கபடமானது நீக்கி ஓர்மனதுக் கொண்டும் குருபதத்தைப் பணிந்தோர்க்கும் எள்ளளவேனும் கோபமில்லாதவர்களுக்கும் தொண்டர்கள்போல் உலகத்தில் வணக்கஞ்செய்வோர்களுக்கும் துர்ப்புத்தியும் பொருளாசையும் தள்ளினோர்கட்கும் சண்டாளரென்னும் பெயர்கெடுக்காதிருப்போர்க்கும் தன்மையுள்ளப் புருஷர்களுக்கும் பலிதமாகுமென்பர் (எ-று.) (40)

இதுவுமது.

526. பாரடாரோமரிஷி சொன்னவாக்கியம்
பழுதொருநாள் வாராதுபற்றிப்பாரு
தேரடாசாஸ்திரத்தின் உண்மைகண்டு
தெளிவாகசொன்னதல்லாமல்
ஆரடா அறிவார்கள் சூக்ஷந்தன்னை
அறிவதுதான் குருவாக்கால் அறியவேணும்
கோரடாவகையாகக் கொட்டினேன்பார்
கொடுத்துவிடில் சாஸ்திரத்தை அவர்குணத்தைகேளே

(இ-ள்.) உரோமரிஷியானவர் சொன்னவாக்கியம் பழுதாக ஒரு காலமும் வராது நம்பிப்பாரும் தேருவதற்கு சாஸ்திரத்தில் உண்மையைக்கண்டும் தெளிவாகச்சொல்பவரியில்லை இந்த சூட்சத்தை யாவர் அறியமாட்டார்கள் ஆனதால் குருவினுடைய வாக்கினால் அறியவேண்டும் கோரும்படியாக வகையாகக் கொட்டிவிட்டேன் கொடுத்துவிடில் சாஸ்திரமானதை அவனுடையக் குணத்தை கேட்பாயாகவுமென்றனர்.

மாரணம்.

527. கேள்டா எதிரியுமே நடந்தபின்பு
கீழ்நோக்கித்தானெடுத்து தேவிமுன்பு

வாளடா அட்சரந்தான் ஆயிரத்தெட்டோது
வளமாக அதை எடுத்து பானஞ்சென்று
நாளடாதினமானம் வேளைபார்த்து
நசியென்றதலைதெற்காய் நாரணிஓது
பாழடாபோகாது அவனுயிரும்போகும்
பரமனுடகிருபையினாற் பலிக்கும்பாரே.

(இ-ள்.) கேட்பாயாகவும் யெதிரியானவன் நடந்தபின்பும் கீழ் நோக்கி யெடுத்து தேவியின்முன்பும் அக்ஷரமானது ஆயிரத்தெட்டு ஓத வேண்டும் ஓதியபின் அதையெடுத்து மயானத்தினிடஞ்சென்று நாளும் மரணவேளையும் பார்த்து நசியென்ற தலையானது தெற்காகவும் நாரணியை ஓதவும் பாழாக அவனுடைய உயிரானதுப்போகும் பரமசிவனுடைய கிருபையால் பலிக்கும் (எ-று.) (42)

இதுவுமது.

528. பலிக்குமென்று இத்தொழிலைச் செய்தால்பாவம்
பகைவந்தால் மனம்பொருத்து கோபம்தள்ளி
வலிக்குமென்று தன்னுயிர்போல் மன்னுயிரைப்பார்த்து
மனம்புத்தி ஆங்காரம் மனதடக்கஞ்செய்து
கெலிக்குமென்று உன்மனது தள்ளாவிட்டால்
கேளடா நடைஉறக்கம் வேளைபார்த்து
சலிக்கவே எதிரியைத்தான் படுக்கப்போடு
சண்டாளபிரமலபி வறைக்கும்பாரே.

(இ-ன்.) பலிக்குமென்றதாகயெண்ணி இத்தொழிலைச் செய்வாராகில் பாவமானதுச்சூழும் பகையானது வரினும் மனமானதுப்பொருத்து கோபமானதைத்தள்ளி தன்னுயிர்போல் மன்னுயிரைப்பார்த்தும் மனம் புத்தி ஆங்காரம் இவைகளை மனதடக்கமாகச்செய்தும் கெலிக்குமென்று உன்னுடைய மனமானது தள்ளாவிடில் நடை உறக்கமாகிய வேளையைப் பார்த்து எதிரியைப் படுக்கப்போடுவாய் பிரமனுடைய லபிவரைக்கும்.

இதுவுமது.

529. பாரே நீபச்சிலைக்கி காப்புக்கட்டி
பண்பானகருத்தொட்டு அட்சரங்களோதி
நேரே நீ நாள்பார்த்து வேளைகண்டு
ஜெயந்தரவேணுமென்று குருவைப்போற்றி
கோரேநீ ஓர்மனதாய் உருவைப்பார்த்து
கொடுமையுள்ள சத்துருவால் வேரைவாங்கி

தேரேநீசுடலே என்ற சாம்பல்மேலே
தெளித்திடுவாய் கொள்ளிதனே அதின்மேல்வையே.

(இ-ள்.) பச்சையிலேக்குக் காப்பானதுகட்டி கருவானது தொட்டு யிட்டு அக்ஷரத்தை ஓதியம் நாளானதுபார்த்தும் வேளையானது அறிந்தும் ஜெயமானதுத் தரவேண்டுமென்றும் குருவைப்போற்றியும் ஒருமனதாக உருவை ஓதியும் சத்துருவினல் வேரைப்பிடிங்கியும் சுடலேயின் சாம்பலேப்பூசியும் தெளித்தும் கொள்ளியை அதின் மேல்வைத்தும் கேட்பாயாகவும் (எ-று) (44)

இதுவுமது.

530. வைத்தபின்பு அதின்மேலே சாம்பல்போட்டு
வளமாகதேவி முன்னே வைத்துப்போற்றி
நைத்திடுவான் அதை எடுத்து காளிகோஷ்டம்
நன்ருக ஐயனிட ஆலயத்தில் வைக்க
மொய்த்திடுவாய் துச்சந்தி பகையைப்பார்த்து
முனேயானநிசிநால் வேளேயொன்றில்
வைத்திடுவாய் பிரமலபி உள்ளமட்டும்
வாட்டுமடாசாகாத பிணந்தான்பாரே.

(இ-ள்.) கொள்ளியைவைத்து அதின்மேல் சாம்பல்போட்டு தேவியின்முன்னே வைத்துப்போற்றி அதையெடுத்து காளிகோஷ்டம் ஐயஞர் ஆலயத்தில் வைக்கவும் முச்சந்தியில் பகையைப்பார்த்து இரவில் வேளேயறிந்து பிர்மலபியுள்ளமட்டும் பிணியானதுக்கொண்டு சாகாமல் கிடப்பான் (எ-று.) (45)

இதுவுமது.

531. பாரடா என்னிடத்தில் கரும்பீடை
படராமல் பட்சம் ஒன்று நீரில் ஒன்று
கோரடாதேவியைத்தான் தொழுதுபோற்றி
கொடுமை என்றபாவங்கள் அணுகாதுபாரு
வாரடாமுகத்தோனே பணிந்துகொண்டு
வர்க்கவகை நைவேத்தியம் வளமாய்ச்செய்து
தேரடாபிராமணருக்கு தானஞ்செய்து
சிறுபிள்ளேகாளிக்கு உபசாரஞ்செய்யே.

(இ-ள்.) என்னிடத்தில் கருமப்பீடையானதுப் படருமல் பட்சம் ஒன்று நீரில்மூழ்கி தேவியைத்தொழுதுப் போற்றியும் வருவாயாகில் கொடுமையானப் பாபமானது அணுகாது முகுந்தனேப்போற்றியும் வர்க்கவகையும் நைவேத்தியமும் செய்து பிராமணுளுக்கு தியாகங்கொடுத்து காளிகாதேவிக்கு உபசாரஞ் செய்குவாய் (எ-று.) (46)

இதுவுமது.

532. செய்திடுவாய் உன்மனதில் பீடை அணுகாது
திடமானபக்ஷி அக்ஷரத்தையோது
நைதிடும்பார் அவனுயிரும் நாள்குறையுமட்டும்
நன்றல்லவெகுபாவம் கொடுமையதுமெத்த
நொய்திடும்பார் இத்தொழிலை யுலகத்தோர்க்கு
நோக்காகமனதறிந்து நுணுக்கம் செய்யாதே
வைதுவார்யுலகத்தோர் குருத்துரோகியென்று
வழுத்தாமல் பிறஜனங்கள் நல்லவன்றனென்றே.

(இ-ள்.) இவ்விதஞ் செய்வாயாகில் உன்மனதிற்குப் பீடையானது அணுகாதுப் பட்சியினுடைய அக்ஷரத்தை ஓதுவாயாக எதிரியினுடைய உயிரானது நாள் குறையுமட்டும் பாதைபடச்செய்யும் அன்றியும் இப்படிக்குச்செய்வது பாபமாகும் கொடுமையானது விளைக்கும் நொய்யச்செய்யும் இத்தொழிலை உலகத்தோர்க்கு நோக்கமாக மனமானது அறிந்து நுணுக்கமானதுச்செய்யவேண்டாம் அவர்கள் வைய்வார்கள் குருத்துரோகி நீயென்றும் அப்படிச் சொல்லாமற்படிக்கு நல்லவனென்னும் பெயரெடுப்பாய் (எ-று.) (47)

நற்புத்தி.

533. நன்றல்லோ உலகத்தார் சொல்லவேணும்
எளியவன்போல் நாட்டிலுள்ளோர் அறியவேணும்
நன்றல்லயித்தொழிலை கண்டபேர்கள்
நடுங்குவார் பாவம் புண்ணியம் என்றுசொல்லி
தொண்டுசெய்த சீஷனுக்கு சொல்லிடாதே
சொல்லுவது சூக்ஷமாய் சொல்லிவைநீ
பண்டுதான் வெகுகாலம் காத்தபேர்க்கு
பழக்கத்திலவன்மனதைப் பார்த்துசொல்லே.

(இ-ள்.) நல்லவனென்று உலகத்தார்கள் சொல்லவேணும் பூமியின் மீது எளியோனென்ன யாவரும் அறியவேண்டும் நன்மையில்லாத இத்தொழிலைக்கண்டபேர்கள் நடுங்குவார்கள் பாவபுண்ணியமென்று சொல்லியும் தொண்டுசெய்த சீஷனுக்கும் சொல்லவேண்டாம் அப்படிக்குச் சொல்லாயெண்ணில் சூட்சமாக சொல்லிவைக்கவேண்டும் பழமையாக வெகுகாலமாகக் காத்தபேர்களுக்கு பழக்கத்தில் அவன் மனதைப்பார்த்துச் சொல்லவேண்டும் (எ-று.) (48)

இதுவுமது.

534. சொல்லுவது மற்றதெல்லாம் சொல்லிவைநீ
சொல்லாதே கன்னியுட நூல்சொல்லாதே
வெல்லுவது அக்ஷரந்தான் வெளிவிடாதே
விரோதியென்ற கருவையங்கே வெளிகாட்டாதே
கொல்லுவது பச்சிலையின் குறிசொல்லாதே
கொடுமையுள்ள நேரமது குணங்காட்டாதே
செல்லுவது மற்றதெல்லாம் சொல்லிவை நீ
சண்டாளமன தறிந்து சூக்ஷம் சொல்லே.

(இ-ள்.) சொன்னலும் மற்றவைகள்யாவுஞ் சொல்லுவாய் அதில் கன்னி நூல்தனைச் சொல்லவேண்டாம் வெல்லும்படியாகிய அட்சரத்தை வெளியிடவேண்டாம் விரோதியாகத்தோன்றுங்கருவை காட்டவேண் டாம் பச்சிலைகளின் குரியைச் சொல்லவேண்டாம் கொடுமையாகியநேர மும் குணமும் காட்டவேண்டாம் (எ-று.) (49)

இதுவுமது.

535. சூக்ஷமென்ற பஞ்சபக்ஷி தொழிலைத்தானும்
சொல்லாதே உலகிலுள்ள மாந்தர்க்கையா
ஆட்சியென்றமனோன்மணியாள் சாபம் நின்று
அவள் குலத்தையழித்திடும்பார் சொன்னல் தோஷம்
காட்சியென்ற உலகத்தில் நடக்கும் காட்சி
கண்டுமனந்தெளிவதற்கு சொன்னேன் சூட்சம்
பாட்சியென்றகன்ம வினைக்காளாகாதே
பழிகாரமன தடங்கி யறிவில்நில்லே.

(இ-ள்.) சூட்சமாகிய பஞ்சபட்சியின்தொழிலைச் சொல்லப்படாது உலகத்திலுள்ள மாந்தர்களுக்கும் அப்படிக்குச் சொல்லுவாராகில் மனோன்மணியாளின் சாபமானதுநின்று அவன்குலத்தை அழித்துப்போ டும் சொல்லுவது தோஷமாகும் காட்சியாகிய உலகத்தில் நடக்குங்காட் சியைக்கண்டு மனமானது தெளிவதற்கு சொன்னேன் சூட்சமதையறி யாமல் கன்மவினைக்காளாகப் போகாமற்படிக்கு மனதையடைக்கி அறி வினல் நிற்பாயாகவும் (எ-று.) (50)

இதுவுமது.

536. அறிதான சாஸ்திரத்தை உலகிலுள்ளோர்
அடுத்தாலும் அவர் குணத்தை அறிந்துபார்த்து

குறியான குணங்கள்யெல்லாம் மறைத்துவைத்து
கூறுவாய் வெகுகாலம் குறிசொல்லாதே
பரையான ஈஸ்வரியாள் சாபம்வந்து
பலிக்குமடா ஒருவருந் தாங்கொண்ணுது
நரிதான நாய்ஜெனன மெடுத்துயலேயாதே
நல்லோர்கள் மனதறிந்து கூறுவாயே.

(இ-ள்.) இந்த அருமையாகிய சாஸ்திரத்தை உணரும்பொருட்டு உலகிலுள்ளோர்கள்வந்து அடுத்தாலும் அவர்களுடையகுணத்தை அறிந்துப்பார்த்தும் அப்போதும் குறிகுணம் இவைகள்யாவும் மறைத்துவைத்தும் வெகுநாள்வரைக்கும் ஒன்றுஞ் சொல்லாமற்படிக்குயிருப்பாய் பதறிச்சொல்லாவிடில் பரமேஸ்வரியாளின் சாபமானது வந்தும் நாய்ஜெனனமெடுத்து அலேயும்படிச்செய்யும் ஆதலால் நல்லோர்களின் மனதையறிந்து கூறவேண்டும் (எ-று.) (51)

இதுவுமது.

537. கூறுவாய்கலியுகத்தில் பழிக்கஞ்சார்கள்
கொடுமையென்ற தொழிலென்று நினைந்திட்டார்கள்
சாருவாரவர் வயது பிழைக்கவேண்டி
சண்டாளதத்துவங்கள் பேசிக்கொண்டு
மீருவார்கற்றோரை பணிந்து கேட்பான்
வெகுளியாய் நூல்முறையை சொல்லிடாதே
ஆகுவாய்யவர்குணத்தை யறிந்துநீயும்
அப்பவல்லோபட்சியுட சுருக்கம் சொல்லே.

(இ-ள்.) கூறும்படியான இக்கலியுகத்தில் பழியானதற்கு அஞ்சமாட்டார்கள் இது கொடுமையாகியத் தொழிலென்றும் நினைக்கார்கள் அவர்களுடையவயருனதுப் பிழைக்கவேண்டியும் தத்துவங்களைப் பேசிக்கொண்டும் மீரி கற்றோர்களைப்பணிந்துக் கேட்பார்கள் அவன்தனக்கு வெகுளிகள்போல் சொல்லிவிடவேண்டாம் அவர்கள்குணத்தை அறிந்தும் அப்போது யோசித்து பட்சியினுடைய சுருக்கமானதைச் சொல்வாய் (எ-று.) (52)

மரணமூல கன்னிநூல்

538. சுருக்கமென்ற மூலிகைமுன் னிருந்துகொண்டு
சொல்லி விடுசாபத்தை நிவர்த்திசெய்து
வருக்கமென்றதலேச்சனுட நூலேவாங்கி
வழுவாமல் மித்துருவின் முகத்தைநோக்கி
நெருக்கமென்றசத்துருவை விரல்படாமற்
நினைவாகக்காப்பிட்டு வஸ்துசுத்தி தூபங்காட்டி

உருவினுடசக்கரத்தை முன்புவைத்து
முனையாககுறித்தபட்சி எழுத்தைவிட்டு ஓதே.

(இ-ள்.) மூலிகை முன்னுதாக நின்றுக்கொண்டும் சொல்குவாய் சாபமானதை நிவர்த்திசெய்யும் தலைச்சனுடைய நூலவாங்கி மித்துரு வின்முகத்தைநோக்கி சத்துருவின் வினையானதுப்படாமல் காப்புகட்டி வைத்தும் சுத்தியும்வைத்தும் தூபங்காட்டி உருவின் சக்கரத்தை முன்ன தாகவைத்து குறித்தபட்சியின் எழுத்தைவிட்டு ஓதல்வேண்டும் (எ-று.)

இதுவுமது.

539. ஓதியே குறித்தபிடம் பார்த்துக்கொண்டு
ஓதுவாய்பட்சியுட கருவைத்தொட்டு
சோதியாய் நின்றதொரு வாலைபூசை
சூட்டியே குறித்திடத்தில் முள்கொண்டு குத்து
போதவர்கள் வாதனைதான் மெத்தயுண்டுமகனே
புகழக்கேள்வருத்தமிக்க வேணுமென்றால்
மோதியேகுறித்திடத்தை பிளந்துபோடு
மோசம் வருமந்திடத்தில் மோசந்தானே.

(இ-ள்.) ஓதியும் குறித்தயிடத்தை பார்த்துக்கொண்டும் ஓதுவாய் பட்சியினுடையக் கருவைத்தொட்டும் சோதியாகவிருக்கும் வாலையினு டைய பூசைசெய்தும் குறித்தயிடத்தில் முள்ளைக்கொண்டு குத்தியும் வாசனைகள் மெத்தவும் உண்டாகும் வருத்தமானது உண்டாக்கவேணு மெனில் குறித்தயிடத்தைப் பிளந்துப்போடவும் அந்தயிடத்தில் மோச மானதுவருகும் (எ-று.) (54)

இதுவுமது.

540. மோசமடா வெகுமோசம் மானமூலி
மூலிகை முன்னிருந்துகொண்டு தூபம்தாக்கி
பாசமடா கன்னிநூல் காப்புக்கட்டி
பகையான பட்சியுட சக்கரத்தைவைத்து
தோஷமடா அக்ஷரத்தை மேல்நோக்கிஓது
சொல்லொண்ணுக்கருத்தோடு நேரம்பார்த்து
நேரமடாமித்துருவை சேர்த்துக்கொண்டு
நிர்வாணரூபமதாய் நின்று வேரைவாங்கே.

(இ-ள்.) மோசத்திலும் வெகுமோசமாகும் மரணகாலத்திற் பிடிங் கிய மூலிகையானது அம்மூலிகை முன்னாக யிருந்துக்கொண்டும் தூப மானது கொடுத்தும் கன்னிநூல்கொண்டு காப்பானதுகட்டி பகைபட்சி

யின் சக்கரத்தைவைத்தும் அக்ஷரத்தை மேல்நோக்கி ஓதவேண்டும் பின்பு கருவைத்தொட்டு நேரமானதுப்பார்த்தும் மித்துருபட்சியைச் சேர்த்துக்கொண்டும் நிர்வாணமாக வேரைப்பிடுங்குவாய் (எ-று.) (55)

இதுவுமது.

541. வாங்கியே எதிரியுமே கடந்தால் நன்று
மக்களே இல்லாவிட்டால் வல்துகால்மண்ணை
ஓங்கியவேர்மண்ணுங் கூடச்சேர்த்து
உத்தமனேமயானத்தில் வைத்துக்கொண்டு
தாங்கியதோர் தேவிக்கி பூசைசெய்து
சனியென்ற பச்சிலையை சுட்டாயானல்
பாக்கியே சுட்டதொரு ஜாமந்தன்னில்
பழுதாகும் எதிரி உடல்பாவம் ஆச்சே.

(இ-ள்.) வாங்கியபின் நடப்பனுகில் நன்ருகும் அப்போது அவனுடைய வலதுக்கால் மண்ணையெடுத்து வேறுமண்ணையும் ஒன்ருகச்சேர்த்து மயானத்தில் கொண்டுபோய் வைத்துக்கொண்டு தேவிக்குப் பூசையானதுச்செய்து பாபாக்கிலையை சுடுவாயாகில் சுட்ட ஒருசாமத்தினில் எதிரியினுடைய உடலானது பாழாகப்போகும் ஆனல் பாபமாகும்.(56)

இரக்கம் கோள்ளல்.

542. பாவம் என்று உன்மனது நினைந்ததானல்
படுக்கவே போடுகொஞ்சம் நாளைக்கப்பா
கோமென்ற கொடுமையைத்தான் நினைக்கொண்ணது
கொல்லுவது வெகுபாவம் கொடுமை ஆமே
சாவதுதான் திண்ணமென்று உயிர்வதைசெய்யே
சண்டாளர்தன்னுயிர்போல் மன்னுயிரைப்பாரு
போவதுதான் பச்சிலையைப் புதைத்துப்போட்டால்
போகுமே உயிர்குறைந்து போகும்பாரே.

(இ-ள்.) அப்படிக்குச்செய்வது பாபமென்று உன்மனதில் யெண்ணுவாயாகில் பிணிகொண்டு கிடக்கும்படியாக கொஞ்சநாள்படும் போடுவாய் இந்தக் கொடுமையாகியக் காரியங்களை நினைக்கப்படாது சொல்லுவது வெகுபாவமாகும் சாவது திண்ணமாகநினைத்து உயிர்வதைசெய்ய நினைக்காமல் சண்டாளர்கள் தன்னுயிர்போலும் மன்னுயிரை பார்க்க வேண்டுமென்பர் பிடிங்கிய பச்சிலையை பொதைத்துப்போட்டால் உயிர் குறைந்தும் போகுமெனப் புகன்றனர் (எ-று.) (57)

இதுவுமது.

543. போகுமே உயிரைவதை செய்தாயானல்
பொல்லாத கன்மவினை சூழும்சூழும்
வேகுமடா உன்சடலம் துள்ளித்தான்வீழும்
வீணனபேர்களுக்கு தொழில் சொல்லாதே
ஆகுமடாமனோன்மணியாள் சாபந்தானும்
அப்பனே பட்சியுட தொழிலைப்பார்த்து
ஏகுமடாமனதடக்கம் செய்துகொண்டு
என்மகனேரோமனுட நூல்பலிக்கும்பாரு.

(இ-ள்.) உயிர்வதைசெய்தையாகில் பொல்லாத கன்மவினையானது உன்னைவந்து சூழும் உன்சடலமானதுவேகும் இடியானதுவிழும் ஆதலால் வீணர்களுக்குப் பட்சியின்தொழிலைச் சொல்லவேண்டாம் சொல்லுவாயாகில் மனோன்மணியாள் சாபமானதுவந்து சூழ்ந்து பட்சியினுடையதொழிலைப் பார்த்து மனதில் அடக்கமானதுச் செய்துக்கொண்டு செய்யவும் உரோமரிஷியின் நூலானதுப் பலிக்கும்பாரும் (எ-று.) (58)

இதுவுமது.

544. பலிக்குமடாசித்தருட சாபம் நின்று
பகராதே உமையாள்மேல் ஆணை ஆணை
கெலிக்குமப்பா பட்சிவித்தைக் கருக்குருவுங்கண்டால்
கேசரத்தில் எமக்கும் வித்தை இராக்கொவ்வாது
பலிக்குமப்பா புண்ணதிலே காகம்குத்த
வருத்தம்ரொம்ப அதுபோலே பக்ஷிவித்தை அப்பா
சலிக்குமப்பா சீஷருட மனதறிந்து சொல்லு
சண்டாளன் என்றக்கால் சொல்லொண்ணாதே.

(இ-ள்.) பலிக்குமப்பா சித்தர்களுடைய சாபமானது நின்றும் ஆனதால் சொல்லவேண்டாம் உமையாளின்மீது ஆணை ஆணையாகவும்கெலிக்கும் பட்சிவித்தையானது கருவுங் குருவையுங் கண்டபேர்களுக்கும் கேசரிமார்க்கமாக யெழும்பிய வித்தையும் இதற்கு நிகராகமாட்டாது வலியானது எடுக்கும் புண்ணில் காகமானது குத்தினுல் வருத்தம் அதிகமாகும் அதுபோல் இந்த பட்சிவித்தையாகும் ஆதலால் சீஷர்களுடைய மனதை அறிந்துச் சொல்லவேண்டும் சண்டாளரானவர்களுக்குச் சொல்லவேண்டாமென்பர் (எ-று.) (59)

இதுவுமது.

545. சொல்லாதே பட்சியுட சூக்ஷம்தன்னை
சொல்லி விட்டால் வெகுகொடுமை பாவம்ரொம்ப

வல்லாண்மை உள்ளவர்கள் உலகில் உண்டு
வந்தடுத்து உன்மனதை மயக்கம் செய்வார்
பொல்லாத கருமிகளை மனம்சோதித்து
புத்தியுள்ள சீஷர்மனம் அறிந்தாலையா
சொல்லாதேயென்று சொல்லி பரவசங்கள் வாங்கி
கூறுவாய்பட்சியுட சூட்சந்தானே.

(இ-ள்.) சொல்லப்படாதுப் பட்சியினுடைய சூட்சமாகிய வித்தைகள் தன்னையும் சொல்லிவிடுவையாகில் கொடுமையும் பாபமும் வந்து சம்பவிக்கும் வல்லாண்மைப்பெற்ற மாந்தர்கள் உலகின்கண் உண்டு அவர்கள்வந்தும் உன்னை அடுத்து உன்னுடைய மனதை மயங்கும்படிச் செய்வார்கள் அப்படிக்கொத்தவர்களையும் கருமியென்றும் நன்மையுடையார்களென்றும் மனதைச்சோதித்தும் புத்தியுடையச் சீஷர்களை நன்றாய் மனமானது அறிந்தும் போதித்தும் வெளியில் சொல்லாதேயென்று பரவசமானது வாங்கி சொல்குவாய் பட்சியினுடையச் சூட்சத்தையும். (

மூலிகைப்படலம் முற்றிற்று.

உ

கடவுள் துணை.

ஞானச்சுருக்கப் படலம்.

546. தானென்ற கன்னிநூல் தலைச்சனுகும்
சண்டாளகருவல்லோ இணங்கலாகும்
தேனென்றசக்கரங்கள் உடலதாகும்
திறமான அட்சரமும் காரணமாய் முடியும்
வானென்ற மூலிகையை பிடுங்கொண்ணாது
மக்களேமற்றதெல்லாம் செய்துபாராய்
ஏனென்று பேசுமடாமித்துரு உன்செயலாலங்கே
என்மகனே சேர்ந்துபோனல் பட்சிவித்தைபலியாதே

(இ-ள்.) கன்னி நூலானதுத் தலைச்சனுகும் கருவானது இணங்கலாகும் சக்கரம் உடலதாகும் அட்சரம் காரணமாக முடியும் மூலிகையானதைப் பிடுங்கவொண்ணாது மற்றவைகளெல்லாஞ் செய்துபார்க்கவும்

ஏனென்றதாகப்பேசும் மித்துருபட்சி ஊண்பட்சி இவைகளின் செயவி னுலும் சேர்ந்துப்போகுமாகில் பட்சிவித்தையானதுப் பலியாது (எ-று.)

பட்சிவித்தை பலிப்பவர்களின் குணம்.

547. பட்சி வித்தை பலிப்பவர்கள் குணத்தைக்கேளு
பார்தனிலேபொய்சொல்லான்குருவார்த்தைமறவான்
கொச்சியென்ற கோபகுணம் மனதில் வையான்
கொடுமையுள்ள சினமில்லான் வஞ்சகங்கள்பேசான்
மெச்சு என்ற எவ்வுயிர்க்கும் இரங்குவானும்
மேதினியில் வெகுஜனங்கள் நல்லோனென்பார்
பட்சிவித்தை பலியாமல் போறதில்லை
பாருலகிலரிதுதான் வித்தைதானே.

(இ-ள்.) பட்சிவித்தையானதுப் பலிப்பவர்கள் குணத்தைக்கேளும் பூமியின்மீதுப் பொய்சொல்லாதவன் குருவார்த்தை மறவாதவன் கோபமும் குணமும் மனதில்வைய்யாதவன் கொடுமையாகியச் சினமில்லான் வஞ்சனைகள் பேசாதவன் யெவ்வுயிற்கு மிறக்கமுடையவன் பூமியின் மீது ஜனங்களும் நல்லோனென்றுப் புகழ்பவனும் இருப்பவனுக்குப் பட்சிவித்தையானதுப் பலியாமற்போகாது (எ-று.) (2)

இதுவுமது.

548. வித்தையிலேயதிக வித்தை பட்சிவித்தை
மேலான சித்தர்களும் மறைத்துவைப்பார்
கொத்தாக நான் வெளியாய்ப் புலம்பிவைத்தேன்
குருபதத்தை பணிந்தோர்க்கு பலிக்கும்பாரு
சத்தான எரும்புகடை யானைத்தலைமுழுதும்
தானவனாய் நின்றபடி வித்தையப்பா
மற்றதெல்லாம் பால்போலே ஆகும்சாஸ்திரம்
மணியென்ற பஞ்சபட்சி நெய்யுமாச்சே.

(இ-ள்.) வித்தைக்கெல்லாம் பெருதாகியவித்தைப் பட்சிவித்தை யாகும் இதனை மேலாகியச் சித்தர்கள் யாவரும் மறைத்துவைத்தார்கள் அதனை கோர்வையாக யான் யெடுத்துப் புலம் வைத்தனன் இது குருவினுடையப் பாதத்தைப் பணிந்தபேர்களுக்குப் பலிதமாகும் எரும்புக் கடை யானைத்தலைமுழுதும் தானாக நின்றவித்தையாகும் மற்றையாவும் பால்போல் ஆகும் சாஸ்திரங்கள் பஞ்சபட்சியானது நெய்யாகுமென்பர்,

இதுவுமது.

549. நெய்யென்ற சாஸ்திரத்தை ரோமன்நன்றாய்
நிட்சயமாய் குருபதத்தைப் பணிந்துப்போற்றி
மெய்யென்றவாசினிலே அறியச்சொன்னேன்
மேலான தொழில்களுக்கு இதுவேவேணும்
பொய்யென்று நினைத்தவர்க்கு பலிதம் ஆகா
புத்தியில்லாபாவிக ளிதைப்பாராவிட்டால்
கையென்றகையதுவும் ஆத்துமாவை
கடாட்சித்தகதையதுபோல் ஆகுந்தானே.

(இ-ள்.) நெய்யாகியச் சாஸ்திரத்தையும் உரோமரிஷியானவர் அதை நன்றாய் குருவினுடையப் பதத்தைக்கண்டுப்போற்றியும் மெய்யென்னும் வாசினிலையை அறியும்படியாகச் சொன்னேன் மேலாகியத் தொழில்களுக்கு இந்நூலேவேண்டும் பொய்யென்று நினைப்போர்களுக்கு பலிதமாகமாட்டாது புத்தியில்லாதப் பாவிகளுக்கு இதைப்பாராவிட்டாற் ஆத்துமாவைக் கடாட்சித்தக் கதைபோலாகும் (எ-று.) (4)

இதுவுமது.

550. ஆகுமே பட்சியுட சாஸ்திரத்தைப்பார்த்து
அப்பனே பெரியோரைப் பணிந்துபோற்றி
கோறுமே அவர்குணம்போல் நடத்தினுக்கால்
கொண்டு செல்லும் வெகுகாலம் வாழலாம்பார்
காருமேவேறையொரு சாஸ்திரத்தைப்பார்த்து
கலங்குவது மெய்யல்லது தெள்வதுயில்லை
பாருமே பட்சியுட சாஸ்திரந்தான்
பண்பானபடியென்று பணிந்துபாரே.

(இ-ள்.) ஆகும்படியாகப் பட்சியினுடையச் சாஸ்திரத்தைப் பார்த்தும் பெரியோர்களைப் பணிந்துப்போற்றியும் அவருடையக் குணம்போல் நடத்தினல் வெகுகாலமிருந்து வாழ்குவார்கள் வேறோர் சாஸ்திரத்தைப் பார்த்து கலங்காமற்படிக்கு தெளிவதேயில்லையாம் பகரும்படியான பட்சியினுடைய சாஸ்திரமானது பண்பானது என்றும் பணிந்தும் பார்ப்பாய் (எ-று.) (5)

இதுவுமது.

551. பணிந்துபார் மற்றொரு சாஸ்திரம் எல்லாம்-வெரும்
பாண்டமேய்யல்லாமல் வழியோயில்லை

துணிந்துபார் பட்சியிலே எவ்வளவேணும்
சொல்குறைச்சல்வாராது பழுதொன்றில்லை
கணிந்துபார் அதினுடைய சூக்ஷந்தன்னை
கண்டவர்கள் மனிதனென்று சொல்லொண்ணாது
தணிந்துபார் அவர்பதத்தை பணிந்துபோற்றி
தண்மையுள்ள பொருள்யெல்லாம் அறிந்துகொள்ளே.

(இ-ள்.) பணிந்துப்பார்க்கினும் மற்ற சாஸ்திரங்களெல்லாம் வெறும்பாண்டமாகும் அல்லாமல் வழிப்படும்படி யொன்றுமில்லை துணிந்துப்பார்க்க பட்சியில் எவ்வளவேணும் சொல்லானதுக் குறைச்சல்வாராது பழுதொன்றும் மிராது கணிந்துப்பார்க்க அதினுடைய சூட்சந்தன்னையும் கண்டவரை மனிதனென்றுச் சொல்லப்படமாட்டாது அவர்களுடைய பாதத்தைப் பணிந்துப்போற்றியும் தன்மையாகியப் பொருள்கள் யாவும் அறிந்துக்கொள்வாய் (எ-று.) (6)

இதுவுமது.

552. அறிந்துகொண்டு உலகமதில் தணிந்துபேசி
அப்பனே கற்றோரை தொண்டுபண்ணி
தெரிந்துகொண்டு பூமிதன்னில் நடக்கும் காட்சி
சீஷரைப்போல் வெகுவணக்கம் செய்துபோற்றி
தெரிந்துகொண்ட உபாயமதுபோல் உலகவாழ்க்கை
துன்பமதில் அணுகாமல் திருநீற்றுசுழல்போல
வரிந்துகொண்டு ஞானத்தின் வண்மைகண்டு
மக்களேகாயசித்தி வணக்கஞ்செய்யே.

(இ-ள்.) அறிந்துக்கொண்டபின் உலகத்தின்மீதில் நன்மையாகப் பேசியும் கற்றோர்களை தொண்டுபண்ணித் தெரிந்துக்கொண்டும் பூமியில் நடக்கும்படியானக் காட்சியையும் காண சீஷர்கள்போல் வெகு வணக்கஞ்செய்துப் போற்றியும் தெரிந்துக்கொண்டவாறுபோல் உலக வாழ்க்கையை துன்பம் வாராமற்படிக்கு திருநீற்றுச் சுழல்போல அறிந்தும் ஞானத்தினுடைய வண்மையைக் கண்டும் காயசித்தியினுடைய வணக்கஞ்செய்குவாய் (எ-று.) (7)

இதுவுமது

553. செய்திடுவார் ஞானசித்தி யோகசித்தி
சொல்லுவது சிவயோகி பரமயோகி
வைத்திடும்பா ருலகத்தில் வாழ்க்கை
மக்களே மனுக்களெல்லாம் வணங்க ஆச்சு
செய்திடும்பார் உலகத்தில் உள்ளபேர்கள்
திசையாளும் மன்னரெல்லாம் உன்தெரிசனத்தைக்காண

மொய்திடும்பார் உலகத்தில் அவர்களிட உறவொண்ணுதே
மொய்குழலாள் வாலையுட உறவுநன்றே.

(இ-ள்.) செய்குவாய் ஞானசித்தியும் யோகசித்தியுமெனச் சொல்வது சிவயோகி பரமயோகிகள் யென்றும் உலகத்தில் வாழ்க்கையானதுச் செய்யில் மனுக்கள் யாவரும் வணங்குவார்கள் உலகத்திலுள்ளப் பேர்களுடன் அரசர்கள் யாவரும் உன்னுடையத் தெரிசனமானதுக் காணும்படியாகத் தேடுவார்கள் அவர்களுடைய உறவானது எப்போதுமாகாது வாலையினுடைய உறவானதுச்செய்ய நன்மையாகும் (எ-று.)(8)

இதுவுமது.

554. நானென்றபட்சியுட சாஸ்திரத்தையப்பா
நலமாக உலகத்தில் வணக்கம் செய்தால்
உண்டென்ற தொழிலையங்கே பிரிவிப்பார்கள்
உத்தமனே மனதறிந்து உறைக்கவேணும்
கண்டர்யென்றபேர்க்கெல்லாம் உறைத்தாயானல்
கழுதையென்ற ஜெனனமது பிறக்கலாகும்
வண்டென்றவாலைமேல் ஆணை ஆணை
மக்களே சாஸ்திரத்தின் வகைசொல்லாதே.

(இ-ள்.) நன்மையென்றும் பட்சி சாஸ்திரத்தையும் உலகின்மீது வணக்கமானதுச்செய்யில் உண்டாகியத் தொழில்களைப் பிரிவிப்பார்கள் அப்போது மனதையறிந்து உறைக்கவேண்டும் அதிலும் கண்டர்களாகிய பேயர்களுக்கு உறைத்தாயாகில் உனக்குக் கழுதையென்னும் ஜென்மமானது வாய்க்கும் வாலையின்மீது ஆணையாக சாஸ்திரத்தைச் சொல்லவேண்டாம் (எ-று.) (9)

இதுவுமது.

555. சொல்லாதே உலகிலுள்ள மாந்தர்க்கையா
திரமானகாயசித்தி செய்துக்கொண்டால்
பொல்லாதபலயோகி ஞானயோகி
புகழ்பெற்ற ஜடலத்தை அறியாயோகி
நில்லாதவாசியைத்தான் நிறுத்தும்யோகி
நில்லாத வாசியைத்தான் நிறுத்தும்யோகி
கொள்ளாத உடலுயிரை நிறுத்தினேர்க்கு
கூறுவாய் பாவிகளை குறித்துத்தள்ளே.

(இ-ள்.) சொல்லப்படாது உலகத்திலுள்ள மாந்தர்களுக்கும் திறமாகிய காயசித்திபும் செய்துக்கொள்வாயாகில் பொல்லாதப்பலயோகி

யும் ஞானயோகியும் சடத்தை அறியாதயோகியும் நில்லாதவாசியைநிருத்தும்படியானயோகியும் நிகர் ஒருவருமில்லையென்றும் நினைக்கும்படியான யோகியும் உடலையும் உயிரையும் நிருத்தினோர்களுக்கும் கூறுவாய் பாபிகளைக்குறித்து தள்ளுவாய் (எ-று.) (10)

இதுவுமது.

556 தள்ளுவதுசீஷருட மனதைக்கண்டு
தயங்காமல் ஓர்மனதாய் நிற்பானாகில்
உள்ளபொருள் உள்ளதெல்லாம் உனக்கேசவேன்
உரைத்திட்டேன் உமைஆணை உண்மைஉண்மை
தெள்ளுமணிபஞ்சபட்சி வித்தையப்பா
ஜெகத்தில் ஒருவருக்கும் சொல்லவேண்டாம்
தள்ளிவிடும் வாலையுட சாபந்தான்வந்து
தலைதெரித்து போகுமென்று மனதிலெண்ணே

(இ-ள்.) தள்ளுவது யெவ்விதமெனில் சீஷர்களுடைய மனதைக் கண்டும் பார்க்க அவன் ஒருமனதாக நிற்பானாகில் அவன் தனக்கு உறைப்பாய் உள்ளது மருமங்கள்யாவும் உனக்கேயென்றும் உறைத்தேன்உமையபரமேஸ்வரியின் ஆணையாகவும் உண்மையாகத் தெள்ளுமணிபோல் விளங்கும் பஞ்சபட்சியின் வித்தையை செகத்தின்மீது ஒருவருக்கும் சொல்லவேண்டாம் சொல்லில் வாலையுடையச் சாபமானதுவந்துத்தள்ளும் தலையானது எரிந்துப்போகுமென்று மனதில் எண்ணுவாய் (எ-று.)

இதுவுமது.

557 மனதிலெண்ணி சத்தியமாய் யிருந்தாயானால்
வாக்கினால் சொன்னதெல்லாம் பலிக்கும்பாரு
கனிவுகண்டு சாஸ்திரத்தில் வினையும்வைத்து
கைப்பாகம் செய்பாகம் குருவாக்காவறிந்து
தனமென்றபொருள்தேடி ஈந்தாலுந்தான்
தக்கனவே ஆக்கினையாம் தோஷம் தோஷம்
தணிவுகொண்டு உலகத்தில் வணக்கம்செய்து
தனித்திருந்து அறிவுதான் பெரிதாம்பாரே

(இ-ள்.) மனதில் இதையெண்ணிச் சத்தியமாகயிருந்தாயாகில் உன்னுடையவாக்கினால் சொன்னதுயாவும் பலிதமாகும் கனிவானதுக் கொண்டு சாஸ்திரத்தில் வினையானதுவைத்தும் செய்பாகமும் கைபாகமும் குருவினுடையவாக்கினால் அறிந்தும் தனமென்னும் பொருளைத் தேடி யீனும் ஆக்கினையும் தோஷமும் அணுகும் மனமானதுத் தணிவானதுக்கொண்டும் உலகத்தில் வணக்கமானதுச்செய்தும் தனித்திருக்கில் அறிவானதுப் பெரிதாகும் (எ-று.) (12)

இதுவுமது.

558. பெரிதானபஞ்சபட்சி சாஸ்திரத்தை
பேருலகில் சொன்னதனுல் வருவதேது
அறிதான சாஸ்திரத்தை வெளிவிடாதே
அப்பனேபதினெண்பேர் சாமம்தானும்
குறியாகவந்துவிடும் சொன்னேனப்பா
குருவான சாஸ்திரத்தை கொடுக்கொண்ணுது
தெறியாது இதனுடைய சாஸ்திரந்தானும்
செய்யவில்லையான் வெளியால் செப்பினேனே

(இ-ள்.) பெரிதாகிய பஞ்சபட்சியின் சாஸ்திரமானதை உலகத்தின் மீதுச் சொன்னதால் வருவதுயேது ஆதலால் அருமையாகிய சாஸ்திரத்தை வெளியிடவேண்டாம் பதினெண்பர்களின் சாபமானது வந்து வாய்க்கும் சொன்னேன் குருவாகியசாஸ்திரத்தைக் கொடுக்கவொண்ணுது தெரியாமற்படிக்கு இதனுடைய சாஸ்திரத்தை செய்யாமற்படிக்கு யான் வெளியாகச் சொன்னேன் கேளும் (எ-று.) (13)

இதுவுமது.

559. செப்பினதோர் சாஸ்திரத்தை உலகமீதில்
ஜெகமறியாமாந்தருக்கு சொன்ணுயானுல்
தப்பில்லைபதினெண்பேர் சாபந்தானும்
தன்குலத்தைநாசமது செய்யும்பாரு
கொப்புகளின் குறித்துவிளையாடும் ஜென்மம்
குறங்கதுபோல் ஆகுமப்பா சொன்னேன்யானும்
இப்புவியில் வாலையுட சாபம் அப்பா
ஈடரவே தொருபோதும் இல்லைத்தானே

(இ-ள்.) சொன்ன சாஸ்திரத்தை உலகத்தின்மீது புத்தியில்லாத மாந்தர்களுக்குச் சொல்வாயாகில் தப்பாமற்படிக்கு பதினெண்பர்களின் சாபமானது தன் குலத்தை நாசமானதுச்செய்யும் கொப்புகளினும் குறுத்து விளையாடிய ஜென்மமானது குரங்கைப்போலாகும் சொன்னேன்யான் இப்புவியின்மீது வாலையுடைய சாபமானது யீடேரவொட்டாது (எ-று.) (14)

இதுவுமது.

560. இல்லைஎன்றுசொல்லதுவும் உண்மை உண்மை
ஏன்மகனே சாஸ்திரத்தை கொடுக்கொண்ணுது

தொல்லைவரும் உமையவள்மேல் ஆணை ஆணை
சொன்னதொருவார்த்தைகளை தட்டவேண்டும்
சள்ளையென்ற தாய்தந்தைமேல் ஆணை ஆணை
தனக்குவந்த பெண்டுபிள்ளை தன்மேல் ஆணை
வெல்லுவது உன்குலத்தை கார்க்கும் தெய்வம்
மேலாணை சொல்லாதே தொழில்பொல்லாதே.

(இ-ள்.) இல்லையென்றுச்சொல்வது உண்மையாகும் சாஸ்திரமிதனைக் கொடுக்கவேண்டாம் தொல்லையானது நேரும் உமையவள்மேல் ஆணையாகச்சொன்னேன் தனக்குவாய்த்த பெண்பிள்ளையின்மேல் ஆணையாகவுஞ் சொன்னேன் உன்னுடையகுலத்தைக் கார்க்கும்படியான தெய்வத்தின்மீது ஆணையாகவும் சொல்லவேண்டாம் தொழில்பொல்லாதாகும் (எ-று.) (15)

இதுவுமது.

561. தொழில்செய்யும் ஜோசியங்கள் சொல்லும்போது
தொடுத்திடுவாய் விநாயகரை பூசைபண்ணி
கழிவுசொல்லிதள்ளாதே பாவம் பாவம்
கண்டபடி குறிகணங்கள் நன்றாய்ச்சொல்லு
வழிசொல்லி உறுதியாகக்கொண்டால்
வந்ததோர்பீடையெல்லாம் விலகிப்போகும்
தெளிவு சொல்லி நன்மைதுன்மை திரமாய்ச்சொல்லி
செய்திடுவாய் வாலையுட பூசைதானே.

(இ-ள்.) தொழிலைச்செய்யும்படியான சோசியங்களைச் சொல்லும்போதும் விநாயகக்கடவுளைப் பூசையானதுச்செய்து கழிவுசொல்லித் தள்ளவேண்டாம் பாபமானது பொல்லாதாகும் கண்டபடியாக குறியுங் குணங்களும் நன்றாகச்சொல்லுவாய் வழியாகச்சொல்லி உறுதியானதுக் கொள்வாயாகில் வாய்த்த பீடையானது விலகிப்போகும் தெளிவாக நன்மைதுன்மைகளை திறமாகச்சொல்லியும் வாலையினுடையப் பூசையானதுசெய்குவாய் (எ-று.) (16)

இதுவுமது.

562. பூசைதனை மறவாதே ஞானமறவாதே
பொல்லாத பஞ்சகரத்தாள் அஞ்சுபேரை
நிசம்வைத்துமனதுருகி யாகங்கொண்டு
நிலைத்ததொரு சத்திசிவம் பூசைபண்ணி
பாசம் வைத்து உன்னுயிர்க்கு பழிதேடாதே
பழிகாரசிவயோகம் பாதைகாணும்

ஆசைவைத்துப்பெண்மேலே மோகங்கொண்டு
அன்பு அதுபோலிருந்தால் பலிக்கும்பாரே.

(இ-ள்.) பூசையும் ஞானத்தையும் மறவாமலும் பஞ்சகர்த்தாளாகிய ஐந்துபேரையும் மனதுறுதியாகக்கொண்டும் சத்திசிவம் பூசையானது பண்ணி பாசமானதுக்கொண்டு உன் உயிருக்கு கெடுதி தேடிக்கொள்ளாமலும் சிவயோகபாதையாக ஆசையானதுவைத்து மாதர்களின்மீது கொள்ளும்மோகம்போல் அன்பு இதின்மேலிருக்குமாகின் பலிதமாகும்.

இதுவுமது.

563. பலிக்குமடா பட்சியிலே தொழிலைச்செய்தால்
பழிசெய்யாத்தானிருந்தால் நிவர்த்திகேளு
கெலிக்குமடா எக்கியங்கள் செய்யவேணும்
கேள்மகனே பச்சிலையும் தழையவேணும்
சொலிக்குமடாவாலையுட பூசைவேணும்
சொர்னமதுவஸ்திரங்கள் காணவேணும்
அளிக்குமடாமனமகிழ கொடுக்கவேணும்
அப்போதேகன்மமங்கே தொலையும்பாரே.

(இ-ள்.) பலிதமானது ஆகும் பட்சியின்தொழிலைச் செய்வாயாகில் பழியானதுஞ் செய்யாதிருக்க நிவர்த்தியானதுக்கேளும் எக்கியமானதுச் செய்யவேண்டும் பச்சிலையானதுத் தழைக்கவேண்டும் சொலிக்கும்படியான வாலையினுடையப் பூசையானதுச் செய்யவேண்டும் சொர்னமும் வஸ்திரமும் தானமானதுச் செய்யவேண்டும் இவ்விதஞ்செய்யக் கன்மந் துலையும் (எ-று.) (18)

இதுவுமது.

564. தொலையுமே சிலவுசெய்ய மனதுநொந்தால்
கொடுத்திடுமே கன்மமது தொலைக்கொண்ணாது
அலையுமே உன்சடலம் அழிந்துபோகும்
அப்பனே ஆராலே திருப்பக்கூடும்
வலையிலே அகப்பட்ட மானைபோல
வளர்ந்திடுமே கன்மமென்ற பீடைதானும்
சிலையதுபோல் இருக்காமல் செலவுசெய்து
திருப்புவது அரிதான வித்தைதானே.

(இ-ள்.) சிலவானதுச்செய்ய மனம் நொந்தாராகில் கன்மமானதுத் துலையாதாகும் உன்னுடைய சடலமானது அழிந்துப்போகும் அதை யாராலுந்திருப்பமுடியாதாகும் வலையில் அகப்பட்டமான்போல் வளைத்

து சூழும் கன்மமானதும் பீடையும் சிலையைப்போல் பேசாதிருக்காமற் படிக்கும் சிலவானதுச்செய்து திருப்புவது அறிதானவித்தையாகுமென் றுக்கூறினர் (எ-று.) (19)

இதுவுமது.

565. அரிதாகும் திருப்புதற்கு வெளியாய்ச்சொன்னேன்
அப்பனே திரும்பினவன் அவனேசித்தன்
குறியானதேவியும் பூசைமறவாதே
கொடுமையுள்ள பச்சிலேயும் தலேயும்வேணும்
வழியான தருமமது செய்யவேணும்
மக்களே வினையம்வைத்து பார்க்கவேணும்
நெறியான நிலேயறிந்து ஞானமார்க்கம்
நிலேக்குமடாபட்சியுடகருத்து தோணும்பாரே.

(இ-ள்.) அறிதாகவிருப்பதால் திருப்புதற்கும் வெளியாகச்சொன்னேன் அதையறிந்துத் திருப்புதற்கும் வெளியாகச்சொன்னேன் அதையறிந்து திருப்பினவன் சித்தனுகும் தேவினுடையப் பூசையை மறவாமலும் பச்சிலேயும் தலேயம்வேண்டும் வழியானதுக்கண்டுத் தருமமானதுச் செய்யவேண்டும் வினேயமானது வைத்துப்பார்க்கவேண்டும் நெரியாக நின்றும் ஞானமார்க்கத்தின் நிலேயை அறியவேண்டும் அப்போது பட்சியினுடைய கருத்தானதுத் தோணுமென்பதும் (எ-று.) (20)

இதுவுமது.

566. தோணுமே உலகிலுள்ள மாந்தர்க்கையா
தோணுவது கோடியிலே ஒருவன் உண்டு
காணுமே கருக்குருவும் காணுதுபாரு
கடினமடா அவன்மனது கலங்கும்போதில்
பேணுமே சாஸ்திரத்தைப் பேணர்பாரு
புல்லறிவுகொண்ட சென்மப்பேர்மெத்த
காணுமே வீணுகப் புலம்பிச்சொன்னேன்
நலமான சாஸ்திரந்தான் சொலிக்கும்பாரே.

(இ-ள்.) தோணும் உலகத்திலுள்ள மாந்தர்களுக்கும் அதினும் கோடியில் ஒருவனுக்காகும் அவனுக்குமாத்திரம் கருவுங் குருவுங்காணும் மற்றவர்களுக்குக் காண்பது அரிதாகும் அப்போது அவனுடைய மனமானது கலங்கும்போது சாஸ்திரத்தைப் பேணர்கள் புல்லரிவானதுக் கொண்ட சென்மமுடையோர்கள் மெத்தவும் காணப்படுமெனச் சொன்னேன் நன்மையாகிய சாஸ்திரமானது சொலிக்கும் (எ-று.) (21)

இதுவுமது.

567. வெளிக்கிடாய் சொன்னதொரு சாபமெல்லாம்
வீணாகப்போகாது அநுபவிக்கவேணும்
துலிக்குமடா உன்குலமே அழிந்துபோகும்
சொல்லாதபீடையது தொலையும்பாரே
வழியானமனதுடனே கண்டுசொல்லு
வகையாகப்பாழ்நரகில் விழாதேசொன்னேன்
கனிவிடாய்தள்ளிவரும் சித்திமுத்தியுண்டு
கற்போலேநீயிருந்து சாதிப்பாயே.

(இ-ள்.) மேற்சொன்ன சாபங்கள்யாவும் வீணாகப்போகாது அநுபவித்துத் தீரவேணும் உன்னுடையக்குலமானது அழிந்துப்போகும் பீடையானதுச் சொல்லாமற்படிக்குத் துலைந்துபோகும் வழியானதையறிந்துச் சொல்லவேண்டும் அப்படிக்கில்லாமல் பாழ்நரகில் வீழவேண்டாம் கனிவாகப் பார்த்தாயாகில் சித்திமுத்தியானது குண்டுக்கல்லைப்போலும் நீ இருந்து சாதிக்கவேண்டும் (எ-று.) (22)

இதுவுமது.

568. சாதிப்பாய் அதினாலே மோக்ஷமுண்டு
தள்ளிவிடுகன்மிகளை சேர்க்கவேண்டாம்
சோதிப்பாய் அவன்மனதை நெடுநாட்கொண்டு
சொல்லாத சூக்ஷமெல்லாம் மறைத்துவைத்து
போதிப்பாய் ஞானமெல்லாம் பூண்டபின்பு
பொல்லாதபக்ஷிவித்தை சொல்லிவைநீ
ஆதிப்பாய்கருக்குருவும் வெளியாய்ச்சொன்னேன்
அறிவதுதான் வெகுநினைவாய் பட்சிஅறிவதுபாரே.

(இ-ள்.) அவ்விதமாக சாதிப்பாயாகில் மோட்சமானது உண்டாகும் கன்மவினைகளை சேர்க்காமல் தள்ளிவிடவேண்டும் அவனுடையமனதை நெடுநாளாகச் சோதித்துவரவேண்டும் அப்படி சோதித்தும் சொல்லப்படாத சூட்சங்களை யாவும் மறைத்துவைத்தும் போதிக்கவேண்டும் ஞானமார்க்கங்கள் யாவையும் பின்பு பட்சியினுடைய வித்தையை சொல்லிவைப்பாய் காண்பதற்குக் கருவுங் குருவும் வெளியாகச்சொன்னேன் அறிவது நினைவாகவும் பட்சியை அரிவது (எ-று.) (23)

ஞானச்சுருக்கப்படலம் முற்றிற்று

உ

கடவுள் துணை.

கருமானச்சுருக்கப் படலம்.

இதுவுமது.

569. அறிவதுதான் முதல்விலக்கம் கன்னிநூலாம்
அப்பனே அண்டமொடு புளியுங்கூட்டி
தெரிவதுதான் தயிலம் அது கருவும் ஆகும்
நிசமாகசொல்லிவைத்தேன் பாஷாணமைந்தும்
எரிவதுதான் ஐங்காயம் அதுவேஆகும்
என்னசொல்வேன் வெகுசுருக்கு இதற்கொவ்வாது
முடிவதுதான் ஒன்றுமில்லை எதிரிபேரைச்சொல்லி
முடிக்கிளுல் அக்ஷரத்தை எதிரி உயிர் முடியும்பாரே.

(இ-ள்.) அறியவேண்டியமுதல் விலக்கமானது கன்னிநூலாகும் அதன்பின்பு அண்டத்தினுடன் புளியுங்கூட்டிக்காச்ச தயிலமானது வரும் போது பாஷாணம் ஐந்தும்சேர்த்து யெறித்திரக்க ஐங்காயமாகும் சுருக்கானது இதற்கொவ்வாதாகும் முடிவதுயாதொன்றுமில்லாமல் எதிரியினுடையப் பெயரைச்சொல்லி முடிக்க அக்ஷரத்தையும் யெதிரியினுடைய உயிரானதுப்போகும் (எ-று.) (1)

இதுவுமது.

570. முடிவதுதான் பச்சிலைக்கி சாபம்நீக்கி
முனையானதிரியென்று நினைத்துக்கொண்டு
சடுதியிலேசக்கரத்தை இதிலேதாக்கி
சண்டாள அக்ஷரத்தை அதிலேமாறி
சுருதியென்றகன்னிநூலு காப்புக்கட்டி
சொல்லாலே ஐங்காயக் கருவைத்தொட்டு
பருதியென்றநேரமது அறிந்துமக்காள்
பழிகாரசத்துருவை விலக்கி வேரைவாங்கே.

(இ-ள்.) முடியும்படியாகவும் பச்சிலையதற்கு சாபத்தைநீக்கியும் திரியென்று அதனை நினைத்துக்கொண்டும் சக்கரத்தை இதில் தாக்கியும் அதில் அக்ஷரத்தைமாரியும் கன்னிநூலு காப்புகட்டியும் ஐங்காயக் கருவைத்தொட்டும் நேரமதைப்பார்த்தும் சத்துருவைவிலக்கி வேரைப் பிடுங்குவாய் (எ-று.) (2)

இதுவுமது.

571. வாங்குவது நிருவாண ரூபங்கொண்டு
மக்களேவோர் அதுவை சுட்டிடாதே

ஏங்குவதுவேரைநீ புதைத்துப்போடு
என்மகனே பிர்மலபி மட்டும்பாரு
ஓங்குவதுவேர் அதுவை பிடுங்கொண்ணாது
உத்தமனே நினைத்திடத்தில் கருவைத்தொட்டு
பாங்குபெறமுள்கொண்டு குத்தும்போது
பழுதாகும் அந்தி உத்தில் பழுதாம்பாரே.

(இ-ள்.) வேரைவாங்கும்போது நிர்வாணரூபமாகயிருக்கவேண்டும் வாங்கியவேரைச் சுட்டிடாமற்படிக்கு பூமியில் புதைத்துப்போடுவாய் எதிரியானவன் பிரமன்லபித்தலபிவரைக்கும் பார்க்கவேண்டில்வேரைப் பிடுங்காமற்படிக்கு நினைத்தவிடத்தில் கருவைத்தொட்டு முள்ளானதுக் கொண்டு குத்தும்போதிற் அந்தயிடத்தில் பழுதானதுநேருமென்றனர்.

இதுவுமது.

572. பழுதாகும் குறித்திடத்தைப் பிளந்துபோடு
பகைத்தஉயிர்பழுதாகும் உயிரும்போச்சு
நழுகாதே எதிரியுமே இல்லையில்லை
நாடாதே வெகுகொடுமை பாவம்மிக்க
அழுதாலும் தீராது ஒருவர் அசைகொண்ணாது
அப்பனே பச்சிலையை அறியவேணும்
தொழுதாலும் ஒருத்தரால் திருப்பொண்ணாது
தொடுகுறிபோல் சூக்ஷமது சொன்னேன்பாரே.

(இ-ள்.) பழுதாகும்படிக்குக் குறித்தவிடத்தைப் பிளந்துப் போட்டிடில் பகைத்தவனுடைய உயிரானதுப்போகும் உனக்கு யெதிரியானவர் யாருமில்லை இத்தொழிலுக்கு நாடிச்செய்யவேண்டாம் பாவமானது மிக்கவாகும் அழுதப்போதிலும் தீராது ஒருவர் ஆசை ஒண்ணாது பச்சிலையை அறியவேண்டும் தொழுதுபோற்றினும் ஒருவராலுந் திருப்பப் போகாது தொடுகுறியைப்போல் சூட்சமானதைச் சொன்னேன்(எ-று.)

இதுவுமது.

573. சொன்னாரேசூரனை சம்மாரம்பண்ணி
சுப்ரமண்யர்க்கல்லோசிவன் உபதேசித்தார்
விண்ணனசூரனை சம்மாரம்செய்து
வெகுகாலம் சென்றபின்பு குருமுனிக்குபதேசித்தார்
வண்ணனகும்பமுனி பதினெண்பேர்க்கும்
கலந்து உறவாகியல்லோ உபதேசித்தார்

நண்ணுகநான் வெளியாய்ப் பட்சிவித்தை
நாட்டினேன் உலகத்தில் நன்றாய்த்தானே.

(இ-ள்.) சூரசம்மாரம் பண்ணும்படியாகச் சுப்பிரமண்ணியனுக்குச் சிவபிரான் உபதேசித்தார் அப்படியே உபதேசம்பெற்று சூரர்களை சம்மாரஞ் செய்தனர் அதன்பின்பு வெகுகாலஞ்சென்றபிறகு குருமுனிக்கு உபதேசித்தனர் அக்குருமுனியானவர் பதினெண்பேர்களுக்கும் கலந்து உறவாக உபதேசித்தனர் அதை நன்மையாக நானும் பட்சிவித்தையை நாட்டமாக உலகத்தின்மீதுச் சொன்னேன் (எ-று.) (5)

இதுவுமது.

574. நன்றென்று உலகமதில் சொன்னேன் சூக்ஷ்ம
நழுகாதே சத்தியமாய் எண்ணிக்கொண்டு
குன்றென்றகோபத்தால் கொடுமை நினையாதே
குலநாசம் பிறப்பதரிது குலைக்கும் ஜென்மம்
வண்டென்ற பட்சியல்லோ மதுவையுண்டு
வகையதுபோல் இதனுடைய சூக்ஷங்கண்டு
தொண்டென்ற தொண்டர்கள்போல உலகமீதில்
தோணுமல் வெகு நினைவாய் வாழ்வார்பாரே.

(இ-ள்.) நன்மையென்றதாக யெண்ணி உலகத்தோர்க்குச் சொன்னேன் சூட்சம் இதனை நழுகவிடாமற்படிக்கும் சத்தியமாகமனதில் எண்ணிக்கொண்டுமிருப்பாய் அன்றியும் நீ கோபத்தினுல் ஒருவர்கள்மீதுங் கொடுமையானதுச்செய்ய நினைக்கவேண்டாம் குலமானது நாசமாகும் நாயாகப்பிறக்கச்செய்யும் வண்டென்னும் பட்சியானது மதுவையுண்டு களிப்பதுபோல் நீ இதினுடைய சூட்சத்தைக்கண்டும் தொண்டர்க்குத் தொண்டராக உலகத்தின்மீது இருந்தும் தோணுமற்படிக்கு வெகுநினைவாக வாழ்குவார் (எ-று.) (6)

இதுவுமது.

575. வாழ்வதுதான் கோபமது இருக்கொண்ணுது
மனதிலே வஞ்சகங்கள் பேசொண்ணுது
கோளதுவே உலகமதில் சொல்லொண்ணுது
கொடுமையுள்ளவஞ்சகரிடம்பேசொண்ணுது
மீளாததொழில் கொடுமை செய்யொண்ணுது
வெகுஜனங்கள் பாவியென்று நினைக்கொண்ணுது
ஆளுமே சத்தியமாய் இருந்துகொண்டால்
அப்பவல்லோ பட்சிவித்தை பலிக்கும்பாரே.

(இ-ள்.) வாழ்வதற்குக் கோபமானது இருக்கவொண்ணாது மனதில் வஞ்சனையாகியசொற்களைப் பேசவொண்ணாது உலகத்தின்மீதுக்கோள் சொல்லலாகாது கொடுமைசெய்யும்படியான வஞ்சகரிடத்தில் சேரவொண்ணாது மீளாதத் தொழிலாகியதைச் செய்யவொண்ணாது யாவரும் பாபியென்று இகழ்ந்துப் பேசவொண்ணாது இவ்விதம்பெயரெடுக்காமல் சத்தியவானாக யிருந்துகொண்டும் பார்க்கில் பட்சி வித்தையானதுப் பலிக்குமென்றனர் (எ-று.) (7)

இவுதுமது.

576. பலிக்குமே கருக்குருவும் காணவேணும்
பழிகரர அக்ஷரமும் பதியவேணும்
சொலிக்குமே ஆசான்சொல் உறுதிவேணும்
சொன்னசொல் அணுவளவும் மறவாதிருக்கவேணும்
கெலிக்குமே எத்தொழிலை நினைத்ததெல்லாம்
கொடிகாரர சீட்டுமுதல் இதற்கொவ்வாது
வலிக்குமே பட்சிவித்தை பொல்லாதப்பா
மகத்தான பாவிகட்கு சொல்லொண்ணாது.

(இ-ள்.) பலிக்கும்படியாகக் கருவையுங் குருவையுங் காணவேண்டும் பழிச்செய்யும்படியான அக்ஷரத்தைப் பதியவேண்டும் ஆசானுடைய சொல் உறுதியாக நம்பவேண்டும் சொன்னசொற்களை அணுவளவேனும் மறக்காதிருக்கவேண்டும் இவ்விதமிருக்கில் யெத்தொழிலும் கெலிக்கும் கொடிகாரனுடைய சீட்டும் இதற்கிணையாகமாட்டாது பட்சிவித்தையானதுப் பொல்லர்தாகும் மகத்தாகிய பாபிகட்கு இதைச்சொல்லவொண்ணாது யென்பர் (எ-று.) (8)

இதுவுமது.

577. சொல்லொண்ணவாழ்வுண்டு வசியமுண்டு
துயரமுமே எள்ளளவேனும் தோணாதுபாரு
அள்ளொண்ணா ஞானவிதி அமைக்கும்பாரு
ஆசையென்ற பாவமது விலகிப்போகும்
துள்ளொணா உலகத்தில் கொடுத்ததெல்லாம்
சொல்குறைச்சல்வாராது பலிக்கும்பாரு
கள்ளொண்ணா கபடமது அகத்தில்வைத்து
கற்றோர்க்குதொண்டு செய்து கலந்துநில்லே.

(இ-ள்.) சொல்லவொண்ணாத வாழ்வும் சுகமுமுண்டாகும் துயரமானது எள்ளளவேனுந் தோன்றாது ஞானவிதியானது அமைக்கும் ஆசையென்னும் பாவமானது விலகிப்போகும் உலகத்தின்மீது தொடுத்த

தெல்லாம் சொல்லானது குறைச்சல்வராமல்படிக்கு பலிதமாகும் கபடமானதை மனதில்வைத்தும் கற்ரோர்களுக்கு தொண்டானதுச்செய்துக் கலந்து நிற்பாயாகவும் (எ-று.) (9)

இதுவுமது.

578. நில்லென்று சொல்வதுவே சத்தியம் சத்தியம்
நினைக்குமடா நினைத்ததெல்லாம் சத்தியமாகும்
சொல்லென்ற சொல்பழுதே ஆகும்காலம்
தோணுது பட்சிவித்தை பலிதம்இல்லை
கல்லென்றமனமுள்ளோர் காணும்வித்தை
கலந்துறவாடுவது வெகுளிபோலே
சொல்லென்ற சொல்லதுவும் ஆகாதுபாரு
தன்மையுள்ள புருஷரைப்போல் சார்ந்துபேசே.

(இ-ள்.) நில்லென்றுச்சொல்வது சத்தியமாகும் நினைத்ததுயாவும் சத்தியமாகும் சொல்லானதுப் பழுதாகுங்காலம்தோணுது பட்சிவித்தையானது பழுதாகும் பலிதமில்லாமற்போகும் கல்லைப்போல் மனமுடையவர்கள் காணும்படியானவித்தை கலந்துறவாடுவதுபோலும் வெகுளிபோலும் சொல்லப்படாத தன்மையுடையப் புருஷனைப்போல் பேசுவாய் (எ-று.) (10)

இதுவுமது.

579. பேசினதால் வருவதென்ன குறைவதென்ன
பெருமைபெற்றபட்சியுட தொழில் சொல்லாதே
காசிதனில்வாழ்வதுதான் பிரர்தனகோஷ்டி
கலந்து உறவாடாதே கலக்கந்தள்ளு
நேசம் வைத்துபேசிவிடில் நிலைசொல்லாதே
நீபேசும் வார்த்தையது நிசமென்றெண்ணி
தோஷிகளும் போய்விடுவார் நடத்தில் நில்லு
சொன்னதினால் பாவம்வந்து சூழுந்தானே.

(இ-ள்.) பேசுவதினால் வருவதுயாது குறைவதுயாதெனில் பெருமைபெற்ற பட்சியினுடையத் தொழிலை சொல்லவேண்டாம் காசினிமீதில் வாழும்படியான கோஷ்டிகளுடன்கலந்து உறவானது ஆடாமற்படிக்குக் கலக்கமானதை தள்ளிவிடவேண்டும் நேசம்வைத்துப்பேசினும் நிலையானதைச்சொல்லாதே நீ பேசும்படியான வார்த்தையானது நிசம் என்று யெண்ணியும் தோஷிகள் அவர்கள் தொலைந்துபோவார்கள் நிலையாகநிற்பாய் சூட்சத்தைச்சொன்னால் பாவம்வந்து சித்திக்கும்(எ-று.)

இதுவுமது.

580. சூழுமே இருபத்தோர் தலைமுறைக்கும்
சூழுவது ஒருவரால் திருப்பொண்ணாது

மாளுமே அவன்குலமும் அற்றுப்போகும்
மக்களே சிவசிந்தை மறக்கொண்ணாது
நாளுமே பக்ஷிகளின் கருவரிந்து
நலந்தீதும் அவரவர்கள் பேரும்கண்டு
வாழுமே அக்ஷரம் சொல்வேன் பிரித்துத்தானே
மக்களே ஜெகத்தோர்க்கும் காட்டொண்ணாது.

(இ-ள்.) அப்பாவமானதுசூழ்ந்து இருபத்தோர் தலைமுறைவரைக்கும் சூழும் அதைத் திரும்புவதற்கு ஒருவராலும் முடியாது அவனுடைய குலமானது அழிந்துபோகும் ஆதலால் சிவசிந்தையை மறக்கவொண்ணாது என்னுளும் பட்சிகளின் கருவானதை அறிந்தும் நலம் தீதும் அவரவர்களுடைய பேருகண்டும் வாழும்படியான அக்ஷரத்தைச் சொல்வேன் பிரித்துத்தானும் அதை ஜெகத்தினோர்க்குக் காட்டப்படாதுயென்றனர் (எ-று.) (12)

இதுவுமது.

581. காட்டாதே உலகிலுள்ள மாந்தர்க்கப்பா
காட்டினால் சாபமது வந்துசேரும்
பூட்டாதே உன்குலமும் அழிந்துபோகும்
புதுமையுள்ள பட்சிவித்தை பொல்லாதப்பா
நீட்டினால் பஞ்சதிலே நெருப்பைப்போலே
நீறிவிடும் உலகமெல்லாம் நிமிஷத்திற்றான்
சூட்டினார் அரன்திருமால் அயன்கணேசன்
துணைவறென்ற வேலவர்க்குச் சொல்லித்தானே.

(இ-ள்.) காட்டப்படாது உலகத்திலுள்ள மாந்தர்களுக்கும் அப்படிக்கல்லவெனில் காட்டினால் சாபமானதுவந்து நேரும் உன்னுடைய குலமானது அழிந்துபோகும் பட்சிவித்தை இதப்பொல்லாதாகும் இதை நீட்டினால் பஞ்சியிலிட்ட தீயைப்போல் பத்திக்கொள்ளும் அதுபோல் நீரிப்போய்விடும் உலகமாதியந்தமும் நிமிஷத்திற்குள்ளாகவுமென அரனும் திருமாலும் அயனும் கணேசரும் துணைவராகிய வேலவர்க்குச் சொல்லினர் (எ-று.) (13)

பிருதிவியின் தொழில்.

582. தானென்ற பிருதிவிக்குத் தொழிலைச்செய்தால்
தயவான அப்பெழுத்தைப் பிரித்துமாறு
தானென்ற அப்பதுவை மண்ணும் உண்ணும்
தள்ளாதமற்றெழுத்தை சேர்க்கொண்ணாது

வானென்ற ஆகாச எழுத்தைக்கட்டி
மாறிவிடு சூக்ஷமதை வழிசொல்லாதே
கோனென்ற சிவன்மேலே ஆணை ஆணை
கொடுமை அப்பாதொடு குறியை கூறொண்ணுதே.

(இ-ள்.)பிரிதிவிற்குத் தொழிலானதைச்செய்தால் அதற்கு அப்பெழுத்தைப் பிடித்தும் மாறவேண்டும் அப்புவை மண்ணானது உண்ணும் மற்றயெழுத்துகளைச் சேர்க்கவொண்ணாது ஆகாயத்தின் எழுத்தைக் காட்டி மாறிவிடுகுவாய் சூட்சமாகியவழியைச்சொல்லாமலும்சிவபிரான் மீது ஆணையாகத்தானும் கொடுமையாகியத் தொடுகுறியானதைக் கூறப்படாதாமென்பர் (எ-று.) (14)

அப்புவியின் தொழில்.

583. கூறவொண்ணு அப்புவுக்குத் தொழிலை செய்தால்
குலைத்துவிடும்வாய் வெழுத்தைப் பிடித்துமாறு
நேரஒண்ணு அக்கினியைச் சேர்த்துக்கொண்டு
நிலைக்குமே தண்ணீரும் நிமிஷம் அற்று
மாறவொண்ணுமற்றெழுத்தை மறந்துவிடும் அப்பா
மகத்தான கூடழிந்து மறிந்துபோகும்
சேரவொண்ணுதேவியின்மேல் ஆணை ஆணை
ஜெகத்தோர்க்கும் சூக்ஷமது தெரியொண்ணுதே.

(இ-ன்.) சொல்லவொண்ணுத அப்புவின்தொழிலைச் செய்வாராகில் குலைத்துவிடும் அதற்கு வாய்வெழுத்தைப்பிடித்து மாறவேண்டும் அக்கினியைச்சேர்த்துக்கொண்டும் நிலைக்கும் தண்ணீரானது அற்றும் மாறவொண்ணுத மற்றயெழுத்தை மறந்துவிடுவாய் அவ்வெழுத்தைபாறில் கூடானது அழிந்துபோகும் நீ தேவியின்மீது ஆணையாக ஜெகத்தோர்க்கு இச்சூட்சமானது தெரியவொண்ணுது (எ-று.) (15)

தேயுவின் தொழில்.

584. தெரியாததேயுவுக்குத் தொழிலைச்செய்தால்
சீரான அப்பொழுதை திரமாய் ஓது
குறியான ஆகாச எழுத்தைச்சேர்த்து
கூட்டியரெண்டும் ஒன்ருய் மாறும்போது
வரியான அக்கினியும் அமர்ந்துபோகும்
மக்களே அப்புவும் உண்டுபோகும்
தெரியானதேவியின்மேல் ஆணை ஆணை
ஜெகத்தில் உள்ளமாந்தர்க்கு செப்பொண்ணுதே,

(இ-ள்.) தெயுவின்தொழிலைச் செய்யில் அப்பொழுதே ஓதவேண்டும் அத்துடன் ஆகாயத்தைச்சேர்த்தும் கூட்டி ரெண்டையும் ஒன்றாக மாறும்போதும் அக்கினியானது அமர்ந்துப்போகும் அப்புவானதுஅதை உண்டுவிடுகும் நீ தேவியின்மீது ஆணையாக ஜெகத்திலுள்ள மாந்தர்களுக்குஞ் சொல்லவேண்டாம் (எ-று.) (16)

வாயுவின் தொழில்.

585. செப்பொண்ணுவாய்வுக்குத் தொழிலைச்செய்தால்
திடமான பிரிதிவையைப் பிடித்துமாறு
அப்பவே அவ்வெழுத்தை கூடச்சேர்த்து
அநுசரித்தால் வாயுவதும் அடங்கிப்போகும்
இப்புவியில் செப்பாதே மற்றெழுத்தைச்சேராதே
இதமான இத்தொழிலை வெளிக்காட்டாதே
தப்பில்லா அரன்சிவன்மேல் ஆணை ஆணை
தரணிதனில் சூக்ஷமதை தான்விள்ளாதே.

(இ-ள்.) வாயுவின்தொழிலைச்செய்யில் அதில் பிரிதிவைப்பிடித்து மா்றவேண்டும் அவ்வெழுத்தையும் கூடச்சேர்த்து அனுசரிக்கில் வாயுவானது அடங்கிப்போகும் இதை இப்புவியோர்க்குச் சொல்லப்படாது மற்றயெழுத்தையுஞ் சேர்க்கவேண்டாம் இத்தொழிலையும் வெளியிடாதே பரமசிவன்பேரில் ஆணையாக சூட்சத்தை விள்ளவேண்டாம் (எ-று.) (17(

ஆகாசத்தின் தொழில்.

586. விள்ளாதே ஆகாச வெளிக்குச்செய்தால்
விதமான பிருதிவியும் அப்புங்கூட்டி
தள்ளாதே அக்கினியும் வாய்வுஞ்சேர்ந்து
தப்பாமல்நாலெழுத்தும் பிடித்துஓதி
நில்லாதே ஆகாச வெளியில்தாக்கு
நிலைக்குமடா இத்தொழிலும் நிலைத்துபோச்சு
பொல்லாத சிவன் உமையவள்மேல் ஆணை ஆணை
பூதலத்தில் செப்பாதே புகழ்ந்துபாரே.

(இ-ள்.) ஆகாயவெளிக்குச்செய்யில் அத்துடன் பிரிதிவியும்அப்புவுங் கூட்டி அக்கினியும் வாயுவுஞ்சேர்ந்து இருக்கும்படியான நாலெழுத்தை பிடித்து ஓதவேண்டும் ஓதில் ஆகாசவெளியின்வாக்கு நிலைக்கும் யெத்தொழிலும் நிலைத்துப்போகும் சிவன் உமையாள்மேல் ஆணையாகப் பூதலத்தோர்க்குச் சொல்லவேண்டாம் (எ-று.) (18)

வசியம்.

587. புகழ்ந்துபார்வசியமது செய்வீராகில்
புண்ணியனே ஆகாசம் வாய்வும்சேர்ந்து
நிகழ்ந்துபார் அக்கினியும் சேர்ந்துக்கொண்டு
நீசெய்யும் தொழிலை அங்கே நிலைத்துஓது
மகிழ்ந்துபோம் சகலமுமே வசியம் ஆகும்
மன்னர்முதல் தேவதையும் வணங்குவார்கள்
இகழ்ந்துபார் இத்தொழிலை வெளிவிடாதே
என்னதான் சொன்னாலும் இயம்பொண்ணாதே.

(இ-ள்.) வசியமானதுச் செய்வீராகில் அத்துடன் ஆகாசத்தையும் வாய்வையுஞ்சேர்த்து அக்கினியுங் கூடச்சேர்த்து நீ செய்யும்படியானத் தொழிலை நிலமையாகஓத மகிழ்வாகும் சகலமும் வசியமாகும் மன்னர்களுந் தேவர்களும் வணங்குவார்கள் நீ இந்தத்தொழிலை வெளியிடவேண்டாம் எது சொல்லினும் இயம்பொண்ணாது யென்பர் (எ-று.) (19)

இதுவுமது.

588. இயம்புவாய் அவ்வெழுத்தை வசியம்பண்ண
என்மகனே அக்கினியைக் கூடச்சேரு
மயம்புவது அக்கினியை வசியம்பண்ண
மக்களேவாய்வெழுத்தை வசியம்பண்ண
தயம்புவது அவ்வெழுத்தை வசியம்பண்ண
தண்மையுள்ள பிரதிவியை பிடித்துமாறு
சுயம்புவது பிரதிவியை வசியம்பண்ண
சுத்தமுள்ள அக்கினியை ஓதிப்பாரே.

(இ-ள்.) இயம்பிய அவ்வெழுத்தை வசியமானதுச்செய்ப அக்கினியைக்கூடச்சேர்க்கவும் அக்கினியை வசியமானதுபண்ணவும் வாய்வெழுத்தை வசியம்பண்ணவும் அவ்வெழுத்தை வசியம்பண்ண பிரிதிவைப் பிடித்து மாறவேண்டும் பிரிதிவை வசியமானதுபண்ண அக்கினியை ஓதிப்பார்க்கவும் யென்பர் (எ-று.) (20)

இதுவுமது.

589. ஓதுவதுபெரிதல்ல மனமொன்றாக
உண்மைகொண்டு ஐம்புலனை நிறுத்திக்கொண்டு
தேறுவது செய்தொழிலும் மனம்போல்ஆகும்
திடமானபட்சி வித்தை வழிஇதப்பா

கூறுவது உலகிலுள்ள மாந்தர்க்கப்பா
குணங்குறியும் சத்துருமித்துரு காணுவிட்டால்
மீறிவிடும் ஒருவரால் அடக்கொண்ணாது
மேலான முனிவர்சொன்ன வாக்குத்தானே.

(இ-ள்.) ஓதுவதுப் பெரிதாகமாட்டாது மனமானது ஒன்றாகவிருந்தும் ஐம்புலனை நிருத்தியும்செய்யில் யெத்தொழிலும் மனம்போல் முடியும் பட்சிவித்தையின்தொழி லிதுவாகும் சொல்வது உலகிலுள்ள மாந்தர்களுக்கு குணம் குறி சத்துரு மித்துரு இவைகளைக் காணுவிடில்மீறிப்போகும் ஒருவராலும் அடக்கவொண்ணாது இதுமேலாகிய முனிவர் சொன்ன வாக்கியமாகும் (எ-று.) (21)

இதுவுமது

590. வாக்குமனம் ஒன்றாக நிறுத்தவேணும்
வழியான குருவாக்கால் அறியவேணும்
ஏர்க்குமது சத்தியமாய் நினைக்கவேணும்
என்மகனே சூட்சமதை அறியவேணும்
பாக்கியமாய்பழிபாவம் காணவேணும்
பண்பானபட்சிவித்தை பதியவேணும்
நோக்குவது சிவன்பாதம் நோக்கவேணும்
நுண்மையுள்ள சுருக்கத்தைச் சொன்னேன்பாரே.

(இ-ள்.) வாக்கும் மனமும் ஒன்றாக நிருத்தவேண்டும் குருவினுடைய வாக்கினால் அறியவேண்டும் சத்தியமாக நினைவானது நினைக்கவேண்டும் சூட்சமதை அறியவேண்டும் பழிபாபங்களைக் காணவேண்டும் பண்பாகிய பட்சிவித்தையை மனதிற் பதியவேண்டும் சிவனுடைய பாதத்தை நோக்கவேண்டும் இவ்விதமாறினால் எளிதில்காணும்படியாகச் சுருக்கத்தை சொன்னேன் பாரும் (எ-று.) (22)

இதுவுமது.

591. சொன்னேனே பாவபுண்ணியம் அறியவேணும்
சூட்டாதக்கருமறைப்பை வெளியாய்ச்சொன்னேன்
கண்ணேகேள் கண்மணியே உலகம்பேயாம்
கருதாக உலகத்தோர் பழிக்கஞ்சார்கள்
விண்ணான சாஸ்திரத்தைப் பதினெண்பேரும்
விளம்பாமல் உலகத்தில் மரைத்துவைத்தார்
தன்னாலேயெளியோர்க்கு வேணுமென்று
தன்மையாய் சொல்லிவைத்தேன் அடக்கம்பண்ணே.

(இ-ள்.) பாவபுண்ணியத்தை அறியவேணும் அறிந்தவர்க்குச் சூட்டாக கருமத்தை வெளியாகச்சொன்னேன் கண்மணியே கேட்பாயாக உலகமானது பேயாகும் அதிலுள்ளமாந்தர்கள் பழிசெய்ய அஞ்சார்கள் இந்த சாஸ்திரத்தை பதினெண்பேர்களும் விளம்பாமற்படிக்கு மறைத்து வைத்தனர் நான் யெளியோர்களுக்கு வேணுமென்று இத்தன்மையாகச் சொல்லிவைத்தேன் இதை அடக்கம்பண்ணுவாய் (எ-று.) (23)

இதுவுமது.

592. அடக்கமது செய்துகொண்டு அறிவாய்பாரு
அப்பனே தேவியுட சாபம்பொல்லாது
வெடக்கெடுத்த நாய்போலே உலகமீதில்
வீணருடன் பேசினல் வருவதென்ன
மடக்கொடியாள் ஆசையினல் மனம்வேருகி
வஞ்சனைபொய்சூது கோபத்தைத்தள்ளு
தொடுக்குறிகள் அறிவாலே அறிந்துபாரு
சொன்னதினல் பாவம் வந்து சூழுந்தானே.

(இ-ள்.) அடக்கமானதுச் செய்துக்கொண்டு அறிவை திருத்திப் பார்க்க தேவியினுடைய சாபமானதுப் பொல்லாதாகும் நாய்போல் உலகத்தின்மீது வீணர்களுடன் பேசிடில் வருவதுயென்ன மாதர்களின் ஆசையால் மனமானது வேருகி வஞ்சனை பொய் சூது கோபம் இவைகள் மீறி தொடுகுறியை அறிவினல் அறிந்துபார்க்கச் சொன்னதினல் பாவமானது வந்து சூழும் (எ-று.) (24)

இதுவுமது.

593. சூழுமேபாவபுண்ணியம் அறிந்துக்கொண்டு
சூக்ஷமென்ற கருவையெல்லாம் அடக்கஞ்செய்து
வாழுமே உலகத்தோ டொத்துவாழ்ந்து
வளமானமனங்கொண்டு பழக்கஞ்செய்து
கேளுமே அக்கினியில் மனதைப்பூட்டி
கொண்டாடி அடிபணிந்து தாயைப்போற்றி
நாளுமேதுதிசெய்து அக்கினியைப்போற்றி
நலம்பெருவாய் உலகத்தின் துயரம்போச்சே.

(இ-ள்.) சூழும்படியான பாவபுண்ணியங்களை அறிந்துக்கொண்டு சூட்சமாகியக்கருவை அடக்கஞ்செய்து உலகத்திேைடு ஒத்துவாழ்ந்தும் வளமாகிய மனமானதுக்கொண்டு பழக்கஞ்செய்தும் அக்கினியில் மன

மானதைப்பூட்டி கொண்டாடி அடிபணிந்து உமையாகிய தாயைப்போற்றியும் என்னாளும் துதிசெய்து அக்கினியைப்போற்றி வருவாயாகில் நலமானதுப் பெருகுவாய் உலகத்தில் துயரமானதுப்போய்விடும் (எ-று.) ()

இதுவுமது.

594. போச்சென்று சுப்பிரமணியர் தியானங்கேளு
புகழாக அங்ரீங் கென்றுசொல்லு
காச்சென்றுகங்கங் கென்றுசொல்லு
கனமானரிங்கென்று ரிங்ரிங்கென்று
வாச்சென்றுபாலசுப்ரமணிய தேவாநமாவென்று
வகையாக நாலுநாள் லக்ஷம்ஓது
நற்சுண்டல் வடைதோசை அப்பமோடு
நலமானதேனுடனே பால்பழமும்வையே.

(இ-ள்.) போச்சென்று நினைத்து சுப்பிரமண்ணியருடைய தியானத்தைக்கேளும் அங்-ரீங்-என்று சொல்லவும் கங்-கங்-கென்று சொல்லவும் மரிங்கென்றும் ரிங்-ரிங்-கென்றும் பாலசுப்பிரமண்ணியதேவ நமாவென்று நாலுநாளைக்கு ஒருலட்சம் உருவானது கொடுக்கவும் சுண்டல் வடை தோசை அப்பம் தேன் பால் பழம் வைப்பாய் உருகொடுக்க விபரம் அங்-ரிங்-கங்-கங்-மரிங்-ரிங்-ரிங்-பாலசுப்பிரமண்ணிய தேவ நமாவென்று லட்சம் ஓதவும் (எ-று.) (26)

இதுவுமது.

595. வையப்பா புஷ்பமொடு புனுகுகெந்தம்
வளமான கஸ்தூரிபச்சை பூரம்வைநீ
நையப்பாமண்டலந்தா னுபசாரஞ்செய்
கனமானகுகன் அவரும் வசியமாவார்
மெய்யப்பா சுப்பிரமணியர் தியானம்வேணும்
மேலானவைத்தியனுடைய தியானம்வேணும்
ஐயப்பா யிவைவிட்டால் பக்ஷியேது
அன்பானயோகம் விட்டால் வீணும்பாரே.

(இ-ள்.) மேற்கண்டபடிவைத்துப் புஷ்பம் புனுகு கந்தம் கஸ்தூரி பச்சைகற்பூரம் இவைகள் படைத்து ஒருமண்டலம் உபசாரஞ்செய்ய குகனும் வசியமாகுவர் சுப்பிரமண்ணியர் தியானம்வேண்டும் அத்துடன் சிவபிரானுடையத் தியானமும் வேணும் இவையில்லாவிடில் பட்சியானது ஏது அன்பாகிய யோகத்தைவிடில் வீணாகும் (எ-று.) (27)

இதுவுமது.

596. வீணப்பாவீணாகப் புலம்புவார்கள்
விணையறியார் பொருளறியார் பட்டிமாடு
ஆணப்பா ஆணவத்தால் அழிந்துபோவார்
அப்பனே அதின்சூட்சம் கண்டுகேளு
மாணப்பா பக்ஷிகள்தான் வலுவோமெத்த
மகத்தானபட்சிகளின் காலங்கண்டு
தானப்பாஒவ்வொன்றை தனித்துநோக்கி
தன்மையாயுரைத்திடுவாய் சொல்லத்தானே.

(இ-ள்.) வீணாகப்புலம்பிப் பேசுவார்கள் விணையும்பொருளும் அறியாத பட்டிமாடானவர்கள் ஆணவத்தினால் அழிந்துபோவார்கள் அதினுடைய சூட்சத்தைக்கண்டும் கேட்பாயாக பட்சிகளின் வலுவானது மெத்தவாகும் அப்பட்சிகளின் காலங்கண்டு ஒவ்வொன்றையுந்தனித்து நோக்கியும் தன்மையாக உரைப்பாய் சொல்கவும் (எ-று.) (28)

எதிரியை வெல்லுவது.

597. கொள்ளவேயெதிரிக்கு சத்துருவைகூட்டி
குணமாகச்செய்கிறவன் மித்துருவைச்சேர்த்து
அள்ளவேசத்துருவின் முகத்தைநோக்கி
அப்பனேசெய்தொழிலை முன்னேவைத்து
விள்ளவேநிருவாண ரூபங்கொண்டு
வீற்றிருந்துமந்திரத்தை ஓதும்போது
துள்ளவேயெடுத்துவிடும் யெதிரியில்லை
துருசாகஅணுவளவும் நிட்சயமாய்ச்செய்யே.

(இ-ள்.) எதிரிகளுக்கு சத்துருபட்சியைகூட்டி அவனுக்கெதிராகச் செய்கின்றவன் மித்துருபட்சியைச் சேர்த்துக்கொண்டும் பின்பு சத்துருவின் முகத்தைநோக்கிச் செய்யுந்தொழிலை முன்னாகவைத்து நிர்வாண ரூபமாக நின்று மந்திரத்தை ஓதும்போதும் துள்ளும்படியாகயெடுத்துவிடும் எதிரியானவனில்லாமலும் துருசாக அணுவளவும் நிச்சயமாய்ச் செய்யவேண்டு மென்பர் (எ-று.) (29)

பேதவியல்.

598. நிக்ஷயமாய்ஊணுக்குக் குள்ளவனாவான்
நிலைத்ததோர் ஆசுங்குகொடியனாவான்

பட்சமுள்ளநடைதனக்கு சமானமாவான்
பகரறியநித்திரைக்கு மிகவும்குள்ளன்
அட்சமாமரணத்துக் கூனனென்று
அறிவினுல்பட்சிகளின் தொழிலைக்கண்டு
எட்சமயம்பேர்களுமே தெளிவாய்க்காண
இயம்பினேன் அறுநூற்றில் இயல்பாம்ஊணே.

(இ-ள்.) ஊண்பட்சியாகில் குள்ளனும் அரசுபட்சிக்கு நெடியோனவன் நடைபட்சிக்குச் சமானமானவனும் நித்திரைபட்சிக்கு ரொம்பவுங் குள்ளனுகவிருப்பான் மரணபட்சிக்குக் கூனனும் இவ்விதமாகப் பட்சிகளின்தொழிலை கண்டுத் தெளிவாகக்காண பாடல் அறுநூறுக்குள் இயம்பினேன் இயல்பாகவும் ஊணே (எ-று.) (30)

இதுவுமது.

599. ஆமடாஇன்னூலை பதனம்பண்ணு
அன்பானநல்லோர்கள் பதனஞ்செய்வார்
வாமடாஇந்நூலைப் பெற்றுக்கொண்டு
வளமாகபூசைசெய்து பதனம்செய்து
காமடாமுக்காலைச் சொல்லும்தோணும்
கனமானஇந்நூலை கைவிடாதே
நாமடாகருத்துன்னித் தெளிந்துபாரு
நலமானகருமானச் சுருக்கும்முற்றே.

(இ-ள்.) இந்த நூலைப் பதனம்பண்ணவும் நன்புடைய நல்லோர்கள் பதனம் பண்ணுவார்கள் இந்த நூலைப்பெற்றுக்கொண்டு வளமாகப் பூசையானதுச்செய்து பதனமாக வைத்துக்கொண்டும்பார்க்கமுக்காலச் சொல்லும் ஆதலால் இந்நூலைக் கைவிடாமற் படிக்கு கருத்தானதுச் செலுத்து தெளிவானதுக்கொண்டுப் பார்க்க கருமங்கள்யாவும் காண்பாய் சுருக்கம்முற்றும் (எ-று.) (31)

வியாதி அறியும்படி.

600. ஊணுக்குசிரசில்நோயாம் உரக்கத்தில்தலைகழுத்து
மேணியேஅரசுநெஞ்சில் பிணியுண்டாம்
காணுமேசாவுதன்னில் அரையினில்காகங்காணும்
ஆணுவங்கொள்ளாநீதான் அறிந்திடும்உண்மைதானே.

(இ-ள்.) ஊண்பட்சிக்குச் சிரசில் நோயாகும் உறக்கப்பட்சிக்குதலையுங்கழுத்துமாகும் அரசுபட்சிக்கு நெஞ்சியிலாகும் பிணியுண்டாம் மரணபட்சியாகில் அறையிலும் காலிலும் பிணியுண்டாம் இவைகளை ஆணுவங் கொள்ளாமற்படிக்கு அறிகுவாய் (எ-று.) (32)

பேதபட்சி-வெண்பா.

601. வல்லூருகாணவந்தான் வளர்ஆந்தைபொய்யுரைப்பான்
சொல்லாருங்காகம் திருடவந்தான்-பொல்லா
கோழியேபோர்க்குவந்தான் கோலமயில்காகம்
ஆழியாய் பேதம் அறி.

(இ-ள்.) வல்லூறுபட்சியாகில் ஆணவமாகப் பேசுவன் ஆந்தையாகில் பொய்யானது உறைப்பான் காகமாகில் களவுசெய்குவான் கோழியாகில் போர்புரிகுவான் மயிலாகில் பேதமுடையவனுகு மென்பர். (33)

மச்சம் அறியும்படி.

602. வல்லூற்றைமுதுகுவளற் ஆந்தைஉச்சிகைக்கீழ்
பொல்லாதகாகம்புயமார்-நல்லாய்கேள்
கோழிமுகம்கண்டம்கோதைதொடைமுழங்கால்
பாழிலாமச்சமென்பார்.

(இ-ள்.) வல்லூறுபட்சியாகில் மச்சம் முதுகிவிருக்கும் ஆந்தைக்கு உச்சியின்கீழாகும் காகத்திற்கு புயமும் மார்புமாகும் கோழிக்கு முகத்திலும் கண்டத்திலுமாகும் மயிலுக்குத் தொடையினும் முழங்காலினுமாகும் இவ்விதமாக மச்சங்காண்கவும் (எ-று.) (34)

இதுவுமது.

603. வாழ்வதுதான்ரோமரிஷி சொன்னவாக்கியம்
மறவாதஒருநாளும் மனதுறுதிகொண்டு
ஆள்வதுதான்சத்தியமாய் எண்ணிக்கொண்டு
அப்பனேசாஸ்திரத்தைப் பழக்கம்பண்ணி
தாழ்வதுதான்வாராது சகலமுமேசித்தி
தன்மையென்றதேவியுமே அக்கினியாகும்
பாழ்வதுதான்போகாது பட்சிவித்தையப்பா
பஞ்சபட்சிஅறுநூறும் பலிக்குமுற்றே.

(இ-ள்.) வாழும்படியாக உரோமரிஷியானவர் சொன்னவாக்கியத்தை மறவாமற்படிக்கு மனமுறிதியானதுக்கொண்டு சத்தியத்தை மறவாமல் சாஸ்திரத்தைப் பழக்கம்பண்ணி தாழ்வானது வராமற்படிக்கு பார்க்

கில் சகலமும் சித்தியாகும் தன்மையென்னும் தேவியானவள் அக்கினி யாகும் ஒருக்காலும் பாழாகப்போகாது பட்சியினுடையச் சாத்திரம் அன்றியும் பஞ்சபட்சி சாஸ்திரம் பாடலும் உறையும் அறுநூறும் முற்றிப் பெற்றன (எ-று.) (35)

கருமானச்சுருக்கப்படலம் முற்றிற்று.

ரோமமஹாரிஷியார்

அருளிச்செய்த

விநாடிபஞ்சபட்சிமூலமும்-உரையும்.

ஆக பாடல் சுளாகூ.

முற்றிற்று.

உ

கடவுள் துணை.

பஞ்சபட்சி பலதிரட்டு.

முகவுரை.

உன்னி ஒருவன் உரைத்த முதலெழுத்தைப்
பண்ணிப் பரவையாய்ப் பாவித்து-முன்னி
உதயத் திசைபட்சி உண்மை உரைக்கக்
கதைமா வியப்பொருளே காப்பு.

நூல்முதலியப் போருள்.

பூமேவு நான்முகத்துப் புங்கவன் சிஷ்டிப்பெவையும்
மாமேவு பட்சிஐந்தாய் வாழுமே-சீர்மேவும்
வல்லூறு பேர்ஆந்தை வணகாகம் கோழிமயில்
எல்லா பிறப்பும் இது.

---

* ஈண்டுவெண்பா முதலிய செய்யுட்களிற் பிரிந்திருப்பது செய் சொல்லாதவேயன்றிச் சீரும் தலையுமாகப்பிரித்தன்று.

ஒன்றுதிசைக்குருவி ஒன்றுவரும்ஓர்தூத
நின்றநிலேஆரூடத்தின் நேரும்நன்றி
வழுவாதுவந்தாய்ந்து வல்லவர்கள்சொன்ன
முழுவாகடத்தின்முறை.

மொழிக்குமுதலெழுத்தே முன்உதிக்கும்அங்கே
பழிக்குஅவன்தன்னிலேயும் பார்த்து-வழிபெரவே
பேரால்வருவனவும் பேதம்அறிந்துணர்வுற்
ரூராய்ந்து சொல்வ தறி.

பூர்வபட்சத்தின் அட்சரப்பட்சி.

அம்முதல்நான்கும்வல்லூரில் முதல்இரண்டாந்தை
உம்முதல்இரண்டுகாகம்ஊண்கோழி எம்முதல்ரெண்
டுற்றமயில்ஒம்முதல்ரெண்டும்குறில் ஆண்பெண்நெடிதாம்
ஒன்ருய்த்தம்பேடென்றுணர்.

(இ-ள்.) பூர்வபட்சம் அட்சரபட்சியாவது அரசும் வல்லூருரும் இகரம் ஆந்தையாகும் உகரம் காகமாகும் எகரம் கோழியாகும் ஒகரம் மயிலாகும் இதில் ரெண்டுக்குறிலாகும் ஆண்பெண் நெடியது பேடு என்றறியவும் (எ-று.) (5)

அமரபட்சத்தின் அட்சரப்பட்சி.

இம்முதல்இரண்டும்வல்லூரும் முதல்இரண்டாந்தை
ஒம்முதல்இரண்டுஉயர்காகம் அம்முதல்-நான்
காகம்இவைகோழி ஆனமயில்எம்முதல்
ரெண்டாகும் அமரபட்சமே.

(இ-ள்.) அமரபட்சம் அட்சரப்பட்சியாவது இகரம் வல்லூருரும் உகரம் ஆந்தையாகும் ஒகரம் காகமாகும் அகரங் கோழியாகும் எகரம் மயிலாகும் இவ்விதம் அமரபட்சத்திற்காகு மென்பர் (எ-று.) (6)

பூர்வபட்சம்பகல்வாரம் 7-ற்கும்ஊண்பட்சி.

செவ்வாய்அருக்கன்வல்லூறாண்சிந்தைதிங்கள்புதன்ஆந்தை
கவ்வாய்வியாழங்காரண்டமகருதும் வெள்ளிக்கோழியதாம்
வவ்வார்சனியின்மயில்உண்ணும் மானேபூர்வப்பகலிதல்
இவ்வாரின்நூல்குருமுனிவர் இயல்பலுற்றூர்உலகுக்கே.

(இ-ள்.) செவ்வாய், ஞாயிறு, வல்லூர் ஊணும் திங்கள், புதன், ஆந்தை உண்ணும் வியாழம் காகமுண்ணும் கோழி வெள்ளியிலுண்ணும்

சனிவாரம் மயில் உண்ணும் இவை பூர்வபட்சம் பகலின் தொழிலாகும் இவ்வாறு குருமுனியானவர் இயம்பினர் உலகோர்க்கும் (எ-று.) (7)

அமரபட்சம்பகல்வாரம் 7-ற்கு ஊண்பட்சி.

திங்கள்சனிமதியில்ஆம்சேய் அழிக்கன்கோழியதாம்
பொங்குபுதன்காகம் போஜனம்ஆம்-மச்சையே
அந்தணனுக்காந்தை அணிபுகர்வல்லூரு
சந்ததமும்புற்பகற்கே சாற்று.

(இ-ள்.) திங்கள் சனிவாரம் மயில் உண்ணும் செவ்வாய்ஞாயிறுக் கோழி உண்ணும் புதவாரம் காகமுண்ணும் வியாழம் ஆந்தை உண்ணும் வெள்ளியில் வல்லூர் உண்ணும் இவை அமரபட்சத்திற்காகு மென்பர்.

பூர்வபட்சம் இரவுவாரம் 7-ற்கும் படுபட்சி.

ஞாயிறுசெவ்வாய்காரண்டம் நல்லபுத்திமதிகோழி
மாயப்பெண்ணேமயில்ஆகும் வளரும்வெள்ளிவல்லூரும்
ஓயாசஆந்தைசனிஉண்ணும் உயருங்கங்குல்உணர்க்கென்ன
ஆயுர்வேதக்குறுமுனிவர்அருளால் அறைந்தஅரும்பொருளே.

(இ-ள்.) ஞாயறு செவ்வாய் காகமாகும் புதன் திங்கள் கோழியாகும் வியாழம் மயிலாகும் வெள்ளிக்கு வல்லூருகும் ஆந்தை சனிவாரமாகும் இவ்விதமாகப் பூர்வபட்சம் இரவில் உண்ணுமென குருமுனியானவர் புகன்றனர் (எ-று.) (9)

அமரபட்சம்இரவுவாரம் 7-ற்கும்ஊண்பட்சி.

மந்தன்சோமன் கோழியின்ஊண்மானே வெள்ளிமயில்உண்ணும்
புந்திஆந்தைபோஜனம்ஆம் ரென்னிற்காகம்இறையருந்தும்
சிந்தைமகிழ்ந்தசேய்வுரவு தினத்தில்வல்லூறமுதுசெய்யும்
அந்தித்தோன்றும்பிற்பக்கத்தடைவுசொன்னேம் அறிநன்றே.

(இ-ள்.) சனி திங்கள் கோழியுண்ணும் வெள்ளியில் மயில் உண்ணும் புதவாரம் ஆந்தை உண்ணும் வியாழம் காகமுண்ணும் செவ்வாய் ஞாயர் வல்லூர் உண்ணும் இவை அமரபட்ச மிறவிற்குச் சொல்லினர்.

பூர்வபட்சவாரம் 7-ற்கும் படுபட்சி.

அருக்கன்வெள்ளிமுனிவரணம்அணிசேர் செம்பொன்காரியுடன்
நெருக்கும்வல்லூறேமரணம் நெறியாய்காகம்மதிமரணம்
செருக்கஞ்செவ்வாய்கோழியதாம்சேர்ந்தபுத்திமயில்மரணம்
கருக்கும்குழலாய்முறபக்கம் கடிகையறுபான்சாவாமே.

(இ-ள்.) ஞாயர் வெள்ளியில் ஆந்தை மரணமாகும் வியாழம் சனி வாரம் வவ்லூர் மரணமாகும் காகம் திங்களின் மரணமாகும் செவ்வாயில் கோழி மரணமாகும் புதன்வாரம் மயில் மரணமாகும் இவை பூர்வபட்சம் கடிகை அறுபதுக்கும் மரணமாமென்பர் (எ-று.) (11)

அமரபட்சம் 7-ற்கும் படுபட்சி.

கூறிடும்திங்கள்ஆந்தை குலவுசெய்வல்லூருகும்
மீறியஅருக்கன்காகம் தெளியும்புதனுமஞ்சை
ஏறியசனிவியாழங்கோழியாம் இயம்புங்காலையதனை
ஆறுபத்தாகும்கன்னல் அளவுசாமம்அமரபட்சம்.

(இ-ள்.) திங்களில் ஆந்தை மரணமாகும் செவ்வாயில் வல்லூருகும் ஞாயறு காகம் மரணமாகும் புதவாரம் மயிலாகும் சனி வியாழம் கோழி மரணமாகும் இவை அமரபட்சம் இரவு அறுபது நாழிகைக்குமாம் (எ-று.)

பூர்வபட்சம் பகல்இரவு 2-ற்கும்-பட்சிஒன்றின் தொழில்முறை.

உண்டுநடந்துஉலகாண்டு நித்திரையாய்த்
தண்டம்உறமுற்பகலிற் சாவாகுமுண்டே
அரசாம்இறந்துவழி அன்னேவரம்போம்
இரவாய்உரங்கும்இடை.

(இ-ள்.) பூர்வபட்சம் பகலிரவில் பட்சிகளின் தொழிலாவன முதலில் உண்டு இரண்டாவது நடந்து மூன்ருவது அரசாகி நான்காவது நித்திரையாகி முற்பகலில் மரணமாகும் ஆகியபின் உண்டு அரசாகி மரணமடைந்து நடையாகி அன்றிரவு நித்திரையாகும் (எ-று.) (13)

அமரபட்சம்இரவு 2-ற்கும் பட்சிஒன்றின் தொழில்.

உண்டுடனேசெத்துமுறங்கிஅரசாண்டு
மண்டிவழிநடக்கும்மாமயிலே-அன்றிரவில்
உண்டும்உரங்கிஉடனேகடந்திரந்து
கண்டரசன்ஆகும்எனக்கண்.

(இ-ள்.) அமரபட்சம் பகலிரவு பட்சிகளின் தொழிலாவன முதற் பட்சியானது உண்டு மரணமாகி நித்திரைக்கொண்டு அரசாண்டு நடக்கும் அன்றிர்வில் உண்டு நித்திரையாகி நடந்து மரணமாகி அரசாளுமென்றனர் (எ-று.) (14)

பட்சம் 3-ற்கும் கடைநிலைப் பட்சிகள்.

அறிவானபூருவத்தின் மரணம்உண்ணும்
அப்பனே அவ்விரவில்தூக்கம்உண்ணும்

கரியான அமரத்தில் நடைதான் உண்ணும்
கண்டுசொன்ஞேம்பின் இரவில் அரசன் உண்ணும்
வரியான அட்சரங்கள் பிரித்துப்பார்த்தோர்
வகை அரிவார்மற்றோர்கள் அறியமாட்டார்
நெறியாகச் சொன்ஞேர்கள் பெரியோர்ஐயா
நிட்சயமாய்க் கும்பமுனி நிகழ்த்திஞரே.

(இ-ள்.) பட்சம் இரண்டிற்கும் கடைநிலை பட்சிகள் எவையெனில் பூர்வபட்சத்தில் மரணமானபட்சி உண்ணும் அன்றுயிரவில் நித்திரையாகயிருந்தபட்சி யுண்ணும் அமரபட்சத்தில் நடைபட்சி யுண்ணும் அன்றுயிரவில் அரசுபட்சி யுண்ணும் இதனை அட்சரங்களைப் பிரித்துப் பார்த்தோர்கள் அறிவாரேயொழிய மற்றவர்கள் அறியமாட்டார் இதனை நெரியாகச் சொன்ஞேர் பெரியோர்களாகும் நிட்சயமாகக் கும்பமுனியும் நிகழ்த்திஞர் உலகோர்க்கும் (எ-று.) (15)

பூர்வபட்சம்பகல்சாமம் 5-க்கும் பட்சிகளின் 5-ன் தொழில் முறை

வலி உண்ண ஆந்தைவழி நடக்கக்காகம்
உலகாளும் கோழி உறக்கம்கலாபமயில்
செற்றுப்போம் என்றே செயல் உரைத்தால் பூருவத்தில்
உற்றபலன் ஆம் என்றுணர்.

(இ-ள்.) பூர்வபட்சம் பகல் சாமம் (ரு) ற்கும் பட்சிகள் (ரு) ல் தொழில் முறைகளாவது யெவ்விதமென்னில் வல்லூர் ஊணுகும் ஆந்தை நடக்கும் காகம் அரசாகும் கோழி நித்திரையாகும் மயில் மரணமாகும் பூர்வபட்சத்தில் (எ-று.) (16)

நினைவின் உண்ணநேர் நடக்கவல்லூர்
தினிதாந்தையே அரசன் அகத்தனியனுப்
கறுத்தகோ தூங்கி விழக்காசினியிற்கோழி
இறக்கம் முற்பக்கப்பகல்.

(இ-ள்.) மயில் ஊணுகை நடைவல்லூருக ஆந்தை அரசாள காகம் நித்திரையாக கோழிமரணமாகும் பூர்வபட்சத்தின் பகலில் (எ-று.) (17)

அறவான்கோழி அமுதுண்ணத்தோகை
விரிவாய் நடக்கவலிவேந்தாய்தெறி ஆந்தை
நித்திரை ஆம்காகம் நெடிதிரக்கு பூருவத்தின்
நித்தபலன் ஆகும்நினே.

(இ-ள்.) கோழி ஊணுகவும் மயில்நடக்க வல்லூறு அரசாள ஆந்தை நித்திரைக்கொள்ள காகம் மரணமாகும் பூர்வபட்சம் பகலின்தொழிலாகும் (எ-று.) (18)

பூருவடக்கத்தின் பகலிற்காகம் பொசிக்க
ஊர்நடக்கக்கோழி நீலகாளத் தேர்மயில்தான்
வல்லூறுறங்கமடிந்துவிடும் ஆந்தையது
நல்லாய் நவில்வதறி.

(இ-ள்.) பூர்வபட்சத்தின் பகலில் காகம் ஊணுகும் நடை கோழியாகும் அரசுமயிலாகும் வல்லூர் நித்திரையாகவும் ஆந்தை மரணமாகுமென்பர் (எ-று.) (19)

ஊண்ணப்படின் ஆந்தை ஊர்நடக்காக்கையது
மண்ணுளக்கோழிமயில் தூங்கப்பெண்ணே
தவியாத வல்லூறுதான் இறக்கும் கண்டாய்
இவை பூர்வப்பகல் ஆம் எண்.

(இ-ள்.)ஊண் ஆந்தையாக நடை காகமாகும் அரசுக்கோழியாகும் மயில் நித்திரையாகும் வல்லூறு மரணமாகும் பூர்வபட்சம் பகலிற்காமென்றனர் (எ-று.) (20)

பூர்வபட்சம் இரவுஜாமம் 5-ற்கும் பட்சிகள் 5-ன் தொழில் முறை.

அமுது செய்யக்காக்கை அடர் ஆந்தைசெல்ல
கமா இடும்வல்லூறரசன் ஆகத்திமிரம் உற்றுத்
தூங்கிவிழத்தோகையது துஞ்சுவிழுமேகோழி
ஈங்கு முறபக்கத்திரவினில்.

(இ-ள்.) பூர்வபட்சம் இரவு சாமம் (ரு) க்கும் பட்சிகள் (ரு) ன் தொழில் முறைகளாவது எவ்விதமெனில் ஊண் காகமாகும் ஆந்தை நடக்கும் வல்லூறு அரசாளும் நித்திரை மயில் கொள்ள மரணம் கோழியாகும் இவை பூர்வபட்சம் இரவிற்காகும் (எ-று.) (21)

தோகை எண்ணக்கோழித்தொடர்ந்துப்பயணம் உறக்
காகம் அரசாள முனிக்கண்டுயிலச்சாகுமே
வல்லூறு முற்பக்கமா இரவில் ஆம் என்றார்
சொல் ஊறும் முன்னோர் துணிந்து.

(இ-ள்.) மயில் உண்ண கோழி நடையாகும் காகம் அரசுசெய்யும் ஆந்தை நித்திரையாகவும் மரணம் வல்லூருகவு மிருக்கும் பூர்வபட்சம் இரவினில் யென்றனர் (எ-று.) (22)

ஆந்தை உண்ணவல்லூறது நடக்கத்தோகைமயில்
வேந்தனும் கோழிதுயிலும் மாய்ந்துவிடும்

காகம்அது பக்கத்திரவில் இவைதான்
ஆகும்என்றார் முன்னோர் அறிந்து.

(இ-ள்.) ஆந்தை உண்ண வல்லூறு நடையாக மயில் அரசாளும் கோழி நித்திரையாகும் மரணம் காகமாகும் இவை பூர்வபட்சம் இரவில் செய்யுந்தொழிலென முன்னோர் கூறினர் (எ-று.) (23)

கோழிஉண்ணக் காகம் குலாவி வழிநடக்க
ஏழுலகும் ஆந்தை இனிதாளத் தாழ்வில்லா
வல்லூறு தூக்கம் மயில்மடியும் முன்இரவில்
வல்லோர் உரைத்த வழி.

(இ-ள்.) கோழி உண்ண காகம் நடையாகும் ஆந்தை அரசாகும் வல்லூறு நித்திரையாகும் மயில் மரணமாகும் பூர்வபட்சம் இறவினிலென்றும் வல்லோர்கள் கூறினர் (எ-று.) (24)

வல்லூறு தான்உண்ண வசன மயில்நடக்கப்
பல்ஆன்ற கோழி பதிஆள நல்லாய்க்கேள்
ஆகல் உறும்பாகம் அனல்செய் ஆந்தையாம்
எதில்முற் பக்கமிர வில்.

(இ-ள்.) வல்லூறு உண்ண மயில் நடையாகும் கோழி அரசாளும் காகம் நித்திரையாகும் மரணம் ஆந்தையாகும் பூர்வபட்சம் இரவின் தொழிலாமெனப் புகன்றனர் (எ-று.) (25)

அமரபட்சம் பகல் ஜாமம் 5-ற்கும் பட்சிகள் 5-ன் தொழில்முறை.

மயில்உண்ணக் கோழிஅது மண்ஆளக் காகம்
பயிர்அழியன்நகைதான்ஒடச்சயனம்
சிகரம்உறும் வல்லூறு தான்செயவே செய்யும்
பகரும்அமர பட்சத்தின் பகல்.

(இ-ள்.) அமரபட்சம் பகல் ஜாமம் ரு-க்கும் பட்சிகள் ரு-ன் தொழில்களாவன மயில் உண்ண கோழி அரசாகும் காகம் நடையாகும் ஆந்தை நித்திரையாகவும் வல்லூறு மரணமாகுமெனப் புகன்றனர் அமரபட்சம் பகற்கும். (எ-று.) (26)

ஆந்தைஉண்ண வல்லூறரசுசெய மாமயில்தான்
மாய்ந்துவிடக் கோழி வழிநடக்க நேர்ந்ததொரு
காகமே நித்திரையாங் காணும் அமரபக்கத்
தாகும் பகலில் அறி.

(இ-ள்.) ஆந்தை உண்ண வல்லூறு அரசாகும் மயில் மரணமாகும் கோழி வழி நடக்கும் காகம் நித்திரையாகவும் அமரபட்சம் பகலின் தொழிலாகும் மென்பர் (எ-று.) (27)

அமுதுசெயக்கோழி அரசாளக்காகம்
மமதை உறும் ஆந்தைமடியத்-திமிரமுடன்
வற்புறும்வல்லூறேக மாமயில் உறங்கிவிடும்
பிற்பகலில் ஈங்கிதனைப்பேசு.

(இ-ள்.) கோழி உண்ண காகம் அரசாகும் ஆந்தை மரணமாகும் வல்லூர் நடையாகும் மயில் நித்திரையாகும் அமரபட்சம் பகலிற்குத் தொழிலாகுமென்றனர் (எ-று.) (28)

உணவள்ளவல்லூறு காளமஞ்சை
பிணம் ஆக்ககோழி பெரிதும்தனை இன்றிக்
காக்கை நடந்து செலக்கண்டாந்தை கண்டுயிலும்
போக்கும் பாலிற்புகல்.

(இ-ள்.) வல்லூர் உண்ணமயில் அரசாகும் ஆந்தைமரணமாகும்காகம் நடையாகும் ஆந்தை நித்திரையாகும் அமரபட்சம் பகலின் தொழிலாகும்.

கொடுவுண்ண ஆந்தைகுவலயம்தான் ஆள
மடிவாகவல்லூறு மஞ்ஞைநடை அதுவாம்
ஒப்பரியகோழி ஊங்குமே பிற்பக்கத்
தப்பகலில் ஆம் என்றறி.

(இ-ள்.) காகம் உண்ண ஆந்தை அரசாகும் மரணம் வல்லூறாகும் மயில் நடையாகும் கோழி நித்திரையாகும் அமரபட்சம் பகலின் தொழிலாகுமென்றனர் (எ-று.) (30)

அமரபட்சம் இரவு ஜாமம் 5-ற்கும் பட்சிகள் 5-ன் தொழில் முறை

உண்டு உண்ணமஞ்சை உலகாளவல்லூறு
மண்டலத்தில் ஆந்தை மடியவே-கண்டுகொடி
ஊக்கு செலக்கோழி உறங்கிவிடும்மேதியினில்
ஏர்க்கும் ஒருபின் இரவினில்.

(இ-ள்.) அமரபட்சம் இரவுசாமம் ரு-க்கும் பட்சிகள் ரு-யின் தொழில் முறையாவன மயில் உண்ண வல்லூறு அரசாகும் ஆந்தை மரணமாகும் காகம் நடையாகும் கோழி நித்திரையாகும் அமரபட்சம் இரவின் தொழிலாகு மென்றனர் (எ-று.) (31)

பொசிக்கவலியன் புவி ஆள ஆந்தை
நசிக்கநற்காகம் நடக்கத்-தூசிக்கோரு
தோகைதுஞ்சும்பின் இரவில்தோகால்மலயம்உறு
வாகைசேர்மாமுனிவன் வாக்கு

(இ-ள்.) வல்லூறு உண்ண ஆந்தை அரசாகும் காகம் மரணமாகும் கோழி நடையாகும் மயில் நித்திரையாகும் அமரபட்சம் இரவின் தொழிலாகுமெனக் குருமுனிவர் (எ-று.) (32)

முனி உண்ணக்காகம் முயன்றுளச்சேவல்
இனிசாகத்தோகைமயில் ஏகத்-தனியான்
வலியனே கண்ணுறங்கும்மாதே உலகிற்
பெலயீனப்பின் இரவினில்.

(இ-ள்.) ஆந்தை உண்ண காகம் அரசாகும் கோழி மரணமாகு மயில் நடையாகும் வல்லூறு நித்திரையாகும் அமரபட்சம் இரவின் தொழிலாகுமென்பர் (எ-று.) (33)

காகம் உண்ணக்கோழி அதுகாசியை ஆளமயில்
சாகவலுவல்லூருகான் நடக்க-யோகம் உள்ள
நித்திரையாம் பன்னிரவில் நிர்மல சுழுத்திஆம்
பத்திரையாம் சொன்ன நெறி.

(இ-ள்.) காகம் உண்ண கோழி அரசாகும் மயில் மரணமாகும் வல்லூறு நடையாகும் ஆந்தை நித்திரையாகும் அமரபட்சத்தின் இரவில் செய்யுந் தொழிலாகும் (எ-று.) (34)

போசனம் ஆகக்கோழி பூவுலகாளத்தோகை
நாசம் உறும்வல்லூறுநல் ஆந்தையோசனையாய்
தான் செல்லுங்காகம் சயனம் அதாம்பின்னிரவில்
மான்செலும் கண்ணாய் மதி.

(இ-ள்.) கோழி உண்ண மயில் அரசாகும் வல்லூறு மரணம் ஆந்தை நடையாகும் காகம் நித்திரையாகும் அமரபட்சத்தின் இரவின் தொழிலாகுமென்பர் (எ-று.) (35)

பூர்வபட்சம் பகல்தொழில் முறை 5-ற்கும் நாழிகை.

ஊண்பட்சிக் கொன்றரை ஆம் ஒன்றேகால்தான்நடைக்
ஏணில் அரசுக்கிரண்டு-வாணுதலாய் [காகம்
தூங்கும் அதற்கோர் முக்கால்துஞ்சும்அதற்கோ அரையாம்
பாங்குடைய முற்பகலினில்.

(இ-ள்.) ஊண்பட்சிக்கு நாழிகை $1\frac{1}{2}$-ஆகும் $1\frac{1}{4}$-நடைக்காகும் அரசுக்கு நாழிகை 2-ஆகும் தூக்கத்திற்கு முக்கால் ஆகும் மரணத்திற்கு நாழிகை $\frac{1}{2}$-ஆகும் இவ்விதமாக பூர்வபட்சத்திற்குக் கண்டு சொல்லவும்.

பூர்வபட்சம் இரவு தொழில் முறை 5-ற்கும் நாழிகை.

உண்பானுக்கென்றே நால்தான் நடைக்கும்
குண்ணுள அரசுக்கொன்ருய் மால்பெண்பாவான்
நித்திரைக்கொன்ரென்றரையே நின்றதுபோற் கொன்றும் அதற்
கித்தலத்தின் முன் இரவினில்.

(இ ள்.) ஊண்பட்சிக்கு நாழிகை 1-முக்காலாகும் நடைக்கு 1-ஆகும் அரசுக்கு $1\frac{1}{4}$-லாகும் நித்திரைக்கு $1\frac{1}{2}$-ஆகும். மரணத்திற்கு நாழிகை 1-ஆகும் இவை பூர்வபட்சம் இரவிற்குப் பார்த்துக்கொள்ள வேண்டும். (37)

அமரபட்சம் தொழில்முறை 5-ற்கும் நாழிகை.

ஊண்கடிகைரெண்டாகும் ஒத்தநடை ஒன்றரையாம்
ஆணின் அரசுமுக்கால் ஆனதோவீணின்
உறக்கம் அறைநாழி உயிர்போக்கொன்றே கால்
பறக்கும் பிற்பக்கல்பகல்.

(இ-ள்.) ஊணிற்கு நாழிகை 2-ஆகும் நடைக்கு $1\frac{1}{2}$-ஆகும் அரசுக்கு $\frac{3}{4}$-லாகும் உறக்கத்திற்கு $\frac{1}{2}$-ஆகும் மரணத்திற்கு நாழிகை $1\frac{1}{2}$-ஆகும் இவ்விதமாக அமரபட்சம் பகலிற்கு பார்த்து சொல்லவேண்டும் எ-று. (38)

அமரபட்சம் இரவுதொழில் முறை 5-ற்கும் நாழிகை.

ஊண் எழுக்கால்போக்கெழுத்தால்ஊராள்வதோர்முக்கால்
மாணின்றுறங்கும் அதுமுக்கால் சேணின்று
சாகும் அதுநாற்கால் ஆகுமாம்கற்று
ஏகும் பிறக்கமிரவில்.

(இ-ள்) ஊணிற்கு 1-முக்கால் நாழிகையாகும் நடைக்கும் 1-முக்காலாகும் அரசுக்கு $\frac{3}{4}$-லாகும் ஊக்கத்திற்கும் $\frac{3}{4}$-லாகும் மரணநாழிகை 1-ஆகும் இவ்விதமாக அமரபட்சம் இரவிற்குக் கண்டுரைக்கவேணும்.

பூர்வபட்சத்தின் திதி பட்சி.

பன்ஞென்ருரொன்றுவலிபன்னிரண்டேரெண்டாந்தை
பனமுறை மூன்றெட்டுகாகம் அதாம்பன்னுன்கு
நான்கொன்பது கோழிப்பதினைந்தைந்தோரிருபத்
தான்மயில் பூருவத்தில் ஆம்.

(இ-ள்.) 11-வது திதியும் 6-வது திதியும் 1-வது திதியும் வல்லூருக்காகும் 12-வது திதியும் 2-வது திதியும் ஆந்தைக்காகும் 3-வது திதியும் 8-வது திதியும் காகத்திற்காகும் 14-வது திதியும் 4-வது திதியும் 9-வது திதியும் கோழிக்காகும் 15-வது திதியும் 5-வது திதியும் 10-வது திதியும் மயிலுக்காகும் இவ்விதமாகப் பூர்வபட்சத்திற்குப் பகலில் காண்கவும்.

அமரப்பட்சத்தின் திதி பட்சி.

பதினைந்து பத்தைந்து வல்லூறு நான்கென்
பதுவதினுன்காந்தை மூன்றெட்டும் மூன்று
வாயாசம் இரண்டேழ்பனிரெண்டு கோழிமயில்
தேய்வுபன்றென்றூறுமே.

(இ-ள்.) 15-வது திதியும் 10-வது திதியும் 5-வது திதியும் வல்லூறுக்காகும் 4-வது திதியும் 9-வது திதியும் 14-வது திதியும் ஆந்தைக்காகும் 3-வது திதியும் 8-வது திதியும் கோழிக்காகும் 2-வது திதியும் 12-வது திதியும் கோழிக்காகும் மயிலுக்கு 11-வது திதியும் 6-வது திதியும் அமரபட்சத்திற்காகும் (எ-று.) (41)

பூர்வபட்சம் அமரபட்சம் 2-க்கும் நட்சேத்திரபட்சி.

ஐந்தாறைந்தாறச்சு வினிநேர் ஆறைந்
தைந்தாமறைந்தாக இரேவதி நேற்றுந்திய
பட்சமும் பின்பட்சம் முறையே பகருவர்காண்
பட்சி ஐந்தும் உள்ளபடி.

(இ-ள்) அசுவனிமுதல் 5-நட்சத்திரமும் வல்லூறுக்காகும் திருவாதிரைமுதல் 6-நட்சத்திரமும் ஆந்தைக்காகும் உத்திரநட்சத்திரமுதல் 5-ஆங்காகத்திற்காகும் அனுஷம் நேர் 5-வது கோழியாகும் திருவோணம் நேர் 6-ம் மயிலாகும் இவ்விதமாக பூர்வபட்சத்திற்குப் பார்க்கவும்.

பூர்வபட்சம் இராசிபட்சி.

அழிவுடையாய் ஆடரித்தேன் வல்லூறுஞெண்டே
டுறும்மிதுனகன்னிமறையோன் பறைசிலைமீன்

---

* தனைபிறிக்குமிடத்து சொற்சொல்லாகப் பிரித்தலினுலே பிறிவுபட்டமெய்யையும் உயிரையும் ஒன்றுபடுத்தி உயிர்மெய்யிர்க்கும் தோன்றின மெய்யைக்கெடுத்தும் பிரித்துக்கொள்ள.

காகம் எருதுதுலேகோழி மகரம்கும்பத்
தோகைமுதற்பக்கம் இதாம்சொல்.

(இ-ள்.) மேஷம் சிங்கம் விருட்சிகம் வல்லூறுக்காகும் கடகம் மிதுனம் கன்னி ஆந்தைக்காகும் தனுசு மீனம் காகத்திற்காகும் ரிஷபம் துலாம் கோழிக்காகும் மகரம் கும்பம் மயிலுக்காகும் இவ்விதமாக பூர்வ பட்சத்திற்கு பார்க்கவும் (எ-று.) (43)

அமரபட்சம் இராசிபட்சி.

எருதுதுலேமீன வல்லூறியாழ்சிலே ஆந்தை
அரி அரிவைமான்காகம் ஆகும்மடியுடன்தேன்
வாரணம் ஆம்ஞொண்டு மயிர்பிறபக்கத்
தாரணநூல் சொன்னதறிவு.

(இ-ள்.) ரிஷபம் துலாம் மீனம் வல்லூறுக்காகும் மிதுனம் தனுசு விருச்சிகம் ஆந்தைக்காகும் சிங்கம் கன்னி மகரம் காகத்திற்காகும் மேஷம் கும்பம் கோழிக்காகும் கடகம் மயிலுக்காகும் இவ்விதமாக அமர பட்சத்திற்குப் பார்க்கவேண்டும் (எ-று.) (44)

பூர்வபட்சம் திசைபட்சி.

சொல் ஊறும் பூருவபக்கத்தில் தொல்கிழக்கு
வல்லூறுதெற்காந்தைவாயசம் மேற்கல் ஊறும்
கூந்தல் நல்லாய் வடக்குகோழி ஆம்மதித்து அது
வாமந்தமயில் ஆதமதி.

(இ-ள்.) பூர்வபட்சம் திசைபட்சியாவது கிழக்கு வல்லூறுகும்தெற்கு ஆந்தையாகும் மேற்கு காகமாகும் வடக்குக் கோழியாகும் மயில் ஆகாசமாகும் இவ்விதம் பூர்வபட்சத்திற்கு பார்க்கவேண்டும் (எ-று.) ()

அமரபட்சம் திசைபட்சி.

அமரபக்கம் தன்னில் கிழக்காகம்
எமன்தன்திசை அதுதான் கோழி சூமாரன் உறும்
வாகனமேற்காகம் வடக்காந்தை மத்திவலி
ஆகும் எனச்சொன்னர் அறிந்து.

(இ-ள்.) அமரபட்சம் திசைப்பட்சியாவது கிழக்குக் காகமாகும் தெற்கு காகமாகும் மேற்கு கோழியாகும் வடக்கு ஆந்தையாகும் மத்தியம் வல்லூறுகு மென்பர் (எ-று.) (46)

உவர்க்கால் திசைபட்சி.

மத்திபத்திவல்லூறுவாழ் ஆந்தைதெற்காகும்
ஒத்ததொரு கிழக்காகம் இத்திசையில்
மேற்காகம் கோழி சிறந்தமயில் மேற்காகம்
எக்காலும் சாற்று இயல்.

(இ-ள்.) உவர்க்கால பட்சியானது மத்தியில் வல்லூறுகும் தெற்கு ஆந்தையாகும் கிழக்கு காகமாகும் மேற்கு கோழியாகும் மயில் தெற்காகும் எக்காலமுங் கூறுவாய் (எ-று.) (47)

பூர்வபட்சம் அங்கப்பட்சி.

மிதம் ஆகும் கூந்தல்விரல் உடன்தோள்மார்பு
துதிசேர்க்கப்பட்டை குய்யம்தோகைசதுர் ஆணி
நெற்றிதோன்மார்பின் கீளநீள பிரிஊரு இவை
உற்றதொரு கோழிஒது.

(இ-ள்.) கூந்தல் விரல் உடல் தோள் மார்பு சோகப்பட்டை குய்யம் மயிலாகும் நெற்றி தோள் மார்புக்குப்பின் கீழ்ப்பிடரி ஊருஇவைக் கோழிக்காகும்யென ஓதவேண்டும் (எ-று.) (48)

ஓதரியா நாசிவிழிமுழங்கை உந்திமுது
கேதில் முழங்கால்காகம் என்பரே போதுருவாய்
நல்லமுன்கைபின் புயக்கம் நாட்டும் நடுமுதுகு
வல்லகொண்டை யாந்தை யதுவாம்.

(இ-ள்.) நாசி விழி முழங்கை உந்தி முதுகு முழங்கால் காகமாகும் முன்கை பின்புயம் நடுமுதுகும் கொண்டை ஆந்தைக்காகுமென்பர். (49)

ஆமேகழுத்தும்மறுகட்டு கீழாம்கை
நாமேவலதுபக்கம் நலமறங்கு-பூங்குழலாய்
வல்லூறு முற்பக்கமாம் அங்கபட்சி அது
கோலவாய் முழுதும் துணிந்து.

(இ-ள்.) கழுத்து மணிக்கட்டு கீழ்கை வலதுபக்கம் மருங்கு வல்லூறுக்காகும் இவ்விதமாகப் பூர்வபட்சம் தனக்குத் துணிந்துச் சொல்வாய்.

அமரபட்சத்தின் அங்கப்பட்சி.

துணிந்துரைப்பாய் கண்ட மணிகட்டுந்தோளும்
மணந்த இடைபூம் கணக்காய் வல்லூறுணர்ந்தபடி

நங்கைவயிறு நடுமுதுகுகெண்டக்கால்
அறகுழலாய் ஆந்தை எனலாம்,

(இ-ள்.) கண்டம் மணிக்கட்டு தோள் இடைபுறங் கணுக்கால் வ
ரூகும் கை வயறு நடுமுதுகு கெண்டைக்கால் ஆந்தைக்காகுமென்

குழல் ஆர்ந்தநல்லாய் கேள்மார்பின்கீழ்தொடை
எழில் ஆர்ந்தமுன்கையோ தேனைமுழங்கையோ
டான்றவிரலுடனே கைகீழ்வலபக்கம்
ஏன்ற எழில் முதுகோடிங்கு.

(இ-ள்.) மார்பின்கீழ் தொண்டை முன்கை முழங்கைவிரல் கை
வலதுபக்கம் முதுகு காகத்திற்காகும் (எ-று.)

ஈங்குரும் நாசிவிறிவாய் இடப்பக்கம்
ஒங்கும் முழங்கால்காத ஓதுவார் தீங்கில்நெற்றி
கைபட்டமார்புபிடரி துடைகார்குழலான்
செப்பும் உறும் கோழி எனச்செப்பு.

(இ-ள்.) நாசி இடதுபக்கம் முழங்கால் நெற்றி மார்பு பிடறி அ
குழல் உரு கோழியாகுமென்பர் (எ-று.)

செப்பும் தலைதோள் சிறந்தகைகீழ் கூந்தலுடன்
மெய்ப்புடைய குய்யன் வியன்மயில் ஆம்-பிற்பக்கம்
தன்னில் தொடுகுறியாய்ச் சற்றும் அங்கம்பட்சி இவை
அன்னநடைமாதே அறி.

(இ-ள்.) தலை தோள் கைக்கீழ் கூந்தல் குய்யம் இவை மயிலுக்கா
கும் இவ்விதமாக அமரபட்சத்திற்குப் பார்த்துப் பலாபலன் சொல்ல
வேண்டு மென்பர் (எ-று.) (54)

அங்கபட்சியில் இன்னம் ஒரு அடைவு அகார சப்தம்
உடையான் அங்கப்பட்சி.

காணும் அகாரம்பேரான் உடையகண்டம் முதல்
காணும் சிரசாந்தைக் காகம்வேணும்
கோரு உடம்பு மயில்முன்பின் ஆகும் வலியன்
தாழ்வில் இருசாந்தான்.

(இ-ள்.) காணும்படியாகிய அகாரசத்தத்திற்கு பெயருடையவர்க
ளின் கண்டமுதல் சொல்லுவேன் சிரசு ஆந்தை காகம் உடம்பு மயில்
முன்பின் வல்லூற் இருசரமாகும் (எ-று.) (55)

இராகசப்தம் உடையான் அங்கப்பட்சி.

தானும் இகாரப்பேரான் உடையகண்டம் மூடல்
காணுத தலைக்காகம் கைக்கோழி-மானே
உடனே மயில்முன்பின் வல்லூறுகால்தான்
அடல் ஆந்தை அந்தும் அனல்ஆம்.

(இ-ள்.) இகாரசத்தமுடையப் பேரானவனுக்கு உடையக் கண்ட முதல் சொல்வேன் தலைக்காகம் கை கோழி உடல் மயில் முன்பின் வல்லூர் கால் ஆந்தையாகும் (எ-று.) (56)

உகாரசப்தம் உடையான் அங்கப்பட்சி.

அண்டும் உகாரப்பேராப்பேரான் உடையதென்னிமுதல்
கண்டம்வரைக்கோழி ஆந்தைமயிலாம் உண்டான
வல்லூறுடல் முன்பின் வாழுமே ஆந்தை அது
நல்லகால்காகம் எனநாட்டு.

(இ-ள்.) உகாரசத்தமுடையப் பேரானவனுக்கு உடையச்சென்னி முதலாகச்சொல்வேன் கண்டம் வரைக்கோழி கை மயில் வல்லூர் உடல் முன்பின் ஆந்தை முதகு காகமாகுமென்பர் (எ-று) (57)

எகாரசப்தம் உடையான் அங்கப்பட்சி.

நாட்டும் எகாரப்பேருன் உடையசென்னிமுதல்
ஊட்டு நகைவல்லூறுடல் ஆந்தை ஈட்டிடும்முன்
பின் ஆகும் காகம் பெருத்ததோர் கோழிகால்
நன்னுதலால் கண்டு நவில்.

(இ-ள்.) எகாரசத்தமுடையப் பேரானவனுக்குச் சென்னிமுதலாகச் சொல்வேன் கை வல்லூருகும் உடல் ஆந்தையாகும் முன்பின் காகம் கோழி கால்யெனச் சொல் (எ-று.) (58)

ஒகாரசத்தமுடையான் அங்கபட்சி.

நவிலும் ஒகாரத்தின் சென்னிவலியன்
கவருங்கையாந்தை உடல் காகம் புவியதனில்
தேனே முன்பின்கோழி தேவர்க்கெல்லாமடுக்கும்
மானே மயில்கால்மதி.

(இ-ள்.) ஒகாரசத்தமுடையப் பேரானவனுக்குச் சென்னி வல்லூருகும் கை ஆந்தை உடல் காகம் முன்பின் கோழி தேவர்களுக்கெல்லாம் அடுக்கும்படியான மயிலுக்குக் காலாகுமென்பர் (எ-று.) (59)

பூர்வபட்சத்தின் பட்சி நிறம்.

வல்லூறு பொன்நிறமாம் வாழாந்தை வெள்ளியதாம்
சொல்லாரும் காகம் சிவப்பாகும்-நல்லாய்கேள்
கோழி நிறப்பச்சை குளிர் தோகையே கருப்பு
நாழிமணக்க நவில்.

(இ-ள்.) பூர்வபட்சம் நின்பட்சிகளாவன வல்லூர் பொன்னிறமாகும் ஆந்தை வெள்ளியாகும் காகம் சிகப்பாகும் கோழி பச்சைநிறமாகும் (காகம் பொன்னிறமாகும் வல்லூர்) கருப்புநிறமாகும் (எ-று.) (60)

அமரபட்சத்தின் பட்சி நிறம்.

ஆந்தை சிவப்பாம் அனிகாகம் பொன்னிறமாம்
வாய்ந்த பச்சைவர்ன மயிலாகும் யேந்திழையீர்
வெள்ளையாம்கோழி விளங்கு வெகுகறுப்பு
வல்லூறு கண்டுமதி.

(இ-ள்.) அமரபட்சம் நிறபட்சிகளாவன ஆந்தை சிவப்புநிறமாகும் காகம் பொன்னிறமாகும் மயில் பச்சைநிறமாகும் கோழி வெள்ளைநிறமாகும் வல்லூர் கருப்புநிறமாகும் (எ-று.) (61)

பூர்வபட்சத்தின் பட்சி குணம்.

வல்லூறுபார்ப்பான் ஆந்தைதான் வணிகன்
செல்லாரும் காகம் செகத்தரசன்-நல்லாய்கேள்
கோழியாம் வேளாளன் கூறுமயில் சண்டாளன்
ஆழியான் சொன்னதறி.

(இ-ள்.) பூர்வபட்சத்தின் பட்சியின்குணம் வல்லூர் பாப்பானுகும் ஆந்தை வணிகனுகும் காகம் அரசன் கோழி வேளாளன் மயில் சண்டாளனுகுமென்பர் (எ-று.) (62)

அமரபட்சத்தின் பட்சி குணம்.

பொன்மரையோன்ஆம்வலியன்போர்வேந்தன்ஆந்தையாம்
துண்ணும் எழில்காகம் துலைவணிகன்-மன்னும்
இழிகுலத்தோன் கோழியே ஓதுங்கால்பச்சை
இழிகுலத்தோன் யென்றே இசை.

(இ-ள்.) அமரபட்சம் பட்சிகுணம் பிராமணன் வல்லூறு ஆந்தை அரசனுகும் காகம் வணிகன் கோழி உழுவந்தோனுகும் மயில் இழிகுலத்தோனுகுமென்றனர் (எ-று.) (63)

பூர்வபட்சத்தின் பட்சி பூதம்.

அறியபுவிவல்லூறுறப்பாகும் ஆந்தை
கரியதொருகாகமகனல்லாம் பெரியகால்
தேனே நிகர்மொழியாய் செஞ்சூட்டின் வாரணந்தான்
வான் ஆகும்தோகைமயில்.

(இ-ள்.) பூர்வபட்சத்தின் பூதபட்சி பூமி வல்லூறுகும் அப்பு ஆந்தையாகும் காகம் கனலாகும் கோழி வாயுவாகும் மயில் ஆகாயமாகுமென்பர்.

அமரபட்சத்தின் பட்சி பூதம்.

வல்லூறுதேயுவாம் வல்ஆந்தைவாயுவாம்
பொல்லாகருங்காகப் பூமியாம்-நல்லாய்கேள்

நீர் ஆகும்கோழிதான் நீலமயில்காகமாம்
கார்ஆர் மழவாய்கனி.

(இ-ள்.) அமரபட்சம் பூதபட்சி வல்லூர் தேய்வாகும் ஆந்தை வாயுவாகும் காகம் பூமியாகும் அப்பு கோழியாகும் மயில் ஆகாயமாகுமென்பர் (எ-று.) (65)

பட்சம் 2-ற்கும் பட்சி முக்காலம்.

ஆந்தைமயில் முக்காலம் ஆனதொருவாரணந்தான்
சேர்ந்த நிகழ்காலம் செப்பிடுமே-வாய்ந்ததொரு
வல்லூறுகாகம் வருங்காலம் காட்டுமே
வல்லோர்வுரைத்த வழி.

(இ-ள்.) ஆந்தையும் மயிலும் முக்காலாகும் கோழி காலாகும் வல்லூறும் காகமும் காலாகும் இவ்விதமாக பட்சம் இரெண்டிற்கும் முக்காலும் அறியவேண்டியது (எ-று.) (66)

பட்சம் 2-ற்கும் பட்சி தாதுமூல சீவன்கள்.

வல்லூறு மூலம்வளர் ஆந்தைசீவன் ஆம்
சல்லாபம் ஆம்காகம் தாதுவாய்-நல்லாய்கேள்
கோழி மூலத்தாது கோலமயில் சீவதா
தாழியான் சொன்னதறி.

(இ-ள்.) பட்சம் இரெண்டிற்கும் தாதுமூல சீவபட்சிகள் வல்லூறு மூலதாதுவாகும் ஆந்தை சீவதாதுவாகும் காகம் தாதுவாகும் கோழி மூலதாதுவாகும் மயில் சீவதாதுவாகும் (எ-று.) (67)

பட்சம் 2-ற்கும் பட்சி வடிவு.

வல்லூறுநீள்வட்டம் மால் ஆந்தை ஐங்கோணம்
அல்ஆகும்காகம் அறுகோணம் மெல்லியதாய்
கோழி அதுநாற்கோணம் கோலமயில் முக்கோணம்
ஆழியான சொன்னதறி.

(இ-ள்.) பட்சம் இரெண்டிற்கும் பட்சிவடிவுகள் வல்லூறு நீண்ட வட்டமாகும் ஆந்தை ஐங்கோணமாகும் காகம் அறுகோணம் கோழி நாற்கோணம் மயில் முக்கோணமாகும் (எ-று.) (68)

பட்சம் 2-ற்கும் பட்சிகால்.

வல்லூறுகால் ஆவன் காகம் நீர்க்கால் ஆம்
நல்லதிரல் ஆந்தை அகிநாற்காலாம் சொல்லில்
குறும்கோழி கொம்பால் குலவும் மயில்பட்சி
பெருங்கால் ஆம் என்றிதனைப்பேசு.

(இ-ள்.) பட்சம் இரெண்டிற்கும் பட்சிகால் வல்லூர் கால்வாய் காகம் நீர்க்கால் வல்லூர் நாற்காலும் கோழிக் கொம்பாகும் மயில் பெருங்காலாகுமென்பர் (எ-று.) (69)

பட்சம் 2-ற்கும் பட்சி நிறம்.

வல்லூறுபாலைவளர் ஆந்தைவன் குறிஞ்சி
நல்லாய்கேள் காகம் அதுநல்மருதம்-சொல்லறிய
வாரணமே முல்லை வளருமயில் நெய்தல்
ஆரணநூல் சொன்னதறி.

(இ-ள்.) பட்சம் ரெண்டிற்கும் பட்சிநிலை வல்லூர் பாலைவனம் ஆந்தை குளிஞ்சிநிறம் காகம் மருதநிறமாகும் கோழி முல்லைவனமாகும் மயில் நெய்தல்நிறமாகும் (எ-று.) (70)

பட்சம் 2-ற்கும் பட்சிலோகம்.

வல்லூறு பொன்னும் வளராந்தை வெள்ளியதாம்
சொல்லாருங்காகம் அதுசெம்பாகும்-நல்லாய்கேள்
கோழியே வெண்கலமாம் கோலமயில் இரும்பாம்
ஆழியான் சொன்னதறி.

(இ-ள்.) பட்சம் ரெண்டிற்கும் பட்சிலோகம் வல்லூர் பொன்னுகும் ஆந்தை வெள்ளியாகும் காகம் செம்பாகும் கோழி வெங்கலமாகும் மயில் இரும்பாகும் (எ-று.) (71)

பட்சம் 2-ற்கும் ஆண்பெண்.

வல்லூறு காகமயில் மூன்றும்மாணுகும்
நல்லிறவுகோல் நாம் சொன்னோம்-நல்லாய்கேள்
ஆந்தைபொற்கோழி பெண்ணுகும் இதேதொழி
தேர்த்தறிந்து சொல்லும் திரம்.

(இ-ள்.) பட்சம் இரெண்டிற்கும் பட்சி ஆண்பெண் வல்லூா காகம் மயில் இவை மூன்றும் ஆணுகும் ஆந்தை கோழி இவைகள் இரெண்டும் பெண்ணுகுமென்பர் (எ-று.) (72)

பட்சம் 2-ற்கும் சுவை.

தித்திக்குமாந்தை சிறுபுளிப்புகோழி அதாம்
எத்தும் ஒருகாகம் இனிதுவர்ப்பாம் பத்திசெய்யும்
வல்லூறுகாறும் மயில்கைக்கும் என்பரே.
அல்லார் குழலாம் அறி.

(இ-ள்.) பட்சம் இரெண்டிற்கும் சுவைகாணல் ஆந்தைக்கு தித்திப்பு சிருபுளிப்பு கோழியாகும் காகம் துவர்ப்பாகும் வல்லூர் கார்ப்பாகும் மயில் கைக்கும்யென்பர் (எ-று.) (73)

பட்சம் 2-ற்கும் ஆள்வரத்து.

வல்லூறு நிற்கின்ருன் மாமறையோன் தாண்மீண்டான்
வல்லகருங்காகம் வருகின்ருன் மெல்லியதாய்
கோழிதான் ஊர்க்குள்வந்தான் கோமாமஞ்ஞை அரை
நாழிகையிலே வருவான்நாடு.

(இ-ள்.) பட்சம் இரெண்டிற்கும் ஆள்வருத்து வல்லூர் நிற்கின்றவன் ஆந்தை மீண்டுவருவான் காகம்வருகின்றான் கோழிக்கு ஊர்க்குள் வந்தான் மயிலாகில் அரைநாழிகையில் வருவான் (எ-று.) (74)

பட்சம் 2-ற்கும் வரவுகால அளவு.

கோழிக்கு நான்குநாள் குவலயத்தில் மிக்க
வாழும் மட.வல்லூறுக்கைந்துநாள்-தோழிகேள்
காகம் நாள் மூன்றுகும்கார் யாந்தைநாள் இரண்டு
தோகைமயில் நாள்ஒன்றும் சொல்.

(இ-ள்.) பட்சம் இரெண்டிற்கும் வரவுகால் அளவு கோழிக்கு நாள் 4 வல்லூற்கு நாள் 5 காகத்திற்கு நாள் 2 மயிலுக்கு நாள் 1 இவ்விதமறியவும் (எ-று.) (75)

பட்சம் 2-ற்கும் பட்சி பருவம்.

உண்ணுமதுபலாபலன் உயர்நடைதானே குமரன்
பண்ணுமரசதுவே பார்வேந்தன்-நண்புடைய
முற்றும் துயில்கிழவன் மோனமுடிந்தோன்சாவு
பற்றும் பருவப்பயன்.

(இ-ள்.) பட்சம் இரெண்டிற்கும் பட்சி உருவம் ஊணுகில் பாலன் நடைக்கு குமரவு அரசுக்கு பார்வேந்தன் நித்திரை கருக்கிழவன் மோன முடிந்தோனும் சாவிற்கும் (எ-று.) (76)

பூர்வபட்சத்தின் பட்சி சத்துரு.

வலியசத்துருவாயசமும் கோழியாம் கோழி
காலபமும்தான் சத்துருவாகும் கலபம்வலி
வாயகம் அவற்குவல்லூறுந்தை கோழிக்கரந்தை
தாயசமும் மஞ்ஞை சத்துருவாம்

(இ-ள்.) பூர்வபட்சம் சத்துருபட்சி வலியனுக்குக்கோழியாகும் கோழிக்கு மயிலாகும் மயிலுக்கு ஆந்தையாகும் மயிலுக்குவல்லூறுகும் வல்லூற்கு ஆந்தையும் கோழிக்கும் ஆந்தைக்கும் மயிலாகும் இவ்விதம் சத்துருவறியவும் (எ-று.) (77)

அமரபட்சத்தின் பட்சி சத்துரு.

கோழிமுனிவல்லூறுக் காந்தைக்குமஞ்சைவலி
கோனமஞ்ஞையும் காகச்சத்துருவாம்-கோழிக்குக்
காகமுடன் வல்லூறும் பிற்பகலில் சேர்கைக்குக்
காகமுடன் யாந்தை எனக்காண.

(இ-ள்.) அமரபட்சத்தின் சத்துருபட்சி கோழி ஆந்தை வல்லூர் ஆந்தை இவைகட்கு சத்துரு மயிலாகும் மயிலுக்கு காகம் சத்துருவாகும் கோழிக்கு காகமும் வல்லூறும் சத்துருவாகும் மயிலுக்கு காகமும் ஆந்தையும் சத்துருவாகும் (எ-று.) (78)

பூர்வபட்சம் ஊணின் பலாபலன்.

போஜனம்யாகில் பதிவாழும் போனோர் மீள்வர்போம்கவலை
காசினிவாழும் மழைபொழியும் களவு இல்லை கதிர்விளையும்
பேசில் கன்னிப்பேறுகும் பிணியும் தீரும் பெருவன்
மாசிசெழும் பொன்வாணிய மன்னரை வெல்வாய்மாங்குயிலே

(இ-ள்.) பூர்வபட்சம் ஊண்பட்சியின் பலன் ஊணுகில் பதியில்லாகுவன் ஊர்ப்பயணம்போனவர் மீண்டுவருவார்கள் பொன் கிடைக்கும் மழைபொழியும் களவானதில்லை கதிர்விளையும் குறித்தது கன்னியருகும் நோயானது தீரும் பெண்பெறுவாள் வாணிபம் பலிதமாகும் வழக்குவெல்லும் (எ-று.) (79)

பூர்வபட்சம் அரசின் பலாபலன்.

யாத்திரையாகி நிலைகுலையும் ஒண்ணுர்வெல்வர் இருநிதிபோம்
காத்திரமில்லாக் கதிர்விளையும் கன்னியர் வாழ்க்கைநன்ருகா
மாத்திரன் சொல்லும் பொருள் கூடாவேட்கை தவிர்ந்து மனம் கூடா
சூத்திரம் சொன்னபடியாலே சொன்னர் பெரியோர்சுரிகுழலே

(இ-ள்.) பூர்வபட்சம் நடைபலன் யாத்திரையில் நிலையானதுக்குலையும் பகைவர் வெல்லுவார்கள் பொருளானதுப்போகும் காத்திரமில்லாதக் கதிரானது விளையும் மனையாளுடைய வாழ்க்கை தாழ்வாகும் பொருள்கூடாது மணங்கூடாதுயெனப் பெரியோர்கள் சொல்லினர்கள்.(80)

பூர்வபட்சம் அரசின் பலாபலன்.

அரசேசெய்யிர் புவிப்பேறும் அரசாலே பலன் எய்தும்
முரசும் அதிரும் வரிசையுடன் மூடகருமம்தான் விலகும்
பரிசம் பெரியோர்திரள் இடுவர்பழயதணிபோம் பயன் இல்லை
புரைபோம் களவுந்தான் காணும் பேர்க்கும் இல்லை பொற்கொடியே.

(இ-ள்.) பூர்வபட்சம் அரசின்பலன் அரசில் பூமியின்மீதுக் கீர்த்திப்பெருவன் அரசர்களால் பலன் கிடைக்கும் பேரிகையானது முழங்கவரிசைவரும் கருமமானது விலகும் பெரியோர்கள் உறவாவார்கள் பரிசு கிடைக்கும் பழையபிணி தீரும் பயமிராது களவுப்போனப் பொருள் கிடைக்கும் போக்கில்லையாம் (எ-று.) (81)

பூர்வபட்சம் நித்திரையின் பலாபலன்.

தூங்கும்யாகில் நோய்மாராது தூரம்போனுற்தம்மீளார்
ஆங்கேகருமம்நன்ருகா அறிவை வாழ்க்கைத்தாழ்வாகும்
தீங்கே அல்லால் மழைபொழியாய்ச்செந்நெல் விளையாச்செய்கருவி
ஓங்குமனமுந்தாராலே உண்மையாக உரைத்தோமே.

(இ-ள்.) பூர்வபட்சம் நித்திரையின் பலாபலன் தூக்கமாகின் வாய்த்த நோயானதுத் தீராது தூரதேசம் போனவர்கள் மீண்டுவாரார்கள் போனயிடத்திலும் காரியமாகாது கன்னியருடைய வாழ்க்கைத் தாழ்வாகும் தீங்குநேரும் நன்மையாகாது சென்னல் விளையாது செய்யுந்தொழிலும் பலியாது மணங்கூடாது (எ-று.) (82)

பூர்வபட்சம் மரணத்தின் பலாபலன்.

துஞ்சும்மாகில் சாவுசொல்லும் கொலையாப்பிணியும்தான் எய்து
நெஞ்சில் நினைத்தபொருள் கூடாநிதியும் காணார் நிலைகுலைவார்
வஞ்சர்நோயும்மிகவுண்டாம் மனையாள்வெரும்பாள் உறவாகாள்
கஞ்சமலரார் குழலாளே கருத்தால் உரைத்ததெடுத்துரையே.

(இ-ள்.) பூர்வபட்சம் மரணபலன் சாவுவார்த்தைகள் வருகும் தொலையாதப்பிணியானது சம்பவிக்கும் மனதில் நினைத்தபொருள் கூடாது பொருளுங் காணமாட்டார் நிலையானதுக் குலையும் வஞ்சகர்நோய் உண்டாகும் மனையாளும் வெறுப்பாகுவள் உறவாகமாட்டாள் யென்றனர்.

அமரபட்சம் ஊணின் பலாபலன்.

கெடுதியும் உடனேகாணார் கிளையுடன் வாழ்வுபேறும்
கடுதியபிணியும் தீரும் கலக்கமோசற்றும் இல்லை
அடையமழைபெருக உண்டாம் அங்கமும் மலிவாம் கண்டாய்
முடிகியபயணம் இல்லைமொழியும் பிற்பக்கஊணே.

(இ-ள்.) அமரபட்சம் ஊணின்பலன் கெடுதியானதுவாரூது சந்ததியுடன் தழைத்து வாழ்குவர் பெயரானது விளங்கும் பிணியானதுத்தீரும் கலகமானது கொஞ்சமும் இராது வருத்தமானது பெருகும் அகமம் பலிதமாகும் பயணமானதுமில்லை அமரபக்கம் ஊணில் யென்றனர்.(84)

அமரபட்சம் ஊணின் பலாபலன்.

வெற்றியும் சுகமும் உண்டாம் வியாதியும் மாறும்பின்பு
பற்றியகருமம் கூடும்பயமில்லை அங்கமும்தாழா
உற்றிதோர் கெடுதிகாணும் உறும்மழை உண்டு தூரத்
துற்றகற்கரவு கூடசொல்லும் பின்நடக்கத்தோன்றில்

(இ-ள்.) அமரபட்சத்தின் அரசின் பலன் வெற்றியானது உண்டாகும் சுகம்பெருகும் வியாதியானதுத் தீரும் நினைத்தகாரியம் கைகூடும் பயமானது சற்றுமில்லை அகமானதுத் தாழாது கெடுதியானது காணுது தூரத்தில் மளடியானது உண்டாகும் உறவானதுக்கூடும் (எ-று.) (85)

அமரபட்சம் ஆசின் பலாபலன்.

செயமொடு சுகமும் உண்டு சிறந்ததோர்ப்பயணந்தன்னில்
புயம் இடும்மழையும் வுற்பாபுவிதனிற்கலகம் இல்லை
இயம்பினர் பெறலாம் வெற்றி இலாபமும் நீளமதாகும்
பயம் விளையாதுதேய்வின் அரசதாம் பரமையாகில்

(இ-ள்.) அமரபட்சம் நடையின்பலன் செயமும் சுகமும் உண்டாகும் பயணத்தில் மழையானது அற்பமாகும் கலகமானதுச் சற்றுமிராது வெற்றியானது பெருகும் இலாபம் நீடும் பயமானது விளையாதுயென்பர்.

அமரபட்சம் நித்திரையின் பலாபலன்.

வன்னியபிணியாலால் மற்றொருபிணி அதிகமாகும்
மன்னியமழையே இல்லைவைத்தனகெடுதியாகும்
துன்னியநெஞ்சில் தோஷம் தோன்றிடும் கருமம் செய்யும்
பன்னிய பிற்பக்கத்தில் உறங்கும் அப்பறவையாகில்.

(இ-ள்.) அமரபட்சம் நித்திரையின் பலன் தேகத்தில் தோன்றியப் பிணியுடன் ஒரு பிணியானது அதிகமாகும் மழையானதுயில்லை தனச்சேதமுங் கெடுதியும் நேரும் நெஞ்சில் தோஷமானது செய்யும் (எ-று.)

அமரபட்சம் மரணத்தின் பலாபலன்.

காவிலினில் பயமும் உண்டு கலகமாம் கருமமெல்லாம்
தீவினைப்படுமற்றன்றிச் செய்யும் நல்வினைகளாக
சாவுனில் விழுந்தபட்சித்தாழ்பக்கம் முதிப்பதாலே
பூவினிற்சிறந்தமாதே புகன்றநல் புள்ளின் நூலே.

(இ-ள்.) அமரபட்சம் மரணத்தின் பயமானது உண்டாகும் கலகம் நேரும் செய்தொழில் பலிதமிராது தீவினையானது படச்செய்யும் காரியமாகாது மரணமாகப்போன பட்சியின் பலனுகுமென்றனர் (எ-று.)

உரோமரிஷி விநாடி பஞ்சபட்சி
மூலமும் உரையும்.

பஞ்சபட்சி பலதிரட்டு

மூலமும் உரையும்

முற்றிற்று.

ஸ்ரீ பாரதி பிரஸ், சூளை, சென்னை.

உங்கள் சினேகிதர்களுக்கும், பந்துக்களுக்கும் தெரிவியுங்கள்.

எல்லோரும் ஆவலாய் எதிர்பார்த்திருந்த
அருமையான ஸங்கீத புத்தகம்!
சுலபமான புதிய முறையில் விரிவாயும்,
விபரமாயும் எழுதப்பட்டது!

அறுபதே தினத்தில்

உபாத்தியாயரில்லாமல் கீர்த்தனங்களை
ஆர்மோனியம், பிடில், வீணை,
இவைகளில் வாசிக்கவும்; பாடவும் கற்பிக்கும்

ஆர்மோனிய போதன ஸங்கீத ரத்னம்.

விலை ரூபா ஒன்று (1--0--0)

ஸங்கீதம் கற்கவிரும்பும் சகோதர சகோதரிமார்களே!

மாதாமாதம் ரூ 5 முதல் 10 ரூ வரையில் சம்பளம் கொடுத்து வருஷக் கணக்காய் ஸங்கீதம் கற்றுக்கொள்ள உபாத்தியாயர் தேடும் சிரமத்தையும், வாத்தியார் ஏற்படுத்தி அதனால் நூற்றுக்கணக்கான ரூபாய்ச் செலவையும், இன்றுடன் ஒழித்துவிடுங்கள்.

ஒரே ரூபாய் விலையுள்ள "ஆர்மோனிய போதன ஸங்கீத ரத்னம்" என்னும் இப் புத்தகத்தை இன்றே தருவித்து யாவருடைய உதவியுமில்லாமல் தமக்குத்தாமே சுலபமாகத் தெரிந்துகொண்டு அறுபதே தினத்தில் கீர்த்தனங்களை ஆர்மோனியத்தில் வாசிக்கவும், பாடவும் கற்றுக்கொள்ளுங்கள். ஆர்மோனியம், பிடில், வீணை, முதலிய வாத்தியங்களில் ஆரம்பமுதல் கீர்த்தனங்கள் முடிய வாசிக்கும் முறையை வாசிப்பவர்களுக்கு எளிதில் தெரியும்படி சுலபமான வழிகளை அநேக படங்கள் மூலம்காண்பித்து வெகு பிரயாசைப்பட்டு வெளிப்படுத்தியிருக்கிறோம்.

இந்தப் புத்தகத்தில், ஸரளி வரிசைமுதல் கீதம், வர்னம், கீர்த்தனங்கள், தேவாரம், திருவாசகம், காவடிச்சிந்து, திருப்புகழ், தேசிய கீதம் சித்தர்பாடல் முதலானவைகளை தாளக்குறிப்புடன் சுரப்படுத்தி சுலபமாக ஆர்மோனியத்தில் வாசிக்கும்படி படங்கள் மூலம் விவரமாகக் காண்பித்திருக்கிறது.

இப்புத்தகம் வாங்கினவர்கள் 60 தினத்தில் கீர்த்தனங்கள் ஆர்மோனியத்தில் வாசிக்க முடியாவிட்டால் ரூபாய் திருப்பி வாபீஸ் செய்துவிடுகிறோம், உண்மையான வார்த்தை. நம்பிக்கையுடன் இன்றே ஆர்டர் செய்யுங்கள். போலிப் புஸ்தகங்களை வாங்கி ஏமாறாதீர்கள். ஆர்மோனிய போதன ஸங்கீத ரத்னம் என்னும் பெயரையேபார்த்து வாங்குங்கள் புஸ்தகத்தின் பெயரை மறக்காதீர்கள்.

உயர்ந்த பெதர்வெயிட் கடிதத்தில் கிரௌன் 16 பக்க அளவில் தெளிவாக அச்சிட்டு உயர்ந்தகாலிகோ பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது.

விலை ரூபா ஒன்று 1 தபால் செலவு அணா—5.

இரண்டு புஸ்தகம் ஆர்டர்செய்தால் தபால் செலவு இனம்.

நல்லசாமிதாஸ் பக்திரஸக் கீர்த்தனை.

இதன் விலை அணா 5.

நூதனவர்ண மெட்டில் சகலதேவர்களின் பேரிலும் பாடப்பட்ட புதிய கீர்த்தனங்கள் அடங்கியிருக்கிறது.

கிடைக்குமிடம்:—

லாயல வாச் டிரேடிங் கம்பெனி,

பீட் நெ. 24, சென்னை.

மாறன் பிரஸ்; வேப்பேரி, மதராஸ்.